www.padippakam.com

# ஒரு மண்ணின் கதை



செ. கணேசலிங்கன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மண்ணின் கதை

*(நாவல்)*

## செ. கணேசலிங்கன்

*விற்பனை உரிமை :*

**பாரி நிலையம்**

***184,** பிராட்வே :: சென்னை-**600 108.***

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு : டிசம்பர் 1994

(C)

விலை ரூ. 32


| | | |
|---|---|---|
| Title | : | ORU MANNIN KATHAI<br>(Story of a Land) |
| Size | : | 18 × 12.5 cm |
| Pages | : | 216 |
| Paper | : | Cream Wove 10.5 Kg. |
| Types | : | 10 Point |
| Binding | : | Duplex Board |
| Price | : | Rs 32/- |
| Publishers | : | KUMARAN PUBLISHERS<br>27, IInd Street,<br>Kumaran Colony,<br>Vadapalani, Madras-600 026. |
| Printers | : | Chitra Printo Graphy,<br>Madras-14. |


படிப்பகம்

www.padippakam.com

# தேசியம் பற்றிய சில குறிப்புகள்

தேசியம் என்ற குரல் சிலவேளைகளில் முற்போக்கானது; பல வேளைகளில் பிற்போக்காகலாம். ஏகாதிபத்தியத்தை, காலனித்துவத்தை எதிர்க்கும்போது முற்போக்கானது. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்தனர். 1948ல் அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னர் சிங்களப் பேரினவாதம் தமிழரை ஒடுக்குவது பிற்போக்கான தேசியம்.

தேசியம் என்பது முதலாளித்துவ கோட்பாடு. தொழிலாளி வர்க்கத்தின் கோட்பாடு சோஷலிசம். 1917ல் சோஷலிசப் புரட்சியை, பாட்டாளி வர்க்கத்தலைமையில் முன்நின்று நடத்திய லெனின் சோஷலிசக் குடையின்கீழ் பல தேசங்களை உள்ளடக்கிய சோவியத் யூனியனை நிறுவியது உலக வரலாறு. அங்கு திரிபுவாதம் தலையெடுத்து முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் புகுத்தப்பட்டதும் தேசிய இனங்கள் தனித்தனித் தேசங்களாகப் பிரிந்த செயல் அண்மைய வரலாறு, அதை வரவேற்ற முதலாளித்துவ நாடுகளால் யுகோ செலவாகியா, ரஷ்யாவில் ஏற்பட்ட இரத்தம் சிந்தும் பகைமை முரண்பாட்டுப் போர்களை நிறுத்த முடியவில்லை. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் நடை பெற்ற மிகக் கொடிய இனக்கொலை யுகோ செலவாகியாவில் பொஸ்னியருக்கெதிராக நடைபெற்றது.

கடந்த மூன்று நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட யந்திரப் புரட்சியோடு நிலப்பிரபுத்துவம் வீழ்ச்சியுற்றது. முதலாளித்துவம் தேசியத்தை முன்வைத்து தலைமை தாங்கி, பாட்டாளியையும் இணைத்து ஜனநாயகப் புரட்சியை நடத்தியது. இப்புரட்சி மனித சமுதாய வரலாற்றில் முற்போக்கானதே.

www.padippakam.com



பின்னர் 19ம் நூற்றாண்டின் பின்பகுதியில் ஐரோப்பிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ந்து ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை தன் காலனியாக மாற்றியது. இதன் மூலம் தன் முற்போக்குத் தன்மையை இழந்தது. இந்நிலையில் காலனி நாட்டு மக்கள் ஏகாதிபத்தியத்தையும் அதைச் சார்ந்து நிற்கும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்துப் போராடுவது முற்போக்கானதே. உள்நாட்டில் தேசிய முதலாளிகள் பலங்குன்றியிருப்பதால் ஏகாதிபத்தியங்கள் தரகு முதலாளித்துவத்தைத் தனக்கு சாதகமாக உருவாக்குகிறது. இந்நிலையில் பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே தேசிய ஜனநாயகப் புரட்சியை வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை சீனப்புரட்சியின் மூலம் மாவோ நடைமுறைப்படுத்திக் காட்டினார். அதன் பயனாக சீனா சோஷலிசப் புரட்சிக்கு எளிதாக நடைபோட முடிந்தது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் நிலவிய சர்வதேசச் சூழலும் மக்களின் விடுதலைப் போராட்டமும் காலனி ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆயினும் அரசியல் சுதந்திரம் என்ற பெயரில் இந்த நாடுகளைத் தங்களது பொருளாதாரச் சுரண்டலுக்கு ஏற்ற வகையில் அரைக் காலனியாகவும் நவகாலனியாகவும் மாற்றி அமைத்தன.

வரலாற்று ரீதியான பொதுநிலம், மொழி, பொருளாதாரம், உளவியல் பண்பாட்டுக் கூறுகள் ஆகிய அம்சங்களின் அடிப்படையிலேயே தேசங்கள் உருவாகின்றன என ஸ்டாலின் கூறினார். ஐரோப்பாவில் நிகழ்ந்த தேசிய இனப் பிரிவுகளை ஆய்வதன் மூலமே அன்னார் தேசியத்திற்கு இலக்கணம் வகுத்தார். தேசிய அரசுகள் உருவாகி தமது உற்பத்திப் பண்டங்களை விற்பதற்குரிய சந்தையின் எல்லைகளை வரையறுத்துக் கொண்டன.

இத்தகைய சூழலிலே 1917ல் சோஷலிசப் புரட்சி மூலம் பலதேசங்களை இணைக்கும் சோவியத்யூனியனை லெனின் அமைத்தார். அதன் துரித வளர்ச்சிக் காலத்திலேயே முத

www.padippakam.com



லாளித்துவ நாடுகளில் மிகப்பெரிய பொருளாதார அழுக்கம் 1929ல் ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டம், உற்பத்தி வீழ்ச்சி, பணவீக்கம் சோவியத் யூனியனை எவ்விதமும் பாதிக்கவில்லை.

இந்நிலையைக் கண்ட முதலாளித்துவ பொருளாதார, அரசியல், சமூக நிபுணர்கள் முதலாளித்துவ சமூக அமைப்பு உலகெங்கும் வீழ்ச்சியடைந்து சோஷலிசப் புரட்சி ஏற்படும் என அஞ்சினர்.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் நாடுகள் தேசிய பாஸிஸக் கோட்பாட்டுடன் தமது தேச எல்லைகளை விரிவாக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டன. முதலாளித்துவத்திடையே ஏற்படும் முரண்பாடுகளிடையே தேசியம் என்ற குரலுடன் பாஸிஸம் தலை எடுக்கிறது. பாஸிஸம் பயங்கர அரசியல் வடிவம் என்பதை வரலாறு கூறும்.

'தேசிய அழுத்தக் குரலுடனும் ஒத்திசைவுடனும் தோன்றும் பாஸிஸம் பலமான அரசியலாதிக்கத்தை நிறுவுவதோடு, பழிக்குப் பழி தீர்க்கும்போருடன், அந்நிய நாடுகளை ஆக்கிரமித்து அடிமைப்படுத்தும் யுத்தப் போக்கையும் கொண்டது' என மார்க்சிய அறிஞர் பால் சுவீஸி கூறியுள்ளார்.

பல தேசிய இனங்களைக் கொண்ட நாட்டில் ஒரு இனம் தேசியத்தை முன் வைக்க முயன்றதையும் மற்றைய இனங்களும் தேசியத்தை முன்வைத்து கிளர்ந்தெழுவதையும் வரலாற்று நிகழ்வுகளில் காணலாம்.

இலங்கையில் தேசிய இனங்களை ஒன்றிணைப்பதென வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியிடம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அரசியலாதிக்கத்தை வழங்கியது. அவ்வாட்சியினர் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் இடது சாரிகளுடன் இணைந்து நிற்பதைக்கண்டு அஞ்சி அவர்களை நாடற்றவராக்கினர்.

www.padippakam.com



ஐக்கிய தேசீயக் கட்சியை மிஞ்சிய சுதந்திரக்கட்சி சிங்களம் மட்டுமே அரசு மொழி எனக் கூறி சிங்கள தேசிய பேரினவாதத்தை மேலும் ஒருபடி உயர்த்தி எடுத்துச் சென்றது.

மலையக தோட்டத் தொழிலாளரை நாடற்றவராக்கும் போதும் சிங்கள மொழியை மட்டும் ஆட்சி மொழியாக்கும் போதும் இடதுசாரிகள் ஒருமித்து நின்று குரல் கொடுத்தனர்.

நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் அரசாங்கமொழி என்ற சட்டம் 1956-ல் விவாதிக்கப்படும்போது, 'ஒரு மொழியென்றால் இரண்டு தேசம், இரண்டு மொழியென்றால் ஒரு தேசம்' என தமிழ் பேசும் மக்கள் சார்பாக இடதுசாரிக் கட்சியினர் ஆரூடம் பேசினர். ரொக்ஸி சார்ந்த கொல்வின் ஆர். டி சில்வாவும் அங்கு பேசும்போது 'ஒரு சிறிய தேசத்திலிருந்து இரத்தம் சிந்திய இருதேசங்கள் தோன்றலாம்' என ஆரூடத்தை மேலும் உறுதிப்படுத்துவது போலப் பேசினார்.

சோஷலிச சமூக அமைப்பை நிறுவ தேசிய இனங்கள் சார்ந்த தொழிலாளி வர்க்கம் ஒன்றிணைய வேண்டும் என்ற கோட்பாட்டு அரசியலுடன் வளர்ச்சியடைந்த இடதுசாரிக் கட்சிகள் தமது கோட்பாடுகளை விட்டுவிட்டு 1964-ல் சுதந்திரக் கட்சியின் சிங்கள தேசிய வாதத்துடன் இணைந்து ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தனர். ஓராண்டுக்குள் கூட்டாட்சி விழ்ந்து, ஐக்கிய தேசியக்கட்சி 1965-70 வரை சிங்கள பேரினவாத தேசீயக் குரலுடன் ஆட்சி நடத்தியது. 1970-ல் மீண்டும் சுதந்திரக் கட்சியுடன் இடதுசாரிகள் இணைந்த கூட்டாட்சி ஏற்பட்டது.

இங்கு வேடிக்கை என்னவென்றால் 1972ல் கூட்டாட்சியால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பை கொல்வின் ஆர்டிசில்வாவே முன்நின்று ஆக்கினார். தமிழர் அதை முற்றாக நிராகரித்தனர். 'இரத்தம் சொட்டும் இரண்டு தேசப் போக்கை' அவரால் நிறுத்திவிட முடியவில்லை.

www.padippakam.com



19 ̈0களில் மொழியுரிமை கேட்ட தமிழரின் தேசியக் குரல் 1976ல் தமிழ் ஈழம் கேட்கும் போராட்டமாக மாறத் தொடங்கியது, மக்கள் ஜனநாயகப் புரட்சியின் ஓர் அங்கமாக தலைமை ஏற்றுநடத்த தொழிலாளிவர்க்கம் பலமற்றதால் சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்த தமிழர் போராட்டம் தவிர்க்க இயலாத ஒன்றாக மாறி, வீச்சுபெறத்தொடங்கியது. குட்டி முதலாளித்துவச் சிந்தனைப் போக்குடைய தமிழர் கட்சிகள் பல போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தும் தவிர்க்க முடியாத நிலைமையும் ஏற்பட்டது.

சோஷலிசக் கண்ணோட்டத்துடன் வளர்ச்சியடைந்து வந்த இலங்கை இடதுசாரிக்கட்சிகள் 1964ன் பின்னர் சிங்கள தேசியக் குரலுடன் இணைந்து கொண்டனர் என்றே கூறவேண்டும்.

இன்றைய சூழலில் தொழிலாளி வர்க்கம் தலைமை யேற்று நடத்தும் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் ஓர் அங்க மாக தேசிய இனப்பிரச்சனை அமைகிறது. இப்புரட்சியின் மூலமும், அதற்கு அடுத்தகட்டமான சோஷலிசப் புரட்சியின் மூலமாகவே தேசிய இனங்கள் ஒன்றிணையும் சோஷலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும் என்பதை சோவியத் யூனியனில் லெனினும், சீனாவில் மாவோவும் நிரூபித்துக் காட்டினர்.

இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசீயப் பேரின வாதம் ஒரு மயக்கமூட்டும் வார்த்தை. முதலாளித்துவத்தில் எழும் முரண்பாடுகளை மூடிமறைக்கவே தேசியக் குரலை முதலாளித்துவம் முன்வைக்கிறது. தேசியப் பேரினவாத உணர்வை ஊட்டி ஆளும் வர்க்கம் ஆளப்படுபவரின் அனுமதி யையும் பெற்றுவிடுகிறது. சிங்கள பேரினவாதத்திற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதில் என்றும் சிரமமிருந்த தில்லை. மற்றைய இனங்களை அடக்கி ஒடுக்கும் பேரின வாத ஆளும் வர்க்கம் யுத்தத்தைத் தொடக்குகிறது. பின்னர் யுத்தத்தால் பலன் பெறும் ஆளும் வர்க்கத்தின் பிரிவு தன் நலனைக் காக்க யுத்தத்தை தீவிரப்படுத்துகிறது. யுத்தத்

படிப்பகம்

www.padippakam.com



தால் நலிவுறும் மக்கள், தொழிலாளிவர்க்கம் தலையெடுக்கும் வரை இப்போக்கு தொடரும். முதலாளித்துவத்திடையே எழும் முரண்பாடும் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியுமே சோஷலிசத்திற்கு வித்தாகிறது. தொழிலாளி வர்க்கம் தலையெடுக்கும் சோஷலிசத்திலேயே தேசிய இனங்களின் ஒற்றுமையையும் பேணி, பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுத்த முடியும். அதுவரை உழைக்கும் வர்க்கங்கள் துன்பப்படவே நேரும்.

கையெழுத்துப் படிகளில் நாவலைப் படித்து திருத்தங்கள் செய்வதில் உதவிய நண்பர்கள் டாக்டர் தெய்வசுந்தரம், செ. யோகநாதன் ஆகியோருக்கு என் நன்றி. அட்டையை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டிய நண்பர் மணியம் செல்வனுக்கு அன்பு. அச்சக உரிமையாளர் தொழிலாளர்கட்கு என் நன்றி.

15.12.94 **செ. கணேசலிங்கன்**

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மண்ணின் கதை

குமரேசன் அன்று முழுவதும் அமைதியின்றிப் பதட்டத்துடனேயே நேரத்தைக் கடத்தினான். பகல் நேரம் நீண்ட நாளாகத் தோன்றியது. மாலைப் பொழுதை எதிர் நோக்கிக் கொண்டிருந்தான்.

நண்பகல் வேளை அவனது அக்கா தமயந்தி சாப்பிட அழைத்தபோது ஒரு மணியாகிவிட்டது யாழ்ப்பாணத்தில் காலையில் புறப்பட்ட வண்டி அனுராதபுரத்தைக் கடந்திருக்கும் என எண்ணிக் கொண்டான்.

அவனுக்குப் பிடித்த அரக்குளா மீனில் குழம்பும் பொரியலும் அக்கா ஆக்கி வைத்திருந்தாள். ஆனால் அவனுக்குச் சாப்பாட்டில் அத்தனை நாட்டம்இருக்கவில்லை.

''மீன் குழம்பு பிடித்ததா.''

''ஆமக்கா.''

திடுக்கிட்டவனாகப் பதில் கூறினான்.

அக்காவும் தம்பியருகே இருந்து பரிமாறிச் சாப்பிட விரும்பினாள். தன் பிளேட்டில் சோற்றைப் போட்டு மீன் குழம்பை ஊற்றினாள். அத்தோடு வந்த மீன் துண்டில் ஒன்றை எடுத்துத் தம்பியாரின் தட்டில் போட்டு விட்டாள்.

தன் சமையலைச் சுவைப்பதாக குழம்போடு பிரட்டிய சோற்றை வாயில் வைத்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



உப்பே யில்லை!

''ஏண்டா, உனக்கு நாக்கே இல்லையா. உப்புப் போடவே மறந்துவிட்டேன். நீ நல்லாயிருக்கென்று சாப்பிடு கிறாயே.''

தமயந்தி கூறிக்கொண்டே எழுந்து சென்று உப்புத் தண்ணீரை எடுத்து வந்து குழம்பில் ஊற்றிக் கலக்கினாள். திடீரெனத் திடுக்குற்றவனாக, வாய்ச் சோற்றை விழுங்கி விட்டான். உண்மைதான். சாட்டாகப் பதிலளித்தான்:

''அது அக்கா, உப்பு, சீனியெல்லாம் கனடாவில் குறைத்துப் போட்டேன். அதனால் எனக்கு அத்தனை வேறுபாடு தெரியேல்லை.''

''ஏண்டா உனக்கும் சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பெல்லாம் இருக்காடா.''

புதிய குழம்பைத் தம்பியாரின் தட்டில் ஊற்றியபடியே சொன்னாள்.

''அப்படி இல்லையக்கா. இது பாதுகாப்பு. அங்கே பாஷனாக வந்துவிட்டது. டீ, கோப்பி குடிக்கும்போது ஓட்டலியோ, வீடுகளிலோ 'சுகர்' போடுவதா என்று கேட்பார்கள்.''

''பரவாயில்லையே. இங்கே சீனி விலையே ஏறிக் கொண்டிருக்கிறது.''

அக்கா தமயந்தி சொன்னாள்.

குமரேசனுக்குச் சாப்பாட்டில் அன்று அத்தனை சிரத்தை இருக்கவில்லை. அரைகுறையாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தான். அக்காவிற்கு ஒரே ஏமாற்றம். அவளுடைய சமையலுக்கும் சுவையான, பழக்கமான சாப்பாட்டிற்கு மாகவே அண்ணன் வீட்டைவிட்டு அங்கு தங்கத் தீர்மானித்த தாகக் கூறியிருந்தான்.

www.padippakam.com



குமரேசனின் நினைவு யாவும் மாலையில் கொழும்புக் கோட்டைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்து சேரவேண்டிய ரெயில் வண்டி பற்றியே இருந்தது.

சுசீலா அந்த மாலை வண்டியில் வரவேண்டும். அவளை அவன் பார்த்ததில்லை. போட்டோ படம் மட்டும் பார்த்திருந் தான். அவனது அண்ணன் இளங்கோவன் அனுப்பியிருந் தான். அவனுக்குப் பிடித்திருந்தது. சுசீலா தந்தையோடு கொழும்பில் வந்து தங்கியிருந்ததை அறிந்திருந்தான். அவ்வேளை டெலிபோனில் பேச முயன்றான். சுசீலா இடம் தரவில்லை. அவளது தந்தையாரும் வற்புறுத்தவில்லை. தம்பியார் வீட்டில் மேலும் சிலநாள் தங்கி வரும்படி கூறி விட்டு அவர் யாழ்ப்பாணம் திரும்பி விட்டார்.

விடுமுறை காலம். சுசீலா மற்றைய உறவினர், தோழியர் வீடுகளுக்குச் சென்று வந்தாள். தங்கியிருந்த சித்தப்பா வீட்டிலே டெலிபோனே இருந்தது. அங்கு டெலிபோன் மணி அடித்தாலும் அவள் எடுப்பதில்லை.

சித்தப்பா இல்லாவிட்டால் சின்னம்மா அல்லது வீட்டில் இருப்பவர்கள் எவராவது எடுத்துப் பேசுவார்கள்.

சித்தப்பாவும் சின்னம்மாவுமே கனடாவிலுள்ள குமரேச னுக்குக் கலியாணம் பேசி போட்டோ படமும் தந்தையாரிட மிருந்து வாங்கிக் கொடுத்தனர். சுசீலாவிற்கு அத்தனை தூரம் செல்லும் கலியாணத்தில் ஆர்வம் இருக்கவில்லை. மேலும், என்றும் பார்த்தறியாத மாப்பிளை; மற்றவர் கூறிய பனியை நினைத்ததும் நடுக்கம்.

இடையில் அவளுக்கு மற்றொரு இளைஞன் மேல் கண் ணோட்டம் இருந்தது. கிராமத்தில் படித்தவன். தற்போது கொழும்பிற்கு வந்து எஞ்சினியரிங் படித்துக் கொண்டிருந் தான். இளங்கோ. அவனுக்குத் தன்மேல்ஆர்வம்இருப்பதைச் சுசீலா நன்கு அறிந்திருந்தாள். அவளும் உள்ளூற விரும்பி னாள். காலம் வரட்டும் எனக் காத்திருந்தாள். எப்படியும்

www.padippakam.com



இளங்கோவே உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தாள்.

கிராமத்தில் நன்கு பழகிய குடும்பத்தவர் என்ற சாக்கில் சின்னம்மாவுடன் கொழும்பிலுள்ள இளங்கோ வீட்டிற்கும் இருதடவை சென்றிருந்தாள். ஒரு அதிகாலை போன் செய்து விட்டு அவனும் ஒரு தடவை வந்திருந்தான்.

கல்வியைப் பற்றிப் பேசியதே தவிர மனந்திறந்து சுசீலா வால் திருமணப் பிரச்சனை பற்றிப் பேச முடியவில்லை. தன்னுடைய துணிச்சலற்ற நிலையை மனதில் கடிந்து கொண்டபோது இளங்கோவின் கோழைத் தனத்தையும் மனதில் வைதுகொண்டிருந்தாள்.

## 2

---

இந்த நிலையில் நீண்டநேரம் அன்று அதிகாலையில் சித்தப்பா வீட்டில் டெலிபோன் அடித்துக் கொண்டிருந்தது. எவரும் எழுந்து போனை எடுக்கவில்லை. விரைவில் தூக்கம் கலைந்து அருண்ட நிலையில் குழம்பிய மனத்துடன் பல்வேறு சிந்தனையில் ஈடுபட்டிருந்த சுசீலா, சிலவேளை இளங்கோ ஆகவும் இருக்கலாம் என்ற சிந்தனை ஓட்டத்துடன் எழுந்து சென்று போனை எடுத்தாள். எப்படியும் அவனுடனான மனப்போராட்டத்திற்கும் ஒரு முடிவு கட்டவேண்டும் என மனம் உந்தியது.

'ஹலோ...' வார்த்தை தானே வந்தது.

''யார் சுசீலாவா?''

இளங்கோ தவிர வேறு யார் இத்தனை உரிமையுடன் பெயரைக் கூற முடியும்.

''யெஸ். நீங்க...'' மெல்லிய சந்தேகம்.

www.padippakam.com



''தெரியவில்லையா. குமரேசன் கனடாவிலிருந்து...''

''......'' உடல் மட்டும் பதறியது.

''என்ன சுசீ. யூனிவர்சிட்டியில் படித்தீங்களாம். டெலி போன் பேசவும் தயக்கமா...''

''இல்லையே...'' நடுங்கிய குரல்.

''உங்க குரலைக் கேட்கவே எத்தனை பூரிப்பாயிருக் கிறது. என்னோடு பேசமாட்டீங்களா? நீங்க ஊமையில்லை என்பதும் தெரிந்து விட்டது.''

சுசீலாவிற்கு உள்ளூறச் சிரிப்பு வந்தது. ஒரு கணத்தில் வாழ்வைத் தீர்மானிக்க வேண்டிய நெருக்கடி.

''உங்க போட்டோ மட்டுமல்ல குரல்கூட எனக்குப் பிடித்துக்கொண்டது. அண்ணாதான் போன் நம்பர் தந்திருந் தார். சம்மதமானபடியால் தானே கொழும்புக்கு வந்தீங்க. பிறகு பேசுவதற்கு என்ன வெட்கம்? பக்கத்தில் எவராவது நிற்கிறார்களா?...''

''இல்லை...''

அவளை அறியாமலே வார்த்தை வெளிவந்து விட்டது.

''அப்படீன்னா என்னைப் பிடிக்கவில்லையா? அண்ணா விடம் சொல்லிவிடலாமே. அல்லது என்னிடம் இப்பொழுதே சொல்லிவிடலாம்...''

எதுவும் மறுப்புக் கூற முடியாத நெருக்கடி.

''அப்படி ஒன்றுமில்லை. என்ன பேசுவதென்றுதான்...''

''உங்க படிப்பைப் பற்றிச் சொல்லுங்க. பைனல் எழுதி விட்டீர்களா? கம்பியூட்டர் கூடப் படிக்கலாம். பயனா யிருக்கும். நான் தடுக்கமாட்டேன். நீங்க படிக்க விருப்ப மில்லாவிட்டால் விட்டுவிடலாம்... சுசீ...''

''தாங்ஸ்...''

www.padippakam.com



''அவ்வளவுந்தானா. அங்குள்ள அரசியல் நிலை பற்றிக் கூட அறிய ஆவலாயிருக்கிறேன். சொல்லு சுசீ, பிரயாணம் எப்படி...?''

அவனது நயமான பேச்சும் 'சுசீ' என்று அழைக்க ஆரம் பித்ததும் அவளது நெஞ்சைத் தொட்டது. நெஞ்சில் உறைந் திருந்த பனிக்கட்டி உடைந்தது. சிறிது சிறிதாக மனந் திறந்து பேசத் தொடங்கினாள்.

வாரத்தில் மூன்று காலை டெலிபோன் மூலம் நெருக்க மான பிணைப்பு வளர்ந்தது. அவனுடன் டெலிபோனில் பேசு வதே தனி இன்பமாக இருந்தது.

வீண் செலவு என சுசீலா டெலிபோனில் பேசும் நேரத் தைக் குறைக்க முயன்றாள். ஆனால் குமரேசன் விடுவதா யில்லை. தன் உழைப்பிற்கு அது அத்தனை செலவில்லை என அவன் அடிக்கடி கூறிக் கொண்டான்.

குமரேசனின் விருப்பப்படி அவனது அண்ணன் திருமணத்தை உறுதி செய்து கொண்டான். ஒழுங்குகள் எல்லாம் டெலிபோன் மூலம் பேசப்பட்டு வார்த்தைகளால் நிட்சயிக்கப்பட்டதே.

சுசீலா கடிதம் எதுவும் எழுத வேண்டாம் என குமரேசனிடம் கூறிவிட்டாள். அதற்குரிய காரணங்களையும் சொல்லியிருந்தாள். யாழ்ப்பாண அரசியல் நிலையில் எழுதுவது, தாமதமாவது மட்டுமல்ல பாதுகாப்பற்றது; பரவலாக அனைவருக்கும் தெரிய வந்து விடும்; இயக்கங் களாலும் பிறராலும் வேறு பிரச்சனைகள் எழலாம் என்றும் கூறினாள். சுசீலாவின் விளக்கங்களைக் குமரேசன் ஏற்றுக் கொண்டான்.

அவனது அண்ணன் மூலமே செய்திகள் எல்லாம் வந்து கொண்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



# 3

ஏழு மாத காலம் கழிந்து விட்டது. அடக்கி வைத்திருந்த உணர்வுகளுடன் திருமண ஏற்பாட்டிற்காக குமரேசன் கனடாவிலிருந்து கொழும்புக்கு வந்துவிட்டான்.

அக்காவிற்கு அண்ணன் மூலம் ஒரு கலியாணப் பேச்சு நடந்து கொண்டிருப்பது மட்டுமே தெரிந்திருந்தது. அன்று சுசீலா வருவது பற்றி குமரேசன் கூறவில்லை.

அண்ணனின் ஏற்பாட்டின்படி அன்று மாலை வண்டியில் சுசீலாவும் அவளது அப்பாவும் வந்து சேரவேண்டும். அதன் பின்னரே அனைத்து ஏற்பாடும் உறுதியுடன் செய்ய முடியும் என்பது அண்ணனின் முடிவு.

அக்கா சாப்பிட்ட பின்னர் சமையற்கட்டுப் பக்கம் போய் விட்டாள். மூன்று மணி வரையில் கோட்டை ரெயில் நிலையத்திற்குக் குமரேசன் போன் செய்தான்.

யாழ்ப்பாணம் எக்ஸ்பிரெஸ் வண்டி என்ன நேரம் எதிர் பார்க்கப்படுகிறது என்று விசாரித்தான். அது என்றும் குறிப்பிட்ட நேரமான நாலரை மணிக்கு வருவதில்லை என்பதை அண்ணன் ஏற்கெனவே சொல்லியிருந்தான்.

''வவனியாவிலிருந்துதான் வண்டி வருகிறது. ஆறுமணி வரையில் எதிர்பார்க்கிறோம்...''

மேலும் விசாரிக்குமுன் மறுபுறத்தில் டெலிபோன் வைக்கப்பட்டுவிட்ட ஒலிகேட்டது. கோட்டை ரெயில் நிலையப் பதில் சிறிது குழப்பமாக இருந்தது. ஆனாலும் ஆறு மணிக்கு எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை.

ஐந்தரை மணிக்கே கோட்டை ரெயில் நிலையத்து விசாரணைப் பகுதியில் தான் காத்து நிற்பதாக அண்ணன் பணி புரியும் கம்பனிக்குப் போன் செய்தான். சுசீலாவையும் தந்தையாரையும் அண்ணனால் மட்டுமே இனங்காண முடியும். படத்தில் பார்த்த நினைவானாலும் நேரில் அடை

www.padippakam.com



யாளம் காண்பதன் சிரமத்தை அவன் அறிவான். மேலும் தந்தையாரின் அறிமுகத்துடனேயே சுசீலாவுடன் பேச முடியும். எப்படி உறுதி செய்தபோதும் முறையாக அறிமுகப் படுத்திய பின்னரே அவர்கள் முன்னர் பழக முடியும். தான் ஆண்மகன், சுசீலாவின்மேல் காதல்கொண்டவனாக அத்தனை ஆர்வம் காட்டக்கூடாது என்ற தற்பெருமையும் மனதில் நின்றது.

''நேரடியாக நீயும் பார்த்துப் பிடித்துக் கொண்டாலே நான் கலியாணத்தை முடிவு செய்வேன்''

அண்ணன் கண்டிப்பாகக் கூறியிருந்தான். குமரேசன் டெலிபோனில் எத்தனை தூரம் உறுதி கூறியிருந்தான் என்பது அண்ணனுக்குத் தெரியாது.

''கலியாணம் என்பது வெறும் டெலிபோனில் பேசி முடிவு செய்யப்படுவதில்லை.''

அண்ணன் முன்னர் சொன்னான்.

''நான் உறுதியாகச் சொல்லி விட்டேன்...''

''நாங்கள் எழுத்திலே எதுவும் முடிவு கூறிவிடவில்லை. மேலும் நீ மட்டும் சொல்லிவிட்டால் போதுமா? படித்த பெண். அவளும் உன்னைப் பார்த்து முடிவு சொல்ல வேண்டுமல்லவா, ஒரு பக்கமாக எதையும் பார்க்கக்கூடாது. எல்லாவற்றிற்கும் மற்றுமொரு பக்கமும் இருக்கிறது. அக்காவும் வேறு இடங்கள் பார்த்து வைத்திருக்கிறா என்று நினைக்கிறேன்.''

அண்ணன் சொன்னான்.

அதன்மேல் குமரேசன் எதுவும் பேசவில்லை. டெலிபோன் மூலம் சுசீலாவிற்கு அளித்த உறுதிமொழி பற்றி அவன் எதுவும் சொல்லவில்லை. ஸ்டேசனிலையே பெண்ணைப் பார்த்துவிடுவது நல்லது என்பதே அண்ணனதும் முடிவு. வீட்டில் பார்த்துவிட்டுப் பின்னர் தட்டிக்கழிப்பது

www.padippakam.com



நல்லதல்ல என்பதே அவரது எண்ணம். குமரேசன் எண்ணம் வேறாக இருந்தது. கொழும்பில் இருந்துகொண்டே தன் காதலியை வரவேற்கச் செல்லாவிட்டால் அது ஒரு குறை யாகலாம் என்பது மட்டுமல்ல சுசீலாவைக் கண்டு பேச வேண்டும் என்ற ஆவலின் உந்தலும் இருந்தது.

---

## 4

குமரேசன் கோட்டை நிலையத்திற்குப் புறப்பட ஆயத்தமானான். புதிய வெள்ளைச் சேட் ஒன்றை எடுப்பதற்காகப் பெட்டியைத் திறந்தான். அடிப்பக்கத்திலிருந்த ஒரு சேட்டை எடுத்தான். சுசீலாவிற்காக வாங்கி வந்த பரிசுப் பொருட்களையும் அடிப்பெட்டியிலேயே வைத்திருந்தான். அவற்றை மலிவாகவும் சிறப்பாகவும் வாங்குவதற்காகச் சிங்கப்பூர் வழியாக கொழும்புக்கு வரவே டிக்கெட் வாங்கியிருந்தான். சேலைகள் மூன்று, இரண்டு நைட்டி, தங்க முலாம்பூசிய சீக்கோ வாச், சென்ட், ஓடிக்கொலோன் போன்ற வாசனைப் பொருட்கள். அக்காவிற்கானவற்றை வந்த உடனேயே கொடுத்துவிட்டான். இவற்றை அக்கா கண்டதுமே கேட்டு விடலாம் எனப் பெட்டியையே பூட்டி வைத்துக் கொண்டான்.

சேட்டை எடுத்துக் கொண்டு பெட்டியைப் பூட்டி, சாவியை வைத்துக் கொண்டான். புதிய சேட்டைப் பிரித்து மாட்டிக் கொண்டு நிலைக்கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

வவுனியாவிலிருந்து வண்டி வருவதாக ரெயில் நிலையத்தில் ஏன் சொன்னான் என்பதும் அவன் மனதை இடையிடையே குடைந்து கொண்டிருந்தது.

எப்படியும் கோட்டை நிலையத்திற்குச் சென்று பார்த்தே தீரவேண்டும் என்பது மனதில் உறுதியாயிருந்தது.

www.padippakam.com



அண்ணாவைப் பார்த்து வருகிறேன் என அக்காவிடம் கூறிவிட்டுத் தெருவிற்கு வந்தான். கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். நேரமிருக்கிறது. பஸ்ஸிலேயே போகலாம் என நினைத்தான். பஸ் நிலையத்திற்கு வந்ததும் வேகமாக வந்து நிறுத்திய 'மினிவான்,' 'ஏறுங்க ஏறுங்க கொட்டுவ, கோட்டைக்கு' என சிங்களத் தமிழில் சத்தமிட்டான். கூட்டமிருக்கவில்லை. ஏறி உட்கார்ந்து கொண்டான். டிக்கெட் இல்லாமலே மூன்று ரூபா பெற்றுக் கொண்டான். அத்தொகை அதிகமாக அவனுக்குத் தெரிய வில்லை.

செலவு எல்லாம் டாலர் கணக்கிலேயே கணக்கிட்டுப் பார்த்துக் கொள்வான். கனடாவைவிட எல்லாம் அங்கு மலிவாகவே அவனுக்குத் தோன்றியது.

ஐந்தேகாலுக்கே கோட்டை ரெயில் நிலையம் போய்ச் சேர்ந்துவிட்டான். விசாரணைப் பகுதிக்குச் சென்று வண்டி வரக்கூடிய நேரத்தைக் கேட்டான்.

''ஐந்து ஐம்பதிற்கே வந்துவிடும்.''

இராணுவத்தினர் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந் தனர்.

ஆங்கிலத்தில் அவனுக்குப் பதில் கூறியவன் சுற்றி நின்ற மற்றவரது விசாரணைகளுக்கும் விளக்கம் கூறிவிட்டு மணி அடித்த டெலிபோனை எடுத்து நேரத்தை மட்டும் கூறிவிட்டு வைத்துவிட்டாள். சுறுசுறுப்பாகவே அவன் இயங்கிக் கொண் டிருந்தான்.

''ஐந்து ஐம்பதுக்கு வருவது யாழ்ப்பாண வண்டி தானே...''

''இல்லை. வவனியாவிலிருந்து வருவது...''

மற்றவர் விசாரணைக்குச் சிங்களத்தில் பதில் கூறிக் கொண்டிருந்தான்.

www.padippakam.com



''யாழ்ப்பாண வண்டிக்கு என்ன நடந்தது?''

குமரேசனும் விட்டுவிடுவதாக இல்லை. நெருக்கடி நேரத்திலும் சிறிவிழாமல் அவன் யந்திரம் போலப் பதில் கூறிக் கொண்டிருந்தான். டெலிபோன் வேறு அடித்துக் கொண்டே இருந்தது. ஒருவருக்குப் பதில் கூறிவிட்டு டெலி போனை வைத்துவிட்டு 'பிளடி யாப்னா ரெயின்' என்ற சூடான வார்த்தை வெளியே வந்தது. பின்னர் எதிரே நின்ற குமரேசனைப் பார்த்துச் சொன்னான்:

''இங்கிருந்து காலையில் போனவண்டி யாழ்ப்பாணம் போக முடியாது வவுனியாவிலிருந்து திரும்பிவருகிறது. சம் பிரொபிளம் தெயர்...''

குமரேசனுக்கு ஒரே அதிர்ச்சியாயிருந்தது. ஏமாற்றத் தோடும் மனக்குழப்பத்தோடும் அண்ணன் வரட்டும் எனத் திரும்பினான்.

குமரேசனின் ரெயில்வண்டி பற்றிய விசாரணையைக் கேட்டுக் கொண்டு நின்ற ஒருவர் அவனது உடைக்கும் மதிப் பளிப்பதாக அவனைப் பார்த்து விளக்கம் கூறினார்:

''நானும் யாழ்ப்பாண ரெயிலுக்காகவே வந்தேன். வவுனியாவுக்கு அந்தப் பக்கமாக ஏதோ பெரிய பிரச்சனையா யிருக்க வேண்டும். காலைப்பிரயாணிகள் வவுனியா வரை பஸ்ஸில் வர முடிந்திருந்தால்இந்த வண்டியில் வரலாம். நான் பார்த்துவிட்டே போகப் போகிறேன்.''

அவரது பதில் அவனுக்கு ஓரளவு ஆறுதலளித்தது. பிரயாணம் புறப்பட்டவர்கள் ஏதோ சமாளித்து வரவே செய் வார்கள். அண்ணன் வரட்டும். எப்படியும் வவுனியா வண்டி யைப் பார்ப்போம். ஓரளவு நம்பிக்கையுடன் மனதில் எண்ணிக் கொண்டான்.

அண்ணன் வந்து விட்டார். குமரேசன் விபரத்தைக் கூறி னான். வடக்கே உள்ள பிரச்சனை பற்றிய பேச்சு தங்கள்

www.padippakam.com



கம்பனியிலும் பேசப்பட்டது பற்றிதான் அறிந்ததைக் கூறி னார்.

''இங்கே எதுவுமே நிச்சயமில்லை. இன்று வாழ்வது தான் நிச்சயமானது''

அண்ணனின் விரக்தியான தத்துவப்பேச்சு அங்குள்ள நிலைமையை அவனுக்கு உணர்த்தியது.

''நாளை என்ன நடக்குமோ தெரியாது''

சுசீலா கொழும்புக்கு வந்துவிட்டால் விரைவில் கலியாணத்தை முடித்துக்கொண்டு போய் விடலாம். அவளையும் விரைவில் தலைமாறியாவது பணம் செலவானா லும் அழைத்து விடலாம் என எண்ணிக் கொண்டான்.

''வைகாசி முடிய ஒருவாரம் தானிருக்கிறது. ஆனி பிறந்தாலும் பரவாயில்லை. பொதுநாளில் கலியாணம் செய்யலாம். எதற்கும் உன் அண்ணன்தானே பெரிய ஆள். அவனையும் கேட்டுச் செய்''

அவன் இருநாட்களுக்கு முன் கொழும்பில் வந்து இறங்கியதும் அக்கா கூறியது அவன் நினைவில் வந்தது.

அண்ணனோடு வவுனியாவில் இருந்து வரும் வண்டி யைத் தரிசிக்க மூன்றாம் மேடைக்குச் சென்றான். உறவினர், நண்பர்களை எதிர்பார்த்து மேடையில் ஆங்காங்கே பலர் காத்துநின்றனர்.

வண்டி வந்ததும் அண்ணன் மேலும் கீழுமாக மேடையில் ஓடியபடி உள்ளும் புறமுகமாக நோட்டம் போட்டபடி நடந்தார். குமரேசன் பயணிகள் வெளியேறும் வழியில் நின்றபடி தந்தையும் மகளுமாக வருபவர்களை உற்று நோக்கிக் கொண்டு நின்றான்.

தோல்வியடைந்த சோகத்துடன் இங்கும் அங்குமாக ஓடிய அண்ணன் குமரேசனிடம் வந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



''யாழ்ப்பாணப் பயணிகள் எவரும் வரவில்லையாம். வவுனியாவுக்கு வடக்கே போக்குவரத்தெல்லாம் நின்று விட்டதாம்! வவுனியாவிலும் இராணுவத்தினரின் பாதுகாப் புடனேயே இந்த வண்டியும் புறப்பட்டதாம். யாழ் செல்ல காலையில் புறப்பட்ட பயணிகள்கூட பலர் பயத்துடன் இந்த வண்டியிலேயே திரும்பி விட்டனராம்.''

அண்ணன் சேகரித்த செய்தியைக் குமரேசனிடம் சொன்னான். திரிகோணமலை, மட்டக்களப்பிலிருந்தும் ரெயில், பஸ் போக்குவரத்தெல்லாம் நின்று விட்டது பற்றி யும் தான் அறிந்ததைக் கூறினான்.

வடக்குக் கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவம், பொலிசாருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டிருப்பது போல ஊகிக்க முடிந்தது.

ஏமாற்றத்துடனும் மனச்சோர்வுடனும் இருவரும் ரெயில் நிலையத்திற்கு வெளியே வந்தனர். எதிரே இருந்த ஓட்டலில் டீ சாப்பிட இருவரும் சென்றனர்.

வடக்குக் கிழக்கு ரெயில், பஸ் போக்குவரத்து எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டதாக அரசின் அறிவித்தலை ரேடியோவில் 6 மணிச் செய்தியில் கூறியதாக அங்கு பேசிக் கொண்டனர்.

''இப்படியான தடைகள் எல்லாம் இங்கே அடிக்கடி நடைபெறும். இரண்டு மூன்று நாளில் எல்லாம் சரியாகி விடும். அவர்கள் எப்படியும் புறப்பட்டிருப்பார்கள். அவர் களுக்கும் ஏமாற்றமாகத்தானே இருக்கும். திடீரென எந்த நேரமும் வந்து விடலாம். வந்ததும் நான் தெரிவிப்பேனே...''

அண்ணன் அண்ணாமலை தம்பிக்குச் சமாதானம் கூறி னான். குமரேசன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். மனதில் மோதிய அலைகளை மறைக்க முயன்று கொண் டிருந்தான். அண்ணனின் பேச்சு நம்பிக்கையை நெஞ்சில் முகிழச் செய்தது.

www.padippakam.com



''வீட்டுக்கு என்னோடு வாவேன். இராத்திரிக்கு சாப்பிட்டுவிட்டு வரலாம்.''

''இன்றைக்கு வேண்டாம் அண்ணா. அக்காவிடமும் சொல்லாமல் வந்துவிட்டேன்.''

அண்ணாமலைக்குச் சாக்குக் கூறித் தட்டிக் கழித்து, விடைபெற்றுக் கொண்டான்.

காலிமுகத் திடலில் காற்றாடுவதன் மூலம் ஏமாற்றத்தால் ஏற்பட்ட கவலையைக் குறைத்து விடலாம் எனக் குமரேசன் எண்ணிக் கொண்டான். அங்கிருந்தே கோட்டைப் புறமாக நடந்து சென்றான்.

வானம் இருண்டிருந்ததால் கடற்காற்று குளிர்காற்றாகவே இருந்தது. கனடாவில் அனுபவித்த பனிக் குளிரோடு ஒப்பிடும்போது அது இதமாகவே இருந்தது. குளிராகவே தோன்றவில்லை.

பல வருடங்களுக்குப் பின்னர் அங்கு வந்திருந்தான். அறிந்தவர் எவரும் இல்லை. அது தவிர அங்குள்ள அரசியல் பற்றி அடிக்கடி பேசியதில் அந்நிய நாட்டில் உலாவுவதாகவே உணர்ந்துகொண்டான். சுற்றிவரச் செல்பவர்களெல்லாம் அந்நியர் போன்ற உணர்வு.

திடீரென சாரல் அடிக்கத் தொடங்கியதும் சுறுசுறுப்பாக எல்லோரும் கலைந்து கொண்டிருந்தனர். அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழரை.

''எட்டு மணிக்குமேல் தெருக்களில் திரிய வேண்டாம். வீட்டுக்கு வந்துவிட வேண்டும்''

அங்கு சேர்ந்த அன்றே அக்கா அச்சுறுத்தியது நினைவில் வந்தது.

''ஏனக்கா!''

www.padippakam.com



''இராணுவத்தார், பொலிசார் இயக்கத்தவரா என்று எவரையும் தடுத்து விசாரணை செய்யலாம்''

''ஏனக்கா இது எங்களுக்கு அந்நியநாடா...''

''அப்படித்தான் மாறி வருகிறது.''

கோல்பேஸ் ஓட்டலுக்கு எதிரே காலிரோட்டு பஸ்தரிப்பு நிலையத்திற்கு எட்டி நடந்தான். திடீரென வந்து நின்ற பஸ் ஒன்றில் ஏறிக்கொண்டான். சுசீலாவின் நினைவு இடையிடையே நெஞ்சைக் குத்திக்கொண்டே இருந்தது.

வீட்டுக்குச் சென்றதும் 'அண்ணனைப் பார்த்தாயா' என்று கேட்டுவிட்டு வடக்கு, கிழக்குப் போக்குவரத்தெல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டது என்ற ரேடியோ செய்தியை அக்கா சொன்னாள்.

முட்டைப் பொரியலோடு அக்கா பரிமாறிய புட்டை நீண்ட காலத்தின் பின் சுவைத்துச் சாப்பிட்டான்.

மேலும் விபரமான செய்திகள் அறிவதற்காக பிபிஸி தமிழோசைக்கு அக்கா ரேடியோவைத் திருப்பி வைத்தாள்.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலைகளைத் திடீரெனப் புலிப்படையினர் தாக்கியதாகவும் நூற்றுக்கணக்கான வரைக் கொன்றுவிட்டதாகவும் பல நூறுபேரைச் சிறைபிடித்ததாகவும் செய்தி அறிக்கை கூறியது.

குமரேசன் மனச்சோர்வுடன் படுத்துக் கொண்டான்.

பல்வேறு கனவுகள் மோதிய அமைதியற்ற தூக்கம். அரைத் தூக்கத்தில் மைத்துனர் வீட்டுக்கு வந்த சலசலப்பு பேச்சும் கனவு போலவே தோன்றியது.

---

## 5

காலைப் பத்திரிகையில் ஓரளவு செய்திகள் வெளி வந்தன. கொல்லப்பட்டவர் எண்ணிக்கை குறைவாகக் கூறப்

www.padippakam.com



பட்டது. அத்தோடு எதிர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை அதிகமாகக் கூறப்பட்டிருந்தது.

எப்படியும் நிலைமைகள் சீரடைந்து பிரயாணங்கள் வழக்கமாக நடைபெற சில நாட்களாகலாம் என எண்ணிக் கொண்டான்.

கோப்பியைக் குடித்துவிட்டு மைத்துனர் சீக்கிரமே புறப்பட்டுவிட்டார். அக்கா சாப்பிட்டுச் செல்லும்படி அவரை நோக்கி நயமாக வேண்டிய அழைப்புக்குப் பதிலே இல்லை.

சுசீலாவிடம் சென்று, அன்று காலையில் பேசிமுடிக்க வேண்டிய பல விஷயங்களுக்காக அன்றைய நாள் முழு நேரத்தையும் ஒதுக்கியிருந்தான். திடீரென ஏற்பட்ட சம்பவங்கள் அவனை வெறுமையாக்கி விட்டன.

காலையில் என்ன செய்யலாம், எங்கே போகலாம் என்று மனம் குழம்பிய நிலையில் இருந்தபோது நண்பன் வேலாயுதம் வந்து சேர்ந்தான்.

எதிர்பாராத நிகழ்வுகள் எல்லாம் ஏமாற்றமாகிவிடுவதில்லை. அவை திடீர் மகிழ்வு தருபவையாகவும் இருக்கலாம் என எண்ணிக் கொண்டான்.

கனடாவில் நன்கு பழகிய நண்பன்; ஓராண்டு கனடா வாழ்வுடன் நாட்டைவிட்டு ஒரேயடியாக வந்துவிட்டான்.

''கனடாவுக்கு வருபவர்கள் முதல் மூன்று மாதங்களே 'ஏன் வந்தோம். இது என்ன நாடு இந்தப் பனிக்குளிரில் வாழமுடியுமா?' என்று கேட்டுக் கொண்டே திரிவார்கள். நாடு பிடிக்காதவர்கள் திரும்புபவர்கள் மூன்று மாதத்திலேயே போய் விடுவார்கள். நீ ஓராண்டு முழுவதும் வாழ்ந்தபின் ஓடிவந்ததுதான் விசித்திரமானது.''

''வின்டர், சம்மர் எல்லா சுவாத்தியமும் அங்கே பார்த்து விட்டுத்தானே வந்தேன்...''

www.padippakam.com



வேலாயுதம் சொன்னான்.

''பிடிக்கவில்லை; பிடிக்கவில்லை என்று கேலியாகத் தான் மற்றவர்கள் போலச் சொல்லிக்கொண்டே இருந்தாய். திடீரென நீ போய்விட்டாய் என்று அறிந்ததுமே ஆச்சரியப் பட்டேன்.''

''அந்த நாட்டில் ஏன்தான் நீங்களெல்லாம் கஷ்டப்படு கிறீர்களோ தெரியவில்லை.''

வேலாயுதத்தின் குரலில் அந்த நாடு தரக்குறைவான நாடு என்ற கணிப்பு ஒலித்தது.

''பணம் உழைக்கத்தான்?''

குமரேசன் உறுதியான குரலில் கூறினான்.

''பணம் இங்கேயும் உழைக்கலாம்தானே''

''அவ்வளவு தொகைக்கு இங்கே உழைக்க முடியுமா?''

''அங்கே கிடைப்பது வாய்ப்பாக அங்கே வாழ்வதற்குப் போதுமா? சிக்கனமாக வாழ்ந்து சேமிப்பதை இங்கே இலங்கை ரூபாவில் மாற்றும்போதுதான் பெரிய தொகை யாகத் தெரிகிறது. நமது நாட்டு ரூபாவின் மதிப்பை, உலக வங்கி முதலாளித்துவ நாடுகளுக்கு லாபம் கிட்டுவதற்காகக் குறைத்து விட்டதாலேயே அவ்வாறு தோன்றுகிறது. நமது நாட்டாரது உழைப்பை மலிவாக அபகரிப்பதற்காகத்தான் ரூபா மதிப்புக் குறைப்புச் செய்தனர் என்று கூறுவேன்''

வேலாயுதம் கூறிய புதிய விளக்கம் குமரேசனைக் குழப் பத்தில் ஆழ்த்தியது.

''குழப்பமாகச் சொல்லுகிறாய்? எனக்குப் புரிய வில்லை.''

''உன்னுடைய உழைப்பை இலங்கை மக்கள் இழக்கி றார்கள். அத்தோடு நீ வெளி நாட்டில் சேமிப்பதற்கு மேலதி

ஒ. ம—2

www.padippakam.com



கமாக நம் நாட்டுப் பணத்தைத் தருகிறார்கள்! இரு முனை யிலும் நாட்டுக்கு இழப்பே''

''ஏன் நாம வெளிநாட்டிலிருந்து ஃபோரின் எக்சேஞ், அந்நியச் செலாவணி சேர்த்துத் தரவில்லையா?''

குமரேசன் கேட்டான்.

''அந்த வெளிநாட்டுச் செலாவணி எந்த வர்க்கத்த வருக்கு, எதற்காகப் பயன்படுகிறது என்பதுதான் வினா. ஆளும் வர்க்கம் சார்ந்த ஐந்து சதவீத ஆளும் வர்க்கத்தவர் கார் வாங்கவும், அவற்றை ஓட்ட எண்ணெயும், ஆடம்பர நுகர் மண்டபங்களும், அதே வர்க்த்தவர் வேண்டியவாறு உலகமெல்லாம் சுற்றவுமே பயன்படுகிறது.''

''இந்த ஏற்பாடெல்லாம் யார் செய்தார்கள் என்று சொல்லுகிறாய்?''

''ஆளும் வர்க்கத்தவர்களேதான் உலக வங்கியுடன் சேர்ந்து ரூபாயின் மதிப்பைக் குறைத்து கடன் வாங்கத் தொடங்கிய பின்னால்தான் இந்த நிலை ஏற்பட்டது. எல் லோரும் வெளிநாட்டவருக்குத் தமது உழைப்பை மலிவாக விற்க அதன்பின்னரே ஓடினார்கள்.''

''நீ சொல்லுவதைப் பார்த்தால் இனப் பிரச்சனைக் கொடுமையால் எவரும் அந்நிய நாடுகளுக்கு ஓடவில்லை என்பது போலத் தெரிகிறது.''

குமரேசன் சிறிது நளினமாகவே சொன்னான்.

''இந்தியாவிற்கு ஓடியவர்களை வேண்டும் என்றால் சொல்லலாம். மற்ற நாடுகளுக்குத் தமது சொந்தப் பணங் களைச் செலவழித்துச் சென்றவர்கள் இனப்பிரச்சனையால் அகதி நிலை ஏற்பட்டது என்ற காரணத்துடனே சென்று கஷ்டப்பட்டுப் பணம் உழைத்து, தமது சேமிப்பான அந்நிய செலாவணியை சிங்கள ஆளும் வர்க்கத்தவருக்கே உதவி வருகிறார்கள்.''

படிப்பகம்

www.padippakam.com



''சிங்களவர்க்கு மட்டுமா?''

''ஆளும்வர்க்கம் அதே பணத்தில் ஆயுதங்களை வாங்கி நம்மை மேலும் அடிமைப்படுத்தவும் உதவுகிறது.''

அக்கா வந்து இருவரையும் காலை உணவுக்கு அழைத்தாள். வேலாயுதத்தை அக்காவுக்குக் குமரேசன் அறிமுகப் படுத்தினான். இரண்டு லட்சம் ரூபா செலவு செய்து கனடா சென்று ஓராண்டில் திரும்பி வேலாயுதம் ஓடி வந்தது பற்றியும் சிரித்தபடி கேலியாகச் சொன்னான்.

இருவருக்கும் இடியப்பத்துடன் சொதியும் சம்பலும் பரிமாறியபடியே நகைச்சுவையோடு அக்கா கேட்டாள் :

''ஏன் தம்பி திரும்பி ஓடி வந்தாய்? ஏதாவது காதல் கீதலா?''

''அப்படி எதுவுமில்லை. அங்கே அகதிகளுக்குத் தரும் பிச்சைக்காசை வாங்கி அடக்கமாக, சோம்பேறியாக வாழ்வதை நான் விரும்பவில்லை அது முதலாவது. அங்கு வேலை செய்து வாழவேண்டும் என்றால் மிகக் கஷ்டமாக உழைக்க வேண்டும். கூலியைச் சும்மா அங்கே கொடுத்து விட மாட்டார்கள். உங்க தம்பியையே கேட்டுப்பார்க்கலாமே. அத்தனை கஷ்டப்படத் தயார் என்றால் அதற்குச் சமமாக இங்கேயே உழைக்கலாம். நான் அப்படி இங்கே உழைக் கிறேன். வசதியாக வாழ்கிறேன்.''

''பரவாயில்லையே. நீ கெட்டிக்காரப் பிள்ளை. குமரேசனையும் அங்கே கஷ்டப்பட்டது போதும் இங்கேயேஏதாவது தொழில் செய்து உழைக்கும்படியே நான் சொல்லு கிறேன்...''

அக்கா வேலாயுதத்தின் கூற்றை ஆமோதிப்பவள் போலக் கூறினாள்.

''அது மட்டுமில்லைங்க. அந்த நாட்டு மக்கள், பண்பாடு, சுவாத்தியம், உணவு, உடை, மாடிக் கட்டிட

www.padippakam.com



வாழ்க்கை எதுவுமே நமக்கு ஒத்துவராதவை. 26வது மாடியில் 8வது றூமில் நான் அங்கு இருந்தேன்.''

''ஏனப்படிச் சொல்லுறீங்க?''

அக்கா கேட்டாள்.

''அந்த நாட்டு மக்களுடன் நாமே ஒட்டிவாழவோ, ஒன்றுபடவோ, முடியாது. அவர்களைப் பொறுத்தவரை நாமே கறுத்தவர்களே, அந்நியரே. நாமும் அவ்வாறே எண்ண நேரிடுகிறது. அவர்களது முதலாளித்துவ பண்பாடும் நமது நிலப்பிரபுத்துவ பண்பாடும் ஒட்ட முடியாதவை. வருடத்தில் எட்டுமாதங்களையும் பனிக்கட்டியுடன் கழிப்பது நமக்குப் பழக்கமில்லாதது.''

''அப்பாடீ. இத்தனை விஷயமும் என் நினைவுக்கு வரவில்லை.''

அக்காவின் பேச்சில் வியப்பு.

'இது மட்டுமில்லங்க. சூடேற்றாமல் வீட்டுக்குள்ளே இருக்க முடியாது. அதுவும் மிகவும் செலவானது. மைனஸ் 25இல் இருந்து பிளஸ் 25க்கு சூடேற்ற வேண்டும். பனிக் காலத்துக்கு விலை கூடிய கம்பளியிலான தனி உடுப்பு வேண்டும். அந்த உடுப்புகள் சம்மர் காலத்துக்குப் பயன் படாது. உடையாலும் செலவு அதிகம். இப்போது என்னைப் பாருங்க. பான்டு, சேட்டு, காலிலே சிலிப்பர். இத்தனை வசதியோடு சுதந்திரமாக அங்கு திரிய முடியாது.''

வேலாயுதம் தன் அனுபவ யதார்த்த வாழ்க்கையை நேரடியாகச் சொன்னான்.

''தம்பி இவை ஒன்றையுமே எனக்குச் சொல்லவில்லை. கனடா என்றால் ஏதோ சொர்க்கலோகத்திற்குப் போவது போலப் போகிறார்கள்...''

''இப்போது சாப்பிடுகிறோமே இடியப்பமும் சொதியும் சம்பலும். இது நமது பண்பாட்டில் பழகிவந்த உணவு. இதே

www.padippakam.com



உணவைத் தேடுவதென்றால் அல்லது வீட்டிலே தயாரிப்ப தென்றால் அது அங்கு சிரமமானது. செலவானது.''

''ஏண்டா குமரேசா. இவர் இத்தனை கஷ்டங்கள் பற்றிச் சொல்லுகிறார். நீ எதுவுமே பேசாமல் சாப்பாட் டிலேயே கவனமாயிருக்கிறாய்...''

''அக்கா, வேலாயுதம் கூறுவதில் உண்மை இல்லாம லில்லை. ஆனாலும் அந்த வாழ்க்கை பழகி விட்டது. இப்போதெல்லாம் இத்தனை கஷ்டங்கள் பற்றியெல்லாம் நாங்கள் எண்ணிப் பார்ப்பதே யில்லை.''

யாவற்றையும் எதிர்க்காமல் கேட்டுக் கொண்டிருந்த குமரேசன் அக்காவின் கேள்விக்கு விடை கூறினான்.

''இலங்கையில் மரத்திலே காசு காய்க்கிறது என இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை இங்கே கடத்திக் கொண்டு வந்து அடிமையாக்கினார்கள். அதே போலத்தான் இங்கேயிருந்தும் வடஅமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் ஓடுகிறார்கள் போலத் தெரியுது...'' அக்கா சொன்னாள்.

''தோட்டத் தொழிலாளர்களுக்கு என்ன வேலை கொடுப்பார்கள் என்று தெரியும். எஸ்டேட்டுகளில் வேலை கிடைக்காதவர்கள் இப்போது இங்கே வந்து ஓட்டல்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் வேலை செய்கிறார்கள். அதைக் குறைவாக நாம் எண்ணுகிறோம். மேல்நாடுகளுக்குச்சென்று வேலை செய்பவர்களிடையே நல்ல பழக்கம் ஒன்று மட்டும் உண்டு. ஒருவர் என்ன வேலை செய்கிறார் என்று மற்றவர் கேட்பதில்லை. உங்கள் தம்பியைக்கூட நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள்... அங்கே...'' வேலாயுதம் சிறிது நளினமாகவே சொன்னான்.

''நீங்க சொல்லுவது சரிதான். நானே கேட்டதில்லை. அங்கே ஓட்டலில் பிளேட் கழுவுகிறானோ தெரியவில்லை...''

சிரித்தபடியே அக்கா சொன்னாள்.

www.padippakam.com



''இங்கே கலியாணம் பேசும்போதும் எதுவும் கேட்க மாட்டார்கள். கனடா மாப்பிளை என்றால் ஒட்டலில் பிளேட் கழுபுபவர்களுக்கும் கட்டிக் கொடுக்கத் தயாராக உள்ளார் கள். வேலை என்ன என்பதைக் கேட்காதது ஒன்றே முற் போக்கானது. அங்கே கிடைக்கும் கூலி மட்டுமே முக்கிய மானது.''

வேலாயுதம் மிக மட்டமாக அனைவரையும் தாக்க ஆரம் பித்தது குமரேசனது தன்மானத்தைக் கிளறியது.

''அக்கா, இவன் இப்ப எங்களை மிகவும் மட்டம் தட்டப் பார்க்கிறான். அங்கே கக்கூஸ்களில் 'பிளஸ்' எல்லாம் இருக்கு. அந்தந்த வீட்டுக்காரர் தாங்களே துப்புரவாக வைக்க வேண்டியதுதான். அப்படித்தான் ஒரு சிலர் சனட்டரி வேலைகளில் ஈடுபட்டாலும் இங்கு போலல்லாமல் அங்கே அதிக சம்பளம் கொடுக்கிறார்கள்.''

''பார்த்தீங்களா, என்ன வேலை என்பதல்ல முக்கியம். எவ்வளவு அத்க கூலி தருவார்கள் என்பதே எல்லாரது குறிக்கோளுமாக இருக்கும். இந்த விஷயத்தில் மட்டும் அந்த நாடுகளைப் பாராட்டவேண்டும்.''

சாப்பாடு முடிந்ததும் அக்கா இருவருக்கும் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து மேசையில் வைத்தாள். வேலா யுதத்தைப் பார்த்து அக்கர சொன்னாள் :

''இங்கேயே ஒரு வேலை தேடி ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு குடும்பம் நடத்தும்படி இவனுக்குச் சொல்லுங்க.''

வேலாயுதத்தைப் பார்த்து அக்கா சொன்னாள்.

''இங்கே வேலை செய்தால் வேலைத் தகுதிக்கேற்ற படியே பெண்ணும் சீதனமும் கொடுப்பார்கள். அங்கே வேலையில்லாவிட்டாலும் நல்ல சீதனத்தோடு படித்த பெண்களையே கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.''

வேலாயுதம் அக்காவிற்கு சிரித்தபடியே பதில் கூறி னான்.

www.padippakam.com



குமரேசன் மனதில் சுசீலா பற்றிய நினைவுகள் தலையெடுத்தன. தன் தகுதியைச் சுசீலாவுடைய கல்வியோடு ஒப்பிட்டுப் பார்த்தான். அவள் பல்கலைக்கழகப் பட்டதாரி. அவன் 12 வரை மட்டும் படித்துவிட்டு கனடாவிற்கு ஓடியவன்.

காலை உணவு முடித்து இருவரும் மீண்டும் வரவேற்பறைக்கு வந்து பல்வேறு விஷயங்கள் பற்றி பேசினர்.

திருமணம் பற்றிய பேச்சு வந்ததும் இங்கே ஏன் வந்தாய், அங்கேயே ஒரு கனடியப் பெண்ணைக் கட்டுவதுதானே என வேலாயுதம் சிரித்தபடியே சொல்லி மனித வாழ்வில் இனம், மதம், பண்பாடு, பழக்க வழக்கங்களின் சமூக ஆதிக்கம் பற்றி நினைவூட்டினான்.

குமரேசன் திருமண விஷயத்தில் ஏற்பட்ட தன் முடிவு பற்றியும் சுசீலாவின் வரவு தடை பட்டது பற்றியும் விரிவாகக் கூறி மன ஆறுதல் தேடமுயன்றான்.

இதுபோன்ற பிரயாணத் தடைகள் அடிக்கடி நிகழ்வது பற்றியும் யாழ் கொழும்புப் பிரயாணத்தில் உள்ள ஆபத்துகள் பற்றியும் வேலாயுதம் தெரிவித்தான்.

''மீண்டும் யாழ் நகர் பிரயாணங்கள் சீரடைய எத்தனை நாளாகும்?''

சுசீலாவைக் காணும் ஆவலும் கனடா திரும்பக்கூடிய காலத்தை நிர்ணயிக்கவுமாக மனதில் எண்ணிக்கொண்டே கேட்டான்.

''இத்தடவை ஓரிரு வாரமும் ஆகலாம். வடக்கு கிழக்கில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அத்தனை விரைவில் அடங்கி விடுவதாகத் தெரியவில்லை. மேலும் சில நாட்கள் கழித்துத் தான் கூறமுடியும். நீ எத்தனை வார லீவில் வந்தாய். போவதற்கும் டிக்கெட் புக் பண்ணி விட்டாயா?''

''இல்லை. மூன்று வார லீவுதான் தந்தார்கள். அது தான் இந்த வேலை போனால் வேறு இடம் பார்க்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



எப்படியும் சுசீலா பிரச்சனையை முடித்துவிட்டே போக வேண்டும்...''

''ஏண்டா, டெலிபோன் காதலா? கண்டதும் காதல், காணாமலே காதலிக்கும் காந்தர்வக்காதல் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். இது நவீன விசித்திரமான காதலா யிருக்கே''

சிரித்தபடியே கேலியான வார்த்தைகளில் வேலாயுதம் சொன்னான்.

''அண்ணன் பார்த்து அறிமுகப்படுத்திய பெண்தானே. நவீன தொழில் நுட்பம் வளர்ந்த காலத்தில் வாழ்ந்து கொண் டிருக்கிறோம். எப்படியும் சுசீலாவிற்கு டெலிபோன் மூல மாவது கொடுத்த உறுதிமொழியை நான் காபபாற்றியே தீருவேன்.''

''ஏன் நீ காதல் கடிதம் எதுவுமே எழுதவில்லையா?''

''சுசீலாவே எழுதவேண்டாம் என்று சொன்னாள்.''

''எழுத்திலே உறுதி செய்ய உன் சுசீலா விரும்பாம லிருக்கலாம். நீயும் அப்படித் தப்ப எண்ணியிருப்பாய்.''

''கடிதம் எழுதினால் பரவலாகத் தெரிந்து மற்றவர் கேலி பேசலாம் என்று சுசீலா சொல்லிவிட்டாள். நான் எழுதத் தயாராயிருந்தேன்.''

குமரேசன் விளக்கம் கூறினான்.

ஞாயிற்றுக் கிழமை மீண்டும் சந்திப்பதாகக் கூறி வேலா யுதம் பிரிந்தான். அவனது அறைக்கே தான் ஞாயிறு காலை யில் வந்து விடுவதாகக் குமரேசன் சொன்னான்.

வேலாயுதம் சென்ற பின்னர் அவன் கூறிய பலகருத்து கள் பற்றி குமரேசன் அசை போட்டான். அவற்றில் பல அவனே அனுபவித்த உண்மைகளே.

www.padippakam.com



ஒரு தடவை நோய் வாய்ப்பட்டபோது கனடாவில் பட்ட கஷ்டம் அவன் நினைவில் வந்தது. நோயோடு அறையில் தானே தனித்திருக்க வேண்டிய நிலை. அவனோடு தங்கிய நண்பன் தனிய விட்டு விட்டு வேலைக்குப் போய் விட்டான். அந்நிய நாட்டில் அனாதையாகச் சாவைத் தழுவ நேரப் போகிறது என்ற மரணபயம் ஏற்பட்டதை நினைத்துப் பார்த்தான்.

அதன் பின்னரே திருமணம் பற்றிய எண்ணம் மனதில் முகிழ்விடத் தொடங்கியது. அதே வேளை அண்ணனும் கடிதம் எழுதியிருந்தான்.

அண்ணன் குறிப்பிட்டெழுதிய மூன்று பெண்களில் சுசீலாவின் போட்டோவே அவனுக்குப் பிடித்திருந்தது. சீதனமில்லாதபோதும் பல்கலைக் கழகம் வரை படித்த பெண் என்பதும் அவனுக்குப் பிடித்திருந்தது.

டெலிபோனில் பேசி உறவு ஏற்படுத்திக் கொண்டதிலும் உள்ளூற ஒருவகைக் கிளுகிளுப்பும் மகிழ்ச்சியும்; இத்தனை தூரம் ஓடோடி வந்து அன்று ஏமாற்றமடைந்தது மனதை அரித்துக் கொண்டிருந்தது.

பகலில் கனடா நண்பர்களுக்குக் கடிதம் எழுதிவிட்டு அக்காவுடன் ஒய்வாகப் பேசவேண்டும்; நண்பகல் உணவு முடித்து அண்ணாவிடம் வத்தளைக்குச் செல்வதாகத் திட்ட மிட்டான்.

அக்காவின் பிரச்சனை பற்றி சில விஷயங்களை அண்ணன் எழுதியிருந்தான். அங்கு வந்ததும் சில சொல்லி யும் இருந்தான். இருந்தாலும் அக்காவுடன் தங்குவதையே அண்ணனும் வரவேற்றான். ஒன்று பம்பலப்பிட்டியில் தங்கு வதற்கு நல்ல வசதியான வீடு. டெலிபோன்வேறு இருந்தது. மற்றது அங்கு தங்குவது அக்காவிற்கும் மன ஆறுதலும் மகிழ்ச்சியும் தரக்கூடியது என்பதையும் உணர்ந்தான்.

www.padippakam.com



## 6

குமரேசனின் அக்கா தமயந்திக்கு சிவலிங்கம் அன்கோ தொழிற்சாலை அதிபர் என்ற பெருமையுடனேயே சிவலிங்கத்திற்குக் கலியாணம் செய்து வைக்கப்பட்டது. அப்பா வியாபாரம் செய்து சம்பாதித்த சொத்தில் பெரும்பகுதி சீதனமாகக் கொடுக்கப்பட்டது. சிவலிங்கம் தொழிற்சாலையை விரிவுபடுத்த சீதனப் பணத்தைப் பயன்படுத்துவதற்கு அப்பா எதிர்ப்புக் காட்டவில்லை. தமயந்தியும் மறுக்கவில்லை.

பேனா, பென்சில் போன்ற எழுது கருவிகளும் றப்பரிலான விளையாட்டுப் பொருட்களும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை சிவலிங்கம் நடத்தினார்.

சுதந்திரக் கட்சி ஆட்சியில் இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தி உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளித்தது 'சிவலிங்கம் அன் கோ' வின்வளர்ச்சிக்கு நன்கு பயன்பட்டது.

சில வருடங்களில் போதிய மூலதனம் திரட்டி தொழில்களையும் விரிவுபடுத்தி வந்தார். திருமணத்தோடு தமயந்தி அதிர்ஷ்டம் கொண்டு வந்ததாக சிவலிங்கம் பாராட்டினார். தமயந்தியும் பெருமைப்பட்டாள். ஒரு பையனைப் பெற்றெடுத்தாள். இருவரும் மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் நின்றனர்.

1977ல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி வந்தது. சிறிது சிறிதாகப் பொருளாதாரக் கொள்கை மாற்றப்பட்டு உலக வங்கிக் கடனோடு ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டது. கட்டுப்பாடற்ற முறையில் பண்டங்கள் அனைத்தும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. அத்துடன் சிவலிங்கத்தின் வீழ்ச்சியும் ஏற்பட்டது.

சீனா, தென்கொரியா, ஹொங்கொங், தைவானிலிருந்து சிவலிங்கம் அன்கோ உற்பத்தி செய்த பொருட்கள், தரம்மிக்கவை, மலிவான விலையில் வந்து குவிந்தன.

படிப்பகம்

www.padippakam.com



உற்பத்தியில் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் தொழிற்சாலை உற்பத்தியை நிறுத்திவிட்டு அதே பொருட் களை சிவலிங்கமும் இறக்குமதி செய்து விற்க நேரிட்டது. இருந்தாலும் வேறும் பலர் அதே பொருட்களின் இறக்குமதி யில் ஈடுபட்டதால் போட்டா போட்டியில் லாபம் குறை வாகவே கிடைத்தது.

இவ்வாறு தானே உற்பத்தி செய்த பண்ட உற்பத்தி மூலதனத்தை சிறிது சிறிதாக வாணிப மூலதனமாக மாற்றி வந்தான். புதிய பொருளாதாரக் கொள்கையினால், தான் தோல்வியடைந்ததாக வெளியே அவர் காட்டிக் கொள்ள வில்லை.

பணவீக்கத்தை மறந்து ஐந்து லட்சத்தில் நிறுவிய ஒரு தொழிற்சாலையும் நிலமும் இன்று ஐம்பது லட்சத்திற்கு விற்க முடியும் என வீரம் பேசி தன் செல்வ நிலையை நிறுவி வந்தார்.

அதன் பின்னர் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதிர்ஷ்டம் குறைந்தது என சிவலிங்கம் எண்ணிக் கொண் டார்.

யாழ் நகரில் 1981ல் ஏற்பட்ட யு.என்.பி. அரசின் தாக்குதல்களைப் பார்த்தே மேலும் படிப்பைத் தொடர்வதை விட்டு குமரேசன் ஜர்மனி அல்லது கனடாவிற்குச் செல்லும் நோக்கத்தோடு கொழும்புக்கு வந்தான். அக்கா அவனது பயணத்திற்குப் பணம் உதவினாள். அது அவளைப் பொறுத்தவரை பெரிய தொகையாகவோ, பெரிய உதவி யாகவோ இருக்கவில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளாக அக்கா தன் வாழ்க்கையில் புயல் வீசத் தொடங்கியதாக உணர்ந்தாள். கணவர் முன்னரிலும் அதிகமாகக் குடித்துவருவது மட்டுமல்ல வீட்டில் தங்கும் நேரமும் குறைந்து வந்தது. தமயந்தியால் எதையும் தடுத்துவிட முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



கணவனுடைய வெளிமேய்ச்சல்களை, பாலியலில் கண்ணும் கருத்துமாகக் கண்காணிக்கும் மனைவியால் அறிந்து கொள்வதில் சிரமம் இருப்பதில்லை. தமயந்தியாலும் அறிந்துகொள்ள முடிந்தது.

சந்தேகம் ஏற்படத் தொடங்கியதும் தமயந்தி நேரடியாகக் காட்டிக் கொள்ளாமல் வீட்டில் பிள்ளைகள் காத்திருக்க வெளியே சுற்றிவிட்டு அவர்கள் தூங்கிய பின்னர் வருவது, அவர்களுக்குத் தெரியத் தக்கதாக அளவுமீறிக் குடிப்பது ஆகியவற்றில் மட்டும் குறை கூறத் தொடங்கினாள். பிள்ளைகளின் படிப்பும் பாதிக்கப்படுகிறது என்றும் கண்டிக்கத் தொடங்கினாள்.

''பிள்ளைகளின் படிப்புக் கெடுகிறது. பழக்க வழக்கம் கெட்டுப் போகும் என்று நினைத்தால் பள்ளிக்கூட விடுதிகளிலே சேர்த்துவிடு''

சிவலிங்கத்தின் வார்த்தைகள் தமயந்திக்குத் திகிலூட்டின. தன் பழக்கங்களை விடமாட்டேன் என்று மறைமுகமாகக் கூறுவது போலிருந்தது.

கணவனின் உடைகளைத் தமயந்தியே துவைத்து தேய்த்து வைப்பாள். வெள்ளை சேட்டும் நீலப்பான்டும்டையும் கட்டிக்கொண்டே வெளியே புறப்படுவார். சிவந்த மேனியும் கம்பீரமான தோற்றமும் அரும்பு மீசையும் கொண்ட ஆணழகனாகவே அவர் தோற்றமளித்தார்.

இரவில் நிதானம் குறைந்து வரும் வேளை அவளே உடைகளைக் களைந்து மாற்றச்செய்து அவனைத் தூங்கச் செய்வாள்.

அன்றொருநாள் வெள்ளைச் சேட்டைக் கழட்டியபோது அதன் முன்புறத்தில் சிவந்த லிப்ஸ்டிக் பூசிய உதடுகள் பதிக்கப்பட்டிருந்ததைக் கண்டபோது அவளது உடலே பதறியது. அத்தனை காலப் பொறுமையையும் இழந்த நிலையில் சேட்டில் பதிந்திருந்த அந்த உதடுபதிந்த அடையாளத்தைக் காட்டி 'இது என்ன?' என்று உரத்த குரலில் கேட்டாள்.

www.padippakam.com



''உனக்குத் தெரியவேண்டுமே''.

சிறிதும் தயக்கமற்ற ஆணாதிக்கக் குரல்.

அன்றிலிருந்து வீட்டில் தொடர்ந்த சண்டை. அடுத்த அறையிலிருந்து பிள்ளைகள் அரைத் தூக்கத்தில் எழுந்து வந்து எதுவும் புரியாமல் பார்த்தனர்; அழுதனர். சிலவேளைகளில் பகலிலேயே பிள்ளைகள் முன்னால் சண்டைகள் நடைபெற்றன.

## 7

தமயந்தி, பிள்ளைகள் இருவரையும் பள்ளிக்கூட விடுதிகளில் சேர்த்துவிட்டாள். மாதமொரு தடவை வீட்டிற்கு வந்து இருநாட்கள் தங்கிச் சென்று வந்தனர். பிள்ளைகள் அரை மனதுடனேயே வீட்டிலிருந்து விடுதிக்குச் செல்வார்கள். விடுமுறையின்போது, தானே தமயந்தி பொறுமையைக் கடைப்பிடித்து சண்டைகளைக் குறைத்து வந்தாள்.

குமரேசன் கடிதங்கள் எழுதி முடிக்கும்போது அக்கா தேநீர் கொண்டுவந்தாள். தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த விதவைப் பெண் சமையலுக்கு உதவி வந்தாள்.

அவளிடம் சமையல் வேலையைக் கவனிக்கும்படி விட்டு விட்டு வந்து அக்கா சிறிதுநேரம் குமரேசனுடன் பேச உட்கார்ந்தாள். தனக்கும் ஒரு கப் தேநீர் எடுத்து வந்திருந்தாள்.

சாப்பாடு முடிந்து மாலையில் அண்ணன் வீட்டுக்குச் சென்று இரவு சாப்பிட்டு வருவதாகக் குமரேசன் சொன்னான்.

''அண்ணன் உனக்கு எங்கோ கலியாணம் பேசுவதாக எப்பொழுதோ சொல்லியிருந்தான். அவன் மூலம் பேசி முடிவெடுப்பதே நல்லது. என்னைக் கூட இரண்டுபேர் கேட்டிருந்தார்கள். நான் அவனைக் கேட்கும்படியே சொல்லி

www.padippakam.com



விட்டேன். அவன் கூட இங்கே வருவது இப்போது குறைவு''

அக்கா பேச்சை மெதுவாக ஆரம்பித்தாள்.

''அப்படியா. எனக்குத் தெரியாதே. ஏனக்கா வருவதில்லை.''

''எல்லாம் எங்க வீட்டுப் பிரச்சனைதான். இவருடைய போக்கைப் பார்த்து அண்ணனுக்கும் கோபம் வந்துவிட்டது. ஏதோ இவரைத் திட்டிவிட்டான். எங்க வீட்டு விஷயத்திலே தலையிட வேண்டாம் என்று இவர் சொல்லிவிட்டார்.''

''யாரக்கா அந்தப் பெண், இவரை மயக்கி வைத்திருக்கிறாள்...''

''அண்ணன்தான் அவளைப் பற்றியும் அறிந்து சொன்னான். வசதியான குடும்பப் பெண், புருஷன் ரெயில்வேயில் பெரிய பதவியிலிருக்கிறான். தற்போது விட்டுவிட்டுத் தனியே இருக்கிறான். இவரிடம் பணம் பறிப்பவளாக மட்டும் தெரியவில்லை.''

''எப்படியும் நீங்க பொறுமைசாலி அக்கா. இதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறீங்க''

''சீறித்தான் என்ன செய்யலாம். சொத்துகள், பிள்ளைகள், வீடுவாசல். அவரும் இங்கேதான் படுக்க வருகிறார். எனக்கும் ஒரு சமூக அந்தஸ்து, பாதுகாப்பு இருக்கல்லவா. அதை இழக்க நானும் விரும்பாத நிலையில் உள்ளேன்.''

''யார் அந்தப் பெண். அவளை மிரட்டி இந்த ஆட்டத்தை நிறுத்த முடியாதா?''

குமரேசன் குரலில் மனக்குமுறல் ஒலித்தது.

''அவள் என்னைவிட துணிச்சல்காரி. புருஷனைவிட்டுத் தனியே வாழ்கிறாள். அவனது ஆணாதிக்க செயல்களைத் தாங்கமுடியாது அவள் வெளியேறியிருக்கலாம் தானே.

www.padippakam.com



என்னால் அப்படி யெல்லாம் துணிச்சலோடு வெளியேற முடியவில்லையே.''

''என்னக்கா நீங்க அந்த வேசியின் பக்கமாகப் பேசிறீங்க....''

குமரேசன் குரலில் சீற்றம்.

''தப்பு அவள் மேலில்லை. ஆணாதிக்க உலகத்தில்தான் உள்ளது. ஆணாதிக்க குரல் உன் நாவிலேயே வந்து விட்டதே பார். நான் இந்த வீட்டைவிட்டு வெளியேறி அல்லது இவரை விரட்டிவிட்டு மற்றொருவனோடு செக்ஸ் உறவு வைத்தாலும் நீ என்னையும் வேசி என்றுதானே சொல்லுவாய்...''

''ஏனக்கா இப்படியெல்லாம் பேசிறீங்க...''

''நான் நடைமுறை வாழ்க்கையைத்தான் பேசுகிறேன். இவரைப் பழிவாங்க அப்படிச் செய்ய வேண்டுமென்றுதான் என் நெஞ்சும் துடிக்கிறது. நான் வாழும் ஆணாதிக்க சமூகம், பிள்ளைகள், சொத்துரிமை, நீங்கள் வேறு வேசி என்று பட்டங் கட்டாமலிருப்பதற்காகவே பொறுமை காட்டுகிறேன். அவரைக் கண்டிப்பாரில்லை. அவருக்குள்ள சுதந்திரம் எனக்கு மட்டுமென்ன, பெண்ணினத்திற்கே கிடையாது.''

தமயந்தியின் பேச்சில் ஒடுக்கப்பட்ட சுதந்திர வேட்கை எதிரொலித்தது.

''அக்கா, நீங்க என்ன கூறினாலும் அவள்மேல் எனக்கு ஆத்திரமாத்திரமாக வருகிறது. அக்காவிற்காக அவளைக் கொலை செய்யவேணும் போலவும் தோன்றுகிறது...''

''ஆணாதிக்க வெறியிலிருந்து நீயும் விடுபடப்போவ தில்லை. அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து ஆலமரம் போல விழுதுவிட்டு ஊன்றிய மரம். உன்னைப் போன்றவர்களையெல்லாம் பெற்று வளர்த்து, பெற்ற

படிப்பகம்

www.padippakam.com



வருக்கே அடிமையாகும் பெண்ணினத்தின் நிலைதான் உலகத்தில் மிக வேடிக்கையானது.''

''அக்கா, ஆத்திரப்படாமல் சித்தாந்தம் பேசுவதுதான் எனக்கு வேடிக்கையாகத் தெரிகிறது.''

குமரேசன் குமுறினான்.

''ஏண்டா, உன்னைப்போல நானும் அடிக்கடி ஆத்திரப் பட்டேன், கடைசியில் வாழ்க்கையில் மறக்க முடியாதபடி நானே அந்தப் பெண்ணிடம் வாங்கிக் கட்டினேன். அந்த அவமானத்தை நினைத்து நினைத்து எத்தனையோ நாட்கள் அழுதேன். அதன் அடிப்படைக் காரணத்தை கண்டுபிடித்துத் தான் தற்போது என் மனதைத் தேற்றி அமைதியாயிருக்கிறேன்.''

உணர்ச்சி மீறி கண்ணீராக வெடிக்கும் நிலையிலேயே தமயந்தின் வார்த்தைகள் வெளிவந்தன.

''என்னக்கா நடந்தது. சொல்லேன்''

குமரேசன் எழுந்து அக்காவின் முதுகை வருடிவிட்டான். அக்கா உணர்ச்சி மேலீட்டால் சிறிது நேரம் பேச முடியாத வளானாள். வெள்ளைநிற டிரெஸ்ஸிங் கவுனின் அடிப் புறத்தை மேலே எடுத்து வாய் மூக்குக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''எங்க வீடுவாசல், குழந்தைகள், பணம், காரைப் பார்த்து நான் மகிழ்ச்சியாக வாழுகிறேன் என்று நினைக் காதே. மற்றப் பெண்களைவிட பொருளாதாரத்தில் வசதி யாக வாழுகிறேன் என்று வேணுமானால் சொல்லலாம். பெரும்பாலான பெண்களைப்போல ஆணாதிக்கத்திற்கு அடிமைப்பட்டு செக்ஸில் கூட சுதந்திரமில்லாமல்தான் வாழுகிறேன். இதே போலத்தான் உனக்காக நான் ஒரு பெண்ணைப் பேசிக் கலியாணம் செய்தாலும் நடைபெறும். அதற்காகவே அந்தப் பாவத்தை உன் அண்ணனையே செய்யும்படி விட்டுவிட்டேன்.''

www.padippakam.com



அக்காவின் பேச்சு குமரேசனை வியப்பில் ஆழ்த்தியது.

''என்னக்கா படிச்ச பெண்களைக் கட்டும்போது...''

''நானும் கல்லூரிவரை படிச்ச பெண்தான். அதனாலே அடிமை நிலையை உணர முடிகிறது. இல்லாவிட்டால் மற்றப் பெண்களைப்போல அடிமை நிலையிலே, இதுதான் வாழ்க்கை என்று மகிழ்ந்திருக்கலாம்...''

''சொறி அக்கா. நான் மணக்கும் பெண்ணை அடிமையாக்காமல் பார்க்கிறேன். அந்த ஆத்திரப்பட்டுச் செய்த சம்பவத்தைச் சொல்லேல்லையக்கா...''

''ஆமாம். அது பயங்கரமானதே. ஆத்திரத்தில் செய்த என் முட்டாள் தனமும் சேர்ந்தது. அந்தப் பெண்ணை டெலிபோனில் கூப்பிட்டேன்; 'ஐ ஆம் மிஸ்ஸிஸ் சிவலிங்கம். என் ஹஸ்பன்ட் இருக்கிறாரா' என்றே கேட்டேன். 'இன்னும் வரவில்லை. பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்றே பதில் சொன்னாள். 'என் புருஷனோடு உனக்கு என்ன பிரென்ஷிப்' என்றுதான் மரியாதையாய் கேட்டேன். அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'இது கூட உனக்குத் தெரியாதா, முடிந்தால் இங்கு வராமல் உன் வீட்டில் சங்கிலி போட்டுக் கட்டிவை' என்றாள். என் மானம், மரியாதை எல்லாம் போய்விட்டதாக உணர்ந்து டெலிபோனை வைத்துவிட்டு இரவு வரை விம்மி, விம்மி அழுதேன்.''

''அப்படிச் சொன்னாளா வெட்கம் ரோசமில்லாமல். இவர் கொடுத்த இடம் தானே. இவரிடம் நீ சொல்லேல்லையா அக்கா''

சீற்றம் மேலிட அக்காவின் கையைப் பிடித்தபடி குமரேசன் கேட்டான்.

''இரவு அவள் இப்படி சொல்லி, கட்டிய மனைவியையே அவமதிக்கும்படி நடந்தானே இனிமேலும் மானமில்லாமல்



படிப்பகம்

www.padippakam.com



அங்கே போவீர்களா என்று அழுதுகொண்டே அவரிடம் கேட்டேன்.''

மீண்டும் உணர்ச்சி வசப்பட்டே அக்கா சொன்னாள்.

''அவர் என்ன சொன்னார் அக்கா.''

குமரேசன் கோபத்தோடு கேட்டான்.

''முடிந்தால் அவள் சொன்னதுபோல கட்டிவையன் நாய்போல. சங்கிலி தாறதா?' என்றார்.''

''அப்படியா சொன்னார்...''

''அவராடா சொன்னார். அதுதான் ஆணாதிக்கக் குரல். நீ கூட ஒருநாள் உன் மனைவிக்கு இப்படியே சொன்னாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன்''

இது அக்காவுக்கு மட்டும் நடந்தது மட்டுமல்ல, ஒவ்வொரு அடிமைப் பெண்ணுக்கும் நடப்பது எனத் தமயந்தி பொதுமைப்படுத்துவது போல இருந்தது.

## 8

வத்தளையை நோக்கி பஸ் ஓடிக் கொண்டிருந்த போதும் குமரேசனின் மனம் அக்காவுக்கு ஏற்பட்ட அவமானம் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது. ராணி என்ற அந்தப் பெண் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அக்கா கூறிய விளக்கம் அவனுக்குப் புதுமையாகத் தோன்றியது மட்டுமல்லாமல் முற்றும் புரியாமலுமிருந்தது. அதே ஆணாதிக்கக் குரலைச் சுசீலா மேல் எழுப்புவேன் என்ற அக்காவின் கூற்றை அவனால் ஏற்க முடியாதிருந்தது.

வத்தளை பஸ் நிலையத்தில் இறங்கி அண்மையிலிருந்த கடையில் அண்ணாவின் பெண்ணுக்காக சொக்லெட்டும் பிஸ்கெட் பக்கெட்டும் வாங்கிக்கொண்டு சென்றான்.

www.padippakam.com



அண்ணியும் மகளும் குமரேசனை வரவேற்று உபசரித்தனர். சாக்லெட்டையும் பிஸ்கெட்டையும் பெண்ணிடம் தந்தான். அவளை அருகே அழைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

''சுசீலா நல்ல அடக்கமான பெண் போலத் தெரிந்தது. நானும் இவரும்தான் நேரில் பார்த்து முடிவு செய்தே போட்டோ அனுப்பினோம். பெண்களெல்லாம் கலியாணத்தின் பின்னர் எப்படி மாறிவிடுவார்கள் என்று சொல்ல முடியாது...''

அண்ணி சிரித்தபடியே சொன்னாள்.

''நீங்க அண்ணி அப்படி மாறிவிட்டீர்களா?''

''ஏதாவது உரிமை பேசினால் இவரும் அப்படித்தான் சொல்லுவார். கலியாணத்தின் பின் நான் மாறிவிட்டனாம்''

''புதிய பொறுப்புகள் கடமைகள் ஏற்பட எல்லோரும் மாறிக்கொண்டேதான் இருப்பார்கள்''

குமரேசன் சமரசம் பேசினான்.

''சுசீலா நல்ல பெயர். எனக்குப் பிடித்துக் கொண்டது. சுசீ என்றும் கூப்பிடலாம். சீலா என்றும் கூப்பிடலாம். நீங்க எப்படிக் கூப்பிடப் போறீங்க.''

''சுசீ'' என்று நாவில் வந்த வார்த்தையை கடிந்து கொண்டு சொன்னான் :

''இன்னும் தீர்மானிக்கவில்லை.''

''நல்லது அவளைக் கேட்டே தீர்மானிப்பதே நல்லது. வீட்டில் எப்படி அழைக்கிறார்களோ தெரியாது...''

''உங்களுக்கு எப்படி அழைப்பது பிடிக்கும்...''

''சுசீ...''

www.padippakam.com



''அப்படியே அழைக்கிறேனே...'' கூறியபடியே உள்ளூறச் சிரித்துக் கொண்டான்.

''தூரதேசத்திற்கு, பனிக்குளிர் தேசத்திற்குச் செல்வதைப் பற்றித்தான் கொஞ்சம் பயப்படுவதாகத் தெரிந்தது. லட்சக்கணக்கானவர் போய் வாழுகிறார்கள் தானே. பயப்பட எதுவுமில்லை. எல்லாம் பழகிவிடும் என நான் சொன்னேன்.''

அண்ணி சுசீலா பற்றிக் கூறுபவற்றை ஆர்வமோடு கேட்டுக் கொண்டிருந்தான். ஏற்பாடு செய்தபடி சுசீலா வந்து சேர முடியாத துரதிஷ்டம் பற்றியும் எண்ணிக் கொண்டான்.

அண்ணாமலை வந்து சேர்ந்தான். இருவரையும் பேச விட்டு அண்ணி தேநீர் தயாரிக்கச் சென்றாள்.

வடக்குக் கிழக்குப் பகுதி நிலைமை மோசமாக இருப்பதாகவே அண்ணன் சொன்னான். நிலைமை ஒரளவு சீராகி பிரயாணங்கள் நடைபெற ஒருவாரமாவது செல்லலாம் எனக் கூறினான். குமரேசனுக்கு அச்செய்தி ஏமாற்றமாகவே இருந்தது. கனடாவிலிருந்து வரும்போது போட்ட திட்டமெல்லாம் சிறிது சிறிதாக உடைந்து வருவது வருத்தமாகவே இருந்தது. வெளியே காட்டாத விதமாக மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டான்.

அண்ணி தேநீரை இருவருக்கும் தந்துவிட்டு இரவு உணவு தயாரிக்க, சமையல்கட்டுப் பக்கம் சென்றாள்.

அண்ணி சொன்னபடி மகள்புத்தகங்களுடன் படிப்பதற்கு அறைக்குள் நுழைந்தாள்.

அக்கா பற்றிய பேச்சுவந்த உடனேயே அண்ணாமலையின் முகமே மாறியது.

www.padippakam.com



''அந்த அயோக்கியனால் எங்க மானமே போகிறது. அக்கா ஏதோ புல்லெண்டாலும் புருஷன் என்று சமாளிக்கிறா. நான் அக்காவைப் பார்க்கக்கூட முன்னர் போலப் போவதில்லை...''

அண்ணாமலையாலும் அக்காவின் நியாயங்களைக் கிரகிக்க முடியவில்லை எனக் குமரேசன் எண்ணிக் கொண்டான். ஒருவேளை அக்கா தன் காரணங்களை அண்ணனுக்குக் கூறவில்லையோ எனவும் நினைத்தான்.

''அக்கா சொத்து, பிள்ளைகள், பாதுகாப்பு, சமூக அந்தஸ்துப் பற்றிப் பேசுகிறா.''

''அவனிடம் பணமும் பதவியும் இருந்தென்ன, பண்பாடல்லா இருக்க வேண்டும். அவனது சொத்தெல்லாம் அக்கா கொண்டு சென்ற சீதனத்தின்மேல் கட்டப்பட்டதே... அவனது ஆட்டங்களைப் பார்க்காமல் அப்பாவும் அம்மாவும் போய் விட்டது நல்லதாய் போய்விட்டது.''

''எப்படியானாலும் அக்காவை அவரால் ஒதுக்கிவிட முடியாதென்று நினைக்கிறேன். சொத்தெல்லாவற்றிலும் அக்காவிற்கும் பாதி உரிமை இருக்கும்தானே...''

குமரேசன் தனக்குத் தெரிந்த சட்ட அறிவைச் சொன்னான்.

''அதனால்தானே அவனே அக்காவோடு ஒட்டிக் கொண்டிருக்கிறான். அல்லது அந்த வேசி வீட்டிலேயே தங்கி விடுவானே''

அண்ணாமலையின் பேச்சில் நீண்ட நாள் கோபம் வெளிப்பட்டது. 'வேசி' என்ற வார்த்தை பற்றி அக்கா கூறியது அவன் நினைவில் வந்தது.

அண்ணி பரிமாறிய குழல் புட்டும் மீன் குழம்பும் அவனுக்குப் புதிய சுவையாக இருந்தது. அத்தோடு சில நாள் முன்னர் யாழ் நகரிலிருந்து வந்த கறுத்தக் கொழும்பான் மாம்பழமும் பரிமாறினாள். அவற்றைச் சுவைத்துச் சாப்

www.padippakam.com



பிட்டபடியே முன்னர் சாப்பிட்ட நாட்களை எண்ணிப் பார்த்தான்.

நமது மண்வாசனை தரும் பண்பாட்டு உணவுகளை விட்டு அந்நிய நாட்டில் கூலி அடிமையாக உழைத்து அந்நியப்படுவது பற்றி வேலாயுதம் கண்டித்துக் கூறியது குமரேசனின் நினைவில் வந்தது.

''வடக்கு கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் பொலிஸ் நிலையங்களைத் தாக்குவதால் இங்கேயும் கலவரம் ஏற்பட்டு விடலாம். நீ சீக்கிரமாக வீட்டுக்குப்போவது நல்லது.''

அண்ணாமலை கூறி தம்பியாரை பஸ் நிலையம் வரை அழைத்துவந்து விரைவாக வந்த மினிபஸ் ஒன்றில் ஏற்றி விட்டான்.

## 9

ஞாயிற்றுக் கிழமை காலை உணவு முடிந்ததும் குமரேசன் வேலாயுதத்தைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறி வெளியே புறப்பட்டான். கண்டபடி திரியவேண்டாம் சீக்கிரமாக வீட்டுக்கு வந்து விடும்படி அக்கா எச்சரித்தாள். வடக்கு கிழக்குப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான பொலிஸாரை விடுதலைப் புலிகள் கொன்றதனால் கொழும்பிலும் மற்றைய பகுதிகளிலும் தமிழர்களைச் சிங்களக் காடையர் மட்டுமல்லாமல் பொலிஸ், இராணுவத்தாரே தாக்கலாம் என சிவலிங்கமே கூறியதாக அக்கா அவனிடம் கவலையோடும் பயத்தோடும் தெரிவித்திருந்தாள்.

பாமன்கடைப் பகுதியில் இருந்த வேலாயுதத்தின் முகவரியைத் தேடி, தங்கும் இடத்தைப் பிடித்தான். ஒரு சிங்கள வீட்டின் மேல் மாடி. வீட்டின் இடதுபுறப்பகுதியில் மேலே ஏறும் படிக்கட்டு இருந்தது; வேலாயுதம் பெயரைக் கூறியபோது முழுநீளச் சட்டையுடன் தன் நீண்ட கூந்தலை

www.padippakam.com



வாரிக் கொண்டிருந்த சிங்களப் பெண் ஒருத்தி வந்து வழி காட்டினாள்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும் வேலாயுதம் அவனது அறையில் தங்கியிருந்த பார்த்திபனை அறிமுகப் படுத்தினான்.

பார்த்திபன் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிபவர். பல்கலைக் கழகத்தில் டிப்ளமா பயிற்சி பெறுவதற்காக வந்துள்ளார் என வேலாயுதம் கூறினான். பார்த்திபனிடம் ஏற்கெனவே குமரேசனைப் பற்றி விவரமாக அறிமுகப்படுத்தி வேலாயுதம் கூறியிருந்தது நன்கு தெரிந்தது.

''நான் முன் கூறிய கனடா நண்பன் குமரேசன்''

சுருக்கமாக, பார்த்திபனுக்கு அறிமுகப்படுத்தியலிருந்து யாவும் குமரேசன் புரிந்து கொண்டான்.

''குமார், உன்னுடைய துரதிர்ஷ்டத்தைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தேன். நாங்க எதிர்பார்த்ததைவிட நிலைமை மோசமாகி வருகிறது. வடக்குக் கிழக்கில் பொலிஸாரைக் காப்பாற்ற இராணுவமே அழைக்கப்பட்டதால் விடுதலைப் புலிகளோடு நேரடி யுத்தமே நடைபெறுவதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே போராட்டம் தணிந்து போக்குவரத்துச் சீரடைய ஒரு வாரமென்ன இரண்டு மூன்று வாரங்கள் கூட ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை''

வேலாயுதத்தின் கூற்று குமரேசனை ஒருகணம் உலுப்பி விட்டது. தன் திட்டமெல்லாம் திசைமாறிச் செல்வதாக எண்ணிக் கொண்டான். தன் மன அதிர்ச்சியைச் சமாளிப்பதாகக் கேட்டான் :

''பிரேமதாசா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறதே. அதே வேளை ஏனிப்படியான தாக்குதல் நடைபெறுகிறது?''

www.padippakam.com



''அதுதானே எங்களுக்கும் புரியவில்லை. விடுதலைப் புலிகளின் செயல்களுக்கெல்லாம் நேரடிக் காரணம் கூறப் படுவதில்லை. நாமேதான் விளக்கங்கள் தேடவேண்டும்... பெரும்பாலும் அவை எல்லாம் ஊகங்களாகவே இருக்கும்''

வேலாயுதம் விடுதலைப் புலிகளின் செயல்களை நன்கு கவனித்து வருபவன் போல வீமர்சித்தான்.

''நீங்க என்ன நினைக்கிறீங்க... யாழ்ப்பாண நிலைமை களை நீங்களே நேரில் அறிந்திருப்பீர்களே''

பார்த்திபனைப் பார்த்துக் குமரேசன் கேட்டான்.

''தற்போதைய நடவடிக்கைகளிலிருந்து ஒரு உண்மை தெளிவாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகளுக்கும் பிரேம தாசா அரசுக்கும் இடையில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றிக்கூட எவ்வித அறிக்கையும் இது வரை வெளிவரவில்லை. நாம் அவற்றையும் ஊகித்துத்தான் அறியவேண்டும்.''

பார்த்திபனின் பதிலை வேலாயுதமும் ஆமோதித்தான்.

''நீங்க என்னவிதமாக ஊகிக்கிறீர்கள்?'' பார்த்திபனை நோக்கி குமரேசன் வினா எழுப்பினான்.

''யாழ்ப் பாணத்தில் இருந்தபோது நான் அறிந்த வரையில் வட, கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களை எல்லாம் தமது நிர்வாகத்துக்குக் கொடுத்து விடும்படி விடுதலைப் புலிகள் அரசைக் கேட்டுக் கொண்டிருந்தார் களாம். அவ்வாறு விட்டுக் கொடுப்பது பிரேமதாசாவிற்குப் பெரிய சங்கடமாக இருந்திருக்கும். பார்ப்போம்... பார்ப்போம் என நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தார். விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தையை தற்போதைய நடவடிக்கை மூலம் முறித்துக் கொண்டார்கள் என்றே கூறுவேன்.''

பார்த்திபனின் கூற்றில் ஓரளவு உண்மை இருப்பதாகவே வேலாயுதத்திற்கும் தோன்றியது.

www.padippakam.com



வேலாயுதமும் முதல்நாள் கேள்விப்பட்டிருந்தான். பிரேமதாசா நெருக்கமான தன் இடதுசாரி நண்பரிடமும் தன் எண்ணத்தைத் தெரிவித்திருந்தாராம். விடுதலைப் புலிகளின் பொலிஸ் நிலையத்தாக்குதல்களையும் உயிர் இழப்பீடுகளையும் நிறுத்துவதற்கு உடனடியாக வடக்கு கிழக்கு பொலிஸாரை நிலையங்களை விட்டுவிட்டு மற்றைய மாகாண எல்லைகளுக்குள் வரும்படி ஆணையிட இருந்தாராம். அதற்கு இராணுவத்தினரும் பொலிஸ் தலைமைப்பீடமும் ஏற்றுக் கொள்ள மறுத்தனராம். இராணுவம், விமானப்படையை உடனே அனுப்பி பொலிஸாரைக் காப்பாற்றும்படி பொலீஸ் தலைப்பீடம் வற்புறுத்தியதாம். இந்தச் செய்தியையும் அறிந்திருந்த படியால், வேலாயுதத்திற்கு பார்த்திபன் கூற்றில் உண்மை இருப்பதாகவே எண்ணத் தோன்றியது.

''பிரேமதாசா விடுதலைப் புலிகளுக்கு இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் போரிட வழங்கிய ஆயுதங்களே தற்போது சிங்கள பொலிஸார், இராணுவத்திற்கு எதிராகத் திருப்பப்பட்டுள்ளது வேடிக்கைதான்.''

வேலாயுதம் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த பின்னர் சிரித்தபடி சொன்னான்.

''ஆமாம். தீட்டிய கட்டையில் கூர்பார்ப்பதுபோலத்தான் இதுவும். சிங்கள ஆட்சியாளர் எவரும் நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் பிரச்சனைகளைத் தீர்க்க இன்று வரை முயலவில்லை. அவ்வப்போது ஏற்படும் கடுமையான பிரச்சனைகளை அந்தந்த வேளைக்குத் தீர்க்கும் வேலையிலேயே ஈடுபட்டனர். அதனால்தான் இத்தனை பிரச்சனைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.''

பார்த்திபன் தன் கண்ணோட்டத்தைக் கூறினான்.

''அதுவும் உண்மைதான்''

குமரேசன் ஆமோதித்தான்.

www.padippakam.com



வேலாயுதம் எலெக்டிக் கேட்டிலில் தேநீர் தயாரிக்கத் தண்ணீரைப் பிடித்துவைத்துவிட்டு உட்கார்ந்தான்.

''இன்றைய நிலையில் பிரயாணம் பற்றி உனக்கு எதுவுமே உறுதியாகக் கூறமுடியாது. நீ கூட யாழ்ப்பாணம் சென்று கலியாணத்தை முடித்து அழைத்துக் கொண்டும் போக முடியாத சூழ்நிலை. வெளிநாட்டிலிருந்து வருபவர்களெல்லாம் விடுதலைப்புலிகளுக்கு அஞ்சுகிறார்கள். அது வேறு பிரச்சனை...''

''பணப் பிரச்சனை...''

பார்த்திபன் குமரேசனைப் பார்த்தபடி வேலாயுதத்தின் வார்த்தையை முடித்தான்.

''எப்படியும் இது உனது பிரச்சனை. உன் உழைப் போடும் சேர்ந்த வாழ்க்கைப் பிரச்சனை. நீயே தான் தீர்மானம் எடுக்க வேண்டும். நாங்க வேண்டிய உதவி எப்போதும் செய்வோம்...''

வேலாயுதம் அழுத்திக் கூறியதைக் கேட்டுவிட்டு குமரேசன் சிறிதுநேரம் மௌனமாக இருந்தான்.

வேலாயுதம் எழுந்து கொதித்த நீரைத் தேயிலை போட்ட பாத்திரத்தில் ஊற்றினான்.

மூன்று கிளாஸில் சீனியைப் போட்டுவிட்டு வடிதட்டைப் பிடித்து தேநீரை ஊற்றி நிரப்பினான். ஸ்பூனால் கலக்கிவிட்டு தேநீரை எடுத்துவந்து மேசையில் வைத்தான்.

''எனக்கு என தனிப்பட்ட பொறுப்பு எதுவுமில்லை. மூன்று நாலு வாரமானாலும் சுசீலாவின் வரவை அல்லது முடிவான பதிலைப் பார்த்தே பிரயாணம் பற்றித் தீர்மானிப்பேன்''

''நல்ல முடிவுதான். அங்கு வேலை போனாலும் இங்கே வேலை தேடுவதுதானே. உன் மச்சானே பெரிய தொழிலதி

www.padippakam.com



பதியாக இருக்கிறானே. உனக்கு ஒரு வேலை தர மாட்டானா?''

வேலாயுதம் கேட்டான்.

''மற்றவர் தயவு வேண்டியதில்லை. நானே அங்கேயோ இங்கேயோ சமாளித்துக் கொள்வேன். எல்லாம் சுசீலாவின் வருகையில்தான் இருக்கிறது.''

அக்கா விஷயத்தில் மச்சானிடமுள்ள ஆத்திரம் மனதைப் புண்படுத்தியது. வெளியே காட்டாமல் சமாளித்துக் கொண்டான்.

''இங்கேதானே உலகச் சந்தையே திறந்துவிடப் பட்டுள்ளதே. கனடாவிலுள்ளவை மட்டுமல்ல உலகச் சந்தையில் கிடைப்பவையெல்லாம் இங்கேயே கிடைக்கும். நுகர் பண்டங்களுக்கே அந்த நாடுகளுக்கெல்லாம் ஓடி உழைக்க வேண்டியதில்லை.''

பார்த்திபன் சொன்னான்.

''ஆனால் நான் ஒன்று கூறுவேன். ஏகாதிபத்திய, முதலாளித்துவ கலை, கலாச்சாரம், நுகர்பண்டம் பண்பாடு நமக்கு வேண்டியதில்லை. அது என்றும் முழுமையாக நமக்கு நமது மக்களுக்கு என்றும் எட்டாது. நாம் நம்முடைய கலை, கலாசாரங்களின் தரங்களை உயர்த்திப் பெருமைப்பட வேண்டும். அவர்களுடையதுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதில்லை. இவற்றைத்தான் அன்றும் நான் குமரேசனுக்குக் கூறினேன்.''

பார்த்திபனும் அறியத் தக்கதாக தன் கோட்பாட்டை வேலாயுதம் விரித்துச் சொன்னான்.

பார்த்திபனுக்கும் வேலாயுதத்தின் கருத்து சரியாகத் தோன்றியது. புதுமையாகவும் இருந்தது.

வேலாயுதத்தின் கருத்துகள் சுசீலாவின் நினைவுக்கு மேலாக மனதில் மிதந்து கொண்டிருந்தன.

www.padippakam.com



"பார்த்திபன் உங்களைத்தான் கேட்கிறேன். இந்தத் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றி யாழ் மக்கள் என்ன எண்ணுகிறார்கள்? இத்தனை போராட்டமும் இழப்புகளும் அவசியமா?''

குமரேசன் கேட்டான்.

''பிரிட்டிஷ் ஏகாதிபத்திய குடியேற்ற நாட்டு ஆட்சியை தமிழர்களும் சிங்கள மக்களோடு சேர்ந்து எதிர்த்தார்கள். சிங்கள, தமிழ் இடது சாரிகளும் இப்போராட்டத்தில் முன் நின்றார்கள். இந்த வகையில் தேசீய விடுதலைப் போராட்டம் முற்போக்கானதே. ஆனால் பெரும்பான்மையினரான சிங்கள பௌத்தர்கள் மலைநாட்டுத் தமிழர்களை நாடற்றவ ராக்கிவிட்டு, சிங்களம் மட்டும் அரசு மொழி என்று சட்டம் இயற்றி இலங்கைத் தமிழர்களை ஒடுக்குவது தேசீயமல்ல. பேரினவாத தேசீயம். இது பிற்போக்கானது. அதை எதிர்த்தே தமிழர் போராட்டம். தேசீய முதலாளிகளின் தலைமையிலேயே இத்தகைய போராட்டங்கள் நடைபெறுவ துண்டு. ஆனால் தமிழரைப் பொறுத்தவரை குட்டி பூர்ஷ் வாக்களே தலைமை தாங்கி நடத்துவதே விசித்திரமானது...'

குமரேசனும் வேலாயுதமும் அவனது கூற்றில் ஓரளவு தெளிவு பெற்றனர்.

''தேசீய விடுதலைப் போராட்டம் முற்போக்காகவும் இருக்கலாம் பிற்போக்காகவும் போகலாம் என்று சொல்லு கிறாய் அப்படித்தானே?''

வேலாயுதம் கேட்டான்.

''ஆமாம். அது வரலாற்றுக் காலகட்டத்தை ஒட்டியது. அக்காலகட்டத்தில் ஜனநாயகம் ஒழிந்து பாஸிச தேசீயம் தலைதூக்கலாம். இங்கே நாம் அந்தக் கால நிலையிலேயே உள்ளோம்...''

''இன்றைய போராட்டம் பிற்போக்கானது என்று கூறுகிறாயா?''

www.padippakam.com



''தேசியம் என்பதே முதலாளித் துவத்தின் வார்த்தையே. சோஷலிசமே பாட்டாளி தொழிலாளி பரந்துபட்ட மக்களுக்குப் பயன்தரத்தக்க சமூக அமைப்பு...''

பார்த்திபன் தேசீயம் என்பதற்கு இலக்கணம் வகுப்பது போலச் சொன்னான். ''அப்போது ஏன் இது சிங்கள பௌத்தர்களது தேசம் என்று தேசீயம் பேசியே போராட்டம் நடத்துகிறார்கள்.''

''சிங்கள முதலாளிகள் தமது மொழி பௌத்த மதம் என்பதைக் காப்பாற்றுவதாகக் கூறிக் கொண்டு தமிழர்களை ஒடுக்கப் போராட்டம் நடத்துகிறார்கள். சிங்களத் தலைமைப் பீடத்தின் கெடுபிடி யுத்தமே. யுத்தத்தாலும் ஒரு பகுதி முதலாளிகள் லாபம் பெறுவார்கள். அவர்கள் பாதிக்கப்படும் வரை யுத்தம் நடைபெறும். கூட்டுமொத்தமாக சிங்கள உழைக்கும் வர்க்கத்தவரும், அப்பாவி மக்களும் பாதிக்கப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள், உயிரிழப்பு உட்பட.''

''தமிழர்களைப் பற்றி என்ன சொல்லுகிறீங்க?'' குமரேசன் பொறுமையிழந்து கேட்டான்.

''சிங்களவர்களைவிட மோசமாகத் தமிழர்களே பாதிக்கப்பட்டிருப்பதை நீங்களே பார்க்கலாமே. உலகமெல்லாம் அகதிகளாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டிலும் அகதி முகாம்களில் லட்சம் பேருக்குமேல் வாழ்கிறார்கள். கல்வி பாதிக்கப்படுகிறது. போக்குவரத்துப் பிரச்சனைகள் வேறு, உயிரிழப்புகள், சித்திரவதைகள், சொத்திழப்புகள், அப்பாடா அடுக்கிக் கொண்டே போகலாம்...''

''இதையும் பிற்போக்கானது என்று கூறுவாயா?''

பார்த்திபனைப் பார்த்து வேலாயுதம் கேட்டான்.

''இது தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வு, இத்தனை இழப்புகளுடன் சோஷலிச சமுதாயம் அமைக்க முடிந்திருந்தால் பாராட்டியிருப்பேன். நாட்டின் பெரும்பான்மையான தொழிலாளர் விவசாயிகள் பயன் பெற்றிருப்பார்கள்.''

www.padippakam.com



''சிங்களவர்களது அடக்கி ஒடுக்கும் போக்கிற்கு கீழ்ப் ப்டிந்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறாயா?''

வேலாயுதம் கேட்டான்.

''இது ஒரு வரலாற்று நிகழ்வு. அடக்கி ஒடுக்குவதற்கு எதிரான போராட்டமாகவே ஆரம்பித்தது. ஆனால் அது எங்கேபோய் முடியப் போகிறது என்பதைத்தான் கணிக்க முடியாதிருக்கிறது...''

''ஏனப்படிச் சொல்லுகிறாய்?''

''தமிழர் போராட்டத்தை தேசிய இன விடுதலைப் போராட்டமாக நீங்க ஏற்க மாட்டீர்கள் போலிருக்கிறது.''

''தேசியம் என்பதே முன்னர் நான் சொன்னது போல முதலாளிகளின் நலனுக்காகப் பரப்பப்படும் மதம் போன்ற ஒருவித அபினி நிலையே. அது இன்று பிற்போக்கான வடிவத்திலேயே இயங்குகிறது. காலப்போக்கில் தொழிலாளி, விவசாயிகள் தெளிவு பெற்று சோஷலிசப் போராட்டத்தில் ஈடுபடவே செய்வார்கள். அதற்கு முதலில் தேசிய பாஸிஸ கால கட்டம் கடந்து மக்கள் ஜனநாயம் தோன்ற வேண்டும்...''

பார்த்திபன் சொன்னான். குமரேசன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''இன்றைய யதார்த்த நிலையை மறந்து நீங்கள் எங்கோ கற்பனாவாத நிலையில் பேசுவதாகவே உங்கள் பேச்சை எவராயினும் எடுத்துக் கொள்வார்கள்!''

வேலாயுதம் சொன்னான்.

''மற்றவர் எப்படியும் சொல்லட்டும். இதுதான் என் கருத்து. மார்க்சிய கருத்தும் இதுவேதான்''

குமரேசன் விடைபெற்றுச் செல்லும்போதும் அவன் மனதில் பார்த்திபன் கூறிய பல புதிய கருத்துகள் வட்ட மிட்டுக் கொண்டிருந்தன.

www.padippakam.com



17-19ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் நிலப் பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளித்துவ வர்க்கம் தேசியத்தை முன்வைத்து ஜனநாயகப் புரட்சியில் ஈடுபட்டது முற்போக்கானது. இப்புரட்சிக்கு தேசிய முதலாளிகளே தலைமை தாங்கினர். பின்னர் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்த பிறகு ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளை தமது காலனிகளாக மாற்றிய போக்கு பிற்போக்கானது. இந்நிலையை எதிர்த்த தேசீய விடுதலைப் போராட்டம் முற்போக்கானது. இந்தியா, இலங்கை நாடுகளில் அனைத்து தேசீய இனங்களும் ஒன்றிணைந்து நடத்திய விடுதலைப் போராட்டம் முற்போக்கானது. பின்னர் சிங்களப் பேரினம் தேசீய பாஸிச வடிவமெடுத்து மற்றொரு தேசீய இனமாகிய தமிழர்களை அடக்கி ஒடுக்க முயல்வதும் பிற்போக்கானதே. ஒரு காலகட்டத்தில் முற்போக்காகக் கருதப்படும் தேசீயம் மற்றொரு காலத்தில் பிற்போக்காகி தேசீய பாஸிச வடிவமெடுத்து அடக்கி ஒடுக்கும் தன்மையை பார்த்திபன் விரிவாக விளக்கியதை சிந்தனையில் அசை போட்டுக் கொண்டே குமரேசன் வீட்டுக்குச் சென்றான்.

## 10

இரண்டு வாரம் கழிந்துவிட்டது. பத்திரிகை ரேடியோ செய்திகள் எல்லாம் வடகிழக்குப் போரைப் பற்றியே கூறிக் கொண்டிருந்தன.

அன்று காலை குமரேசன் சாப்பிட உட்கார்ந்தபோது மைத்துனர் சிவலிங்கமும் வந்து உட்கார்ந்தார். குமரேசன் அங்கு வந்த பின்னர் அவர் என்றும் ஓய்வாகப் பேசியது இல்லை. விமான நிலையத்திற்கு குமரேசனை அழைத்து வருவதற்குத் தமயந்திக்கு காரையும் டிரைவரையும் மட்டும் கொடுத்திருந்தார்.

குமரேசனிடம் கனடா பற்றியும் அங்குள்ள 'பொப்புலர்' கார்கள் பற்றியும் விசாரித்தார்.

www.padippakam.com



''இங்கே நான் பார்த்தளவில் அங்குள்ள கார்கள் மட்டுமல்ல எல்லாப் பொருட்களுமே இங்கேயே கிடைக்கின்றன.''

குமரேசன் சொன்னான்.

''அது உண்மையாயிருக்கலாம். இங்கே நாம் முன்னர் உற்பத்தி செய்த பொருட்களை எல்லாம் இப்போது உலகச் சந்தையில் வாங்கி விற்க வேண்டியுள்ளது''

''உற்பத்தி செய்வதைவிட இது தொல்லையில்லாத தொழில்தானே''

மச்சானின் எண்ணத்தை அறியும் நோக்குடன் குமரேசன் சொன்னான்.

''அது உண்மைதான். ஆனால் முன்னால் உற்பத்தி செய்து விற்றதுபோல லாபம் கிடையாது. ஒரே போட்டா போட்டி.... கழுத்தறுப்பு...''

''அதனால் ஏதாவது நஷ்டம் ஏற்படுகிறதா?''

''அப்படியெல்லாமில்லை. ஒரு கிறிஸ்மஸ்போது விற்காமல் கிடக்கும் பொருட்களைக்கூட அடுத்த கிறிஸ்மஸ் காலத்தில் அதிக லாபத்தோடு விற்றுவிட முடியும். பாக்டரி, கட்டிடம், நிலமெல்லாம் பத்து மடங்குக்கு மேலாக ஏறிவிட்டது.''

''ஆமாம் பணத்தின் மதிப்புக் குறையும்போது கட்டிடம் நிலத்தின் விலை ஏறிக்கொண்டுதானே போகும். லாபம் ஏறுவதுபோல தோற்றமளிக்கும்.''

''அதனாலென்ன. நம்ம சொத்தினால் எங்களுக்கு ஒரு போதும் நஷ்டமேற்படப் போவதில்லை.''

''இன்றைய நிலையை நவகாலனி என்று கூறுகிறார்கள். உற்பத்தியில் போட்ட மூலதனத்தை எல்லாம் தற்போது வணிக மூலதனமாக மாற்றியிருப்பீர்கள்.''

''சரியாகச் சொன்னாய்''

''ஜேவிபியால் உங்களுக்குப் பிரச்சனையில்லையா''

www.padippakam.com



''சிலகாலம் பயமாகவே இருந்தது. ஆனால் பிரேம தாசா கெட்டிக்காரனே. அவர்களை அடக்கி, ஒடுக்கி விட்டான்.''

சிவலிங்கம் கூறிக் கொண்டிருந்த போது டெலிபோன் மணி அடித்தது. அக்கா எடுத்தாள். குமரேசனை அழைத் தாள்.

குமரேசன் சென்று போனை வாங்கினான்.

''நல்ல செய்தி. பிரயாணம் எதிர்பாராத நிலைமைகளில் தடைப்பட்டுவிட்டது. விரைவில் அங்குவர ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாக சுசீலாவின் தந்தையார் எழுதியிருக் கிறார்.''

அண்ணனின் குரல்.

''குட். வெரிகுட். மாலையில் வீட்டுக்கு வந்து பார்க்கி றேன் அண்ணா.''

## 11

சுசீலாவும் தந்தை தம்பையாவும் கிராமத்திலிருந்து யாழ் ரயில் நிலையத்திற்கு அதிகாலையில் வந்திருந்தனர். அதன் பின்னரே வண்டி எதுவும் அங்கிருந்து புறப்படாது என்பதை அறிந்தனர். அவர்கள் மட்டுமல்ல மேலும் ஏரான மானோர் வந்து ஏமாற்றத்துடன் திரும்பினர்.

சீருடையணிந்த விடுதலைப்புலிப் பெண்கள் அணியினர் தோளில் துப்பாக்கியுடன் அனைவரையும் வீட்டுக்குத் திரும்பும்படி பணித்துக் கொண்டிருந்தனர்.

மற்றவரின் ஏமாற்றத்தைவிட தனக்கு நடந்ததே பெரிய ஏமாற்றமாக சுசீலா எண்ணிக் கொண்டாள். அப்பாவும் எண் ணிக் கொண்டார். சுசீலா மனதில் கட்டியிருந்த கற்பனைக் கோட்டை எல்லாம் திடீரெனச் சிதைந்து விட்டதாக அதிர்ச்சி

ஒ. ம—4

www.padippakam.com



யடைந்தாள். நெஞ்சு விம்மி வந்தது. வெளியே காட்டாமல் சமாளித்துக் கொண்டாள்,

ஏன் வண்டி புறப்படவில்லை, அடுத்த வண்டி எப்போது என்ற விசாரணைகள் நடைபெற்றன.

''நீங்க விடுதலைப் புலிகளின் ஈழநாதம் பார்க்க வில்லையா?''

ஒருவர் தம்பையாவிடம் வினோதமாகக் கேட்டார்.

''இல்லையே... என்ன விசேடம்?''

''விடுதலைப்புலிகள் வடக்கு, கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களையெல்லாம் தாக்கத் தொடங்கியிருக் கின்றனர்.''

''அதற்காக...''

''அதற்காக வழியிலேபோய் சாகப் போகிறீர்களா. சீக்கிரமாய் வீட்டுக்குப் போய்விடுங்கோ. சிங்கள ராணுவம், விமானப்படை சும்மா இருக்கப் போவதில்லை. ஷெல் அடிக்கப் போகிறார்கள். பொம்பர் குண்டு போடப் போகிறது. பதுங்கு குழிகளையெல்லாம் தோண்டிவையுங்கோ''

நன்கு விஷயங்கள் அறிந்தவர் போல வந்த ஒருவர் சாத்திரம் கூறுவது போலப் பேசிக் கொண்டிருந்தார்.

சுசீலாவும் தந்தையும் வந்த அதே காரில் பெட்டிகளுடன் வீடு திரும்பினர். தெருவிலே விடுதலைப் புலிகளின் ஜீப்பு களும் ஓடிக் கொண்டிருந்தன. அந்தப் பெரியவர் கூறியது போல மாலையில் வானத்தில் விமானங்களும் ஹெலிக் கொப்பர்களும் பறந்தன. பலாலியிலிருந்தும் யாழ்கோட்டை யிலிருந்தும் ஷெல் அடிச்சத்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

பிரயாணம் தடைப்பட்ட ஏமாற்றத்துக்கு மேலாக மரண பயம் மேலிடத் தொடங்கியது. வீட்டிலே நோயுற்ற தாயார்

www.padippakam.com



அழுது கொண்டிருந்தார். தாயாரை அந்நிலையில் விட்டுச் செல்வதே அதிகாலையில் அவளுக்குச் சங்கடமாகவே இருந்தது.

இடையிடையே குமரேசனின் நினைவும் வந்து கற்பனையில் விளையாடியது. அவன் கொழும்பு வரும் சேதியை அண்ணன் அண்ணாமலை ஒரு மாதத்திற்கு முன்னரே தெரிவித்திருந்தார். வந்து சேர்ந்துவிட்ட செய்தி கிராமத்துப் பிரயாணி ஒருவர் மூலம் முதல் நாள் தான் வந்தது. அதை எதிர்பாராமலே சுசீலாவோடு தந்தையாரும் புறப்படும் ஏற்பாடுகள் முன்னரே செய்து அண்ணன் அண்ணாமலைக்கும் அறிவிக்கப்பட்டது.

குமரேசனே ஸ்டேசனுக்கு மாலையில் வரலாம். தவறினும் இரவு டெலிபோன் செய்வார். நேரில் மறுநாள் சந்திக்கலாம். நேரடியாகப் பேசுவதற்கும் எதிர்காலத்தைத் திட்டமிடவும் எத்தனை விஷயங்கள் இருக்கின்றன. அதே வேளை காதல் உணர்வினால் ஏற்பட்ட கிளுகிளுப்பு எல்லாம் திடீரென அடங்கிவிட்டன. ஏமாற்றமும் அச்சமும் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. எத்தனை விசித்திரம்.

## 12

கொழும்பில் குமரேசனோடு போனில் பலதடவை பேசிப் பழகிய பின்னர் ஏற்பட்ட தாக்கத்தில் முதன் முதலில் அவளது நெஞ்சைத் தொட்ட இளங்கோவின் நினைவு இடையிடையே வந்தபோதும் இரண்டாவது இடமே பெற்றது. அது வெறும் குடத்து விளக்கான நினைவுகளாகவே இதுகாலமும் இருந்தது.

சுசீலாவின் நெருக்கமான தோழியான சகுந்தலா மட்டுமே இளங்கோ நெஞ்சில் புகுந்திருந்த செய்தியை ஓரளவு அறிந்திருந்தாள். கனடாக் கலியாணம் பேச்சு வந்து தந்தையின் வற்புறுத்தலுக்காகவே கொழும்பு செல்வதாக

www.padippakam.com



வும் 'அது தூரத்துப் பேச்சு நான் தட்டிக் கழித்து விடுவேன்' என்றும் கூறிவிட்டே சென்றாள்.

''போட்டோ பார்த்துவிட்டே அவர்கள் இத்தனை ஆர்வம் காட்டும்போது நீ கட்டாயம் மாட்டிக் கொள்வாய்.''

சகுந்தலா சிரித்தபடியே, சிறிது எச்சரிக்கையாகவே சொல்லியிருந்தாள். அவள் கூறியபடியே எல்லாம் நடந்து விட்டது.

கொழும்பிலிருந்து வந்ததும், முதல் தடவையாக சகுந்தலாவிடம் சென்றா, எதிர்பாராமல் டெலிபோனில் பேச வேண்டி நேரிட்டதால்தான் எல்லாம் நடந்துவிட்டது. இனிமேல் வாக்கு மாறமுடியாது என்றும் சகுந்தலாவிடம் கூறினாள் சுசீலா.

''நல்லவேளை இங்கே டெலிபோன் வசதியே இல்லை. இல்லாவிட்டால் நாள்தோறும் டெலிபோனில் காதல் மொழி பேசிக் கொண்டிருப்பார்''

சகுந்தலா சிரித்தபடியே கேலி பேசினாள்.

''எத்தனை நேரம் போனில் பேசிக்கொண்டே இருந்தார். இதெல்லாம் வீண் செலவல்லவா என்று கேட்டேன். 'அத்தனை செலவில்லை, இதெல்லாம் நவீன சட்டிலைட் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி. விஞ்ஞான வளர்ச்சிக் காலத்தில் வாழ்ந்து கொண்டு இவற்றையெல்லாம் பயன்படுத்தாமல் விடுவதுதான் பிற்போக்குத்தனம்' என்றார்.''

''பரவாயில்லையே, இப்படியெல்லாம் பேசுகிறார். சீதனம் எதுவும் பேசாததும் முற்போக்குத்தான்''

''பேச்சில் முற்போக்காக இருப்பவர்கள் பலர் நடைமுறையில் பிற்போக்காக இருப்பதையும் பார்க்கிறோமே''

சகுந்தலாவுக்கு சுசீலா தன் அச்சத்தையும் மறைமுகமாகத் தெரிவித்தாள்.

www.padippakam.com



''நவீன விஞ்ஞானக் கருவிகளையும் பண்டங்களையும் பயன்படுத்திக் கொண்டே பேய், பூதம், சாதி, இராகுகாலம், சாதகம் போன்ற மூடக் கொள்கைகளையும் விடாப்பிடியாக வைத்திருப்பவர்களையும் பார்க்கிறோம் தானே.''

''உண்மையேதான்'' சகுந்தலா ஆமோதித்தாள்.

''குமரேசன் எப்படி இருப்பாரோ தெரியாது. பழகினால் தானே நடைமுறையைப் பார்க்க முடியும்.''

''எல்லாம் சரியடி, நீ இப்போது மிஸ்டர் குமரேசன் பற்றி முடிவுகட்டி விட்டாய். இளங்கோ திடீரென வந்து 'ஐ லவ் யு' என்று சொல்லி திருமணத்திற்கு உறுதி மொழி கேட்டால் என்ன சொல்லுவாய்?''

சகுந்தலாவின் திடீர் வினா சுசீலாவை ஒருகணம் திணற அடித்தது. அது பற்றி முன்னரே பல தடவை எண்ணிப் பார்த்தபோதும் சகுந்தலாவுக்கு தன் மனதைத் திறந்து பதில் கூறுவது சிரமமாகவே இருந்தது.

''இளங்கோவிற்கு கனடா விஷயமாக மறைமுகமாகத் தெரியப்படுத்தி விட்டேன். இனி முதலில் அவரது தீர்மானம்; பின்னர் குடும்பத்தாரை விட்டு துணிச்சலாக வந்து என்னைக் கேட்டால் மட்டுமே நான் தீர்மானிக்க வேண்டும். அதுவரை ஏன் வீணாகக் கற்பனை செய்து கலங்கவேண்டும்...''

''உன் கற்பனையை விட்டு என்ன செய்வாய் என்பதை எனக்கு மட்டுமே சொல்லேன்ரி.''

சகுந்தலா வற்புறுத்திக் கேட்டாள். சுசீலாவின் மனம் ஊடாட்டத்தில் இடிபட்டது. தட்டிக்கழிக்க முயன்றாள். ஆனால் சகுந்தலா விட்டுவிடுவதாக இல்லை. மேலும் வற்புறுத்தினாள்.

''என்னடி இத்தனை இரகசியங்களை எல்லாம் சொல்லு கிறாய். இதை மட்டும் சொன்னால்என்னடி ஆகப்போகிறது. நான் என்னடி எல்லோருக்கும் பறை அடிச்சு விடுவேனா?''

www.padippakam.com



சகுந்தலாவிடமிருந்து தப்பிவிட முடியாத நிலையில் ஏதாவது பொய் சொல்லி விடுவோமோ என எண்ணினாள். ஆனாலும் மிக நெருக்கமான தோழிக்குப் பொய் சொல்லி ஏமாற்றிவிட அவள் மனம் மறுத்தது.

''சரியெடி, நீ வற்புறுத்துவதால் சொல்லுகிறேன். என்ன இருந்தாலும் இளங்கோவை நான் நேரில் பார்த்திருக்கிறேன். என்னை அவர் பார்த்திருக்கிறார். காதல், கலியாணம் பற்றிப் பேசாவிட்டாலும் வேறு விஷயங்கள் பற்றிப் பேசி ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருக்கிறோம். நான் எல்லாவகையிலும் பெரிய அழகியல்ல. இளங்கோ காதல் என முன் வந்தால் குறைகள் எதுவும் இருந்தாலும் அவற்றை அறிந்தே திருமணத்திற்கு உடன்படுகிறோம் என்றாகும். குமரேசனைப் பொறுத்தவரையில் நேரே பார்த்து என் குறைபாட்டில் அவர் ஏமாற்றமடைவது தேவையற்றதுதானே. அதேபோல எனக்கும் ஏமாற்ற மேற்படலாம் தானே...''

''சரியடி போதும் போதும். நேரடியாக என்ன சொல்லுகிறாய் என்றால் மிஸ்டர் குமரேசனை விட்டு இளங்கோவை கட்டிக் கொள்வாய். அப்படித்தானே...''

சுசீலா குனிந்த தலையை அசைந்தபடியே மெதுவாய் சிரித்தாள்.

''ஏன் நீ உன் அழகைப் பற்றி குறைவாக மதிப்பிடுகிறாயோ தெரியவில்லை. இன்பீரியோரிட்டி கம்பிளெக்ஸ். நான் ஆம்பிளையாய் பிறந்திருந்தால் உன்னையே கட்டியிருப்பேன். நீ நினைக்கும் அந்தக் குறைபாட்டில் அர்த்தமில்லையடி. நீ கறுப்பல்லடி. பொது நிறம்.''

''அப்பிடியா சொல்லுறாய்...''

''நீ மிஸ்டர் குமரேசனை நேரில் பார்த்து ஏமாற்றமடையலாம் அதனால் இளங்கோவை விரும்புகிறேன் என்பதை முதலில் சொல்லு. நான் ஏற்பேன். மற்றது நான் படித்த நூல்களின்படி, ஒன்றை உறுதியாய் சொல்லுவேன்.

www.padippakam.com



மார்பு வெளிக் கவர்ச்சியே தவிர வேறில்லை. ஆண்கள் எல்லா அளவுகளையும் விரும்பலாம். ஆண்களின் காமப் பார்வையிலிருந்து நீ தப்பிவிட்டாய் என்றே கூறுவேன். நாங்கதான் இறுக்கி இறுக்கிக் கட்டப் பார்க்கிறோம். எல்லாம் இந்த அயோக்கிய ஆண் கவிஞர்கள் கட்டிவிட்ட கற்பனையெடி. மலை, மாங்கனி என்றெல்லாம் சும்மா பாடுறாங்கள். இவங்களையெல்லாம் நிரையில் விட்டுச் சுட வேண்டும்''

''ஏன்டி, உனக்கும் இங்கே உள்ள நோயெல்லாம் தொற்றிவிட்டதா''

''ஜனநாயக நாடு என்று கூறி எல்லாருக்கும் ஒரே வாக்குரிமை இருக்கிறது என்று கூறிக்கொண்டு பெண்களை இரண்டாவது சாதியாகவும், அடிமையாக உழைப்பவர்களை மூன்றாவது சாதியாகவும் அடக்கி ஒடுக்குவதை ஒழிக்க வேண்டும்...''

சகுந்தலா கண்கள் சிவக்க சூடாகவே சொன்னாள்.

''நீ சொல்லுவது சரிதானடி. எல்லோருக்கும் ஒரே ஆத்மா இருக்கிறது என்று கூறி மதவாதிகள் மனித இனத்தைச் சமன் படுத்துவது போன்றது என்று...''

சுசீலா அதன்மேல் பேசாமல் நிறுத்திக் கொண்டாள்.

' ஏன்டி மறைக்கிறாய். ஆரடி சொன்னது. சொல்லடி...''

''இளங்கோ ஒரு தடவை சொன்னது நினைவில் வருகிறது.''

''இளங்கோவை நீ மறந்துவிட மாட்டாய் போலிருக்கிறது. அதைவிட்டு மிஸ்டர் குமரேசன் என்ன சொன்னார் என்று சொல்லன்ரி''

''அவர் கேலியாகவும் பேசினார். 'உங்க வைட்டல் ஸ்ரற்றிக்ஸ்' என்ன என்றும் கேட்டார்.''

www.padippakam.com



சுசீலா தலைகுனிந்தபடி வெட்கம் தலையிட சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''ஓ அதுக்கா நீ பயந்தாய். சரியான ஆளாகத்தான் மாப்பிளை பிடித்தாயடி. என்ன மாதிரிக் கேள்வி... நீ என்ன சொன்னாயடி''

''நீங்க வந்து அளந்து பாருங்கோ. பிடிக்காவிட்டால் விட்டிடுங்கோ என்று சிறிது கடுமையாகவே சொன்னேன். அவர் சொறி, நான் கேட்டிருக்கக் கூடாதுதான். உங்க உயரத்தையும் எடையையும் சொல்லுங்கோ என்றார். எதற்கு என்று கேட்டேன். சினிமாக்களில் வருவது போல உங்களைத் தூக்கி மெத்தையில் போடலாமோ என்று பார்க்க என்றார்.''

மீண்டும் சிரித்தபடியே சுசீலா ஓரளவு வெட்கம் மேலிட சொன்னாள்.

''இப்படியெல்லாம் டெலிபோனிலையே பேசிறாரா. சரியான ஆளாகத்தான் இருக்கிறார். சரிசரி ரொம்ப இன்ரறெஸ்டிங்காயிருக்கு. வேறு என்னடி சொன்னார்?''

''வரும்போது என்ன பொருட்கள் வாங்கிவரவேண்டும். தேவையானவற்றைச் சொல்லும்படி கேட்டார். சிங்கப்பூர் வழியாக வருவதாகவும் சொன்னார். நான் உங்க விருப்பப் படி எதுவும் வாங்கிவரலாம் என்றேன்''

''போடிபோ. இப்பதான் விரும்பினதெல்லாம் கேட்டு வாங்கிப் போடவேணுமடி. கலியாணத்தின் பின் கஞ்சனாகி விடுவாங்க. மற்றொருத்திக்கும் வாங்கிக் கொடுப்பாங்க. இப்பவும் பிந்திவிடேல்லை. ஒரு பெரிய லிஸ்ட் போட்டு கடிதம் எழுதடி. நானே வேண்டுமென்றால் ஒரு லிஸ்ட் போட்டுத் தாறனே.''

சகுந்தலா கேலியாகவும் சிரத்தை எடுக்கும்படியாகவும் சொன்னாள்.

www.padippakam.com



''போடி, கடித எழுத்தையே வேண்டாம் என்று சொல்லி விட்டேனே...''

''ஓ நீ சொன்னதை மறந்துவிட்டேன். நீ கெட்டிக்காரி யெடி. இளங்கோவுக்கு இன்னும் இடம் வைத்திருக்கிறாய். இல்லையா?''

''போடிபோ. பிடிக்காத தூரதேசம். எல்லாமே நிட்சய மில்லாத அரசியல் நிலை. வந்து முடிவாக்கும் வரை ஏன் கொமிட் பண்ண வேண்டுமென்றே சாட்டுக் கூறி கடிதம் எழுதுவதை நிறுத்தினேன்.''

சுசீலா சொன்னாள்.

''காதலா, கலியாணமா முக்கியமடி?''

''எப்படியும் பெண் என்றால் சமூக அந்தஸ்து, பாது காப்பிற்காகக் கலியாணம் கட்டியே தீரவேண்டியிருக்கிறது''

''என்ன இருந்தாலும் விவேகமும் குள்ளப் புத்தியும் உன்னிடமிருக்கடி. எப்படியானாலும் நீ சுட்டிதான்டீ''

சகுந்தலாவை அடிக்கடி சுசீலா பார்க்கும்போதெல்லாம் கனடா மாப்பிள்ளை பற்றிய கேலிப் பேச்சுகள் நடந்து கொண்டிருந்தன. அவை சுசீலாவின் மனதிற்கு ஓரளவு இத மாகவும் கிளுகிளுப்பு ஊட்டுவதாகவும் இருந்தன. சில வேளைகளில் தேவையற்ற மனவேதனை ஏற்படுவதாகவும் உணர்ந்தாள். மாதக் கணக்காக குமரேசன் கனடாவிலிருந்து வரும் வரை உறுதியற்ற நிலையில், காத்திருக்க வேண்டிய தும் வேதனை ஏற்படுத்துவதாக இருந்தது.

## 13

அரசியல் நிலையில் ஒருவித பதட்டம் நிலவிக் கொண் டிருந்தது. இந்திய அமைதிப்படை திரும்பிப் போவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

www.padippakam.com



விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்குமிடையில் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் பின்னடைவு பற்றிய செய்திகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

பிரேமதாசா அரசுக்கு எதிராக குரல்கள் எதுவும் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. வட கிழக்கில் ஆட்சி நடத்திய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் மட்டும் அமைதிப்படை வெளியேறுவதைக் கண்டித்துக் கொண்டிருந்தனர்.

விஜயவீராவும் கமநாயகாவும் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட பின்னர் ஜேவிபியின் போராட்டங்கள் தென் பகுதியில் குறைந்து கொண்டு வந்தன. பிரேமதாசாவின் கை ஓங்கிக் கொண்டு வந்தது.

விடுதலைப் புலிகளின் இந்திய அமைதிப்படையினருக்கு எதிரான போராட்டத்தையும் தேசிய உணர்வையும் கொழும்பிலிருந்து வரும் ஆங்கில, சிங்களப் பத்திரிக்கைகள் பாராட்டிக் கொண்டிருந்தன.

கார்டியன் என கொழும்பிலிருந்து வெளிவந்த பிரபல ஆங்கில மாத சஞ்சிகை 1989ம் ஆண்டின் வீரபுருஷன் என தேர்ந்து விடுதலைப் புலித் தலைவர் பிரபாகரனது படத்தை அட்டையில் வெளியிட்டு காரணங்களை சிறப்புக் கட்டுரையாக வெளியிட்டிருந்தது.

திடீரென தமிழ் ஈழம் அமைப்பதாக ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியினர் வடகிழக்கு மாகாண சபையில் அறிவித்தது எவ்வித பெரிய சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்திய அமைதிப் படையுடன் அக்கட்சியின் முக்கிய பொறுப்பாளர் மார்ச் மாதத்தில் இந்தியாவிற்கு சென்றனர்.

விடுதலைப் புலிகள் வெளிப்படையாக இயங்கத் தொடங்கினர்.

www.padippakam.com



அன்று யாழ் நகர் செல்வதற்காக சுசீலா புளியடியில் பஸ்ஸிற்காகக் காத்து நின்றாள். ஒரு மினி பஸ் நிறைந்து வழிந்து வந்தது. அடுத்தது வரட்டும் எனக் காத்து நின்றாள். அவ்வேளை சைக்கிளில் வந்து சுசீலாவைக் கண்ட இந்திரன் கீழே இறங்கி, சுசீலாவிடம் வந்தான். அவன் இளங்கோவின் நண்பன். கிராமத்தில் இருவருமே ஒருமித்துச் சைக்கிளில் சுற்றுவார்கள். இந்திரன் அவளது அண்ணனோடு படித்த வன். அண்ணனைத்தேடி வருவதாகவேவீட்டுக்கு வருவான். அவ்வேளையில் இளங்கோ படலைக்கு வெளியே சைக்கிளில் இருந்துகொண்டே எட்டிப் பார்ப்பான். அவனது பார்வை யில் இருந்த விரகதாபத்தை அவள் அறியாமலில்லை.

பின்னர் சிறிது சிறிதாக அண்ணனோடும் இளங்கோ பழகிக் கொண்டான். கல்லூரி செல்லும் வேளை தெருவில் கண்டால், 'அண்ணா வீட்டில் இருக்கிறாரா' என்ற விசாரணை.

பின்னர் இந்திரனின் செய்திகளை, புத்தகங்களைக் கொண்டு வீட்டுக்கு அண்ணாவிடம் வரத் தொடங்கினான்.

''அண்ணா குளித்துக் கொண்டிருக்கிறார்.''

''வரட்டும் நிற்கிறேன்.''

சைக்கிளில் இருந்தபடியே காலை ஊன்றியபடி நின்றான். அவளது டிரெஸ்ஸிங் கவுணை உற்றுப்பார்ப்பது போலிருந்தது.

''உள்ளே வந்து உட்காரலாமே''

வராந்தாவில் வந்து உட்கார்ந்தான். அம்மா அடுப்படி யில் வேலையாயிருந்தாள். அப்பா வெளியே போய் விட்டார்.

''தண்ணீர் தருவீங்களா?''

''கோப்பி கொண்டு வருகிறேனே''

''வேணாம். தண்ணீர்தான் வேணும்''

www.padippakam.com



''ஏன் நீங்க கோப்பி, டீ குடிப்பதில்லையா?''

''பெண்களுக்கு வீண் தொல்லை கொடுக்க நான் விரும்பு வதில்லை. தண்ணீரே போதும்''

என்ன விசித்திரமான மனிதர் என்று எண்ணிக் கொண்டே செம்பிலே தண்ணீர் கொண்டுவந்து கொடுத்த போது சுசீலா கேட்டாள்:

''வீட்டிலே பெண்கள் எவரும் கோப்பி போட்டுத் தருவ தில்லையா?''

''நானே போட்டுக் கொள்வேன்''

''சமையல்...''

''வீட்டிலிருக்கும்போது அம்மாவிற்கு உதவுவேன்.''

''உங்களைக் கட்டும் பெண் அதிர்ஷ்டசாலிதான்'' என்று நாவில் வந்ததைத் தடுத்துக் கொண்டாள்.

அத்தனை விசித்திரமாகப் பேசுபவரை அவள் என்றும் கண்டதில்லை. சாரமும் வெள்ளை சேட்டும். ஒரே பட்டன் மட்டும் பூட்டியிருந்ததால் வியர்வை அரும்பும் மார்பு அப் படியே தெரிந்தது. காலில் எதுவும் இல்லை.

அதன்பின்னர் ஆங்காங்கே காணும் போதும் எதிர்பாரா மல் வீட்டிலும் இடையிடையே பேச்சு வார்த்தைகள் நடை பெற்றன.

அண்ணனை இயக்க முரண்பாடுகளில் இருந்து விடுவிப்ப தற்காக அப்பா வீட்டைக்கூட ஈடுவைத்து ஜெர்மனிக்கு அனுப்பி விட்டார். இளங்கோ எஞ்சினியரிங் படிக்க கொழும்பு கட்டுபெத்த தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்று விட்டான்.

''என்ன கொழும்புக்கெல்லாம் போய் வந்தீர்களாம்''

இந்திரன் நழுவலாகச் சொன்னான். அவன் எத்தனை தூரம் தங்கள் பிரயாணம் பற்றி அறிந்திருந்தான் என்பதை சுசீலாவால் ஊகிக்க முடியவில்லை.

www.padippakam.com



''ஆமாம். ஆர் சொன்னது ...''

''அதெல்லாம் எதற்கு. கலியாணம் முடிவாகி விட்டதாகவும் அறிந்தேன்.''

அவ்வளவுக்குப் பேச்சு அடிபடுகிறதா என மனதுள் வியப்புற்றாள்.

''அப்பா வற்புறுத்தினார். அதுதான் போனேன். ஏதோ பேசுகிறார்கள்''

வேறுபுறமாகப் பார்த்தபடியே சொன்னாள்.

''கனடா மாப்பிளையாம்...''

''தூரத்தையும் பனிப்படலத்தையும் நினைக்கவே பயமாயிருக்கு. ஏதோ அப்பா பேசுகிறார்...''

வேறு திசை பார்த்தபடி சொன்னாள்.

''விருப்பமில்லா விட்டால் என்ன அவசரம்'' இளங்கோவிற்காகப் பரிந்து பேசுகிறானோ என மனம் ஒருகணம் தடுமாறியது.

''நானும் அப்படித்தான் சொன்னேன். வீட்டில் ஒரே நெருக்கடி. வீடுவளவு ஈடுவைத்ததையும் அண்ணா இன்னும் மீளவில்லை. போதிய சீதனம் இல்லாதபோது வாறதைக் கட்டி விடலாம் என்று பார்க்கிறார்கள்.''

சுசீலா தன் மன ஈடாட்டத்தையும் வீட்டு நிலைமையையும் தெரியப்படுத்துவதாகச் சொன்னாள்.

''தேசீய விடுதலைப் போராட்டம் வேறு நடந்து கொண்டிருக்கிறது. சீதனமில்லாமல் கட்டுவதற்கே எத்தனை பேர் இருக்கிறார்கள்.''

இளங்கோவுமா என எண்ணினாள். அப்படியானால் துணிச்சலோடு முன் வரட்டும். பொறுக்க வேண்டுமானால்

www.padippakam.com



நேரடியாகச் சொல்ல வேண்டாமா? சுசீலாவின் இரண்டாவது மனம் கேட்டுக் கொண்டது.

''எல்லாம் பேச்சளவில்தான். நடைமுறையில்...''

''அதற்குப் பொறுமை வேண்டும். துணிச்சலும் வேண்டும்...''

இந்திரன் இடைமறித்துச் சொன்னான்.

திடீரென வந்த பஸ்ஸில் அவனுக்குத் தலை அசைத்து விட்டு ஏறிக் கொண்டாள். அவனோடு இன்னும் சிறிது நேரம் சிறிது காரமாகப் பேசியிருக்கலாம் போலத் தோன்றியது. இந்திரனின் கடைசிப் பேச்சு அவளிலே பழி எல்லாம் போடுவதாகத் தோன்றியது.

''டவுனுக்கா. இரண்டு ரூபா.''

கண்டக்டர் கேட்கும்போதும் அவள் சுற்றுப்புறத்தையே மறந்திருந்தாள். உட்கார இடமில்லை. நின்றபடியே பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.

நெஞ்சில் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தானே முன் வந்து பொறுமையோடு காத்திருந்து துணிச்சலாகக் கேட்க வேண்டும் போல அவன் கருத்து இருந்தது. ஆணா, பெண்ணா முதலில் கேட்க வேண்டும். வீட்டில் இத்தனை குறைபாடுகள், நெருக்கடிகள் இருக்கும்போது என்னால் முன் வந்து கேட்க முடியுமா? வேண்டுமானால் இந்திரனே தன் நண்பனுக்காக முன் வந்திருக்கலாமே.

இளங்கோ பெண்களுக்குச் சம உரிமை அளிப்பவராக இருக்கலாம். முற்போக்கானவராகப் பேசலாம். எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்த பெண்கள் திடீரென சமத்துவ நிலையில் வந்து துணிச்சலைக் காட்ட வேண்டும் என எதிர்பார்ப்பது எத்தனை அறியாமை. ஆயுதம் எடுத்துப் போராட வரும் இயக்கப் பெண்களை வைத்து என்னையும் அளக்கப் பார்க்கிறாரா. யாழ், நகரில்

படிப்பகம்

www.padippakam.com



இறங்கி துணிக்கடைக்குச் செல்லும்வரை அந்தச் சிந்தனை யிலேயே மனம் தத்தளித்தது. மனதில் கோபமும் அமைதி யின்மையும் ஏற்பட்டது.

நைட் டிரெஸ் தைக்கத் துணி வாங்குவதிலும் ஆர்வம் ஏற்படவில்லை.

நுழைந்த ஒரு கடையில் பிங் கலரில் ஒன்றும் வெள்ளை நிறத்தில் மற்றொன்றும் சகுந்தலா சொல்லியபடி வாங்கிக் கொண்டாள். சகுந்தலாவையும் அழைத்து வந்திருந்தால் மன ஆறுதலாயிருக்கும் என எண்ணிக் கொண்டாள். அவளுக்கு அன்று பள்ளிக்கூடத்தில் வேலையிருந்தது.

தாயாருக்காக வாங்க வேண்டிய மருந்தையும் வாங்கிக் கொண்டு திரும்பினாள்.

இந்திரனின் கடைசி வார்த்தைகளைச் சகுந்தலாவிட மும் சொல்லி ஓரளவு மனம் ஆறினாள். இருந்தாலும் முற்றாக அமைதி ஏற்படவில்லை. சில வாரங்களாக்வே அவன் கூற்று மனதை வருத்திக் கொண்டே இருந்தது.

## 14

யாழ் நிலையம் சென்று திரும்பியது வெட்கமும் வேத னையும் தந்தது. வெளியே சென்று முன்னர் பழகிய தோழி யர், உறவினரைப் பார்த்துப் பேசவே கூச்சமாயிருந்தது. எல்லோருக்கும் பிரயாணத் தடை பற்றிய விளக்கம் கூறுவது சிரமம் மட்டுமல்ல அவர்களது அனுதாபங்களைக் கேட்பதும் கஷ்டமாக இருந்தது.

10-ம் திகதியே புறப்படலாம் என்று சுசீலா அப்பாவிடம் கூறியிருந்தாள். அவரே பஞ்சாங்கம், நேரம் பார்த்து 11-ம் திகதியாக முடிவு செய்து டிக்கெட் பதிவு செய்திருந்தார். தான் வற்புறுத்தியிருந்தால் குமரேசனை ஒருநாள் முன்னர் பார்ப்பதற்கு ஆவற் படுகிறேன் என்று உள்ளூற அப்பாவும் எண்ணிக் கொள்ளலாம் என விட்டு விட்டாள். ஆறுமாதம்

www.padippakam.com



வரை குமரேசன் வரவிற்காகக் காத்திருந்து ஒருநாள் பிந்துவதில் என்ன குடிமுழுகிப் போகப் போகிறது என எண்ணி விட்டுவிட்டாள்.

தங்கள் சொந்த விஷயங்களுக்கு மேலாக ஷெல் அடியும் ஹெலிதாக்குதலுடன் பொம்பர்கள் பெற்றோல் குண்டுகள் வீசுவதும் அனைவருக்கும் கிலேசமும் மரண பயமும் ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

இராணுவ முகாம்களை ஒட்டிய பகுதிகளை படையினர் விரிவுபடுத்தினர். வீடு வாசல்களை இழந்து, கரையோரங்களில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் உட்புறமாகக் குடிபெயரத் தொடங்கினர். இடம் தேடமுடியாத பெரும்பான்மையினர் சாதாரண மீன்பிடி வள்ளங்கள் மூலம் தமிழ்நாட்டிற்குச் செல்லத் தொடங்கினர். நாள்தோறும் ஆயிரம், இரண்டாயிரம் ஆகி ஐயாயிரம் பேர் வரை குடும்பங் குடும்பமாக அகதிகளாக படகுகளில் புறப்பட்டனர். பெரும்பகுதியினர் 1984-ல் அகதிகளாகத் தமிழ்நாடு சென்று 1989 ஆகஸ்டு 29-ல் எழுதப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்போது திரும்பியவர்.

தமிழ்நாடு செல்ல முடியாதவர், விரும்பாதவர் யாழ்ப்பாணம் சார்ந்த பல அகதி முகாம்களிலும் கிளிநொச்சி, பரந்தன், வவுனியா சார்ந்த அகதி முகாம்களிலும்குடிபுகுந்தனர். திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும் ஏற்பட்ட இராணுவத் தாக்கத்தை அடுத்து பல்லாயிரக்கணக்கானோர் அகதிகள் முகாம்களுக்குப் பெயர்ந்தனர்.

மன்னார் சார்ந்த பெரும் பகுதியினர் மடு சேர்ச்சைச் சார்ந்த முகாமுக்குள் அடைக்கலம் புகுந்தனர். இங்கு மட்டும் பதினாறாயிரம் பேர் வரையில் தொடர்ந்து தங்க நேரிட்டது.

எல்லாப் பகுதிகளிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மருத்துவ வசதிகளைக் கவனித்தது.

www.padippakam.com



நாள்தோறும் அங்கே குண்டு விழுந்து எரிந்தது, இங்கே ஹெலி தாக்கியது ஷெல் அடியில் கட்டிடம் இடிந்தது மட்டுமல்ல மரணம் பற்றியும் செய்திகள் அடிபட்டன.

கொழும்பிலிருந்து வரும் பத்திரிகைகளெல்லாம் யாழ் வருவது தடைப்பட்டன. உள்ளூர் பத்திரிகைகள் மூலம் ஓரளவு விடுதலைப்புலிகளின் உள்ளூர் செய்தியும் வெளிநாட்டுச் செய்திகளும் வெளிவந்தன. ரேடியோ மூலமும் இலங்கை அரசின் 'லங்கா புவத்' செய்திகளும் அறிய முடிந்தது.

கொழும்பு உட்பட மற்றைய இடங்களிலிருந்து அரிசி, மாவு, சீனிமட்டுமல்ல பிறநுகர் பண்டங்களும் வருவது முற்றாகத் தடைபட்டதால் நாள்தோறும் பண்டங்களின் விலைகள் ஏறத்தொடங்கின. அனைவரும் அவற்றைப்பற்றியே பேசிக் கொண்டனர். பணவசதி உள்ளவர்கள் உணவுப் பண்டங்களைச் சேமிக்கத் தொடங்கியதாலும் விலைகள் ஏறத்தொடங்கின. அன்றாடங் காய்ச்சிகள் மிகவும் பாதிக்கப் பட்டனர்.

யாழ் கோட்டைப் பகுதியிலிருந்து ஷெல் அடிப்பதை நிறுத்த விடுதலைப் புலிகள் கோட்டையைத் தாக்கத் தொடங்கினர். கோட்டைக்குள் இருந்த இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளை அங்கு நெருங்கவிடாமல் தாக்கினர். வீரமரணப் போராக இது தொடர்ந்தது. பெண்புலிகளும் பெருமளவு பங்கு கொண்டு போரிட்டனர்.

இருபகுதியிலும் உயிரிழப்பு, உடல் பாதிப்புக் காயங்கள் ஏற்படத் தொடங்கின.

யாழ் கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்ட இராணுவத்தினரால் வெளியேற முடியவில்லை. அவர்களுக்கு வேண்டிய உணவு, மருந்து, போர்க்கருவிகள் எல்லாம் ஹெலிகொப்டர் மூலமே வழங்கவேண்டியது நேரிட்டது. ஹெலிகளையும் விடுதலைப்புலிகள் ஆக்ரோஷமாகத் தாக்கத் தொடங்கினர்.

ஒ ம—5

படிப்பகம்

www.padippakam.com



டச்சுக்காரர்களால் 250 வருடங்களுக்கு முன்னர் யாழ் பகுதி கோவிற் சுவர்களை இடித்த செங்கல்களால், சுற்றிவர ஆழமான கால்வாய்களுடன், பாதுகாப்பாகக் கட்டப்பட்ட கோட்டை அது. கோட்டைக் குள்ளிருந்து வெளியே ஒரே வழி மட்டுமே உள்ளது. குகைக்குள் செல்வதுபோல ஒரு வண்டி மட்டும் நுழையக்கூடிய பாதை மட்டுமே கோட்டை வாயிலாக இருந்தது.

காலனி ஆதிக்கத்தின் சின்னமாக அமைந்த கோட்டையை 'புல்டோஷர்' ஓட்டி உடைக்கவும் விடுதலைப் புலிகள் தொடங்கினர். பத்து வாரங்களுக்கு மேலாக நடந்த தொடர்ந்த போராட்டத்தின் பின்னர் சிங்கள இராணுவத்தினர் கோட்டையைவிட்டு ஹெலி மூலம் வெளியேறினர்.

இடையில் வடகிழக்கு மாகாண சபை அரசை நடத்திய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரான பத்மநாபாவும் இயக்கம் சார்ந்த தலைவர்கள் சிலரும் சென்னையில் கொல்லப்பட்ட செய்தி இலங்கையிலும் இந்தியாவிலும் அதிர்ச்சி ஏற்படுத்தியது.

மேலும் கிழக்குமாகாண காத்தான்குடி பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை மாலையில் தொழுகை நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது மின்விளக்குகளை அணைத்துவிட்டு துப்பாக்கிச் சூடு நடத்தியதால் நூற்றுக்குமேல் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காயமடைந்தனர். இச் செயலைக் கண்டு அரசும் மக்களும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தனர்.

இந்த வாரம், அடுத்த வாரம் கொழும்புப் பிரயாணம் ஆரம்பிக்கப்படலாம் என்ற நப்பாசையுடன் வாரங்கள் கழிந்தன. மக்கள் போக்குவரத்து மட்டுமல்ல கொழும்பி லிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும் உணவுப் பண்டங்கள் உட் பட பல நுகர் பண்டங்களும் வரவேண்டியிருந்தன.

ஆனையிறவு வழியாக இருந்த ரெயில், வாகனப் போக்குவரத்துப் பாதையை விடுதலைப் புலிகள் தடை

www.padippakam.com



செய்தனர். ரெயில் ஓடும் இரும்புப் பாதை, சிரிப்பர் கட்டை களை விடுதலைப்புலிகள் பாதுகாப்பு 'பங்கர்'கள் அமைக்க பிரித்து எடுத்துக் கொண்டனர்.

ஆனையிறவில் சிங்கள இராணுவமுகாம் வேறு இருந் தது. இவற்றால் ஆனையிறவுக்குக் கிழக்குப்புறமாக இருந்த வெற்றிலைக் கேணி ஊடாகவும் யாழ் நகர் பக்கமாக இருந்த பூநகரி சங்குப்பிட்டிப் பாதை வழியாகவும் பிறபகுதிகள் செல்ல போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பூனகரிப் பாதையில் மிதக்கும் மேடை வழியாக அரைக் கிலோமீட்டர் வரை செல்ல வேண்டும். பண்டங்கள் ஏற்றிய லாரி போக்குவரத்துக்கு வாய்ப்பில்லாதிருந்தது.

பண்டங்களை படகுகளில் மூலம் ஏற்றி இறக்கி மறு கரையிலுள்ள லாரிகளில் ஏற்றி அனுப்ப வேண்டியிருந்தது.

விமானத் தாக்குதல் தொடர்ந்தபோ ~ம் வடமாகாணத் தில் பெரும் பகுதியை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட் டில் கொண்டு வந்தனர். எல்லா வீடுகளிலும் விமானத்தாக்கு தலுக்கு ஈடு கொடுப்பதற்காகப் பதுங்கு குழிகள் அமைக்கப் பட்டன. ஹெலி, பொம்மர் சத்தம் கேட்டதும் எல்லாரும் எல்லா வேலைகளையும் விட்டு பதுங்கு குழிகளுக்கு ஓடத் தொடங்கினர்.

யுத்த, நிர்வாகத் தேவைகளுக்காக விடுதலைப் புலிகள் உறுதிப்பத்திரம் கொடுத்து ஒவ்வொரு வீட்டிலுமிருந்து இரண்டு சவரின் தங்கம் பெற்றனர்.

சுசீலாவும் சீதனமாக எடுத்துச் செல்ல இருந்த தங்கத் தில் இரண்டு காப்புகளை விடுதலைப் புலிகளுக்கு வழங் கினாள்.

கொழும்புக்கும் வடபகுதிக்குமிடையில் சங்குப்பிட்டிகேர தீவுப் பாதையால் பிரயாணம் சிறிதுசிறிதாக ஆரம்பிக்கத் தொடங்கியது.

படிப்பகம்

www.padippakam.com



வடபகுதியிலிருந்து கொழும்புக்கு அல்லது ஏனைய இடங்களுக்குச் செல்ல விரும்புவோர் விடுதலைப் புலிகள் அலுவலகத்திற்கு விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும்! வடக்குப் பிரதேசங்கள் நுழைய விரும்புவோர் வவுனியா, தாண்டிக் குளத்திலுள்ள விடுதலைப்புலிகளின் தடுப்பு நிலையத்தில் அனுமதி பெற்றே நுழைய முடியும்.

## 15

புதிய கட்டுப்பாடுகள் சுசீலாவின் பயணத்தைத் தாமதப்படுத்தின. அப்பாவும் மகளுமாக கொழும்பு செல்வதற்கான அனுமதி வேண்டிய விண்ணப்பத்தை யாழ் நகர் முத்திரைச் சந்தைப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் நீண்ட கியூவரிசையில் நின்று சேர்த்தனர். தங்கம் இரு சவரின் வழங்கிய உறுதிப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் நபரின் முழுவிபரங்களுடன் பிரயாணத்திற்குரிய காரணம் கேட்கப்பட்டிருந்தது.

உறுதிப்படுத்தப்பட்ட வேலை, அரச பணியில் இருப்போர், விசேஷ மருத்துவம் போன்றவற்றிற்குப் பிரச்சனையில்லாமல் அனுமதி வழங்கப்படுவதை அறிந்தபோதும் பொய் கூறாமல் உண்மைக்காரணம் தெரிவிப்பதே நல்லது. பிரச்சனை ஏற்படாது. தவறினால் அவர்களது உளவுப் பிரிவினர் உண்மையை அறிந்து விடுவார்கள். பின்னர் பிரச்சனை ஏற்படலாம் என நெருங்கிய சிலர் அறிவுரை கூறினர். அவ்வாறே 'திருமணம், மாப்பிள்ளை குமரேசன் கனடாவிலிருந்து வந்து கொழும்பில் காத்து நிற்கிறார்' என உண்மைக் காரணத்தை விண்ணப்பத்தில் எழுதியிருந்தனர்.

கொழும்புக்குச் செல்பவர் மூலம் பிரயாணத்தடை ஏற்பட்ட மூன்று வாரத்திலேயே அப்பா தன் தம்பியாருக்கு செய்தி அனுப்பி விட்டார். மாப்பிள்ளையின் அண்ணன் அண்ணாமலைக்கும் அறிவிக்கும்படி தெரிவித்திருந்தார்.

www.padippakam.com



பிரயாண அனுமதி கிடைத்ததும் புறப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தார்.

மீண்டும் சுசீலா புறப்படும் ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினாள். புதிய நம்பிக்கை. சகுந்தலாவே அவளுக்கு ஓரளவு தெம்பும் நம்பிக்கையும் ஊட்டி வந்தாள். அவளே சுசீலாவுக்கு வேண்டிய ஜாக்கெட், பாவாடை, நைட்டி, டிஸெசிஸ் கவுண் எல்லாம் தானே வெட்டி தன் மெஷினில் முன்னர் தைத்துக் கொடுத்திருந்தாள். தற்போது தன் அன்பளிப்பாக இளஞ்சிவப்பு நிறத்தில் முழங்கால் வரையும் வரக்கூடிய மினி நைட்டி ஒன்றை அவளது அளவுக்குப் பூவேலையுடன் தைத்து, சிலநாள் முன் அவளை அழைத்து நைட்டியை அளவு பார்க்க அணிவித்து அழகு பார்த்தாள்.

''அடி நீ எவ்வளவு வடிவாக இருக்கிறாய் தெரியுமா. கண்ணாடியில் பார்'' எனக் கூறியபடியே கட்டி அணைத்து கன்னங்களில் முத்தமிட்டாள்.

சகுந்தலாவின் அன்பும் ஆதரவும் சுசீலாவின் இதயத்தைத் தொட்டன. அவளை விட்டுப் பிரிவதை எண்ணும் போதும் நெஞ்சம் பொருமியது.

தந்தையார் நாலு நாள் கழித்து சைக்கிளில் முத்திரைச் சந்தைக்குச் சென்று அனுமதிச் சீட்டுப் பெறுவதற்கு நீண்ட கியூவில் நின்றார். இரண்டு மணி நேரத்திற்குப் பின்னரே அலுவலக உதவியாளரை அணுகமுடிந்தது. அந்த இளைஞன் மரியாதையாக எல்லாவற்றையும் விசாரித்து பதிவு செய்த ஏட்டைப் பார்த்துவிட்டு மேலும் மூன்று நாட்கள் கழித்து வரும்படி நயமாகவே சொன்னான்.

அப்பா தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வந்து சைக்கிளில் ஏறும்போதே தன்னுள்ளே அவர்களைக் கடிந்து கொண்டார்.

சுசீலாவிற்கும் ஏமாற்றமாகவே இருந்தது. குமரேசனையும் தாம் ஏமாற்றிக் கொண்டிருப்பதாக அவர் நினைக்கலாம்

படிப்பகம்

www.padippakam.com



என்று எண்ணும்போதெல்லாம் பதட்டமும் கவலையும் ஏற்பட்டது. வெளியே காட்ட முடியாமல் மனதில் புழுங்கினாள்.

நாலாவது நாள் அப்பா மீண்டும் சென்று கியூவில் நின்று விசாரித்து ஏமாற்றத்துடன் வந்தார். விசாரணை முடிவு இன்னும் வந்து சேரவில்லை என அலுவலக உதவியாளரான இளைஞன் சொல்லியிருந்தான்.

பொறுமை இழந்த சுசீலா மேலும் நான்கு நாட்கள் கழித்து, சகுந்தலாவின் ஆலோசனைப்படி, அவளாகவே விடுதலைப் புலிகளின் அலுவலகம் சென்று கியூவில் நின்றாள். பின்னும் முன்னும் நின்றவரது முணுமுணுப்பை அவளால் நன்கு உணர முடிந்தது. இன்று அனுமதிச் சீட்டும் பெற்றுவிட்டால் நாளை மறுநாள் புறப்பட்டுவிடலாம் என்ற நினைவில் மிதந்தபடி கியூவில் அசைந்து கொண்டிருந்தாள்.

அலுவலக இளைஞன், மரியாதையாக சுசீலாவை அழைத்து விண்ணப்ப எண், பெயரை விசாரித்துவிட்டு அடுக்கி வைத்திருந்த பத்திரங்களில் அவர்களது விண்ணப்பத்தை எடுத்துப் பார்த்துவிட்டு அருகே உட்கார்ந்திருந்த இளம் பெண்ணிடம் கொடுத்தான்.

அருகே இருந்த அந்தப் பெண் விண்ணப்பத்தையும் கீழே உள்ள குறிப்பையும் படித்துவிட்டு நயமாகவே சொன்னாள்:

''உங்கள் மாப்பிளை திருமணத்திற்காக கனடாவிலிருந்து இத்தனை தூரம் வந்தவர் இங்கே வந்து திருமணம் முடித்து அழைத்துச் செல்லலாமே. எதற்காக நீங்கள் அங்கே போகவேண்டும்?''

அந்த வினா சுசீலாவை ஒருகணம் திணற அடித்தது. அதற்கு திருப்தியான காரணத்தை உடனே கூறுவதும் சிரமமாயிருந்தது.

''அவரது உறவினர்கள் கொழும்பில் இருக்கிறார்கள். பிரயாணக்கஷ்டம் வேறு. குறைந்த நாள் லீவில் வந்துள்

www.padippakam.com



ளார். எனக்கு விஸா பெற அங்கு திருமணப் பதிவு செய்ய வேண்டும்... பாஸ்போட்டும் கொழும்பிலேயே எடுக்க முடியும்.''

''எல்லாம் சரிதான் நீங்க இங்கே வரும்படி அழையுங்க. ஏதாவது பிரச்சனை என்றால் நாங்கள் கவனிப்போம். அப்படி நீங்கள்தான் அங்கு போகவேண்டு மானால் காரணங்கள் காட்டி அப்பீல் எழுதிக் கொண்டு வாருங்கள். மீண்டும் சமர்ப்பிப்போம்...''

கூறிவிட்டு அடுத்த நபரைக் கவனிப்பதில் அந்தப் பெண் ஈடுபட்டாள்.

அதற்குமேலாக அங்கு நிற்கவோ, வாதிடவோ சுசீலாவால் முடியவில்லை. சோர்வோடு திரும்பும்போது கியூவில் வந்த மற்றொரு வயதான பெண் விசாரணையில் இருந்த இளைஞனைப் பார்த்து சத்தமிட்டுப் பேசிக் கொண் டிருந்தாள்.

இதென்ன எதிர்பாராத புதிய சிக்கல்; ஏன் ஏற்பட்டது எனப் பலவாறாகச் சுசீலாவின் மனம் எண்ணியது.

வீட்டிற்கு வந்து அப்பாவிடம் நடந்த விஷயத்தைச் சொல்லி வேறு பயணிகள் மூலம் கடிதம் அனுப்பி, நிலைமையை குமரேசனின் அண்ணாவிடம் தெரிவியுங்கள், அவர்கள் ஒப்புக்கொண்டால் வரட்டும் பிரச்சனை தீர்ந்து விடும் எனச் சொன்னாள்.

''அவர்கள் கடைசிவரையும் வரமாட்டார்கள். நாங்களே விஷயத்தை விளக்கி அனுமதி பெற்றுப் போக வேண்டும். அவர்கள் ஏன் வரமுடியாது என்பதற்கு விளக்கமாகக் கடிதம் எழுதி நாளைக்குக் கொடு. இத்தனை பொறுத்தோம் மேலும் சிலநாள் தாமதிப்பதில் என்ன ஆகப்போகிறது.''

அப்பாவின் முடிவு யதார்த்தமானது. இங்குள்ள யுத்த நிலமையில் அவர்களை வரவழைப்பதிலுள்ள சிரமத்தை அவளால் எண்ணிப் பார்க்க முடிந்தது. இது என்ன புதிய

படிப்பகம்

www.padippakam.com



பிரச்சனை. மாப்பிள்ளை லீவு முடிந்து போனாலும் போய்விடலாம், வெட்கக்கேடாகப் போகிறதே என அம்மா தனியாயிருந்து அழுதாள்.

மாலையில் சகுந்தலாவிடம் நிலைமையைச் சொல்லும் போது அவளது நெஞ்சு பொருமி, கண்களே கலங்கத் தொடங்கியது.

சகுந்தலாவால், சுசீலாவின் ஏமாற்றத்தால் ஏற்பட்ட உணர்வுகளை எண்ணிப் பார்க்க முடிந்தது. ஆறுதல் கூறினாள். முதுகைத் தடவி கண்களைத் துடைத்து விட்டாள். பிஸ்கெட்டும் தேநீரும் தந்தாள்.

''எப்படியும் அவர்கள் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது தானே. கலியாணத்திற்காக எண்ணாயிரம் மைல் வந்தவரால் இருநூற்றைம்பது மைல் வரமுடியாதா என்று கேட்கிறார்கள். அவர்கள் வரமுடியாத காரணங்கள் நமக்கு மட்டும்தானே தெரியும். காரணங்களைக் காட்டி எழுதிக் கொடுப்பதுதான் நல்லது''

சகுந்தலா ஆறுதல் கூறினாள்.

''நாளைக்கு எழுதிக் கொடுப்பேன். மீண்டும் மறுத்து விட்டால்...''

''அவர்கள் இங்கே உள்ள விடுதலைப் புலிகளின் உளவுப் படையினர் மூலம் விசாரணைகள் செய்துவிட்டே வழக்கமாக அனுமதி வழங்குவார்கள். அவர்களையும் தேடிப் பார்க்க வேண்டும்''

சகுந்தலா கூறியபோதும் அவற்றிலுள்ள சிக்கல்களை சுசீலா எண்ணிப் பார்த்தாள். குமரேசன் வந்தால் இயக்கத்திற்குப் பணம் பெறலாம் எனவும் அவர்கள் எண்ணியிருக்கலாம் என்பது எல்லாரும் அறிந்ததே. சுசீலாவின் அண்ணன், வேறு இயக்கம் சார்ந்திருந்ததால் இப்பிரச்சனை ஏற்பட்டிருக்குமோ எனவும் இருவரும் ஆராய்ந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



''உங்கள் வீட்டார் எவருமே விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிக்கவில்லை என்பதையும் அவர்கள் அறிந்திருப்பார்கள்''

சகுந்தலா சொன்னாள்.

''அண்ணா போன பின்னர் அப்பா கூட அரசியல் எதுவுமே பேசுவதில்லையே, நான் கூட''

சகுந்தலா சமாதானம் சொன்னாள்:

''இயக்கம் சார்ந்தவர்கள் இப்படியெல்லாம் வெளியூர் செல்ல விரும்பமாட்டார்கள் என்பது மட்டுமல்ல கொழும்பிலே மாப்பிளையை வைத்து திருமணத்திற்கு அங்கே போக மாட்டார்கள் எனவும் எண்ணியிருக்கலாம்.''

இருவரும் பல்வேறு காரணங்களையும் ஆற்றா நிலையில் ஆராய்ந்தனர்.

அப்பாவும் சகுந்தலாவும் கூறியபடி மறுநாள் பிரயாணம் தடைப்பட்டது தொடக்கம் திருமணத்திற்கு அங்கேயே செல்ல வேண்டும் என்பதுடன் பிரயாணப் பிரச்சனைகள், லீவு முடிவது யாவையும் விபரமாக எட்டுக் காரணங்களைக் காட்டி எழுதிய கடிதத்தை கியூவில் நின்று சுசீலா சேர்த்து வந்தாள்.

ஊரில் எதிர்பாராமல் ஏற்பட்டுவரும் தாமதத்தின் காரணம் பற்றி மாப்பிளையின் அண்ணன் அண்ணாமலைக்கு அப்பா கடிதம் எழுதினார். எப்படியும் மிக விரைவில் எந்த வேளையும் வந்து விடுவோம் எனவும் தெரிவித்திருந்தார். மாப்பிளை ஊருக்கு வரவேண்டும் என்பது பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

அம்மா நல்லூரானை வேண்டிக் கொண்டிருந்தாள். அப்பா கிராமத்துப் பிள்ளையாருக்கு அபிசேகம் செய்வதாக நேர்ந்து கொண்டார்.

சுசீலா இரண்டு தடவை சென்று கியூவில் நின்று அனுமதிச்சீட்டை வழங்கும்படி வேண்டியபோதும் இன்னும்

www.padippakam.com



பேப்பரே வரவில்லை மேலும் நாலு நாட்கள் கழித்து வரும் படி உதவியாளன் சொன்னான். அவன் மிக மரியாதையாகவே சொன்னான். தொடர்ந்து ஒரே ஏமாற்றம். சுசீலா நம்பிக்கை இழக்கத் தொடங்கினாள்.

சுசீலாவைப் போலவே பலதடவை அலைபவர் வேறு சிலரும் கியூவில் நின்றனர். ஒவ்வொருவரது பிரச்சனையும் தனித்தனிப் பிரச்சனையாயிருந்தது.

அனுமதிச் சீட்டுப் பெற்றவர் முத்திரைச் சந்தையடியில் இருந்து புறப்படும் பஸ், மினிவான்களில் ஏறிப் புறப்படுவதையும் சுசீலா பார்த்தாள்.

அடிக்கடி அலைந்து ஏமாற்றத்துடன் திரும்புவதால் மனச்சோர்வு அதிகரித்து வந்தது. திருமணம், இனியவாழ்வு பற்றிய நினைவுகளே சிறிது சிறிதாகக் கருகத் தொடங்கின. கவலையை உருவாக்கின.

கைக்கு எட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ என அம்மா ஏங்கினாள். அப்பா எவரையாவது பார்த்து பாஸ் பெற முயலாது வீட்டிலேயே வஞ்சம் காட்டுவதுபோல் இருப்பதற்காகவும் அம்மா திட்டினாள்.

## 16

சுசீலாவிற்கு சகுந்தலாவே ஒரே துணை, ஆறுதல், நம்பிக்கை.

அன்று மாலை நாலு மணிக்கு சுசீலாவை சேலை கட்டி, புறப்பட்டு சைக்கிளில் வரும்படி சகுந்தலா கூறியிருந்தாள். தன்னோடு முன்னர் கற்பித்து ஓய்வு பெற்ற அன்னலட்சுமி ஆசிரியரிடம் அழைத்துச் சென்றாள்.

அப்போதும் ஷெல் அடிச்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



சுசீலாவை அறிமுகப்படுத்தியதும் தான் முன்னர் பார்த்திருப்பதையும் அப்பாவைப் பற்றி அறிந்திருப்பதாகவும் அன்னலட்சுமி தெரிவித்தார்.

'இது ஒரு விசித்திரமான காதல்' என நகைச்சுவையோடு சுசீலாவின் டெலிபோன் காதல் பகுதியை மட்டும் சகுந்தலா சொன்னாள்.

''காவியத்திலும் கதைகளிலும் சினிமாவிலும்தான் காதல் நிகழ்வுகளைப் படித்து, பார்த்து எல்லோரும் ரசிக்கிறார்கள். இந்தக் கதையை நேரில் கேட்கவே நல்லாயிருக்கிறது.''

கதையைக் கேட்ட ஆசிரியர் சிரித்தபடியே உள்ளே போனார். இருவருக்கும் தேநீர் தயாரித்துக்கொண்டு வந்தார்.

''நீங்க காதல் எல்லாம் வாழ்க்கையில் கிடையாது காவியம், கதை, சினிமாவில்தான் என எண்ணுவது போலிருக்கிறது.''

சகுந்தலா ஆசிரியரின் கருத்தை மறுப்பதுபோலக் கேட்டாள்.

''அப்படித்தானே காட்டுகிறார்கள். கலியாணம்வரை மட்டுமே காதல். பின்னர் அது முரண்பாடான குடும்ப வாழ்க்கையாகிறது என்றே நடைமுறை வாழ்க்கையை சினிமாவிலும் பார்க்கிறோமே. பிரிவுத் துன்பம், மரணம் என்பவற்றைக் காட்டியே மனித இரக்க உணர்வுகளின் மேல் காதலை நிஜம் என நிறுவப் பார்க்கிறார்கள்.''

''மாடம் உங்க பேச்சே புதுமையாயிருக்கிறது.''

சகுந்தலா சிறிது வியப்புத் தொனிக்கக் கேட்டாள்.

''உங்க தோழி சுசீலாவுக்கு தற்போதுபிரிவால் ஏற்படும் துன்பத்தையே காதல், காதலால் ஏற்படும் உணர்வு என்று கூறுவீர்கள். அதே வேளையில் இருவரும் கூடிப்பெறும்

www.padippakam.com



பாலின்பத்தையும் காதலால் ஏற்படுவது என்பீர்கள். இது முரண்பாடாக இல்லையா?''

சுசீலாவிற்கு அக்கூற்றின் ஒரு பகுதி சரிபோலவே தோன்றியது. எதுவும் பேசாமல் வரட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டிருந்தாள். சகுந்தலாவிற்கு துன்பம், இன்பம் என்பதில் முரண்பாடு உள்ளது எனக் கூறியதில் உண்மை இருப்பதைக் காண முடிந்தது. இருந்தாலும் துன்பமும் இன்பமும், வெறுப்பும் அன்பும் ஒரே பொருளான காதல் பற்றி எழுதுவது என எண்ணியபோது மனம் குழம்பவே செய்தது. பிறகு சிந்திப்போம் என மனதில் எண்ணிக் கொண்டாள்.

''முதல் தடவை இப்படியான கருத்தைக் கேட்பதால் சிறிது குழப்பமாக இருக்கிறது. சிந்தித்துப் பார்க்க வேண்டும்.''

சகுந்தலா சமாளித்தாள்.

''அடிப்படையில் ஒருவரை நோக்கிய பாலின்ப எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் அதே நபருடன் இணைவதால் ஏற்படும் இன்பத்தையுமே காதல் எனப் புலவர்கள் கற்பித்தனர். 'வள்ளுவர் காமம்' என்றார். இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது, சினிமா நாடகத்தில் பார்க்கும்போது நாமும் நம்மை மறந்து அப்பாத்திரங்களுடன் இனங்கண்டு சுவைக்கிறோம். அவ்வளவே. குடும்ப வாழ்க்கை என்பது வேறு. அது ஒரு சமூகப் பிணைப்பு''.

அன்னலட்சுமி மேலும் விரித்துக் கூறினார்.

''நீங்கள் கூறுவதில் உண்மை இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை.''

''சரி விசித்திரமான, நேரில் காணாமல் நவீன காந்தர்வக் காதல். கலியாணத்தில் முற்றுப் பெற வேண்டும். எப்பொழுது கலியாணம்?''

www.padippakam.com



சிரித்தபடியே ஆசிரியர் கேட்டார்.

''அந்த விஷயமாகவே உங்கள் ஆலோசனையையும் உதவியையும் கேட்கவே வந்திருக்கிறோம். மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிறோம்''.

சகுந்தலா பிரயாணம் தடைப்பட்டதிலிருந்து கடைசி விண்ணப்பம் அனுப்பியது பற்றி மனதைத் தொடும்படி சொன்னாள்.

''மாப்பிளை இங்கே ஏன் வரமுடியாது என அவர்கள் கேட்பதும் சரியே. மாப்பிளை, உங்கள் நிலைமை பற்றி அவர்களுக்கும் புரியத்தக்கதாக எழுத்துமூலம் விளக்குவதும் சிரமமே. இது காதல் கலியாண விஷயமல்லவா?''

ஆசிரியர் மீண்டும் காதல் என்பதை அழுத்திக் கூறிய படியே சிரித்தார். சிறிதுநேரம் சிந்தித்தார்.

''எப்படியும் உங்கள் உதவியையே எதிர்பார்த்து வந்தோம்.''

''என்னால் நேரடியாக எதுவும் செய்ய முடியாது. அரசடி சங்கக் கடைக்கு அடுத்த வீட்டில் விமலா என்ற பெண் இருக்கிறாள். என்னிடம் படித்தவள். காலையில் அவள் புறப்படுமுன் சென்று, நீங்கள் வருவீர்கள், உதவும்படி சொல்லிவைக்கிறேன். மாலையில் ஆறுமணிக்குமேல் சென்று பாருங்கள். வீட்டில் மாலையில் காணமுடியாது போனால் மறுநாள் அதிகாலையில் பார்த்துவிடுங்கள்.''

ஆசிரியரின் தீர்மானமான பேச்சில் ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது.

''அறிமுகக் கடிதம் ஏதாவது தந்தால் உதவியாயிருக்கும்... மாடம்''

அதுவரை மௌனமாக இருந்த சுசீலா ஆர்வத்துடன் கேட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



''அதெல்லாம் தருவது நல்லதல்ல. அவசியமுமில்லை.... வேறு பிரச்சனை என்றால் மட்டும் என்னிடம் வாருங்கள்...''

''ரொம்ப நன்றியுங்க''

''எதுவும் வேண்டியதில்லை.''

இருவரும் ஓரளவு மனத் தெம்புடன் விடைபெற்றனர்.

## 17

மறுநாள் மாலையில் விமலாவிடம் சென்றபோது வீட்டிலேயே உடையே மாற்றாமல் களைப்போடு அவள் உட்கார்ந்திருந்தாள். வியர்வை படிந்த முகம். இருவரும் அறிமுகம் செய்ததும், 'ஆமாம் காலையில் டீச்சர் சொன்னாங்க உட்காருங்கள்' என்று கூறிவிட்டு உள்ளே சென்று முகம் கழுவி முழுச்சட்டையுடன் வந்தாள். தாயாரிடம் அடுப்பில் தண்ணீர் கொதிக்க வைக்கும்படி கூறிவிட்டு வந்தாள். நெட்டை உருவம். உடலில் சுறுசுறுப்பு. தன்னம்பிக்கை.

''சரி சொல்லுங்கள் விஷயத்தை...'' எனக்கூறி விபரமாக எல்லாவற்றையும் வினா எழுப்பிக் கேட்டறிந்தாள். பேப்பர் எடுத்து வந்து பெயர் விபரங்களைக் குறித்துக் கொண்டாள்.

எழுந்து சென்று மூன்று கப்பில் வெறும் தேநீர் கலந்து எடுத்து வந்து அவர்களோடு சாப்பிட்டபடி சொன்னாள் :

''நீங்கள் நாளைக்கு மாலையில் வாருங்கள். பார்த்துச் சொல்லுகிறேன்''

விமலா நயமாகவே கூறினாள்.

இருவரும் ஓரளவு நம்பிக்கையுடன் அங்கிருந்து புறப்பட்டனர். அவர்களது முகம் தெளிவடைந்திருந்தது.

மறுநாள் மாலை அதே வேளை அங்கு சென்றபோது அவர்களை வரவேற்று உட்காரச் செய்துவிட்டு விமலா சொன்னாள்:

www.padippakam.com



''உடனே அனுமதி பெறுவது கஷ்டமான காரியம். அதற்குரியவர் இங்கே இல்லை. அவசரமாகப் போக வேண்டும் என்றால் அப்பாவை விட்டு நீங்க மட்டும் போவதற்கு அனுமதி பெற்றுத் தருவேன்...''

''கலியாண விஷயம் தனியப்போவது...'' ''உங்க சித்தப்பா அங்கே இருக்கிறார்தானே. நான் மற்றொரு பெண்ணுடன் சேர்த்து விடுகிறேன். அந்தப் பெண்ணும் உங்களைப் போலவே அவசரமாகக் கொழும்புக்குப் போக வேண்டியவளே. நீங்க இப்பவே யோசித்துப் பாருங்கோ. இல்லாவிட்டால் எப்போது அனுமதி கிடைக்கும் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியாது.''

விமலா கூறியபடியே அவர்களை சிந்திக்கவிட்டு டீ தயாரிக்க உள்ளே சென்றாள்.

''மாப்பிளை உன்னைத்தானேடி தேடிக் கொண்டிருப் பார். அப்பாவையா? சித்தப்பா பொறுப்பாக எல்லாம் செய்வார் தானே. நீ முதலில் போய் விடேன்.''

சகுந்தலா ஆறுதல் கூறினாள். சிந்தனை வேகத்தில் கழுத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை சகுந்தலா தன் முந்தானைத் தலைப்பால் ஒத்திவிட்டாள்.

''அப்பா என்ன சொல்லுவாரோ?''

''அப்பா என்னடி சொல்லுவது. நீதானே தீர்மானம் எடுக்கவேணும். வேறு உடனடி வழி எதுவும் இல்லை என்று சொல்லு. மற்றும் ஒரு பெண் துணைக்கு வருகிறாள் தானே. நூற்றுக்கணக்கான பிரயாணிகள் எல்லாருக்கும் ஒரே பயணம்தானே. வவனியாவரை சென்று ரெயில் ஏறி விட்டால், பிறகு கொழும்பு...''

''சித்தப்பாவுக்கு நான் வருவது பற்றி தெரிவிக்க வேண்டாமா?''

''அதெல்லாம் வேண்டாம். முடியாத விஷயமும். கொழும்பில் இறங்கியதும் டாக்ஸி அல்லது ஓட்டோவில் நீயே

www.padippakam.com



சித்தப்பாவிடம் போய்விட்டு அவருக்குப் போன் செய். ஒரே திறில்தான்டீ....''

சுசீலா வெட்கத்தோடு தலைகுனிந்து சிரித்தாள்.

விமலா டீயுடன் வந்தாள். பாலில்லாத வெறும் டீயிலும் ஒரு சுவை இருந்தது.

''எப்பொழுது போகலாம்?'' சகுந்தலா விமலாவிடம் கேட்டாள்.

''நாளைக்குக் கஷ்டம். நாளை மறுநாள் காலை ஏழு மணிக்கே தயாராக வீட்டில் நில்லுங்கள். மற்றப் பெண்ணின் காரில் உங்களையும் அழைத்துச் சென்று பஸ்ஸில் ஏற்றி விடுவேன் ஏதாவது மாற்றம் என்றால் மட்டுமே சொல்லி அனுப்புவேன்...''

''ரொம்ப நன்றி. அனுமதிச் சீட்டு...'' சகுந்தலா இழுத்தாள்.

''நல்லூரில் நீங்கள் பஸ் ஏறும்போதே நான் பெற்றுத் தருவேன். கவலைப்பட வேண்டாம்.''

இருவரும் விடை பெற்றுத் திரும்பும்போது சகுந்தலா பெரிய பிரச்சனை தீர்ந்ததான நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள். சுசீலாவின் கற்பனை கொழும்பில் மிதந்தது.

சுசீலா வீட்டிற்கு சகுந்தலாவும் வந்து பிரயாண விவரம் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்ட தாயார் சொன்னாள் :

''புறப்பட்ட பயணம்தானே, எப்படியும் போய்விடு பிள்ளை. அப்பாவை இப்போது பார்க்க வேண்டாம். அவர் பின்னர் வரட்டும்; சித்தப்பா எல்லாம் கவனிப்பார்தானே.''

தந்தையாரின் மௌனம் அனுமதி வழங்கியது.

மறுநாள் பொம்மர்கள் வந்து சுற்றின. ஹெலிகளின் இரைச்சல் வேறு. சாப்பாட்டையே மறந்து பதுங்கு குழிக்குள் சுசீலா தந்தையோடு அடைக்கலம் புகுந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



தாயார் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இங்கே விழுந்தால் செத்துப் போகிறேன் என்றோர் அசுரத் துணிச்சல். மறுநாள் கொடுத்தனுப்ப பலகாரங்கள் சில தயாரித்தாள். வழியில் எதுவும் கிடைக்கா விட்டாலும் அவற்றைச் சாப்பிடலாம் எனத் தாயார் சொல்லிக் கொண்டிருந்தாள்.

சுசீலா பெட்டியில் தேவையற்ற பொருட்களைக் குறைத்தாள். இரண்டு கையிலும் எடுத்துச் செல்லத் தக்கதாக பொருட்களை ஒழுங்கு செய்தாள். அண்ணன் ஜெர்மனியிலிருந்து நண்பன் மூலம் மாப்பிளைக்காக அனுப்பிய சேட்டுகள் இரண்டு, 'சூட்லெங்த்'தை அடிப்பெட்டியில் கவனமாக வைத்தாள்.

மாலையில் சகுந்தலாவிடம் விடை பெறச் சென்றாள். தோழியர் இருவரும் கேலியும் கிண்டலுமாகப் பேசினர் சகுந்தலாவின் தாயாரிடமும் விடைபெற்றாள். அவளுடைய தந்தையார் அமைதிப்படை வந்த வேளை எதிர்பாராமல் கொல்லப்பட்டார். தாயும் மகளும் அமைதிப்படையினர் அறிவித்தபடி கோவில்களில் தஞ்சம் புகுந்த வேளை தந்தை மரணம் நடைபெற்றது. இரண்டு வாரம் கழித்தே மரணம் பற்றி அறிந்து அதிர்ச்சியடைந்தனர். மற்றைய பல மரணங்களோடு சேர்த்து துன்பங்களைப் பகிர்ந்து ஆறுதல் பெற்றனர்.

## 18

மறுநாட் காலையில் சுசீலாவை வழியனுப்ப சகுந்தலாவும் அவளது வீட்டுக்குச் சென்றாள். பகல் பூராவும் கஷ்டமான பிரயாணம் என சாதாரண புடவையே சுசீலா கட்டியிருந்தாள். அத்தனை கலகலப்பாக அவள் இல்லை. முகம் வாடிப் போயிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



விமலா சரியாக ஏழு மணிக்கு ஐந்து நிமிடங்கள் முன்ன தாகவே காரில் மற்றைய பெண்ணுடன் வந்திருந்தாள். தாமதம் எதுவுமில்லாமல் சுசீலாவின் இரண்டு பைகளையும் விமலாவே எடுத்து டிக்கியில் வைத்தாள்.

ஒரே சுறுசுறுப்பு. சுசீலாவை பின்புறத்தில் ஏறும்படி சொன்னாள்; தாயை அணைத்து விடைபெற்றபோது அவள் கண்கள் கலங்கின.

சகுந்தலாவை மட்டும் விமலா அழைத்து காரில் உட்கார்ந்திருந்த மற்றப் பெண்ணை 'இவளே துணையாகப் போகிறாள்' என மட்டும் பெயரும் கூறாது அறிமுகப்படுத்தி விட்டு பெற்றாருக்கு கைகாட்டியபடி மற்றிருவருடனும் பின் சீட்டில் விமலா ஏறிக் கொண்டாள். அருகே இருந்த பெண்ணை' புதிய தோழி பேசிக் கொள்ளுங்க' என அறிமுகப் படுத்தினாள்.

சகுந்தலா எதிர்பார்த்ததைவிட உடன் செல்லும் பெண் அழகாகவும் சுசீலாவைவிட ஆடம்பரமாகவும் இருந்தாள். சேலையே கட்டியிருந்தாள். சிரிப்போடு துணிச்சலும் நம்பிக்கையும் முகத்தில் தெரிந்தன. அறிமுகப்படுத்தியதும் ஒரு சிரிப்பை உதிர்த்தாள்.

நல்ல பாதுகாப்பான பயணத்துணை என சகுந்தலா எண்ணிக் கொண்டாள். கார் புறப்பட்ட பின்னர் பெற்றாருக்கு நம்பிக்கையும் ஆறுதலும் கூறி சகுந்தலா விடைபெற்றாள்.

கார் வேகமாக யாழ் நகரை நோக்கி ஓடியது. அதிகாலைத் தென்றல் உடலுக்கு இதமாயிருந்தது; இருந் தாலும் சுசீலாவின் மனதில் அவளையறியாத கலக்கம் இருக்கவே செய்தது.

சசீலாவின் மௌனத்தையும் பிரிவு உணர்ச்சியையும் கலைப்பதாக விமலா அவளைப் பார்த்துச் சொன்னாள்:

''எதிர்பாராமல் வண்டி கொழும்பு சேர லேட்டானால் உங்க சித்தப்பா வீட்டிலேயே கமலா இரவு மட்டும் தங்கச்

படிப்பகம்

www.padippakam.com



செய்தால் காலையில் போய் விடுவாள். பயணம்வரை ஒருவருக்கொருவர் உதவியாய் இருங்கள்.

''அது பிரச்சனையே இல்லை. என்னோடுதங்கலாம்.''

முத்திரைச் சந்தையடி அலுவலகம் அருகே 20 நிமிடத்தில் வந்து விட்டனர். விடுதலைப் புலியைச் சேர்ந்த சிலர் ஆயுதங்களுடன் நடமாடினர். பஸ், மினிவான்கள் அங்கே புறப்படத் தயாராக இருந்தன. பிரயாணிகள் சிலர் உள்ளே இருக்க பலர் வெளியேயும் நின்றனர். ஆண்கள், பெண்கள் சிறியவர்களாக இருநூறு பேருக்குமேலாக இருக்கலாம்.

விமலா இருவரையும் ஒரு பஸ்ஸின் முன் சீட்டில் உட்காரச் செய்தாள். அவர்களது பைகளை டிரைவர் எடுத்து பஸ்ஸில் ஏற்றி விட்டான்.

விமலா அலுவலகத்துள் சென்று கால்மணி நேரத்தில் திரும்பிவந்தாள். இருவரிடமும் பிரயாண அனுமதிச்சீட்டுகளைக் கொடுத்தாள். விமலாவிற்கு அங்கே அறிந்தவர் காட்டும் மரியாதையையும் உரிமையுடன் அவள் ஓடியாடிப் பணிபுரிவதையும் காணக்கூடியதாக இருந்தது.

கமலா கேட்ட காலைப் பத்திரிகைகளை விமலா எடுத்து வந்து கொடுத்தாள். கமலாவை ஒருசிலர் கூர்ந்து பார்ப்பதும் அவள் ஓரிரு தடவை கை உயர்த்துவதும் தெரிந்தது. அவள் கவர்ச்சியாகவே இருந்தாள்.

ஷெல் அடிச்சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது; அதை எவரும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

பஸ் புறப்படும் வேளை விமலா வந்து 'விஷ் யு வோத் குட்லக்' எனச் சிரித்தபடி கூறிச் சென்றாள்.

பஸ் வேகமாக ஓடியது. ஒருவர் பாஸ்களைச் சரி பார்த்துப் பணம் பெற்றுக் கொண்டிருந்தார். விடுதலைப் புலிகளின் பாடல்கள் கேசெட்டில் ஒலித்துக்கொண்டிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



கமலா, சுசீலாவிடம் கண்டக்டராக வந்தவன் அனுமதிச் சீட்டைக் கேட்கவுமில்லை, பணம் பெறவும் இல்லை. விமலாவின் ஆணையாயிருக்கலாம் என சுசீலா எண்ணிக் கொண்டாள்.

கமலா அதிகம் பேசவில்லை. தான் பிரான்சுக்கு தன் அண்ணனிடம் செல்ல இருப்பதாகவும் அவசரமாக பாஸ்போட் எடுக்கவே கொழும்பு செல்வதாகவும் சொன்னாள்.

காலைப் பத்திரிகைகளை எல்லாம் படிப்பதில் கமலா ஆர்வமாக இருந்தாள்.

பூநகரியிலிருந்து சங்குப்பிட்டியைச் சேர பாதையில் ஏறிக் கடப்பதற்குப் பைகளை இருவரும் தூக்கிச்செல்ல நேரிட்டது. சுசீலாவின் இரண்டு பையில் ஒன்று பாரமாக இருந்தது. அதைத் தூக்கிச் செல்வதற்குக் கமலா உதவினாள். அங்கு வவனியா செல்லும் பஸ்கள் தயாராக நின்றன. முன்பு போலவே முன் சீட்டில் உட்கார்ந்தனர்.

சுசீலாவின் தாயார் அதிகாலையில் தயாரித்துத் தந்த இடியப்பப் பார்சலை எடுத்து மடியிலே பேப்பர் ஒன்றை விரித்து வைத்துப் பிரித்தாள். கமலாவையும் சாப்பிடும்படி வேண்டினாள்.

கமலா தான் கொண்டுவந்த பனிஸ், வாழைப்பழப் பார்சலை எடுத்து பிரித்து சாப்பிடத் தொடங்கினாள். சுசீலா மீண்டும் வற்புறுத்த இரண்டு இடியப்பத்தை அவளது பார்சலில் எடுத்துச் சாப்பிட்டாள். சுசீலா எடுத்துவந்த தண்ணீர் பாட்டிலையும் கமலாவிடம் தந்தாள். அவள் பெற்றுக்கொண்டாள்.

சுசீலா தினப்பத்திரிகைகளைக் கமலாவிடம் பெற்று முதற்பக்கத் தலைப்புகளைப் படித்தாள். விடுதலைப்புலிகளின் யாழ் கோட்டைத் தாக்குதல் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. ஷெல் அடியினால் பாதிக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டவர், பெட்ரோல் குண்டுகளால் எரிந்த வீடு, இறந்தவர் விபரம் எல்லாம் வெளியிடப்பட்டிருந்தன.

''இந்த விமானத்தாக்குதல் இன்னும் எத்தனை காலம் தொடரப் போகிறதோ, என்ன கொடுமை.''

சுசீலா சொன்னாள்.

சுசீலாவின் உணர்வுகள் வார்த்தையாக வெளிவர அடுத்த பக்கத்திற்குத் திரும்பினாள்.

''நாமும் விமானங்களைச்சுட்டு வீழ்த்தப்பழகும் வரை நடைபெறும்''...

கமலாவிடமிருந்து அத்தகைய பதிலை விமலா எதிர் பார்க்கவில்லை.

''தங்கள் நாட்டு மக்கள் என்று கூறிக் கொண்டே தமிழர்கள்மேல் குண்டு போடுகிறார்கள்.''

''இல்லை. வேறுநாட்டு அந்நியர் என்றே நம்மை அவர்கள் கணிக்கிறார்கள். நாம்தான் தவறாக எண்ணிக் கொண்டிருந்தோம்.''

இவளென்ன பெண், நாட்டை விட்டே ஓடப்பார்க்கிறாள் எனச் சுசீலா எண்ணிக் கொண்டாள். அதைச் சுட்டிக் காட்ட முடியாத தன் நிலையை சுசீலா உணர்ந்தாள். திருமணம், கனடா பயணம் நினைவில் வந்தது.

பஸ் வேகமாக ஓடத் தொடங்கியது. ஓரமான குறுக்குத் தெரு இருபுறமும்காடுகள். இடையிடையே சிறு கிராமங்கள்; குடியேற்றங்கள்; ஆங்காங்கே வயல்களில் மக்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். பஸ் பள்ளங்களில் விழுந்து எழுந்து குலுக்கவே செய்தது. கண்டக்டராக வந்தவன் பாஸ்களைச் சரி பார்த்து பணம் பெற்றான், இருவரிடமும் பணம் பெற்றான். சுசீலாவின் நினைவு அடிக்கடி குமரேசனை நினைத்துக் கொண்டது.

www.padippakam.com



'நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா' என்ற கண்ணதாசனின் கவிதை நினைவு வந்த போது சுசீலா மனதுள் சிரித்துக் கொண்டாள்.

மாங்குளம் தாண்டிய பின் தெருவோர தேநீர் கடையை ஒட்டி பஸ் நின்றது. பெரும்பாலோர் இறங்கி தேநீர் சாப்பிடவும் சிறுநீர் கழிக்கவும் சென்றனர்.

''நீங்க டீ குடிக்கவில்லையா?''

விமலா கேட்டாள். டீக்கடையில் ஒரே கூட்டம்.

'இல்லை. கீழே இறங்கி காலாறுவோம்' எனக் கூறிய படியே கமலா வெறுங்காலுடன் கீழே இறங்கினாள். விமலா சிலிப்பரை மாட்டிக் கொண்டே கீழே வந்தாள்.

''உங்கள் சிலிப்பர்...''

''பரவாயில்லை. நம்ம மண் தானே''

கமலாவுடன் சுசீலா சென்றாள். ஓடை ஓரக் காய்ந் திருந்த வெண் மணற் பகுதியில் கையில் எடுத்து வந்த நியூஸ் பேப்பரைப் போட்டு உட்கார்ந்த கமலா எதிரே சுசீலாவிற்கும் ஒரு பேப்பரை விரித்து விட்டாள்.

இன்னும் போகவேண்டிய தூரம், நேரம், வவனியாவில் வண்டி புறப்படும் நேரம் பற்றியும் பேசிக் கொண்டனர். சிறுபிள்ளை விளையாட்டாக கமலா எதிரே மண்ணைக் கிளறி அள்ளிக் கொண்டிருந்தாள். அவர்கள் எதிர்பாராமல் ஒரு இளைஞன் இரண்டு 'கப்'டீயுடன் வந்தான். கேட்கா மலே தேநீர். பணம் தர தன் ஹான்பாக்கை சுசீலா எடுத் தாள். கமலா கையால் தடுத்தாள். தேநீர் அருந்தியதும் 'கப்'களைக் கொடுக்கும்போது கமலா கேட்டாள்.

''நேரத்திற்குப் போய் ரெயினைப் பிடிக்க முடியுமா?''

''இதுதானே முதல் பஸ், போய் விடுவோம், அங்கேயும் கூட்டம் இல்லாமலிருக்க வேண்டும்.''

சிலர் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தனர்.

www.padippakam.com



கமலா முன்புறமாக கிளறிய மண்ணில் ஒரு பிடி அள்ளி பேப்பரில் போட்டு மடித்தாள். மற்றும் ஒரு பிடியை வேறாக மடித்தாள். வளர்ந்த பெண் சிறுபிள்ளைபோல் இருக்கிறாளே என சுசீலா எண்ணிக் கொண்டாள்.

''இதை உங்க காதலருக்கு என் திருமண அன்பளிப் பாகக் கொடுங்கள். இது எனக்கு.''

''கமலா ஒரு மடிப்பைச் சுசீலாவிடம் கொடுத்தபடி எழுந்தாள். இருவரும் பஸ்ஸை நோக்கி நடந்தனர். கமலா வின் சிறுபிள்ளைத்தனமும் சுசீலாவைச் கவர்ந்தது.

பஸ் மீண்டும் புறப்பட்டு வேகமாக ஓடியது; தாண்டிக் குளம் விடுதலைப் புலிகளின் கடவைக்கு எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே வந்து விட்டது. பயணிகள் எல்லாரும், பாஸ்களையும் தமது பைகளையும் காட்டிவிட்டு கியூவரிசை யில் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

சுசீலாவும் கமலாவும் கியூவிலிருந்து வெளியே வந்ததும் டீ வாங்கித் தந்த பையன் இரண்டு சைக்கிளை ஏற்பாடு செய்து அவர்களை விரைவில் செல்ல உதவினான். வேக மாக நடந்து அரைமணி நேரத்தில் சிங்கள இராணுவ முகாமை அடைந்தனர். அவர்களிருவரது தராதரத்தையும் பைகளையும் திறந்து பார்த்துவிட்டு இராணுவத்தினர் வெளியேற அனுமதி வழங்கினர். எதிரே தயாராக நின்ற பஸ்ஸில் ஏறி இருவரும் ஸ்டேசனுக்கு வந்து சேர்ந்தனர்.

வழியிலும் ரெயில் நிலையத்திலும் இராணுவத்தினர் நடமாடினர்.

## 19

ரெயில் நிலையத்தில் ஒரே கூட்டம். முதல்நாள் வந்த பிரயாணிகள் ஏற்கெனவே வண்டியில் ஏறி இடம் பிடித்துக் கொண்டனர். டிக்கெட் விற்குமிடத்திலும் ஒரே கியூ வரிசை.

படிப்பகம்

www.padippakam.com



பஸ்ஸில் வந்தவர்கள் வேறு ஓடி வந்து நின்றனர். வண்டி புறப்பட அரைமணி நேரம் இருந்தது. ஒருவன் வாங்கிய டிக்கெட்டுக்கு பத்துருபா அதிகமாக விலை பேசினான். இருவரும் அவனிடமே வாங்கி திகதியைச் சரிபார்த்துக் கொண்டு வண்டிக்குச் சென்றனர்.

பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட சீட்டுகளில் உட்காரவே இடமில்லை. ஆண்கள் பகுதியில் அவர்களைப் பார்த்த ஒருவன் ஒரு மூலையில் ஒதுங்கி இருந்து அவர்கட்கு இடம் கொடுத்தான். பைகளை மேலும் கீழுமாக வைத்தனர். அடுத்துவரும் பயணிகள் எல்லோரும் நிற்க வேண்டியே நேரிட்டது.

வண்டி புறப்படும்போது எழுந்து கழிவறைகூடச் செல்ல முடியாதபடி ஒரே நெருக்கடி. ஆயுதமேந்திய இராணுவத் தினரின் கண்காணிப்பு வேறு.

அனுராதபுரம் கழிந்ததும் தாயார் தந்த பலகாரப் பார்சலைச் சுசீலா பிரித்தாள். பசிவயிற்றைநினைவூட்டியது. கமலாவும் ஆர்வமாகச் சாப்பிட்டாள். எஞ்சியிருந்த தண்ணீரைக் குடித்தனர்.

வண்டி நாயோட்டமாக வேகமாகவும் தணிவாகவும் ஓடியது.

மாகோவுக்கும் பொல்காவலைக்கும் இடையே ஒரு ஸ்டேசனில் வண்டி அரைமணி நேரத்திற்குமேலாக நின்றது. எதிரேயிருந்து வரவேண்டிய வண்டி தாமதமாகிக் கொண்டிருந்தது எனப் பேசிக் கொண்டனர்.

சோடா, இளநீர், பனிஸ் விற்பனை வேகமாக நடந்தது.

இருவரும் 'ஒரேஞ்பார்லி' வாங்கிக் குடித்தனர். கமலா பணம் எடுக்குமுன்னர் சுசீலாவே கொடுத்துவிட்டாள்.

ஒரு பகல்நேரப் பழக்கத்தில் இருவரும் நெருங்கிய தோழியராகிவிட்டனர், கமலா சுசீலாவைவிட இளைய்

www.padippakam.com



பெண்ணாகவே இருந்தாள், அவளது பேச்சும் செயல்களும் சில வேளைகளில் உயர்வாகவும் வேறு சில நேரங்களில் சிறு பிள்ளைத் தனமாகவும் இருந்தது. தேவைக்கு அதிகமாக இருவருமே ஒருவரையொருவர் விசாரணை செய்யவில்லை. அரசியல், இயக்கங்கள் பற்றிப் பேசினும் முரண்பாடு ஏற்படலாம் என விட்டுவிட்டனர்.

கமலாவின் அரசியல் வெளிப்படையாகத் தெரிந்திருந்தது. அதற்கு எதிராக எதுவும் பேசவும் சுசீலா விரும்பவில்லை.

''ஏதோ விமலாவின் உதவியால்தான் நான் இன்று புறப்பட்டு வரமுடிந்தது. கடமைப்பட்டுள்ளேன்.''

''நானுந்தான்''

கமலாவும் சுருக்கமாக நன்றி கூறும் வார்த்தை.

இருவரது ஆர்வம், மனஓட்டம்போல் வண்டி ஓடவில்லை. கொழும்பு சேர ஏழு மணியாகிவிடும் என்ற எண்ணமும் பிழைத்தது. இடையிடையில் சிக்னல் போஸ்டில் வண்டி நிற்பதும் சுசீலாவுக்கு எரிச்சலூட்டியது.

கமலாவை பொறுத்தவரை சுசீலாவின் சித்தப்பா வீட்டில் தங்குவது என்பது உறுதியானது.

கொழும்பு கோட்டை நிலையத்தை வண்டி சேர மணி எட்டேகாலாகி விட்டது. பசி, நாவட்சி, பிரயாணக் களையுடன் பைகளைத் தூக்கியபடி வெளியே வரும் வாயிலேயே இராணுவத்தினர். சிவில் உடையுடன் நின்ற ஒருவனும் அவர்களை உற்றுப் பார்த்தான்.

சுசீலாவின் பாரமான பையைக் கமலாவே தூக்கிக் கொண்டு வந்தாள். கமலாவுடையது ஒரு சிறு பையே; சில உடைகள் மட்டுமே.

www.padippakam.com



இராணுவத்தாரோடு சிவில் உடையில் நின்றவன் கமலாவிடம் பையை வைக்கச் சொல்லி திறந்து காட்டும்படி சொன்னான். அது பூட்டியிருக்கவில்லை.

'இந்தா பார்' என கமலா சிங்களத்திலேயே கூறி அப்பையின் 'ஸிப்பை' இழுத்து விட்டாள்.

அவன் ஒருகணம் பார்த்துவிட்டு 'ஓந்தாய் ஓந்தாய்' என்றான், எதையும் காட்டாத முகக் குறியுடன்.

''பெண்கள் என்றாலே சிலர் அளவுக்கு மீறிய மரியாதை கொடுப்பார்கள். சிலர் தமது அதிகாரத்தைக் காட்ட இப்படியான சேஷ்டை விடுவார்கள். இரண்டுமே ஒரே ரகம்தான். எனக்குப் பிடிக்காதவை.''

கமலா ஓரளவு கோபத்தைக் காட்டியபடி கூறிக்கொண்டு நடந்தாள். அவளுக்கு சிங்களம் பேசவரும் என்பதை அப்போதுதான் சுசீலா அறிந்தாள். கண்டி கன்வென்டில் படித்தது பற்றி கமலா கூறியது அவ்வேளையே நினைவில் வந்தது.

ஓட்டோவிற்கு முப்பது ரூபா பேரம் பேசி சித்தப்பா வீட்டிற்கு இருவரும் வந்து சேர்ந்தனர். வீட்டிலே அனைவருக்கும் ஒரே வியப்பு. ஆச்சரியம் பொங்கப் பார்த்தனாள்.

கமலாவைச் சித்தப்பா, சின்னம்மாவிற்குத் தன் துணையாக வந்தது பற்றி மட்டும் கூறி அறிமுகப்படுத்தினாள்.

''நல்ல வேளை இப்பொழுதாவது வந்து சேர்ந்தாய். உன் மாப்பிளை கனடாவையே மறந்து எங்களை அறுத்துக் கொண்டே இருந்தார்.''

சின்னம்மா சிரித்தபடி சொன்னார்.

சுசீலா எதுவுமே பேசவில்லை. உள்ளூரச் சிரித்துக் கொண்டாள். தனக்கு இத்தனை மதிப்பளிப்பது நெஞ்சினடியில் பெருமையாகவும் இருந்தது. குமரேசன்மேல் பரிவும் ஏற்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



கமலாவை முதலில் குளிக்கும்படி சுசீலா வற்புறுத்தினாள். உடை மாற்றும் அறையையும் காட்டினாள். அவள் பாத்ரூம் செல்ல, சின்னம்மா டீ கொண்டு வந்து கொடுத்தாள்.

யாழ் நிலைமை, பிரயாணப் பிரச்சனைகள் பற்றியெல்லாம் சுசீலா சொல்லிக் கொண்டிருந்தாள். அப்பா வர முடியாத நிலைமையை விளக்கினாள்.

சுசீலா உடை மாற்றிக் குளிக்கச் சென்றதும் சித்தப்பா போன் செய்து மாப்பிள்ளையின் அண்ணன் அண்ணாமலைக்குச் சுசீலா வரவு பற்றிச் சொன்னார்.

சாப்பிட்டு, கதைகள் பேசி தூங்கச் செல்ல இரவு பதினொரு மணியாகி விட்டது. உடல் அலுப்பு இருந்தாலும் சுசீலாவிற்குத் தூக்கம் வர நள்ளிரவுக்கு மேலானது, கமலாவும் அவளுடன் ஒரே கட்டிலிலேயே தூங்கினாள். நைட்டியுடன் படுத்திருந்த கமலாவின் உடற்கட்டையும் அங்க அவயவங்களையும் 'பெட்ரூம்' லைட்டில்பார்த்தபோது சுசீலாவிற்குச் சிறிது பொறாமை ஏற்படவே செய்தது. எப்படியும் தன்னைத் திருமணம் செய்ய என கனடா பிரயாணத்தையும் விட்டு காத்திருப்பது மனத்திருப்தியுடன் குமரேசன்மேல் மதிப்பும் பாசமும் சுசீலாவிற்கு அதிகரித்தது.

## 20

அதிகாலையில் டெலிபோன் அடித்ததும் சுசீலா திடுக்கிட்டெழுந்து ஓடிச் சென்று போனை எடுத்தாள்.

''ஹலோ...''

' குமரேசன் கனடாவிலிருந்து பேசுகிறேன். சுசீலா இருக்கிறாங்களா''

சுசீலாவுக்குச் சிரிப்பே வந்து விட்டது. இத்தனை நாட்கள் வராததற்குக் கோபமாகப் பேசலாம் என எதிர் பார்த்திருந்தாள்.

www.padippakam.com



''அப்பாடீ, எத்தனை தடைகள், எத்தனை கஷ்டங்கள், ஏதோ உயிரைக் காப்பாற்றி அப்பாவையும் விட்டு ஒரு தோழியோடு வந்து சேர்ந்தேன். எல்லாம் உங்களுக்காகத் தான்.''

தன் ஆர்வத்தையும் தெரிவிப்பதாக சுசீலா பேசினாள்.

''நீங்க களைத்திருப்பீங்க. ரெஸ்ட் எடுங்க. மாலையில் நாலரை மணிவரையில் வருகிறேன்.''

சுருக்கமாகவே பேசிவிட்டு போனை வைத்தான். சுசீலா மீண்டும் வந்து கட்டிலில் படுத்தபடி கண்களை மூடி கற்பனை எண்ணங்களில் மிதந்தாள். அதன் பின்னர் தூக்கமே வர வில்லை.

கமலா காலையில் எழுந்ததும் சுறுசுறுப்பாகக் காலைக் கடன்களை முடித்து மாற்றுச் சேலை ஒன்றைக் கட்டிக் கொண்டாள். காலையில் சாப்பிட்டுச் செல்லும்படி சுசீலா வற்புறுத்தினாள். பட்டர் தடவிய ரொட்டியும் பழமும் டீயும் சின்னம்மா வழங்கினார்.

கமலா அங்கிருந்தே போன் செய்து, தன் வரவு பற்றித் தெரிவித்து, தங்கியுள்ள முகவரியையும் கூறிவிட்டுச்சாப்பிடத் தொடங்கினாள். சுசீலாவும் உணவில் சேர்ந்து கொண்டாள்.

''வேலை முடிந்து ஊருக்குத் திரும்ப நேர்ந்தால் இங்கு வந்து சொல்லிவிட்டே போவேன். தாமதிக்க நேர்ந்தால் கலியாணத்திற்கே வருவேனே. எதற்கும் போன் செய் வேன்''

''உனது போன் நம்பர், விலாசத்தை எழுதிக் கொடேன்''

''எங்கே தங்குவேன் என்று தெரியாது. அப்புறம் தங்கு மிடம் உறுதியானதும் போன் செய்து சொல்கிறேன்''

கமலா கூறிவிட்டு தன் உடுப்புகளை எடுத்து பையில் வைத்துக்கொண்டு வாயிற்புறமாக வந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



தெருவோரமாக ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. கமலா யாவரிடமும் சொல்லி விடைபெறும்போது சுசீலா நினைவூட்டினாள்.

''கமலா, எதிர்பாராமல் திடீரென யாழ் செல்ல நேர்ந்தாலும் விமலாவுக்கு என் நன்றியைத் தெரிவிக்க மறக்காதே''

கையைக் காட்டியபடி மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டாள். தன் சிறு பையை மடியில் வைத்துக் கொண்டாள்.

## 21

அன்றைய பகல்நேரம் கழிவது சுசீலாவிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. காலை நேரமெல்லாம் யாழ் நிலைமைகளை சித்தப்பா, சின்னம்மாவிற்குக் கூறிக் கொண்டிருந்தாள். சித்தப்பா வெளியே சென்ற பின்னர் சின்னம்மாவிற்கு சமையலில் உதவி செய்தாள். எப்படியும் கடிகாரம் மெதுவாகவே ஓடுவதாகத் தெரிந்தது. நண்பகல் சாப்பாடு முடிந்ததும் சிறிதுநேரம் படுத்துப் பார்த்தாள். தூக்கம் வரவில்லை.

சின்னம்மா சொன்னபடி மாலையில் சேலையே கட்டுவதாகத் தீர்மானித்தாள். கொண்டுவந்த சேலையில் 'பிங்' கலர் நைலெக்ஸ் சேலையைத் தேர்ந்து எடுத்தாள். சின்னம்மாவிற்கும் காட்டினாள்.

மூன்று மணிக்கே மீண்டும் ஒரு தடவை குளித்துவிட்டு, டிரெஸ்ஸிங் கவுணை விட்டு சேலையைக் கட்டி நிலைக் கண்ணாடியில் இருபுறமும் திரும்பிச் சரிபார்த்தாள். சின்னம்மா வந்து கீழ்ச் சேலையை இழுத்துவிட்டுச் சேலை மடிப்புகளைச் சரிசெய்தார்.

கமலாவைவிட அவளுக்கு நீண்ட முடி. காலையில் ஸாம்பு போட்டு கழுவியிருந்தாள். கொண்டை போடுவதா, பின்னி விடுவதா, விரித்தபடி 'கிளிப்' மாட்டிவிடுவதா என்

www.padippakam.com



பதிலும் ஊசலாட்டம் இருந்தது. பின்னிவிடுவதே நல்லது என சின்னம்மா சொன்னாள். கழுத்தில் சங்கிலியுடன் கையில் ஒரு சோடி காப்பு மட்டும். அதிக ஆடம்பரமாகக் காட்டாமல் சாதாரணமாகவே வீட்டில் தங்கும் உடையாக முதன்முதலான நேரடித் தரிசனம் காட்டவே விரும்பினாள். கை, கால் விரல்களுக்குப் பிங்கலர் குயூட்டெக்ஸ் மட்டும் போட்டுக் கொண்டாள். காதில் வட்டச்சிமிக்கி. கண்மை, லிப்ஸ்டிக் எதுவும் அவள் போடுவதில்லை.

கேக்கும் பிஸ்கெட்டும் டீயும் வழங்குவதாகத் தீர்மானித்திருந்தனர். கூல்டிங்ஸ் கேட்டால் பிரிட்ஜில் இருந்தது.

சித்தப்பா புருட்கேக் வாங்கித் தந்துவிட்டு 'நீங்கள் பேசிக் கொண்டிருங்கள் நான் ஆறுமணிக்குள் வந்துவிடுவேன்' எனக்கூறிக் கொண்டே வெளியே போய்விட்டார்.

''முன்னர் ஒருதடவை இங்கே வந்திருந்தார்தானே. உன்னைவிட நிறம் குறைவாக இருந்தாலும் உனக்குப் பிடிக்கும்; நல்ல எடுப்பான ஆம்பிளை.''

சின்னம்மா ஏமாற்றமேற்படாத விதமாக மாப்பிளைபற்றி சுசீலாவுக்கு நம்பிக்கை ஊட்டினாள்.

''பிடித்தென்ன, பிடிக்காமலென்ன அவரைத்தானே கட்டப் போகிறேன்.''

நிலைக்கண்ணாடி முன் நின்று கூறியபடியே முகத்துப் பவுடரைப் பார்வைக்குத் தெரியாதபடி தடவிக் கொண்டாள். நேரம் நெருங்க அவளது இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

நாலரை கழிந்த சில நிமிடங்களில் குமரேசன் ஒரு காரில் வந்து இறங்கினார். இறங்கியதும் கார் புறப்பட்டு விட்டது. கையிலே சிறிய 'பாக்'கோடு உள்ளே வந்தார்.

சின்னம்மாவுடன் சுசீலாவும் இரு கைகளையும் கூப்பி வரவேற்றனர்.

www.padippakam.com



உள்ளே அழைத்து உட்காரச் செய்துவிட்டு, 'நீங்க பேசுங்கள். எனக்கு வேலையிருக்கிறது' என்று கூறியபடி சின்னம்மா உள்ளே சென்றார்.

ஒரே மௌனம். குமரேசனின் பார்வையைத் தாங்க முடியாதவளாகத் தலைகுனிந்தபடியே சிரித்தாள் அவள்.

''என்ன டெலிபோனில் எடுத்ததுமே ஏதோ எல்லாம் பேசுவீங்க, நேரில் கண்டதும் ஊமையாய் விட்டீங்க.''

அவள் சுவரைப் பார்த்தபடி கூறினாள் :

''நீங்கதானே அதிகமாகப் பேசுவீங்க.''

அவன் முகத்தில் புன்னகை :

''நீங்க பேசுவதில்லையா?''

''மௌனமாயிருந்தால் மீட்டர் ஓடிக் கொண்டிருக்கும். வீண் செலவு. அதற்காகவே உங்களுக்குப்பதில்கூறுவேன்...'

''ஓ இங்கே செலவில்லாத பேச்சு. எவ்வளவு நேரமும் பேசலாம், அப்படித்தானே. இதற்காகநான்எத்தனை நூரம் வந்திருக்கிறேன்.''

''நானுந்தான்... அப்பப்பா இங்கு வருவதில் ஏற்பட்ட தாமத்தைப் பார்த்து ஓடிவிடுவீங்களோ என்றே குறுக்கு வழியாக நான் மட்டும் வந்தேன்.''

''அதுதான் என்மேல் கொண்ட காதல்...''

''நீங்க மட்டும்...''

வெட்கத்தால் தலைகுனிந்தபடி சிரித்துக் கொண்டே சுசீலா சொன்னாள்.

''ஒப்புக்கொள்ளுகிறேனே. காதல்தான் என்னைத் தடுத்து வைத்தது. நண்பர்கள் எல்லோரும் அப்படித்தான் கேலி செய்கிறார்கள்.''

படிப்பகம்

www.padippakam.com



சுசீலாவிற்கு அன்னலட்சுமி ஆசிரியர் கூறியது அவ் வேளை நினைவில் வந்தது. காதல் என்பது பிரிவுத் துன்பமா, கூடும் இன்பமா, இரண்டும் சேர்ந்த எண்ணங் களா?''

''மற்றவர் கேலி செய்வதால்தான் காதல் வளர்கிறது''

''யார் உங்களைக் கேலி செய்தார்கள்?''

''என் தோழி சகுந்தலா?''

''யார் அந்தத் தோழி?''

சுசீலா சகுந்தலாவில் ஆரம்பித்து ஊரில் ஏற்பட்ட பிரச்ச னைகள் பாஸ் பெறுவதில் ஏற்பட்ட சிரமம், தாமதம் பற்றிச் சொன்னாள்.

''உங்களை அங்கே வரச் செய்திருக்க வேண்டும். எண்ணாயிரம் மைல் காதலோடு வந்தவர் இருநூற்றைம்பது மைல்கள் ஏன் வரமுடியாது என்று கேட்டார்கள். சரிதானே. ஏதோ தோழி சகுந்தலா தான் உங்களுக்காகவும் சார்ந்து பேசி, ஆசிரியர் அன்னலட்சுமி மூலம் விமலாவை அறிமுகப் படுத்தி ஒருவகையாக வந்துசேர்ந்தேன்....''

''அப்பா ஏன் வரமுடியவில்லை? யாரோடு வந்தீங்க? வழிப்பயண பிரச்சனை எல்லாம் இங்கே சொல்லிக் கொண் டிருந்தாங்க. பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தது''

விமலாவின் ஏற்பாடுகள், அப்பாவின் பாஸ் பிரச்சனை, கமலாவின் வழித் துணை பற்றி விரிவாகக் கூறினாள்.

''காலையில் வந்திருந்தால் கமலாவையும் பார்த்திருக்க லாம்''

''எதற்கு...''

சுசீலாவின் நாவிலிருந்து திடீரென வார்த்தை வெளி வந்தது.

படிப்பகம்

www.padippakam.com



''துணையாக வந்து உதவியதற்கு நன்றி கூறியிருக்கலாம்தானே...''

''ஏன் அவசரப்பட்டாள்?''

''இன்று பாஸ்போட் எடுக்க வேண்டும் என்று சொல்லிப் போய்விட்டாள்''

சின்னம்மா சுசீலாவை உள்ளே அழைத்தாள்.

ஒரு தட்டில் கேக், பிஸ்கட் கொண்டுவந்து வைத்தாள்.

''சாப்பிடுங்க. டீயா, கோப்பியா, கூல்டிரிங்ஸ்ஸா பிடிக்கும்...''

''எல்லாமே...''

''பிடித்த ஒன்றைச் சொல்லுங்கோ''

''உங்க கைபட்டால் எல்லாம் பிடிக்கும்''

''இதெல்லாம் சினிமா வசனங்கள்''

''வாழ்க்கையிலிருந்து தானே அவ்வசனங்கள் வந்தன''

''இல்லை, கற்பனையிலிருந்து...''

''ஆர் சொன்னாங்க...''

''ஆசிரியர் அன்னலட்சுமி...''

''என்ன சொன்னாங்க?''

''காதல் எல்லாம் காவியத்திலும் கதைகளிலும் சினிமாவிலும்தான் பார்க்க, படிக்க, சுவையாயிருக்கும், அழகாயிருக்கும், வாழ்க்கையில் இல்லை என்று''

''அப்போது வாழ்க்கையில்...''

''பொய், ஏமாற்று, துன்பம் என்று...''

''அவங்க பொல்லாத டீச்சராயிருப்பாங்க...''

''நீங்க நம்புறீங்களா?...''



படிப்பகம்

www.padippakam.com



''இல்லை...'' அவன் அரைகுறையாக இழுத்தான்.

''இந்தக் கேக்கில் ஒரு துண்டு சாப்பிடுங்க...''

ஒரு துண்டைப் பிய்த்து நீட்டினான். தவிர்க்க முடியாமல் சுசீலா பெற்றுக் கொண்டாள்.

''வாயில் போடுங்க...'' என வற்புறுத்தினான்.

''இனிக்கிறதா, புளிக்கிறதா?''

''.........''

''சொல்லுங்க...''

''இனிக்கிறது...''

''இதே போலவே காதலும் இனிமையானது...''

''திருமணம்வரையும் என்றும் சொன்னார்...''

''காதல் கடவுள்போல, நம்பிக்கை இல்லாதவருக்குப் பொய்மையாகத்தான் தெரியும்...''

சுசீலா உள்ளே சென்று டீ எடுத்து வந்தாள்.

''உங்களுக்கு...''

''உள்ளே இருக்கு...''

''எடுத்து வாங்க...'' என்றதும் தனது டீயையும் சென்று எடுத்து வந்தாள். அவனோடு சாப்பிட்டாள்.

''இந்த சேலை அழகாயிருக்கிறது...''

''சேலையா?''

''நீங்க உடுத்திருப்பதால் அழகாயிருக்கு என்றே சொல்ல வந்தேன், சொறி...''

''நீங்க நல்லாய் பேசுறீங்க...''

''நீங்கதான்...காதல்தான் பேச வைக்கிறது...''

www.padippakam.com



மீண்டும் யாழ். நகரம் பிரச்சனைகள், கோட்டையைப் பிடிக்கும் புலிகளின் போராட்டம், ஷெல் அடி, ஹெலி, பொம்மர்கள் குண்டுவீச்சு, பண்டதத்தட்டுப்பாடுபற்றி எல்லாம் விபரமாகச் சொன்னாள்.

''இந்தத் துன்பங்களிடையே நம்ம காதல் இன்பம் என்பது சுயநலமாகத் தெரிய வில்லையா?''

சுசீலாவின் வினா அவனை ஒருகணம் திணற அடித்தது.

''ஆமாம். மனிதர்கள் துன்பத்திடையேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்பம் என்பது குறைவேதான். கனடாவிலும் அகதிகளாக வாழ்பவர் கஷ்டப்படுகிறார்கள். உயிர் வாழ்வதற்காக...''

''இப்போதுதான் நிஜவாழ்வைப் பற்றிப் பேச வருகிறீர்கள், பொய்மையை விட்டு.''

''சமுதாயம் என்று வந்ததும் தனி மனித வாழ்வு அங்கே கரைந்து விடுகிறது...''

''அப்பா எப்பொழுது வருவார்?''

''எதுவும் உறுதியாகச் சொல்ல முடியாது. அங்கு நிலமைகள் சீராக இல்லை...''

''அப்பா வரும்வரை நாம வெளியே போக முடியாதா?''

''எங்கே?''

''கடற்கரை, சினிமா, ஓட்டல்கள்...''

''பழையபடி காதலுக்குத்தான் வருகிறீங்களா? அப்பாவே சொல்லி அனுப்பினார். சித்தப்பாவிற்குக் கடிதமும் தந்தார். நீங்க உங்க அண்ணாவைக் கொண்டு சித்தப்பாவுடன் பேசுங்க... சித்தப்பாவும் ஆறுமணிக்கு வந்திடுவார், நீங்களும் பேசலாம்...''

''நல்ல யோசனை... அதற்குள்ளாக என் பரிசுகளைத் தந்து விடுகிறேன்...''

www.padippakam.com



''அதெல்லாம் இப்ப வேண்டாம்...''

''கிஸ்ஸெஸ் என்று பயந்துவிட்டாயா? சிங்கப்பூரி லிருந்து என் காதலிக்காக வாங்கி வந்தவை...''

தன் கைப்பெட்டியைத் திறந்து சேலைகள், நைட்டிகள், சீக்கோவாச், சென்ட் முதலியன கொண்ட பார்சலை எடுத்து அவளிடம் நீட்டினான். 'தாங்யூ' என்று கூறிப் பெருமை யோடு அவற்றைப் பெற்றபோது அவளது இரு கரங்களை யும் ஒருதடவை பிடித்தான். ஒருகணம் மின்சாரம் பாய்ச்சி யதுபோல அவன் தன் உடலில் உணர்ந்தான். அவள் உணர்ச்சிபெற்று, சிரித்தாள்.

''இதற்காக எனக்கு என்ன பரிசு தரப் போறீங்க...''

''இப்ப இல்லை பிறகு... அம்மா பலகாரம் சுட்டு தந்தா...''

''பரவாயில்லையே. ஊர்ப்பலகாரம் சாப்பிட்டுப் பலகாலம். இவற்றை வைத்துவிட்டு எடுத்து வாங்க...''

சுசீலா உள்ளே சென்று அவற்றை வைத்து விட்டு பலகாரப் பார்சலுடன் அண்ணன் அனுப்பிய சேட் சூட்லெங்த் பார்சலையும் எடுத்து வந்து கொடுத்தாள்.

''தாங்யு, என்ன இது''

''என் பரிசு, ஜெர்மனியிலிருந்து அண்ணன் அனுப் பியது...''

'தாங்யு' சொல்லி அப்பார்சல்களை தன் பெட்டியில் வைத்துக் கொண்டான்.

சித்தப்பா வந்ததும் சின்னம்மாவும் சேர்ந்து கொண் டார். யாழ் நெருக்கடி பற்றி எல்லாம் பேசிய பின் சித்தப்பா சொன்னார்:

''நீங்க எதிர்பாராமல் இரண்டு மாதத்திற்கு மேலாக காத்திருக்க வேண்டி வந்து விட்டது. மிஸ்டர் அண்ணா மலையிடம் உங்கள் முடிவைச் சொல்லுங்க.'' மேலும் தொடர்ந்தார்.

www.padippakam.com



''நான் பின்னர் அவரோடு பேசி மற்றவற்றை ஏற்பாடு செய்யலாம். என் அண்ணாவின் வருகை பற்றிக் காத்திருக்க வேண்டியதில்லை. உங்கள் வசதியே முக்கியம்.''

''சரியுங்க''

நாளை மாலை நாலரை வரையில் மீண்டும் வருவதாகக் கூறி குமரேசன் விடை பெற்றான்.

''அந்தத்தோழி கமலா வந்தாலோ, போன் செய்து விலாசம் தந்தாலோ என் நன்றியையும் சொல்லவும். வசதி கிட்டினால் நேரிலும் போய் பார்த்து நன்றி சொல்லலாம்...''

வாயில் கேட்வரை இருவரும் மட்டும் வந்தபோது குமரேசன் சொன்னான்.

''கொஞ்சம் பொறுங்கள். அவள் உங்களுக்கென ஒரு பரிசு தந்தாள். எடுத்து வருகிறேன்.''

சுசீலா அறைக்குள் ஓடினாள். நியூஸ் பேப்பரில் சுற்றி யிருந்ததை அப்படியே ஒருநீளக் கடித உறையில் போட் டிருந்தாள். அதை எடுத்து வந்து கையில் கொடுத்தாள்.

சுற்றவரப் பார்த்துவிட்டு விடை பெறுவதாக அவளது கையைப் பிடித்துக் குலுக்கினான்.

''கவர் ஒட்டாமல் இருக்கிறதே. இப்பொழுதே உடைக் கட்டா.''

''வேணாம், வீட்டுக்குச் சென்று உடையுங்க''

சுசீலா உள்ளே திடும்பியதும் சின்னம்மா கேட்டார்:

''மாப்பிளை பிடித்ததா?''

''சின்னம்மா, நீங்க சொன்னபடியே இருந்தார்''

போட்டோ படத்தில் பார்த்ததைவிட வயது கூடியது போல உணர்ந்ததை அவள் வெளியே காட்டவில்லை. சில வருடங்களின் முன்னர் எடுத்த படமாயிருக்கலாம். படத்தில்

www.padippakam.com



பிசை இருக்கவில்லை. தற்போது வளர்த்திருந்தார். அது அவளுக்குப் பிடிக்கவில்லை.

## 21

சுசீலாவின் திடீர் வரவு பற்றியும் தான் கண்டு பேசியதுடன் யாழ் நிலைமைகள் பற்றி அவள் மூலம்தான் அறிந்ததைக் கூறுவதற்காகக் குமரேசன் மறுநாட்காலையில் வேலாயுதத்திடம் சென்றான்.

மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னான். வேலாயுதமும் பார்த்திபனும் கேலி பேசினர்.

''பரவாயில்லையே இங்கு வந்தாயே. இனிமேல் எங்கே உன்னைக் காணப் போகிறோம். எப்படியும் கலியாணத்திற்கு அழைப்பாய் தானே''

வேலாயுதம் சொல்லிவிட்டு யாழ் நிலைமைபற்றிக் கேட்டான்.

வீட்டுக்கு இரண்டு சவரின் தங்கம் வழங்குவது, ஷெல் அடி, பம்பர்களின் கெடுபிடி, பதுங்கு குழிகள் பற்றிய செய்திகளையெல்லாம் சொன்னான். அங்கிருந்து கொழும்புக்கு வர அனுமதிச்சீட்டுப் பெறுவதிலுள்ள சிரமம், அங்குள்ள கியூ வரிசை, வவனியா வரையுள்ள பிரயாணக் கஷ்டம், விடுதலைப் புலிகள், அரசு கடவைகள், பிரயாணச் செலவு பற்றியெல்லாம் விபரமாகக் கூறினான். பண்டங்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் பற்றியும் சுசீலா கூறியவற்றைத் தெரிவித்தான்.

அனுமதிச் சீட்டு மறுத்து, 'மாப்பிளை ஏன் யாழ்ப்பாணம் வரக்கூடாது' என்று அவர்கள் கேட்ட விபரத்தையும் சொன்னான்.

படிப்பகம்

www.padippakam.com



''தர்க்க ரீதியான கேள்வியே'' என வேலாயுதம் சொன்னான்.

சுசீலா வந்து சேர்வதற்கு விமலா என்ற கிராமப் பெண் அனுமதிச் சீட்டுப்பெற்று உதவியது, கமலா என்ற பெண் துணையாக வந்த விபரத்தையும் கூறினாள்.

''அந்தக் கமலா என்ற பெண் திருமண அன்பளிப்பு என சுசீலா மூலம் தந்த மண் இரவு பூராவும் என் மனதை உறுத்தி விட்டது.''

குமரேசனின் குரலில் அவனை அறியாத உணர்ச்சியின் சிதறல்.

''நிலப்பிரபுத்துவத்தின் சின்னம் மண்தானே. பின்னர் முதலாளித்துவ வளர்ச்சியிலே தேசம், தேசியம் என்ற எண்ணங்கள் உருவாகின்றன. தேசியத்திற்கு பொருளா தாரம், மொழி, மதம், பண்பாடு போன்றவையும் துணைபுரி கின்றன.''

பார்த்திபன் விளக்கம் கூறினான்.

''கனடாவிலிருந்து வந்து பிறந்து, வளர்ந்த மண்ணை மிதிக்காமல் போகிறாய். நாம் உயிர் தந்து போராடும் மண்ணை மறந்துவிடாதே என அந்தப் பெண் உனக்கு நினைவூட்டுகிறாள்.''

வேலாயுதம் தன் விளக்கத்தைச் சொன்னான்.

''சிங்களவரது தேசிய உணர்வின் பாதிப்பே தமிழரது எழுச்சிக்கும் துணை புரிந்தது என்று கூறலாம். சென்ற நூற்றாண்டுக் கடைசிக் காலகட்டத்தில் அனகாரிய தர்ம பாலா, ஒல்கொட் போன்றவர் கிறிஸ்தவ மதத்தை எதிர்த்து புத்த மத எழுச்சிக்கு வித்திட்டனர்; பின்னர் 1915 வரையில் முஸ்லிம் வியாபாரிகளின் ஆதிக்கத்தை எதிர்த்து சிங்களவர் கலகம் செய்தனர். 1930 களில் சிங்களவர்களுக்கு வேலை வேண்டி மலையாளிகளை நாட்டைவிட்டு விரட்டினர்.

www.padippakam.com



1948ல் இந்திய மலையகத் தமிழர்களை நாடற்றவராக்கி ஒதுக்கினர்...''

''இவற்றை வகுப்புவாதம் என ஏன் சொல்லக்கூடாது?'

பார்த்திபன் கூற்றை வேலாயுதம் இடைநிறுத்திக் கேட்டான்.

''சிங்கள மக்களின் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பை ஆங்காங்கே காணலாம். கிறிஸ்த மதத்தவர் அரசாங்க வேலைகள், கண்டிராக்குகள் பெறுவதை, ஆரம்பத்தில் எதிர்த்தனர்; முதலாவது யுத்த காலத்தில் முஸ்லிம் வியாபாரிகளின் சுரண்டலைக் கண்டித்தனர். 1929ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார அமுக்கத்தின் தாக்கத்தால் மலையாளிகளை விரட்டிய பின்னர் இந்திய மலையகத் தமிழர்கள் நிரந்தர வேலை பெற்று தேயிலை, றப்பர் தோட்டங்களில் வாழுவது மட்டுமல்ல அரசியலுரிமை பெற்று 1947 தேர்தலில் சிங்களப் பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்துவதையும் எதிர்த்தனர்... மேலும் 1950ல் கொரிய யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதார ஏற்றம் 1953 வரையில் வீழ்ச்சியடைந்ததும் இலங்கைத் தமிழர் மேல் அவர்களது தேசியம்' சிங்களம் மட்டும் அரச மொழி' என்ற போர்வையில் பாய்ந்தது. இதுவே இலங்கையில் சிங்கள தேசிய வளர்ச்சியின் வரலாற்றில் ஒருபகுதி. குமாரி ஜயவர்த்தனாவின் 'இனவர்க்க முரண்பாடுகள்' என்ற நூலைப் படித்துப் பாருங்கள் நன்கு புரியும்...''

''சரி சரி தமிழர்களின் தேசியத்தின் வளர்ச்சியையும் உங்க கண்ணோட்டத்தில் சொல்லி விடுங்களேன்.''

குமரேசன் புதுமையாகக் கேட்ட கருத்துகளை மேலும் அறியும் ஆர்வத்தோடு கேட்டான்.

''சென்ற நூற்றாண்டுக் கடைசிப் பகுதியில் கிறிஸ்தவத்திற்கு எதிராகப் பௌத்தமத எழுச்சி ஏற்பட்டது போல ஆறுமுக நாவலர் போன்றோரின் பிரச்சாரம் மூலம் சைவ சமய

www.padippakam.com



எழுச்சியும் அதைத் தொடர்ந்து சைவப் பாடசாலைகளின் பரவலான தோற்றமும் ஏற்பட்டன. 1948ல் சுதந்திரம் கிட்டும் வரை சிங்களவரோடு இணைந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தமிழரும் எதிர்த்தனர். இது முற்போக்கான தேசீயம். பின்னர் தமிழர்கள் தமது மொழிக்குச் சமஉரிமை வேண்டினர். அதுமறுக்கப்பட்டதும்சுதந்திரத்தின்பின்சமஷ்டி அரசியலாட்சி கேட்ட தமிழர் 1970களில் தனிநாடு கேட்கத் தொடங்கினர். இவற்றை ஒரு வரலாற்றுப் போக்கோடு பார்க்கலாம்''

''நீங்க கூறுவது சரிதான். இந்த நிலைமையை மாற்றியிருக்க முடியாதா?''

குமரேசனே கேட்டான்.

''இடது சாரிகளின் வளர்ச்சியோடு நிட்சயமாக மாற்றியிருக்கலாம். 1930களின் பின்னர் தோன்றி அரசியல் கட்சிகளாகத் தொழிலாளி வர்க்கத்தையும் இணைத்து வளர்ச்சியடைந்த லங்கா சமசமாஜிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட்டு கட்சிகள் அனைத்து சமூகங்களின் ஒற்றுமையோடு இணைந்தன. 1948-49ல் மலையகத் தொழிலாளரை நாடற்றவராக்கும் சட்டங்களைச் சிங்களப் பேரினவாதிகள் கொண்டுவந்தபோது இடதுசாரிக் கட்சிகள் எதிர்த்தன.''

''சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று வாதாடி 1956ல் சிங்களம் மட்டுமே அரச மொழி என்ற சட்டம் கொண்டுவந்த போதும் இடதுசாரிக்கட்சிகளெல்லாம் முழுமூச்சாக எதிர்த்ததையும் அறிவோம்.''

வேலாயுதம் இடையிட்டுக் கூறிவிட்டு தேநீர் தயாரிக்க எலெக்டிக் கேத்திலில் நீரூற்றி வைத்தான்.

''ஆமாம், முழுமூச்சாக எதிர்த்தார்கள். கொல்வின் ஆர்டி சில்வா பாராளுமன்றத்தில் பேசும்போது, 'சிங்கள மொழியை தமிழர்கள் மேல் திணித்தால் ஒரு சிறிய நாட்டில்

www.padippakam.com



இரத்தம் பெருகும் இரண்டு சிறிய அரசுகள் தோன்றும்' என்று அச்சுறுத்தி ஆருடம் பேசினார். வேடிக்கை என்ன வென்றால் இதே கொல்வின் ஆர்.டி.சில்வாவே சிறிமாவோ ஆட்சியுடன் இணைந்து 1972ல் புதிய அரசியலமைப்பைத் தயாரித்தார்; சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி, வடக்கு கிழக்கில் மட்டும் தமிழில் கருமங்கள் ஆற்றலாம் என்றசலுகை யுடன் ஆக்கினார். தமிழ் மக்கள் அதை ஏற்கத் தயாராக இல்லை. இரத்தப் பெருக்கு பின்னர் தொடங்கி இன்றுவரை நின்றதாக இல்லை...''

''இரண்டு ஆட்சி மொழியானால் ஒரு தேசம்; ஒருமொழி யானால் இரண்டு தேசம் என்றும் ஒரு இடதுசாரி அங்கத் தவர் பாராளுமன்றத்தில் பேசினாராம்.''

வேலாயுதம் நினைவூட்டினான்.

''எப்போது இடதுசாரிகள் சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்பதை ஏற்று கொள்கை மாறினர்''

குமரேசன் கேட்டான்,

''1964-ல் சுதந்திரக் கட்சியோடு இணைந்து ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தபோது இடதுசாரிகள் தமது புரட்சி அரசி யலை, சோஷலிச நோக்கை விட்டுவிட்டனர்.''

''எப்படிப் புரட்சிகர அரசியலை விட்டுவிட்டனர் என்று சொல்லுவீர்கள்.''

குமரேசனே தொடர்ந்து வினவினான்.

''புரட்சி பேசும்போது சோஷலிசமே கோட்பாடா யிருந்தது. சுதந்திரக் கட்சி சிங்கள தேசிய முதலாளிகளின் கட்சி. அக்கட்சியுடன் இணையும்போதுசோஷலிசத்தைவிட்டு தேசியமே அவர்களது கோட்பாடாகிறது. நான் முன்னரும் சொன்னேனே தொழிலாளி, விவசாயிகளின் புரட்சிகரக் கோட்பாடு சோஷலிசம். தேசிய முதலாளிகளின் கோட்பாடு தேசீயம். தேசியம் என்பது பொருளாதாரம், நிலம், மொழி,

www.padippakam.com



மதம் ஆகியவற்றை முன்வைத்து ஒரு தேசத்தின் எல்லையை தமது பண்டங்களை விற்கவும்சுரண்டலுக்காகவும்அமைத்துக் கொள்வது. வெள்ளையருக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தின்போது தேசியக்குரல் முற்போக்கானது. மற்றொரு தேசிய இனத்தை அடக்கி ஒடுக்கி பேரினவாதம் பேசுவது பிற்போக்கானது.''

பார்த்திபன் மேலும் விளக்கிச் சொன்னான். புதிய விளக்கம் கேட்டு மயக்கம் தெளிவதாக இருவரும் உணர்ந்தனர்.

வேலாயுதம் மூன்று கிளாஸ்களில் தேநீரை வடித்து எடுத்து வந்தாள்.

''1970 தொடக்கம் 1975 வரையும் கூட இடதுசாரிகளின் கூட்டரசாங்கமே நடைபெற்றது.''

வேலாயுதம் நினைவூட்டினான்.

''ஆமாம். முற்றுமுழுதாக சிங்கள தேசீயத்தை இடதுசாரிகள் ஏற்றுக் கொண்டனர். 1977-ல் ஆட்சி அதிகாரம் பெற்ற ஐக்கிய தேசீயக் கட்சி இடதுசாரிகளை முற்றுமுழுதாக முறியடித்து உலக வங்கிக்கடனுடன், திறந்த பொருளாதாரத்துடன் தேசீய பாஸிஸ ஆட்சியை நிறுவியது. 1980 யூலையில் தொழிற்சங்க உரிமைகளையெல்லாம் முறியடித்து பின்னர் தமிழர்களுக்கு எதிரான நேரடி யுத்தத்தை ஆரம்பித்தது. தமது சிங்கள பௌத்த நாடு எனக்கூறி தமிழர்கள் அந்நியர்கள் என அவர்கள் மேல் குண்டு பொழிகின்றனர்.''

''தமிழர்களும் சோஷியலிசப் பாதையைவிட்டு தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர் எனவும் சொல்லலாம்தானே....''

வேலாயுதம் சொன்னான்.

''ஆமாம். சிங்கள பேரினவாத தேசீயத்திற்கு எதிரான தமிழரது தேசீய விடுதலைப் போராட்டமே இன்று நடை

www.padippakam.com



பெறுகிறது. புரட்சிகர சோஷலிசக் கோட்பாடுகள் எல்லாம் கைவிடப்பட்டுவிட்டன.''

பார்த்திபன் பதிலளித்தான்.

''போராளிக் குழுக்களிடையே சோஷலிசக் கோட்பாடுகள் முன்வைக்கப்படவில்லை என்று சொல்லுகிறீர்களா?''

குமரேசன் கேட்டான்.

''வெறும் பாஷனாகவே வைக்கப்பட்டது. தொழிலாளி விவசாயி வர்க்கம் தலைமை தாங்கிப் போராடும்போதே சோஷலிசப் புரட்சி குறிக்கோளாக இருக்கும். இங்கே தமிழ் தேசீய முதலாளிகள் தலைமைகூட இன்றி அரசியலாதிக்கம் பெற குட்டி முதலாளி வர்க்கத்தவர் போராடுகிறார்கள். அப்போது சோஷலிசத்தை அடுத்த கட்டமாகவேஎதிர்பார்க்க முடியும்...''

பார்த்திபன் தமிழர்களது போராட்ட நிலைமையை விளக்கினான்.

''தேசீய விடுதலைப் போராட்டம் என்பது எல்லா வர்க்கங்களும் இணைந்த போராட்டம் என்றே கூறப்படும். தமிழர்களில் எல்லா வர்க்கங்களும் ஒன்றிணையவில்லையா?''

வேலாயுதம் தன் சந்தேகத்தை முன் வைத்தான்.

''ஆமாம். தமிழ் தொழிலாளி, விவசாயிகளும் தேசீய முதலாளிகள் கூட தலைமை தாங்க இல்லாததால் குட்டி முதலாளிகளின் தலைமையை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்க நேரிட்டுள்ளது.''

''இங்கே சிங்களப் பேரினவாதம் தமிழர்களை வன்முறையால் ஒடுக்கும் தேசீய பாஸிஸம் என்றால் வடக்கே தமிழர்களது இன்றைய போராட்ட நிலையை எப்படிக் கூறுவது...?''

www.padippakam.com



வேலாயுதமே விளக்கம் கேட்டான்.

''வடக்கே அரசு இன்னும் அமைக்கப்படவில்லை. சிங்கள தேசிய பாஸிஸத்திற்கு எதிரான நடவடிக்கைகளே நடைபெறும். குமரேசன் கூறும் செய்திகளின்படி அங்கும் மக்கள் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம். இங்குள்ளது போன்ற தேசிய பாஸிஸ நிலைமை ஏற்படலாம்...''

பார்த்திபனின் புதிய விளக்கங்களைக் கேட்டு ஓரளவு தெளிவு பெற்ற நிலையில், மேலும் சிந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வேலாயுதம் பேச்சை மாற்றினான்.

''இந்தப் போராட்டங்களிடையே குமரேசனின் காதல் போராட்டம் வேறு... பிரச்சனைகளிலிருந்து தப்பி ஓடும் முயற்சி...''

''தேசிய பாஸிஸத்தை எதிர்த்துப் போராடச் சக்தியில்லா நிலையில் உயிரைக் காப்பாற்ற ஒரு பகுதி குட்டி பூர்ஷ்வாக்கள் ஓடவே செய்வார்கள்.''

வேலாயுதத்திற்குப் பார்த்திபன் பதில் சொன்னான். குமரேசனை மறைமுகமாகக் கண்டிப்பதாகவே பதில் இருந்தது.

குமரேசனும் தன் இயலாமையை எண்ணி மௌனமாக இருந்தான்.

''எங்கே ஓடினாலும் பிறந்த மண்ணின் பிடிப்பை விட்டு விடமுடியாது. அது என் அனுபவம்...''

வேலாயுதம் கனடா சென்று திரும்பிய தன் அனுபவத்தை முன் வைத்துச் சொன்னான்.

''குமரேசனுக்கும் அதை நினைவூட்டவே அந்தப் பெண் தமிழ் ஈழ மண்ணைப் பரிசாகக் கொடுத்தாள். அந்தப் பெண்ணைச் சாதாரண பெண்ணாக நான் கருதவில்லை...''

www.padippakam.com



பார்த்திபன் தன் கருத்தைக் கூறினான்.

கலியாண ஏற்பாடுகள் முடிவானதும் மீண்டும் வந்து அழைப்பதாகக் கூறி குமரேசன் விடைபெற்றான். சோஷ லிசம், தேசீயம் ஆகிய இரண்டிற்குமுள்ள புதிய விளக்கத்தை யம் தேசியம் எப்படிப் பிற்போக்காக மாறி பாட்டாளியின் சோஷலிசப் போராட்டங்களை மழுங்கடித்து விடலாம் என் பதையும் எண்ணி இலங்கை அரசியலுடன் இணைத்தும் பார்த்த சிந்தனையுடன் சென்றான். கமலாவும் ஒருபிடி மண்ணும் அவனது சிந்தனையில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தன.

## 22

சுசீலாவுக்கு இரவு நல்ல தூக்கம் வரவில்லை. குமரேச னைக் கண்ட குதூகலம் ஒருபுறம். சில நாட்களில் திருமணம் பற்றிப் பேசி முடிவு செய்யப் போகிறது பற்றிய பதட்டம் மறுபுறமாகக் கட்டிலில் புரண்டாள். எதிர்காலம் பற்றிய கற்பனைகள் வேறு மனதைக் குழப்பிக் கொண்டிருந்தன. அப்பா அம்மாவின் நினைவு வேறு. நல்ல சுபவேளையில் அவர்கள் இல்லாமல் போவது என்பதை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

திடீரெனத் திருமணம் முடிந்து குமரேசன் கனடாவுக்குச் சென்றால் விஸா பெற மீண்டும் பலமாதங்கள் காத்திருக்க வேண்டும். மீண்டும் யாழ் நகர், பிரயாணப் பிரச்சனைகள், பதட்டமான அரசியல்; அப்பா அம்மாவின் எதிர்காலம் பற்றிய நினைவுகள் வேறு மனதைக் குழப்பின.

குமரேசனின் அன்பளிப்புச் சேலைகளைச் சின்னம்மா விடம் காட்டியிருந்தாள். அவருக்கும் பிடித்திருந்தது. அத்த கைய சேலைகள் கொழும்பில் கிடைப்பது அரிது. பட்டு டையைவிட அத்தகைய சேலைகளையே அவள் விரும்பி னாள். அதில் ஒரு சேலையை மறுநாள் குமரேசனுக்கு உடுத்திக் காட்டவேண்டும் என்றும் எண்ணிக் கொண்டாள்.

www.padippakam.com



அதிகாலையில் குமரேசன் போன் செய்வான் என சுசீலா எதிர்பார்க்கவில்லை. கனவில் டெலிபோன் மணி ஒலிப்பது போன்ற ஓசை எனக் கேட்டு அருண்டாள். மணி அடித்தது.

''என்ன சுசீ தூக்கத்தைக் குழம்பிப் போட்டேனா''

''இன்றென்ன எத்தனையோ மாதங்களாகி விட்டது.''

''கண்ணதாசனின் தாலாட்டுப் பாட்டுச் சரிபோலத்தான் தெரிகிறது. என் தூக்கமும் கெட்டுப் போய்ச்சே.''

சுசீலா சிரித்தாள். அதன் ஒலி குமரேசனுக்கும் கேட்டது போலிருந்தது.

''என்ன சிரிப்பா, உங்க பயணத் தோழி கமலாவின் பரிசுதான் என்னைக் கலக்கிவிட்டது. சிந்திக்க வைத்து விட்டது.''

''பெரும்பாலோருக்கு வராத உணர்வு உங்களுக்கு வந்ததற்குப் பாராட்டுகள். வெறும் மண்தான் என வீசியிருப்பீர்களோ என எண்ணினேன்.''

''கனடாவுக்கே கொண்டு போகப் போகிறேன்.''

குமரேசனின் குரலில் உறுதியான உணர்ச்சி தொனித்தது.

''அப்படியானால் அடுத்த தடவை நானும் கிலோ கணக்கில் எடுத்து வருவேனே.''

சுசீலா சிரித்தபடி சொன்னாள்.

''அண்ணாவிடம் என் முடிவையும் ஏற்பாடுகளையும் சொல்லிவிட்டேன். அவர் சித்தப்பாவை நேரில் பார்த்து அல்லது அழைத்து யாவும் முடிவு செய்வார்.''

''என்ன முடிவு...''

''மாலையில் சொல்லுகிறேனே... அவர்கள் பேசி முடித்தபின் நாம பீச், சினிமா. ஓட்டல் எனச் சுற்றலாம்...''

www.padippakam.com



''இதெல்லாம் அவசியமா?...''

''அதுதான் காதலின் மிக முக்கியமான இன்ப நாளாக இருக்கும் என என் நண்பர்கள் சொல்லுவார்கள்...தற்போது தூக்கமே கெடுகிறதே.''

''சினிமாத் தாக்கமாயிருக்கலாம். பூந்தோட்டத்தில் ஆடிஓடிப் பாடும் காட்சிகளை இன்னும்நீங்க மறக்கவில்லைப் போலும்...''

''கலியாணத்தின் பின் அவை நடப்பதில்லையே. மாலையில் பார்க்கிறேனே....''

''ம் ம் ...'' சுசீலா போனை வைத்தாள்.

சுசீலா வெளியே குமரேசனோடு சுற்றித் திரிய விரும்ப வில்லை. எங்காவது இளங்கோவைப் பார்க்க நேர்ந்து விடுமோ என்ற அச்சம் வேறு. அவனைப் பார்க்க நேர்ந்தால் கட்டாயம் அழ நேர்ந்துவிடும்; அதனால் பின்னர் குடும்பத் தில் வீண் பொய், விளக்கங்கள் கூற நேரும். அவற்றைத் தவிர்க்கவே விரும்பினாள்.

காலைக்கடன் முடித்து சின்னம்மா தயாரித்த இடியப்பத் தைச் சொதியுடன் சாப்பிட்டாள். சித்தப்பாவும் சாப்பிட்ட பின்னர் வெளியே போய் விட்டார்.

சின்னம்மாவுக்குச் சமையலுக்கு உதவுவதாக மேசையில் உட்கார்ந்தபடியே காய்கள், வெங்காயம் வெட்டிக் கொண் டிருந்தாள்.

''உன் சித்தப்பா உனக்குச் சொல்ல வேண்டாம் என்று ஒரு விஷயம் சொன்னவர். உனக்குச் சொல்லுகிறேன். அவரிடம் எதுவும் கேசிவிடாதே.''

''சரி சின்னம்மா. நான் சொல்ல மாட்டேன், சொல் லுங்க.''

நம்பிக்கையான வார்த்தை.

படிப்பகம்

www.padippakam.com



''இந்திரன் என எங்க ஊர் பையன் ஒருவன் இங்கே வந்திருந்தான். இங்கே இளங்கோவுடன் தங்கியிருக்கிறா னாம். உனக்கு கலியாணம் முற்றாகிவிட்டதா என்று கேட்டான். இவர் ஓம் என்று கூறி குமரேசன் கனடாவி லிருந்து வந்திருப்பதையும் சொன்னார்...''

''ஆமாம் எனக்குத் தெரிந்தவர்தான்...''

சுசீலா சமாளித்தபோதும் அவளது மனம் ஒரு கணம் அதிரவே செய்தது. கரங்கள் நடுங்கின.

''இவர் ஏன் விசாரிக்கிறீர்கள் எனக்கேட்டார். சுசீலா வுக்குத் தெரிந்த ஒரு பையனைப் பேசலாமோ என்பதற்கே கேட்டேன். பரவாயில்லை. முடிவாகிவிட்டால் விட்டுவிடு வோம். நான் வந்து விசாரித்ததாகச் சுசீலாவிடம் சொல்ல வேண்டியதில்லை என்றார்''

வெங்காயம் வெட்டிக் கண்ணீர் அரும்பியதால் பார்வை குறைந்து இடது பெருவிரலை கத்தி வெட்டி விட்டது என்று சின்னம்மாவிற்குச் சாட்டுக் கூறியபடியே விரலை வாயில் வைத்து இரத்தத்தை உறுஞ்சியபடி சென்று சமையற்கட்டு பைப்பில் விரலைக்கழுவி இரத்த ஓட்டத்தை நிறுத்தினாள்.

சின்னம்மா பதட்டத்தோடு ஸ்டிக்கிங்பிளாஸ்டர் ஒன்றை எடுத்துவந்து சுசீலாவின் பெருவிரலில் சுற்றிவிட்டாள்.

''நான் சமையலைப் பார்க்கிறேன். நீ ஓய்வெடு. மாப் பிளையை மாலையில் பார்க்கும்போது நாளைக்கு டின்ன ருக்கு வரும்படி கேள். நாமும் விருந்துவைத்து மரியாதை காட்டவேண்டுமல்லவா...''

''சரி சின்னம்மா...''

சின்னம்மா இளங்கோ பற்றிய அந்தச் செய்தியைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை எனவே சுசீலா எண்ணிக் கொண்டாள். 'துணிச்சலில்லாதவர்கள்' என இளங்கோவை



படிப்பகம்

www.padippakam.com



யும் இந்திரனையும் மனதில் வைத்தான். அதே வேளை ஓரளவு அமைதி பெற்ற மனம் மீண்டும் கலங்கத் தொடங்கியது. கட்டிலில் சென்று புரண்டாள். இதயம் அடித்துக் கொண்டது.

கைப்புண் வேறு மறந்ததை நினைவூட்டப் போகிறதே எனவும் மனம் நொந்தது. நெஞ்சுவடு கைப்புண்ணாக வந்து விட்டது. இவ்வேளை ஏனிந்த வேதனை. எல்லாம் உடைந்து விடுமா, மனம் கிலேசமடைந்தது.

சகுந்தலா போல ஒரு தோழி இவ்வேளை இல்லாத வெறுமையையும் அவ்வேளை உணர்ந்தாள். அவளே மனக் காயங்களை ஆற்றக் கூடிய நல்ல தோழி என எண்ணிக் கொண்டாள். அவளுக்கும் வீட்டுக்கும் கடிதம் எழுதவேண்டும் என எண்ணிக் கொண்டாள். யாழ். செல்பவர் மூலம் சித்தப்பா அனுப்பி விடுவார். அவரே சொல்லியிருந்தார்.

நண்பகல் சித்தப்பா வந்து சேரவில்லை. சின்னம்மாவும் சுசீலாவுமாகச் சாப்பிட்டனர். மாலையில் குமரேசன் தந்த எந்தச் சேலையை உடுத்தலாம் எனவும் மனம் ஊசலாடியது. 'பிளொஸ்' வேறு 'மாச்' பண்ணவேண்டும். தற்போது ஓரளவு 'மாச்' பண்ணுவதாக உள்ளதை உடுப்போம் என எண்ணினாள். சேலைக்கேற்ற ஜாக்கெட்டை விட்டு ஜாக் கெட்டுக்கேற்ற சேலை; மனதில் சிரித்தாள். புதிய நினைவு பழையதை மீறியது. மனம்தான் எத்தனை விசித்திர மானது.

எப்படியும் முதல் வாய்ப்புக் கிடைத்ததும் குமரேசனோடு போய் ஷொப்பிங் செய்ய வேண்டும்; சேலைக்கேற்ற 'பிளொஸ்' வாங்குவது அவர் பொறுப்புத்தானே. இந்த ஆம்பிளைகளுக்கு இது தெரியாது. மனதில் எண்ணிக் கொண்டாள்..

ஆண்களைப் பற்றி உடைகள் உட்பட அறிந்திருக்கும் அளவிற்கு பெண்களைப் பற்றி ஆண்கள் அறிவதில்லை..

www.padippakam.com



அறியவும் முயல்வதில்லை. வீண்செலவாளர்கள், பொறாமை பிடித்தவர்கள், நாய் போல பெண்களே தம்மினத்தவரிடை சண்டை பிடிப்பார்கள் என்று மட்டும் மேலெழுந்த வாரியாகப் பேசுவார்கள். சுசீலா மனம் எண்ணியது.

சாப்பிட்டு முடிந்து கைகழுவியதும் டெலிபோன் மணி அடித்தது. குமரேசன் மீண்டும் ஏன் போன் செய்யவேண்டும் என்ற நினைவோடு போனை எடுத்தாள்.

''சுசீலாவா'' புதியகுரல், இளங்கோவா?

''ம்ம்'' அவளது நடுங்கியகுரல்.

''நேற்று நானே உங்க வீட்டுக்கு வந்து கமலாவை அழைத்துச் சென்றேன். அவளைப் பொலிசார் கொண்டு போய் விட்டார்கள். உங்களிடம் சொல்லச் சொன்னாள்''

''ஏன் ஏன்?...''

டெலிபோன் மறுபுறத்தில் வெட்டப்பட்ட ஒலி.

தாங்க முடியாத அதிர்ச்சியில் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

சின்னம்மா வந்து என்ன நடந்தது என்று கேட்டதும் கமலா பற்றிய செய்தியைச் சொன்னாள்.

''பாஸ்போட் எடுப்பதற்காக வந்தாள். அவளது அண்ணனோ தம்பியோ பிரான்ஸில் இருக்கிறார்கள்''

''உரிய பத்திரங்கள் இல்லாமல் லஞ்சம் கொடுத்து பாஸ் போட் எடுக்க முயன்ற வேளையில் சி.ஐ.டியில் மாட்டுப் பட்டிருக்கலாம். இப்போதெல்லாம் கள்ளப் பாஸ்போட், விசா எடுப்பதில் ஏமாற்றப்படுபவர்தானே அதிகமாக இருக் கிறார்கள்''

சின்னம்மா அங்குள்ள நடைமுறையைச் சொன்னாள்.

www.padippakam.com



சின்னம்மா கூறுவது சரிபோலவே தெரிந்தது. பத்திரி கையில் அடிக்கடி பாஸ்போட், விசா பற்றிய செய்திகள் வந்து கொண்டிருப்பதை சுசீலாவுக்குத் தெரியும். வெளிநாடு செல்ல முயன்று யாட்டுப் படுபவர் பற்றிப் பலரும் பேசுவதும் நினைவில் வந்தது.

சின்னம்மா சுசீலாவிடம் கேட்டாள்.

''பாவம் அந்தப்பிள்ளை. உன்னைக் கனடாவிற்கு மாப்பிளை எப்படி அழைக்கப் போகிறாராம். ஏஜென்ஸி மூலமா கனடியன் விஸா பெற்றா... ஏஜென்சி மூலமானால் சில வேளை இந்தப் பெண் போல ஆபத்தே.''

''இன்னும் அதுபற்றி முடிவு செய்யவில்லை. கலியாண றியிஸ்டேசன் முடிந்ததும் மிஸ்ஸிஸ் என்று போட்டு பாஸ் போட் எடுக்கச் சொன்னார். போட்டோ, பேர்த் சேர்டிபிக் கெட் எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன்...''

''சில மாதம் பிந்தினாலும் விஸா எடுத்துப் போவது தான் நல்லது. அல்லது இதுபோல பிரச்சனை ஏதாவது வரலாம். அதுபோக வீணாக லட்சக் கணக்கில் பணம் செலவாகும். ஏஜென்சிகள் ஏமாற்றியும் விடலாம்''

''எனக்கும் தெரியும் சின்னம்மா. அதுபற்றி இன்னும் அவரோடு பேசவில்லை''

சின்னம்மாவின் ஆலோசனையை ஒப்புக் கொள்வது போலக் காட்டியபோதும் தாமதமில்லாமல் திருமணம் முடிந்ததும் திருட்டுத் தனமாக ஏஜென்ஸி மூலம் செல்வதையே அவளும் விரும்பினாள். அங்கிருந்தால்... எதிர் பாராமல் இளங்கோவைக் காண நேரிட்டால், நிமிர்ந்து பேச முடியாது. சின்னம்மாவின் கூற்றுவேறு மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

பெரியதுன்பம் சிறிய கவலைகளை அடித்துச் செல்வது போல இளங்கோவன் நினைவைவிட கமலாவின் செய்தியே

www.padippakam.com



மேலோங்கி நின்றது. சிந்தனையில் கழுத்து, கைகளில் வியர்வை அரும்பியது. செய்தி சொன்னவனும் விலாசம், டெலிபோன் நம்பர்கூடச் சொல்லாமல் டெலிபோனை வைத்ததும் ஏமாற்றமே.

எதற்காகப் பொலிஸார் கைது செய்த செய்தியை எனக்குத் தெரிவிக்க வேண்டும். முதலாவது உதவி வேண்டுமென்றால் பொலிஸ் நிலையம், எந்தப் பிரிவினர் என்ற விபரம் வேண்டும். தந்தையாரின் பெயரைக்கூட கேட்டு எழுதி வைக்கவில்லை. வெறும் கமலா என்ற பெயரை வைத்துக் கொண்டு எங்கே தேடுவது? உதவி வேண்டுமென்றால் மீண்டும் தொடர்பு கொள்வாள்தானே என மனதைத் தேற்ற முயன்றாள்.

மாலையில் குமரேசனை மீண்டும் பார்க்கப் போகிறேன் என்ற நினைவினால் ஏற்பட்ட இன்பமெல்லாம் அடிபட்டுப் போய்விட்டது.

''சித்தப்பா வரட்டும் சொல்லிப் பார்க்கலாம். நீ பிள்ளை குளிச்சிட்டுச் சேலையைக் கட்டு, நேரமாகிறது...''

ஆர்வமில்லாமல் குளிப்பதற்காக எழுந்தாள். ஸவர் உடலைக் கழுவிக் கொண்டிருந்தபோதும் கமலாவின் நினைவே வந்தது. திடீரென விமலாவின் ஏற்பாடுகள், முதலாவது பஸ்ஸில் பணம் வாங்காதது, வழியில் டீ வாங்கித் தந்த பையன் ஆகிய தொடர் நிகழ்ச்சிகள் மனதில் ஓடின.

## 23

ஏதாவது அரசியல் பிரச்சனையாயிருக்குமோ எனவும் சுசீலாவின் நெஞ்சில் ஒருகணம் புதியஎண்ணம் பளிச்சிட்டது. கமலாவின் உடை, தராதரம், பேச்சுகள் சாதாரண பெண்ணின் தராதரத்திலில்லை. வசதியான குடும்பத்துப் பெண், அன்றிரவு போட்டிருந்த நைட்டியிலிருந்தே பார்க்கலாமே என எண்ணிக் கொண்டாள். எப்படியானாலும்

www.padippakam.com



எங்களுக்கும் அவர்களது அரசியலுக்கும் என்ன தொடர்பு? நாம ஏதாவது குற்றம் செய்தால்தானே கவலைப்பட வேண்டும்.

குமரேசனின் பரிசுப் பொருட்களோடு இருந்த காமி சோப்பை அப்பொழுதே உடைத்து முகர்ந்து உடலில் தடவி நுரை எழுப்பி நினைவை மாற்ற முயன்றாள். அந்த சோப் பின் நறுமணம் புதுமையான புத்துணர்ச்சி ஊட்டுவதாக உணர்ந்தாள். இன்ப நினைவுகள் சிலநேரம் கமலாவை மறக்கச் செய்தன.

பல வர்ணங்களில் அச்சிட்ட யப்பானிய நைலெக்ஸ் சேலையைத் தேர்ந்தெடுத்துச் சின்னம்மாவின் ஒப்புதலையும் பெற்றாள். தனது மற்றைய சேலைக்கான 'பிளொஸ்' அதற்கு ஓரளவு மாச் பண்ணுவதாக இருந்தது. சகுந்தலா தைத்தது. புதியது. முதல்நாள் ஒற்றைப் பின்னலாகப் போட்ட முடியை இரட்டைப் பின்னலாக மாற்றினாள்.

எதற்காக இத்தனை ஆடம்பரமெல்லாம் அவரை மயக்கவா? தற்காதலா! சோப், பவுடர் நறுமணமெல்லாம் பிறருக்கா? நாம்தானே முகர்ந்து மகிழ்கிறோம். தற்காதலின் ஒரு அம்சமா? திடீரென மனம் எண்ணியது. இவற்றைவிட்டு விடமுடியாதா? இனிய எண்ணங்கள் கூட இன்பம் தருபவையே. அதிலேதான் எல்லோரும் மிதக்க விரும்பு கிறார்கள். இது என் அனுபவம் மட்டுமா?

சின்னம்மா உடையைச் சரிபார்த்து அங்கீகரித்தாள். புதிதான 'பிறா' ஒன்றை புதிய சேலைக்காகப்போட எடுத்து அணியும்போது முதல்நாள் குமரேசனோடு பேசியது அவள் நினைவில் வந்தது.

''டெலிபோனில்' அன்று வைட்டல் ஸ்ரட்டிக்றிஸ் கேட்டீர்களே. இம்பொழுதே பார்த்து அளவெல்லாம் பிடிக்கா விட்டால் விட்டுவிடுங்கோ''

சுசீலா சிரித்தபடி சொன்னாள்.

www.padippakam.com



''கேட்டது கோபமா? நான் கேட்டதை 'வித்ரோ' பண்ணுகிறேன். அளவெல்லாம் சரியாகப் பிடித்துச் கொண் டது. சிங்கப்பூரில் உங்களது சைஸ்ஸுக்கு 'நைட்டி, பிரா' வாங்கி வருவதற்காகவே கேட்டேன். பரவாயில்லை. இங் கேயே வாங்கி விடலாம் தானே''

நயமான பேச்சு. விஷமச் சிரிப்பு. சாதுரியமான சமா தான வார்த்தைகள். ஆபாச எண்ணங்களை மூடி மறைக்கும் பேச்சு. அதை நினைத்தபோது அவளுக்குச் சிரிப்பு வந்தது. என்ன ஆண்கள்!

மனம் எத்தனை விசித்திரமானது. அதிர்ச்சி தரும் துன்பச் செய்திகளை மனம் சிறுது சிறிதாக ஆற்றிவிடுகிறது. அன்று அறிந்த இரு அதிர்ச்சியான செய்திகளும் ஓரளவு ஆறிவருவதாகத் தெரிந்தது. இருந்தாலும் இடையிடையே ஊசிபோல நெஞ்சைக் குத்திக் கொண்டிருந்தன.

குமரேசன் அக்கா வீட்டுக் காரில் வந்து அங்கு இறங்கி னான். கோடிட்ட வெள்ளை சேட். நீல பான்ட். அரையில் பெல்ட்.

சுசீலா தனது பரிசுச் சேலையை உடுத்திருப்பதைப் பார்த்துத் தன் வியப்பைத் தெரிவிப்பதாகச் சொன்னான்:

''வொண்டபுல். யு லுக் வெரி சுவீட், என் செலெக்ஸன் பரவாயில்லை....''

''சேலையையா சொல்லுறீங்க''

''உங்கடைத்தான். அடுத்ததே சேலை...''

சமாளித்துக் கொண்டான்.

''நீங்க என்னைத் திருப்திப்படுத்தப் பொய் சொல்லு றீங்க...''

''அப்படியில்லை. உண்மையே. இரட்டைப் பின்னல் கூட நல்லாயிருக்கு. எப்பொழுதும் எவர் பாராட்டினாலும் 'தாங்யு' என்று சொல்ல வேண்டும்...''

www.padippakam.com



''தாங்யு'' சுசீலா சிரித்தபடியே சொன்னாள். உள்ளூற மகிழ்ச்சி. திருப்தி.

''கனடாவில் எந்தப் பெண்ணும் புதிய உடை அணிந்து வந்தால் 'வெரி நைஸ் டிரெஸ்' என்று கண்டதும் சொல்ல வேண்டும்...''

''நீங்களும் சொல்லுவீங்களா?''

''ஆமாம் சொல்லாவிட்டால் தம்மை இன்சல்ட் பண்ணியதாக எண்ணிக் கொள்வார்கள்...''

''ஓ அந்த அடிப்படையில்தான் என் உடையையும் பார்த்துச் சொல்லுறீங்களோ''

சுசீலாவின் நளினப் பேச்சு.

''இல்லை சுசீ. அப்படியெல்லாம் சொல்லவேண்டாம். அது அவர்களது பண்பாட்டு வழக்கம். ஒருவரை முதலில் கண்டதும் 'குட்மோர்னிங்' சொல்வது போன்றது...''

''அங்குள்ள பண்பாடெல்லாம் பிடித்துக் கொண்டால் அங்கேயே ஒரு பெண்ணைப் பார்த்திருக்கலாமே...''

''அது நாம ஒட்டமுடியாத பண்பாடு. அதுதானே உங்களைத்தேடி இத்தனை தூரம் வந்து காத்திருக்கிறேன்... உழைப்பு நேரம்கூட இழக்க நேரிடுகிறது.''

''உண்மையாகவா''

''உண்மையில்லையா. நிசம்தானே. இரண்டு மாதத்திற்கு மேலாகிவிட்டது.''

''அப்படியே என்னை விட்டுவிட்டு ஓடிவிட மாட்டீர்களே''

''விஸா எடுக்க நாளாகும். ஏஜென்சி மூலமே உடனே கூட்டிக்கொண்டு போகவே ஏற்பாடு செய்யப் போகிறேன்.''

''வீண் செலவில்லையா?''

www.padippakam.com



''அதெல்லாம் பார்க்க முடியாது. தற்போது இங்கே தங்குவதால் ஏற்படும் வீண் செலவுகள் மட்டுமில்லை அங்கே உழைக்கும் பணமும் போய் விடுகிறது. சீக்கிரம் வந்து சேர்ந்தால் நீங்களும் உழைக்கலாம்தானே. படித்தவர்களுக்கு உடனே வேலை வாங்கி விடலாம்''

அதுவரை கமலாவின் பேச்சை எடுக்க அவள் விரும்பவில்லை. இதமான பேச்சுகளிடையே கசப்பான செய்தியை ஏன் சொல்ல வேண்டும் எனத் தாமதப் படுத்தினாள்.

சின்னம்மா அழைத்ததும் உள்ளே சென்று வீட்டில் தாயார் தந்த பலகாரத்துடன் வடையும் பாயாசமும் எடுத்து வந்தாள்.

''இதெல்லாம் எனக்குப் பிடித்தது என்று எப்படித் தெரியும்?''

''எங்க கல்ஸரல் புரடக். அங்கே உள்ளவை பிடிக்கவில்லை என்றீர்களே.''

''சரியாகச் சொன்னீங்க...''

ஒருவடையை எடுத்துக் கடித்தபடி 'நீங்க சாப்பிடவில்லையே' என்று கூறியபடி பாதிவடையைக் கொடுத்தான். அவள் தவிர்க்க முடியாமல் பெற்றுக்கொண்டு சாப்பிட்டாள்.

''ஏஜென்ஸி மூலம் வருவது ஆபத்தில்லையா?''

''கொஞ்சம் றிக்ஸ் இறுக்கத்தான் செய்கிறது. அதைப் பார்த்தால் முடியுமா? எல்லாவற்றிலும் 'றிக்ஸ்' இருக்கத்தானே செய்கிறது. நீங்க வந்த பயணத்தில் இல்லையா? ஊரில் எல்லோரும் ஷெல், குண்டுகளுக்குள் வாழுகிறார்கள் தானே.''

குமரேசன் சாதாரண விஷயமாகக் கூறிய போதே கமலாவின் கைது பற்றிய செய்தியைச் சொன்னாள்.

www.padippakam.com



''அப்படியா? அதிர்ச்சியாயிருக்கே. விசாரித்து ஏதாவது உதவ வேண்டுமல்லவா''

சுசீலா எதுவும் விசாரிக்கமுடியாத நிலைபற்றிய கவலையைத் தெரிவித்தாள். டெலிபோன் செய்த அந்தப் பையன் எப்படியும் உதவுவான்தானே. ஊருக்கும் அறிவிப்பான். மேலும் செய்தி ஏதாவது வந்தால் தெரிவிப்பதாகச் சொன்னாள்.

பாஸ்போட் எடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டிருக்கலாம் என்ற சுசீலாவின் ஊகத்தையே அவனும் ஏற்றுக் கொண்டான். அரசியல் சார்ந்த தன் சந்தேகத்தை அவள் சொல்லவில்லை.

''பாஸ்போட் பிரச்சனை அத்தனை பெரிய குற்றமில்லையே. உடனே பிணையில் விட்டுவிடுவார்கள். எப்படியும் இங்கே வரத்தவறினாலும் போன் செய்வாள்தானே. எல்லாவிபரமும் கேட்டு வையுங்க...''

குமரேசன் ஆறுதல் கூறினான். அவளது பாரமான இதயத் துன்பம் ஓரளவு குறைந்ததாக உணர்ந்தாள். பாயாசத்தைச் சாப்பிடும்படி நினைவூட்டினாள்.

''சித்தப்பா வந்ததும் அக்கா, அண்ணா, அண்ணி நாளைக்கு மாலை ஐந்து மணிக்கு இங்கே பெண் பார்க்க வருவார்கள்... என்று சொல்லுங்க.''

''அப்படியா, என்னைப் பிடிக்காவிட்டால்...''

''அவ்வளவுதான்...'' என்று கூறிவிட்டு மீண்டும் தொடர்ந்தான் :

''சித்தப்பாவுடன் பேசி சிம்பிளாய் சில நாளில் ஒரு கோவிலில் தாலிகட்டி, றியிஸ்டேசனையும் வைப்பது பற்றி தீர்மானிப்பார்கள். அதன் பிறகு நாம சுற்றித்திரியலாம் தானே.''

''சுற்றித் திரிவது பற்றித்தான் கனவு கண்டுகொண்டே இருக்கிறீங்க...

www.padippakam.com



''ஆமாம் ராத்திரியும் கனவு கண்டேன். இருவருமே கீரிமலைக் கேணிலில் நீந்தி விளையாடுவதாக. நீங்க சுவிமிங் சூட்டில். ஒருவன் வந்து சேலைகட்டும்படி கேட்கிறான். அமைதிப்படையைச் சார்ந்தவன் போல இருந்தது. என் காதலி, நீ கண்ணை மூடிக்கொண்டு போ என்று நான் அவனிடம் சத்தம் போட்டேன்.''

''பிறகு...''

''விழித்தால் கட்டிலில்...''

''பரவாயில்லையே. கனவிலும் என் நினைவு வருகிறது. உங்க அக்கா பணக்காரி என்று சொன்னார்கள்...''

''ஆமாம். நாளை மறுநாள் காலையிலேயே தயாராயிருங்க. கூறைச் சேலை எடுக்க அழைத்துச் செல்ல வருவாங்க.''

''நீங்க வரமாட்டீங்களா?''

''அது பெண்கள் வேலை. பயமானால் சின்னம்மாவை அழைத்துச் செல்லலாம்.''

''சின்னம்மா நாளை இரவு உங்களை டின்னருக்கு அழைக்கச் சொன்னா...''

''இந்தக் கையால் நீங்க பரிமாறுவீங்க என்றால்தான் வருவேன்...''

சுசீலாவின் வலது கரத்தைப் பிடித்துக் கொண்டே சொன்னான். இடையில் சித்தப்பா வந்துவிட்டார்.

சித்தப்பாவிடம் அண்ணாவின் ஏற்பாடுகள் பற்றி குமரேசன் சொன்னான். அண்ணாமலையும் அலுவலகத்திலிருந்து போன் செய்தது பற்றி சித்தப்பா தெரிவித்தார்.

கமலா் பற்றிய செய்தி சித்தப்பாவுக்கும் அதிர்ச்சியூட்டியது. பாஸ்போட் பிரச்சனையானால் அத்தனை கவலைப் படவேண்டியதில்லை என்றே அவரும் சொன்னார்.

www.padippakam.com



சின்னமா வந்து மறுநாள் இரவு விருந்து பற்றி நினைவூட்டினாள்.

நாளைக்கு மாலை அக்காவுடன் வந்தால் இரவு சாப்பிடும்வரை நாம் பேசலாம் என குமரேசன் மெல்லிய குரலில் சுசீலாவிடம் சொன்னான். விருந்து முடிந்ததும் முதல் கிஸ்ஸும் தரவேணும். அந்தக் கொண்டிசலுடன் தான் சம்மதம்.

குமரேசன் புறப்படும் போதே ஏழு மணியாகிவிட்டது. உடுத்திய சேலையை உடனே மாற்ற அவள் விரும்பவில்லை. ஒருவித புத்துணர்ச்சி. அவரின் அன்பளிப்பு. அதோடு இனம் தெரியாத ஒருமகிழ்ச்சி. சின்னம்மாவிற்கு இரவு உணவுக்கு உதவி செய்தாள்.

சிந்தனை குமரேசன், இளங்கோ, கமலா பற்றிப் பல்வேறு உணர்வுகளுடன் சுற்றி வட்டமிட்டது.

நடைபெற்ற சம்பவங்கள் பற்றியெல்லாம் பேசி மகிழவும் மனமாறவும் சகுந்தலா போல் ஒரு தோழியில்லாத குறையை அப்போது உணர்ந்தாள். மறுநாள் வருபவர்களோடு எல்லாம் பேசி முடிவு செய்ய அம்மா, அப்பா இல்லாததும் மனதைச் சுட்டது.

சகுந்தலாவுக்கு நீண்ட கடிதம் எழுதவேண்டும். எத்தனை செய்திகள் உள்ளன. நினைவு வட்டமிட்டது.

சின்னம்மாவுடன் அளவாகவே பேச முடிந்தது.

''கலியாணத்தின் பின் தான் பிள்ளை வாழ்க்கை. அதன் முன்னர் எல்லாம் பொறுப்பில்லாத கற்பனைப் பேச்சுக்கள் குடும்ப வாழ்க்கை மிக நீண்டது. ஒரே அடிமை வாழ்க்கை. திரும்பத் திரும்ப ஒரே சமையல். அலுத்துப் போகிறது...''

சின்னம்மாவின் அனுபவப் பேச்சை அவ்வேளை அவளால் முற்றாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

www.padippakam.com



இரவு உணவு புட்டும் முட்டைப் பொரியலும். சீக்கிரமே சாப்பிட்டுவிட்டு கட்டிலில் புரண்டு கற்பனையில் மிதக்கவே விரும்பினாள். இருந்தாலும் எதிர்பாராத இரண்டு முட்கள் குத்தப் போகின்றன என்ற அச்சம் வேறு. அவற்றை மறக்க முயலும் நோக்குடன் குமரேசன் காதல் பரிசாக வாங்கித் தந்த பிங் கலர் நைட்டியை எடுத்து அணிந்து கொண்டாள். உடலை மென்மையாக அது தழுவியது. அவனது நினைவோடு கற்பனை வானில் பறக்க முயன்றாள். அவனைப் பற்றியே கனவு காணவும் மனம் எண்ணியது.

''மனித வாழ்வில் அதிக நேரம் கற்பனையிலேயே வாழ முயல்கிறோம். யதார்த்தத்தைக் கண்டு அஞ்சுகிறோம்'' என எங்கோ படித்தது அவள் நினைவில் வந்தது. நைட்டி ஓவர் சைஸ்ஸாக இருந்தது. அவரிடம் குற்றமில்லை. அவர் கேட்ட அளவு விபரத்தை சொல்ல வெட்கப்பட்டேன். பரவா யில்லை. பிடித்த கலர், நல்ல துணி, தையல். பெட்றூம் லையிட்டைப் போடாமலே மின்விளக்கை அணைத்தாள். அறை மட்டுமல்ல உலகமே இருண்ட நிலையில் கண்களை மூடிக் கொண்டு புற உலகில் நடப்பதை மறக்க முயன்றாள்.

## 24

அதிகாலையில் டெலிபோன் அடிப்பது போன்ற கனவு முறிந்து எழுந்த சுசீலாவால் மேலும் தூங்க முடியவில்லை. மெத்தைமேல் புரண்டபடி அன்று நடைபெறப் போகும் முக்கிய நிகழ்ச்சிகளை எவ்வாறு எதிர்நோக்குவது என்ற கற்பனையில் ஆழ்ந்திருந்தாள். அவரது அக்கா பற்றிய அச்சம் வேறு.

எழுந்து பெற்றூம் லைட்டைப் போட்டுவிட்டு நேரத்தைப் பார்த்தாள். ஐந்துமணி. சிறுநீர் கழித்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டே இன்ப, துன்ப எண்ணங்களில் மிதந்து கொண்டிருந்தாள்.

www.padippakam.com



தெருவில் வாகன நடமாட்டங்கள் ஆரம்பிக்கவில்லை. திடீரென வீட்டுப் பக்கமாக ஓரிரு வாகனங்கள் வந்து நிற்பது போலவும் சிலர் இறங்குவது போலவும் ஓசை கேட்டது.

தொடர்ந்து வாயிற் கதவைத் தட்டும் ஓசை. பஸ்ஸர் இருக்க ஏன் கதவைத் தட்டவேண்டும்? எவரோ பழக்கமில்லாதவர்.

சித்தப்பா எழுந்து திறக்கட்டும் என்ற நினைவோடு தானும் அறையை விட்டு வெளியேற வேண்டி நேரலாம் என எண்ணி நைட்டிக்கு மேலாக டிரெஸ்ஸிங் கவுணைப் போட்டாள்.

லயிட் போட்டு கதவு திறக்கப்படும் ஓசை. செவியைக் கூர்மைப்படுத்தினாள். பூட்ஸ் கால் ஓசையுடன் பலர் உள்ளே ஓடிவரும் சத்தம். சிங்களக் காடையரா?

சுசீலாவின் அறையை ஒருவன் வேகமாகத் தள்ளும் ஓசை. அவள் கதவைத் திறக்குமுன் கதவு உடைந்தது. ஒருவன் அவளது வலதுகரத்தை தன் முரட்டுக்கரத்தால் பிடித்து வெளியே இழுத்துக் கொண்டு வந்தான். திடீர் அதிர்ச்சி அவளால் வாயே திறக்க முடியவில்லை,

சின்னம்மாவை மற்றொருவன் இழுத்து வந்தான். லைட் எல்லாம் போடப்பட்டு விட்டது. ஒருவன் சுசீலாவின் கழுத்தில் கையைப் போட்டு வாயைத் திறக்கச் செய்தான். மற்றொருவன் தண்ணீரைக் கொண்டுவந்து வாயில் ஊற்றி வெளியே கொப்பளிக்கச் செய்தான்.

அதிர்ச்சியால் தாக்கப்பட்ட மூவரும் எதுவுமே புரியாமல் ஸ்தம்பித்துப்போய் நின்றனர். சுசீலாவின் கையைப்பிடித்து இழுத்து வந்ததை சித்தப்பாவால் தாங்க முடியவில்லை.

'வட் இஸ் திஸ்' நொன்சென்ஸ் என்று சித்தப்பா சத்தமிட்டார்.

www.padippakam.com



''இவள் தானே சுசீலா?''

''யெஸ். அதுக்கென்ன?''

''யாப்னாவிலிருந்து சனிக்கிழமை வந்தவள்''

''யெஸ், என்ன நடந்தது? இப்படியா ஒரு பெண்ணை இழுப்பது... நோ மன்னேஸ்...''

சித்தப்பாவின் கோபக்குரலில் வார்த்தைகள் தடுமாறின.

சுசீலாவை அசையவிடாமல் இரண்டு பொலிஸார் முன்னும் பின்னுமாக நின்றனர்.

இன்ஸ்பெக்டர், 'எங்கே மாலா' என்று பொலிஸாரைப் பார்த்துச் சத்தமிட்டான்.

பொலிஸ் உடையில் வாயிற்புறமாக நின்ற மாலா வந்தாள்.

'ரேக் சாஜ் ஒப் திஸ் கேள்' என்றான். அவள் சுசீலா அருகே சென்று அவளது கையைப் பிடித்துக் கொண்டாள்.

சின்னம்மா அதிர்ச்சி நீங்கி அழத் தொடங்கினாள்.

அதுவரை எதுவும் புரியாமல் ஏக்கத்துடன் நின்ற சுசீலாவும் 'வட் இஸ் திஸ்' என்று சொல்லிக்கொண்டே விம்மி அழத் தொடங்கினாள்.

இன்ஸ்பெக்டர் வீட்டைத்தேடும்படி மற்றையவருக்கு ஆணையிட்டான்.

அறைக்குள் நுழைந்து மூலை முடுக்கு பெட்டி படுக்கை எல்லாம் இழுத்துப் போட்டுத் தேடுதல் நடந்தது. ஏழு எட்டுப் பொலிஸார் அங்கும் இங்குமாக பூட்ஸ் கால்களுடன் ஓடித்திரிந்தனர்.

சுசீலாவின் அறையிலும் அவளது பெட்டிகள், உடைகள் ஒவ்வொன்றாக அலசப்பட்டன. அந்த அறையில் நுழைந்த

www.padippakam.com



இன்ஸ்பெக்டர் அவளது ஹான்பாக்கை எடுத்து வந்து ஹோலில் இருந்த மேசையில் கொட்டிவிட்டு மடிப்புகளை எல்லாம் பிரித்துப் பார்த்தான்.

சிறிய கண்ணாடி, சீப்பு, பவுடர், டப்பா, ரூபாக்கள், சில்லரைப் பணம், கைக்குட்டை எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு உள்ளே இருந்த இருகடிதங்கள், விலாசங்கள், டெலி போன் நம்பர்கள் எழுதப்பட்ட சிறிய டயரி, வெள்ளை மாத்திரைகள் வர்ண கப்ஸ்யூல்கள் எல்லாவற்றையும் தனித் தனியே எடுத்து வைத்தான்.

கடிதம், டயரி, மாத்திரைகளை தனியே எடுத்து வைத் தான். மற்றவற்றைப் பையிலே போட்டு விட்டான்.

அறையிலிருந்த சந்தேகப்படும்படியான பொருட்களெல் லாம் மேசையில் வைக்கப்பட்டன. இருவர் சமையற்கட்டுள் நுழைந்து அங்குள்ள பாத்திரங்கள், பலசரக்குள்ள டின்களை யெல்லாம் பார்த்தனர். வீட்டைச் சுற்றியுள்ள பகுதியெல் லாம் தேடப்பட்டன.

இன்ஸ்பெக்டர் டெலிபோன் செய்தான். அரைமணி நேரத்தில் இரண்டு நாய்கள் அங்கு வந்தன. அவை வீடெல்லாம் முகர்ந்தன. அடுப்பங்கரையிலிருந்தே இரண்டு டின்களை எடுத்துக் கொண்டனர்.

அடுத்தவீடு, எதிர்வீடுகளிலிருந்தவர்கள் வாசலில் நின்ற ஜீப்புகளை வேடிக்கை பார்த்தனர். நெருங்கிப் பழகிய ஒரு சிலர் விபரம் கேட்க உள்ளே வர முயன்றனர். ஜீப் டிரைவர் அவர்களைத் தடுத்துப் போகும்படி விரட்டினான்.

ஜீப் டிரைவரிடம் ஒருவன் வந்து நயமாக சிங்களத்தில் பேசி என்ன நடக்கிறது என்று கேட்டான்.

''கொட்டியா 'ரைகர் ஹன்ட்' என சிரித்தபடி சொன்னான்.

படிப்பகம்

www.padippakam.com



தேடுதல் முடிய ஏழரை மணி ஆகிவிட்டது.

எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை ஒரு பையில் போட்டனர்.

அழுது ஓய்ந்து கண்ணீரும் கம்பலையுமாக வாராத தலையுடன் நிற்பதற்குப் பலமற்று நிலத்திலேயே உட்கார்ந்திருந்த சுசீலாவைப் பார்த்து இன்ஸ்பெக்டர் சிங்களத் தமிழில் சொன்னான் :

''ஒரு பையில் இரண்டு துணிமட்டும் எடுத்துக் கொண்டு புறப்படு...''

சுசீலா எழுந்து சித்தப்பாவைப் பார்த்து விம்மிஅழுதாள்.

''இன்ஸ்பெக்டர் இது என்ன? நீங்க எப்படி என் நீஸைக் கூட்டிச் செல்ல முடியும். எங்க லோயரோடு பேச வேண்டும்.''

ஆங்கிலத்தில் சொன்னார்.

''தாராளமாகப் பேசலாம். பி.டி.ஏ. பற்றி அவருக்குத் தெரியும். முடிந்தால் ஆறாம் மாடிக்கு என்ஐபிக்கு அழைத்து வாருங்கள். நாங்க இந்தப் பெண் புலியைக் கூட்டிக் கொண்டு போகிறோம்.''

ஆங்கிலத்திலேயே பதிலளித்தான்.

மாலா கையில் பிடித்து இழுத்தபடி அவளது அறைக்கு அழைத்துச் சென்றாள். அவளது உடைகள் குமரேசனின் பரிசுகளெல்லாம் நிலத்திலே வீசப்பட்டிருந்தன.

மாலாவின் முன்னிலையிலேயே சுசீலா உடைகளைக் களைந்து காட்டன் சேலை ஒன்றைக் கட்டுவதற்கு விட்டாள். குளிப்பதற்கு அவள் அனுமதிக்கவில்லை. பாத்றூம் திறந்தபடி இருக்கவே சிறுநீர்கழித்து முகத்தைக் கழுவமட்டும் விட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com



'ஹறி அப், ஹறி அப்' என்று மாலா அதிகாரக் குரலில் கத்தினாள்.

மாலா தனக்குத் தெரிந்த சில ஆங்கிலச் சொற்களுடன் சிங்களத்திலும் பேசி சுசீலாவை மேலும் துரிதப்படுத்தினாள்.

அறை பூராவும் வீசப்பட்டிருந்த புதிய சேலைகளை மாலாவே எடுத்துப் பார்த்தாள். அவற்றைப் பார்த்துப் பொறாமைப் படுவது போலிருந்தது. எல்லாவற்றையும் கட்டிலில் எடுத்துப் போட்டுவிட்டு ஒரு சேலை, சட்டை, டவலை மட்டும் எடுக்கச் செய்தாள். சுசீலா முடியை பிரஷ் செய்து முடிந்து கொண்டாள். அரைகுறையாக வெளிக்கிட்டவளைக் கண்ணாடியையும் பார்க்கவிடாமல் வெளியே மாலா இழுத்து வந்தாள்.

சின்னம்மாவையும் சித்தப்பாவையும் பார்த்து சுசீலா அழுதாள். அவர்களுடன் எதுவும் பேசவிடாமல் சுசீலாவை ஜீப்பை நோக்கி இழுத்துச் சென்றாள் மாலா.

''சரி நீ போ சுசீ, நான் லோயேசுடன் வந்து பார்க்கிறேன். பயப்படாதே...''

சித்தப்பா ஜீப்வரை சென்றார். ஜீப் புறப்பட்டதும் குழம்பிய நிலையில் கலங்கிய கண்களுடன் சோர்ந்த கரத்தை உயர்த்தினார்.

சின்னம்மாவின் அழுகை நின்றதாக இல்லை.

''கலியாணத்திற்குக் காத்திருந்த பிள்ளைக்கு... இன்றைக்கு இப்படியா நடக்கவேண்டும். மாதக் கணக்காகக் காத்திருந்த அந்தப் பிள்ளைக்கு என்ன சொல்லப் போகிறோம்...''

சாவீட்டு ஒப்பாரிபோல குரல் ஒலித்தது.

## 25

நன்கு பழகிய அடுத்த வீட்டார் சிலர் நிலைமையை அறிய சித்தப்பாவிடம் வந்தனர். உடனே சட்ட ஆலோசனை

www.padippakam.com



பெறும்படியும் இத்தகைய கேஸ்களுக்கு வல்லுநரான சில பெயர்களையும் சிபார்சு செய்தனர்.

''நானே சிவராசாவிற்குப் போன் செய்துவிட்டேன்.''

''என்ன சொல்கிறார்?''

''நேரே வரும்படி சொன்னார்...''

அடுத்து என்ன செய்யலாம் என உட்கார்ந்து சிறிது நேரம் சிந்தித்தார். பின்னர் எழுந்து குமரேசனுக்குப் போன் செய்தார்.

''தம்பி, ஒரு தடவை வீட்டுக்கு உடனே வரமுடியுமா?''

''இப்பொழுதா! சுசீலா இல்லையா...''

''எதுவும் கேட்க வேண்டாம் தம்பி. உடனே புறப்பட்டு ஒரு தடவை வரவும்... காத்திருக்கிறேன்''

''சரியுங்க...''

அதுவரை செய்வதறியாமல் அதிர்ச்சியில் இருந்த சின்னம்மா சமையற்கட்டுப் பக்கமாக முதலில் சென்று சிதறிக்கிடந்த பாத்திரங்களையும்பண்டங்கள் சேகரித்திருந்த டப்பாக்களையும் சீராக்கி கோப்பி போட அடுப்பில் நீரை வைத்தாள்.

காலைக் கடன்களை முடித்துவந்த கணவரிடம் கோப்பி யைக் கொடுத்துவிட்டு முதலில் ஹோலை சீராக்கிவிட்டு அறைகளுக்குள் நுழைந்தாள்.

ஆட்டோவில் வந்திறங்கிய குமரேசனை அழைத்து உட் காரச் செய்து நடந்த விஷயங்களை விபரமாகச் சொன்னார்.

குமரேசன் அதிர்ச்சியும் ஆத்திரமுமடைந்தான். இத்தனை நாட்கள் காத்திருந்து, எல்லாம் புதிய சொர்க்க மாக அமையப் போவதாகக் கனவு கண்டவனுக்கு, மனக்

www.padippakam.com



கோட்டை எல்லாம் இடிந்து அதற்குள் மாட்டப்பட்டு விட்ட தாக உணர்ந்தான்.

''சுசீலா பாவம். அப்பாவிப்பெண்ணு. கூடிவந்த கமலா வால் பிரச்சனை வந்தது. அந்தப் பெண் கைது செய்யப்பட்ட செய்தி அறிந்தபோதும் நாங்கள் சிறிதும் சந்தேகப்பட வில்லை. தொடர்ந்து இப்படியான சிக்கல் ஏற்படும் எனவும் நினைக்கேல்லை...''

சித்தப்பா தன் கணிப்பைக் கூறினார்.

''அது முற்று முழுதான உண்மை. அதில் சந்தேக மில்லை. இப்பொழுது சுசீலாவை லோயேசுடன் போய் அழைந்துவர வழிபார்க்க வேண்டும்...''

''அதற்குத்தான் உங்களையும் வரும்படி சொன்னேன். பாரிஸ்டர் சிவராசா என் நண்பர் கூட. சுசீலாவை அழைத்துச் செல்வதற்கே எதிர்ப்புத் தெரிவித்து உடனே போன் செய்தேன். பொலிஸாரைத் தடுக்க முடியாது. நேரடி யாக வீட்டுக்கு வரும்படி சொன்னார்.''

''சரி போவோமே...''

சித்தப்பா உடையை மாற்றிவர அறைக்குச் சென்றார். சின்னம்மா கலங்கிய கண்களுடன் கோப்பி கொண்டு வந்தாள்.

''என்ன கஷ்டகாலம் தம்பி. இன்றைக்கென்று இப்படி நடந்துவிட்டது...''

அதன்மேல் பேசமுடியாமல் விம்மினாள்.

சித்தப்பாவும் குமரேசனும் ஒரு ஓட்டோவில் பாரிஸ்ட ரிடம் சென்றனர். அவர் நீதிமன்றம் செல்ல கறுத்தக் கோட் டுடன் தயாராக இருந்தார்.

''மிஸ்டர் சின்னராசா வாங்க.'' என சித்தப்பாவை வரவேற்று உட்காரச் செய்தார். சித்தப்பா குமரேசனைச்

www.padippakam.com



சுருக்கமாக அறிமுகப் படுத்தினார். பாரிஸ்டர் கைகுலுக்கினார்.

''இந்த விஷயத்திலை நாம பதட்டமடைய முடியாது. நாம பொறுமையாக இருக்கணும்...''

''அப்பாவிப் பெண். இப்படியெல்லாம் அவமானப் படுத்திக் கொண்டு போக முடியுமா? உடனேயே வெளியே கொண்டு வரணும்.''

குமரேசனின் குரலில் அநீதியை எதிர்க்கும் பதட்டம் ஒலித்தது.

''இன்ஸ்பெக்டர் சில்வாவே அங்கு வந்தவன். அவனை எனக்குத் தெரியும். சுப்பிரின்டன் நாணயக்காராவின் கட்டுப் பாட்டில் தான் என் ஐ பி என்ற தேசிய உளவு விசாரணைப் பகுதி உள்ளது. பயங்கரமான பயங்கரவாதச் சட்டம். பிடி அவங்க கையில் உள்ளது. 18 மாதங்களுக்கு ஆபத்தான விடு தலைப்புலி என்று சொல்லி தடுத்து வைத்துவிட முடியும். இதற்குள் நாம் என்ன செய்ய முடியும் என்று நிதானமாக செயலாற்றணும்.''

பாரிஸ்டர் பதட்டமெதுவுமில்லாமல் சட்டவிதிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''என்ன சேர். உங்களை நம்பி வந்தால் இப்படிச் சொல்லுறீங்க. அது அப்பாவிப் பெண்ணுங்க...''

குமரேசன் இடைமறித்துப் பொறுமை இழந்து சொன்னான்.

''அது உண்மைதான். ஆனால் சட்டவிதிகள் அவர்கள் நடவடிக்கைகளுக்குச் சாதகமாக இருக்கிறது. இங்கு பாஸிஸ சட்டங்கள் ஆக்கி வைத்திருக்கிறார்கள். இலங்கை கனடா இல்லை. உடனே நீதி மன்றத்துக்கு அழைத்து வரும்படியான உத்தரவு பெறும் ஹாபியாஸ் ஹோப்பிஸ் சட்டம் எதுவும் கிடையாது. பாஸிஸச் சட்டவிதிகள் தான்

www.padippakam.com



நடைமுறையில் உள்ளன. புலி அல்லது ஜே.வி.பி என்றால் என்னவும் செய்வார்கள். விட்டுக்குவந்து அழைத்துச் சென்றதால் நாம் கண்காணிக்க முடியும். இல்லாவிட்டால் நபர் 'மிஸ்ஸிஸ்' என்றே கொள்ளவும் நேரலாம். பல்லாயிரக் கணக்கானவருக்கு இது நடந்து கொண்டிருக்கிறது. மனித உரிமைக்கழகங்கள் இலங்கை அரசுக்கு எதிராகத் தற்போது உலக ரீதியில் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன...''

''இப்போது என்ன செய்யலாம் என்று சொல்லுங்க...''

குமரேசன் சிறிது தணிவோடு சொன்னான்.

''முதலில் அங்கு பொலிசார் நடத்தும் சாமபேததான தண்டங்களை நிறுத்துவதைக் கவனிக்க வேண்டும். இன்ஸ் பெக்டர் சில்வாவிடம் நான் எங்களுக்குத் தெரிந்த பெண் என்று செரல்லிவிடுகிறேன். அடுத்து பெண்ணுக்குவேண்டிய உணவு, உடை பற்றி மிஸ்டர் சின்னராசா நீங்க மட்டும் ஆறாவது மாடிக்குச் சென்று விசாரித்து வழங்க வேண்டும்.''

''ஏன் சேர் நான் போகக் கூடாதா.''

''விசாரணை முடியும்வரை எவரையும் பார்க்கப் பேச விடமாட்டார்கள். அது தவிர நீங்க கொஞ்சம் இப்போது ஒதுங்கி இருப்பதுதான் நல்லது...''

''ஏன் சேர் அப்படிச் சொல்லுறீங்க?''

''கனடாவிலிருந்து வந்து நீங்க ஏன் இதற்குள்ளே வீணாக மாட்டிக் கொள்ளுறீங்க. நீங்க மேலும் தங்கியிருந்தால் வாரத்தில் ஒருமுறை பார்க்க அனுமதிக்கப் படும்போது உங்களையும் பார்த்துப்பேச விசேஷ அனுமதி பெற்றுத் தருகிறேன்...''

பாரிஸ்டர் இரண்டு அர்த்தப்படக் கூறினார். நீங்க மாட்டாமல் நாளையே கனடா போய்விடலாம் எனவும் மறை முகமாகக் கூறுவதாயிருந்தது.

''நான் இந்தப் பிரச்சனை தீர்க்காமல் எங்கும் போகப் போவதில்லை. என்ன சேர் அப்பாவிப் பெண்ணை இன்

படிப்பகம்

www.padippakam.com



றைக்கே விசாரித்து விட்டு விடப் பண்ண முடியாதா? நீங்க வாரக் கணக்கில் பேசுறீங்க...''

''விசாரணையை முடித்து பிடிஏயில் தடுத்து வைக்காமல் நாம் பார்க்க வேண்டும். அதுவும் விசாரணையில் சுசீலா ஒத்துழைப்பது, உண்மை பேசுவதைப் பொறுத்தது. சிறிய சந்தேகமானாலும் விரிவான விசாரணை நடத்த என பி. டி. ஏ.யில் போட்டுவிட்டால் தாமதமாகும். எல்லாம் சுசீலா பொலிஸ் விசாரணையில் கூறும் ஸ்ரேட்மெண்ட்டைப் பொறுத்தது.''

பாரிஸ்டர் கூறிக்கொண்டே இன்ஸ்பெக்டர் சில்வாவைப் போன் செய்தார்.

ஆறாவது மாடிக்கு இன்னும் வரவில்லை என்ற செய்தி கிடைத்ததும் வீட்டுக்கு போன் செய்தார். சில்வாவே பேசினாள்.

''காலையில் நடந்த ரெய்ட் பெண் சுசீலா எனக்கே வேண்டியவங்க. தேர்ட்டிகிரி ஒன்றும் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்க. நான் கவனித்துக் கொள்ளுவேன்.''

''உங்களையே புலி என்று சொல்லுறாங்க. ஒரு நாளைக்கு விசாரிக்க வேண்டியது வரும்...'',

''என்னை என்ன, எல்லாத் தமிழரையும்...''

பாரிஸ்டர் சிரித்தபடியே சொன்னார்.

டெலிபோனை வைத்துவிட்டு 'அவன் என்னையே புலி' என்று சொல்லுகிறான் என மீண்டும் சிரித்தார்.

''நீங்க போய் வாருங்க. பிரச்சனை வந்தால் சொல் லுங்க. நான் கோர்டுக்குப் போக நேரமாகிவிட்டது. இன்ஸ்பெக்டரையும் கையில் போட்டு கவனிக்க வேணும், பிறகு பார்ப்போம்.''

www.padippakam.com



பாரிஸ்டர் எழுந்தார். அமைதியாக சிந்தனையோடு இருந்த சித்தப்பா 'முடிந்தவரை உதவுங்கள். பையன்கள் இருவரும் வெளிநாட்டில். இவள்தான் என் மகளாக இருந்தவள்' என்றார்.

''என்னால் முடிந்தவரை உதவுவேன். உணர்ச்சிவசப் படாதீங்க''—ஆறுதல் வார்த்தைகள்.

''அப்பாவிப் பெண்ணை விடுவிக்க இத்தனை கஷ்டமா?''

குமரேசனின் ஆற்றாத வார்த்தைகள்.

''சில வேளைகளில் குற்றவாளிகளைத் தண்டனையி லிருந்து தப்ப வைப்பதைவிட அப்பாவிகளை வெளியே கொண்டுவருவதுதான் கஷ்டமாகவும் செலவாகவும் ஆகிவிடு கிறது.''

பாரிஸ்டர் கூறிக் கொண்டே வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டார்.

டாக்டரிடம் சென்று ஆலோசனையும் ஓரளவு ஆறுதலும் பெற்ற நோயாளிகள்போல இருவரும் வெளியே வந்தனர்.

சித்தப்பா குமரேசனை வீட்டுக்கு அழைத்து வந்தார். சின்னம்மா ஆவலோடு ''இன்றைக்கே பிள்ளை வந்து விடுமா?'' என்று கேட்டார்.

''பார்க்கலாம், சில பிரச்சனைகள் இருக்கிறது.''

சித்தப்பா கூறிச் சமாளித்தார்.

இருவருக்கும் காலை உணவாகத் தயாரித்த ரவா உப்புமாவை சின்னம்மா வழங்கினார். காலையிலிருந்து உணவையே மறந்திருந்தவர் பசியை உணரத் தொடங்கினர். கிடைத்த உணவைச் சாப்பிட்டனர். சின்னம்மா டீயும் வழங்கினாள்.

www.padippakam.com



''நண்பகல் உணவை நானே நேரில் ஆறாவது மாடிக்கு எடுத்துச் செல்லுவேன். நடப்பதைப் பார்த்துப் பிறகு டெலிபோனில் சொல்லுகிறேன்...''

சித்தப்பா கூறியபடி சமையலைச் சீக்கிரமாக முடிக்கும் படி மனைவியிடம் சொன்னார்.

குமரேசன் வீட்டாருக்கு நிலைமையைத் தெரிவிப்பது பற்றி இருவரும் கலந்து பேசினர்.

குமரேசன் அண்ணாவுக்கு அலுவலகத்திற்குப் போன் செய்து பெண் பார்க்கும் படலம் அன்று இல்லை. வீட்டுக்கு மாலை வந்து விபரம் தெரிவிப்பதாகச் சொன்னான்.

''அக்காவிடம் நான் வீட்டுக்குப் போனதும் அக்காவுக்கு அதிர்ச்சி ஏற்படாத மாதிரி சொல்லி விடுவேன்.''

குமரேசன் சொன்னான்.

யாழ் நகர் வீட்டுக்கு, தன் அண்ணாவுக்கு அறிவிப்ப தில்லை, அவருக்கும் தெரிய வாய்ப்பில்லை என சித்தப்பா சொன்னார்.

எப்படியும் மற்றவர் அறியாதவாறு நடைபெற்ற சம்பவத்தை இரகசியமாக வைப்பதாக இருவரும் முடிவு செய்தனர்,

மறுநாள், தானே உணவு எடுத்துச் செல்லலாமா என்று குமரேசன் அனுமதி கேட்டு நேரம், இடம் பற்றி விபரம் கேட்டான். சித்தப்பா சொன்னார்:

''உறவினர் அல்லாதவர் எடுத்துச் செல்வதை ஏற்க மாட்டார்கள். பெயர் விபரம் எல்லாம் கேட்பார்கள். நஞ்சு உணவு தந்து கொன்று விடலாம் எனவும் சந்தேகப்படுவார் கள். பாரிஸ்டர் சொல்படி நீங்க தற்காலிகமாக ஒதுங்கி யிருப்பதே நல்லது.''

www.padippakam.com



## 26

சித்தப்பாவும் குமரேசனும் எதிர்பார்த்ததற்கு மாறாக மறுநாட் காலைப் பத்திரிகைகளில் முதற்பக்கச் செய்தியாக நடைபெற்றவை வெளிவந்தன.

''குமுகினி என்ற 18 வயதான பெண் புலி கமலா என்ற பெயருடன் இரகசிய குண்டுத் தாக்குதல் திட்டமாகக் கொழும்புக்கு வந்தாள். சிங்களமும் நன்கு பேசத்தக்க பெண் புலி. சுசீலா என்ற மற்றொரு பெண்ணையும் துணைக்காக அழைத்து வந்திருந்தாள். இருவரும் கைது செய்யப்பட்டு அவர்களது இரகசியத் திட்டம் பற்றி விசாரணை நடைபெறுகிறது. தேடுதலில் இரகசிய கடிதங்கள், விலாசங்கள் சைனயிட், வேறு மருந்துகள் எல்லாம் கைப்பற்றப்பட்டன.''

குடும்பத்தினருக்கு அதிர்ச்சியும் ஆத்திரமும் தந்த செய்தியைப் பற்றி வெவ்வேறு விமர்சனங்கள் வெளிவந்தன. ஒருபுறம் வீரம், இரக்கம் மறுபுறம் துரோகம் என்றெல்லாம் பேசப்பட்டது.

அண்ணாமலை தானே இக்கலியாணத்தைப் பேசத் தொடங்கியதால் எதிர்பாராத விபத்து எனப் பேசாமலிருந்தான்.

''கலியாணம் சட்டரீதியாக எதுவும் நடைபெறவில்லை. நீ கனடாவிற்குப் போய்விடு. மற்றொரு தடவை வேறு பெண் உறுதிப்படுத்திய பின் தெரிவிக்கிறோம்'' என அக்கா குமரேசனுக்கு அறிவுரை கூறினாள்.

நாகலிங்கம் வெளியே தெரியவந்தால் தன் தொழில், வியாபாரம் பாதிக்கப்படலாம் என்று மனைவியுடன் சீறி குமரேசனை அன்றிரவே விமானத்தில் நாட்டுக்கு வெளியே அனுப்ப உதவுவதாகத் தெரிவித்தார்.

குமரேசன் மறுத்துவிட்டான்.

படிப்பகம்

www.padippakam.com



''உன் தம்பியை வீட்டைவிட்டு வத்தளைக்கு அண்ணா மலை வீட்டுக்கு அனுப்பிவிடு. இங்கே இருந்தால் என் மான மெல்லாம் போய்விடும்''

நாகலிங்கம் கோபக்குரலில் சொன்னார்.

''மானமெல்லாம் எப்பொழுதோ போய்விட்டது. இனிப் போவதற்கு என்ன இருக்கிறது...''

அவரது மற்றைய காதலி ராணியை நினைவூட்டுவதாக தமயந்தி சொன்னாள்.

''அது என் பிரச்சனை. இது நமது தொழில், வியாபாரப் பிரச்சனை. புலிகளை நாமும் ஆதரிப்பதாகப் பிரச்சாரம் செய்வது மட்டுமல்ல இன்கம்டாக்ஸ், லைசென்சு, பாங்குக் கடன்கள் எல்லாம் பாதிக்கப் போகிறது...''

''பரவாயில்லை. அவன் அப்பாவி, எந்த இயக்கமும் சாராதவன். அது எனக்குத் தெரியும்.''

''நீ விரட்டாவிட்டால் நான்தான் சொல்லி வெளியேற்ற நேரிடும்....''

நாகலிங்கம் மிரட்டினார்.

''இது என் வீடும்தான். அப்படியானால் நீங்க வெளியே போய்விடலாம்''

''என்னடி சொன்னாய். நான் எங்கேயடி போகிறது?''

''அங்கே தானே வைப்பாட்டி இருக்கிறாளே. அவள் வீட்டைதான்.''

தமயந்தி அடக்கிவைத்திருந்த தன் மனச்சீற்றத்தை வெளிப்படுத்தினாள்.

''என்னடி சொன்னாய். உனக்குத்தம்பி தான் வேணும். நான் வேண்டாம், என் சொத்துத்தான் வேணுமோ...''

''எங்க சொத்து என்று சொல்லுங்கோ. எனக்குப் பாதிப் பங்கிருக்கிறது''

www.padippakam.com



''என்னடி உரிமை பேசுகிறாய் வேசை...''

''அங்கை ஒருத்தியை வைத்துக்கொண்டு என்னை வேசை என்று சொல்ல நா கூசவில்லையா. நான் உன்னோடுதான் வேசை ஆடினேன். நீதான் ஒரு வேசன், விபசாரன்...''

''என்னடி வாய் நீளுது''

அவன் கூறியபடியே கன்னத்தில் அறைந்தான்.

''நியாயம் நீதி பேசத்தெரியாத கோழைகளுக்கு இது ஒன்றுதானே தெரியும். நீதி மட்டுமல்ல எங்களுக்கும் கால், கை இருக்கிறது.''

''என்னடி சொன்னாய்?''

''எனக்கும் கால், கை இருக்கிறது என்றேன்''

மேலும் பேசாமல் நாகலிங்கம் வெளியேறினார்.

பத்து நாட்கள் கழிந்துவிட்டன. எவ்வித நல்ல செய்தியும் இல்லை. சித்தப்பா நண்பகல் உணவுடன் மாற்றுஉடை, டூத்பேஸ்ட், பிரஷ், சோப்பு, சனட்டரி டவல்கள் மட்டும் ஆறாவது மாடி வாயிலில் விசாரணையாளனான பொலிஸ்காரனிடம் கொடுத்து வந்தார். சுசீலாவைப் பார்க்கவே முடியவில்லை.

குமரேசன் சித்தப்பாவைப் போன் செய்து விசாரிப்பது மட்டுமல்லாமல் இடையிடையே நேரில் பார்த்தும் வந்தான். அட்வகேட்டிடமும் சென்று வந்தனர். 'விசாரணை முடியட்டும்' என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

குமரேசன் தன் நண்பர் மூலம் வேறு அட்வகேட் இருவரிடம் ஆலோசனை கேட்டான். எவ்வளவு பணமும் செலவு செய்ய அவன் தயாராயிருந்தான். தன் கனடா வங்கியிலிருந்து பணத்தை வரவழைத்துத் தயாராக இருந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



தன் சேமிப்பில் சிறு தொகை இருக்கத் தக்கதாக எல்லாம் கொழும்பு வங்கிக் கணக்கிற்கு மாற்றியிருந்தான்.

அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக மற்றைய அட்வகேட்மார் விடுதலைப்புலிகள் சார்ந்த வழக்குகளில் ஈடுபடவே அஞ்சினர். எவ்வளவு பணம் தந்தாலும் வேண்டாம், ஆபத்து மட்டுமல்ல, பி. டி. ஏ. பாஸிஸ சட்டம் உள்ளது, எதிர்த்தும் வெற்றி பெறமுடியாது, நீதிபதிகளும் அச்சட்டம், அரசு சார்ந்தே நிற்பார்கள் என்றனர்.

எப்படியும் கனடாவிற்கு இப்பிரச்சனை தீர்க்காமல் போவதில்லை என்ற பிடிவாதத்துடன் குமரேசன் இருந்தான். இத்தனை காதலித்த பெண்ணைச் சட்டரீதியாகத் திருமணம் செய்யாததற்காக விட்டுவிட்டு ஓடுவது கோழைத்தனம், அநீதி என்று சொல்லிக் கொண்டான். இரண்டு நாள் கழித்து கையெழுத்துப் போட்டிருந்தால், தாலிகட்டி பாலுறவு கொண்டிருந்தால்தான் மனைவியா என கனடா ஓடும்படி ஆலோசனை கூறியவரிடம் சொன்னான்.

## 27

நாகலிங்கம் உட்பட வேறு நண்பரும் அச்சமூட்டிய சம்பவமும் நடைபெற்றது.

அன்று அதிகாலையில் இன்ஸ்பெக்டருடன் ஐந்து பொலிசாரும் வந்தனர். குமரேசன் அறையில் மட்டும் நுழைந்து அவனது பெட்டி, பொருட்கள், கடிதங்கள், பாஸ்போட் எல்லாவற்றையும் ஊடுருவி நோட்டம் போட்டனர். சிலவற்றை எடுத்துக் கொண்டனர்.

அவனது பாஸ்போட், விமான டிக்கட், சில கடிதங்கள், பொருட்களுடன் குமரேசனை மட்டும் அழைத்துச் சென்றனர். நாகலிங்கத்தின் தராதரத்தை, வர்க்க நிலையை பொலிஸ் டிப்பாட்மென்டே அறியும்.

www.padippakam.com



நாகலிங்கம் வெளியே வந்து இன்ஸ்பெக்டரிடம் பேசி யிருந்தார். ஸ்டேட்மென்ட் ஒன்று எடுத்துவிட்டு இங்கே வீட்டிலேயே கொண்டுவந்து விடுவோம் என இஸ்ஸ்பெக்டர் சொல்லியிருந்தான்.

குமரேசனை ஜீப்பில் அழைத்துச் சென்று என்ஐபி உள்ள ஆறாம்மாடியில் விசாரணை நடந்தது. சில விசித்திரமான கேள்விகேட்டு அவனையும் மடக்கப்பார்த்தான் இன்ஸ் பெக்டர்.

'உன் காதலி சுசீலா விடுதலைப்புலி என்று தெரியுமா? தெரியாதா?''

''அவள் விடுதலைப்புலி இல்லை.''

''ஆம் அல்லது இல்லை என்று சொன்னால் போதும்.''

''இன்ஸ்பெக்டர் மிரட்டினான்.

''இல்லை...''

''சுசீலாவின் அண்ணன் விடுதலைப்புலியோடு இருந்து பிரான்சுக்குக் கள்ள பாஸ்போட்டுடன் ஓடியது தெரியுமா? தெரியாதா?''

''அவள் விடுதலைப்புலி இயக்கத்தில்இருந்ததில்லை...''

''ஆம், இல்லை என்று சொன்னால் போதும்.''

''இல்லை''

''சுசீலா அண்ணன் உங்களுக்கு அனுப்பிய பரிசுகளை சுசீலா தந்தாளா, இல்லையா?''

''தந்தாள்''

''அப்போது அவனைப் பற்றித் தெரியாது என்று எப்படிச் சொல்லுவாய்''

''நான் கண்டதில்லை, பேசியதில்லை, சுசிலா மூலமே அறிந்தேன்.''

www.padippakam.com



''கனடாவில் நீ விடுதலைப் புலி இயக்கத்தில் சேர்ந்திருந்தாய்...''

''இல்லை. என்றும் இருந்ததில்லை''

குமரேசன் கோபத்தோடு மறுத்தான். தன்னையும் மாட்டி உள்ளே வைத்து விடுவார்களோ எனவும் அஞ்சினான். உடலே படபடத்தது.

''உள்ளே இருக்கும் கனடியரை அழைத்து ஒப்புவிப்பேன். ஆமா இல்லையா?''

''இல்லை இல்லை...''

''அவர்களை அழைக்கட்டா?'' என்று சொன்னபடி இன்ஸ்பெக்டர் டெலிபோனை எடுத்தான்.

''இல்லை இல்லை. முடிந்தால் கூப்பிட்டு ஒப்புவிக்கலாம்''

''சுசீலாவை நீ கலியாணம் செய்யப் போகிறாயா?''

''ஓம்''

''அவள் விடுதலைப்புலி என்று தெரிந்துமா?''

''அவள் விடுதலைப்புலி இல்லை''

''இப்பொழுதுதானே விடுதலைப்புலி என்று தெரியாது என்று சொன்னாயே. இப்போது புலி என்று தெரிந்துகொள். இன்னும் அவளைக் கலியாணம் கட்டத்தான் போகிறாயா?''

''ஓம்''

''அவள் உன்னைக் காதலிப்பதாக நாடகம் ஆடினாள் என்பது உனக்குத் தெரியுமா?''

''அப்படி எதுவுமில்லை.''

''அவளுக்கு மற்றொரு காதலன் இருப்பது தெரியுமா?''

''அப்படி எவருமில்லை, இல்லை...''

படிப்பகம்

www.padippakam.com



''நீ பொய் பேசுகிறாயா ஏமாளியா என உனக்கே தெரியாது. அவளது கிராமம் சார்ந்த எஞ்சினியர் இளங்கோவை உனக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

''அவனது நண்பன் இந்திரனைத் தெரியுமா?''

''தெரியாது.''

''இளங்கோவைச் சுசீலாவை காதலித்தாள் கலியாணத் திற்கு முடிவு கேட்டு அவள் சித்தப்பா சின்னையாவிடம் இந்திரன் என்ற நண்பன் தூது சென்றது தெரியுமா?''

''தெரியாது''

''அப்போது மற்றொரு புலிக்கு நிச்சயம் செய்து விட் டோம் என சித்தப்பா சொல்லி அனுப்பியது தெரியுமா?''

''அப்படி எதுவும் நடக்கவில்லை''

''தெரியுமா? தெரியாதா?''

''தெரியாது,''

''நீ ஒரு அப்பாவி! பிடிவாதமாக நிற்பது மற்றொரு புலியைக் காட்டிக் கொடுக்கப்படக்கூடாது என்பதற்காகத் தான் என்று நான் சொல்லுகிறேன்.''

இன்ஸ்பெக்டர் உரத்த குரலில் கத்திவிட்டு மேசையில் கையால் அடித்தான்.

குமரேசனின் சிந்தனை குழம்பியது. சுசீலா பற்றிய அவதூறு புதிய சந்தேகங்களை வேறு ஏற்படுத்தியது. அவற் றில் உண்மை இருக்குமா இவனது கட்டுக்கதையா? இவன் சி ஐ டி யிலும் மோசமானவன் என்னவும் செய்வான்.

திடீரென இன்ஸ்பெக்டர் எழுந்து உள்ளே சென்றான். சுசீலா போலவே தன்னையும் மாட்டி உள்ளே தள்ளிவிடு வார்களோ என்ற அச்சமும் அவன் மனதைக் குடைந்தது.

www.padippakam.com



விசாரணை மூலம் என்னையே பயமுறுத்தி, தர்க்கம் பேசச் செய்து விடுதலைப்புலி ஆக்க முடியும்போது சுசீலா போன்ற பெண் எங்கே தாக்குப் பிடிக்க முடியும். மனம் குழம்பியது.

உள்ளே 'ஆ...ஊ' எனச் சத்தம் வேறு பரிதாபமாக கேட்டுக் கொண்டிருந்தது.

''அடிக்க வேண்டாம் அடிக்க வேண்டாம். நீங்கசொல்லு வதை ஒப்புக் கொள்ளுகிறேன்' என மற்றொரு குரல். சிங்களத்தில் சத்தமிடும் அவலக்குரல் ஒன்று.

அது விசாரணை இடமல்ல, ஒரு 'ரோச்சர் சேம்பர்' என நினைத்தான்.

விசாரணையை ரைப் செய்து கொண்டிருந்த சார்ஜனை 'ரொயிலெட்' போகவேண்டும் என வேண்டினான். அவன் காவலில் நின்ற ஒருவனை அழைத்து இடத்தைக் காட்டும்படி சொன்னான்.

ஓரளவு உட்புறமாக நுழைந்து சென்றபோது ஒரு இளை ஞனை மேசைமேல் நிர்வாணமாக நிற்கவிட்டு விசாரணை நடத்தியவனின் கையிலே ஒரு ஸ்கேல். அதனால் இளைஞ னது பிறப்புறுப்பில் அடித்துவிட்டுக் கேள்வி கேட்பதுபோலத் தெரிந்தது.

சிறுசிறு அளவுகளாகப் பிரிக்கப்பட்ட பகுதியைத் தாண் டிச் சென்றான். சிறுநீர் கழிக்கும் வரை அழைத்துச் சென்ற வன் அங்கு காத்து நின்றான். திரும்பும்போது ஒரு குறுகிய அறையில் இளம் பெண் ஒருத்தி மார்பை கைகளை மடித்து மறைத்தபடி நிர்வாணமாக நின்றாள். விசாரணை நடை பெறும்போது இரண்டு பொலிஸார் அவளது அழகை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர். அவனின் அவல நிலைக்கு இரங்குவாரில்லை.



படிப்பகம்

www.padippakam.com



அக்காட்சிகளைப் பார்த்தபோது குமரேசனின் இரத்தம் உறையவில்லை. கொதிப்பு ஏற்பட்டது. பற்களைக் கடித்துக் கொண்டான். 'நெட்டை மரங்களென நின்றார்' என்ற பாரதி பாடல் அவன் நினைவில் வந்தது.

இது என்ன நாகரிக நாடு, பொய்யை உண்மையாக்கவும் உண்மையைப் பொய்யாக்கவும் திறமைபெற்ற பொலிஸார். இவற்றோடு சுசீலா பற்றிய துன்ப நினைவு மனதை அலைத் துக் கொண்டிருந்தது.

கண்முன் கண்ட காட்சிபோல சுசீலாவையும் விசாரணை செய்து, இல்லாத பொய்களை எல்லாம் ஒப்புவிக்கச் செய் திருப்பார்களா? அப்பாவிப்பெண். என்னைக் காண்பதற்காக தந்தையை விட்டே மற்றொரு பெண்ணின் துணையுடன் ஓடிவந்து மாட்டிக் கொண்டாளே; எனக்காக நடந்த சம்ப வத்தின் நிகழ்ச்சியின் பிரதிபலிப்பு இப்படியா முடிய வேண்டும்.

''ஏன் அப்பாவை விட்டுவிட்டுப் புறப்பட்டாய்?''

''நீங்க மாதக்கணக்காகக் காத்திருக்கிறீங்க. உங்களை ஏமாற்றக்கூடாது என்றே அப்பாவை விட்டே ஓடோடி வந்தேன்''

''அப்போது என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருக்கவில்லை. அப்படித்தானே...''

''ஏனப்படிச் சொல்லுறீங்க. உங்களை நேரில் பார்த்துப் பேசவேண்டும் என்று என் நெஞ்சு மாதக் கணக்காகத் துடித் துக் கொண்டிருந்தது''

தலைகுனிந்த வெட்கத்தோடு சிரித்துக் கொண்டே கூறியது அவன் நினைவில் வந்து மனதை ஆற்ற முயன்றது.

இன்ஸ்பெக்டர் மீண்டும் வந்தான். கையிலே ஒரு பாக் கெட்.

''நீ உண்மை பேசாவிட்டால் எப்படி நிஜத்தை வரவழைப் பது என்று எங்களுக்குத் தெரியும்.''

www.padippakam.com



குமரேசன் மௌனமாக இருந்தான்.

''நீ வரும்போது எவ்வளவு பணம் கொண்டு வந்தாய்''

''ஆயிரம் டாலர்''

''பின்னர் வங்கி மூலம் எவ்வளவு வரவழைத்தாய்''

''மூவாயிரம் டாலர்''

இன்ஸ்பெக்டர் தான் எடுத்துவந்த பைலைப் புரட்டிச் சரிபார்த்தான்.

''இத்தனை பணம் உனக்கு இங்கே எதற்கு?''

''என் கலியாணச் செலவு... திரும்புவதற்கு டிக்கெட் வாங்க...''

''உன்னிடம் ரிட்டேன் டிக்கெட் இருக்கே. பிறகு என்ன டிக்கெட்? பொய் சொல்லுகிறாய்''

''சுசீலாவுக்கு அங்கு வர டிக்கெட் வாங்கவேண்டும்''

''வரவழைத்த பணத்தில் புலிகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாய்''

அதட்டலான கேள்வி.

''எதுவுமே கொடுக்கவில்லை.'' உறுதியான குரல்.

''பொய் சொல்லுகிறாய்.''

''இல்லை. எதுவும் கொடுக்கவில்லை.''

''கொடுக்க எண்ணியிருந்தாய். அதற்காகவே இவ்வளவு பணம் வரவழைத்தாய் என்று சொல்லுகிறேன்''

''இல்லை. ஒரு சதமும் கொடுக்கவில்லை''

''உனக்குக் குமுதினி என்ற பெண்ணைத் தெரியுமா?''

குமரேசன் மனம் ஒருகணம் குறுகுறுத்தது. பத்திரிகைச் செய்தி நினைவில் வந்தது.

படிப்பகம்

www.padippakam.com



''இல்லை...''

''மீண்டும் பொய். கமலாவைத் தெரியுமா?''

''பார்த்ததில்லை. அந்தப் பெண்ணோடுதான் சுசீலா வந்தாள்.''

''கமலாவின் உண்மைப் பெயர்தான் குமுதினி என்பது இத்தனை நாளாக உனக்குத் தெரியாதா?''

''தெரியாது...''

''மீண்டும் பொய். பத்திரிகையில் நீ படிக்கவில்லையா?''

''இல்லை.''

''மீண்டும் பொய். உனக்குத் தெரிந்த கமலா புலிப்படை உளவுப் பிரிவைச் சேர்ந்தவள் என்பது உனக்குத்தெரியுமா?''

''தெரியாது.''

''இங்கே ஒரு அரசியல் பிரமுகரைக் கொல்லுவதற்குத் திட்டமிட்டு ஆரம்பவேலைகள் செய்ய அனுப்பப்பட்டாள் என்பது தெரியுமா?''

''தெரியாது.''

''அவளுக்கு சிங்களமும் இங்கிலீசும் நன்கு பேசத் தெரிந்ததால் தான் அவளை அனுப்பினார்கள் என்பது தெரியுமா?''

''தெரியாது''

''அவள் உனக்கு ஒரு பிரசென்ட் அனுப்பினாள், இல்லையா?''

''இல்லையே''

இன்ஸ்பெக்டர் கோபத்தோடு எழுந்து நின்றான்.

www.padippakam.com



''என்னடா பொய் சொல்லுகிறாய். நீ சொல்லுவதெல்லாம் பொய். உன் பெட்டியில் இருந்த இந்த உறையைப் பார்''

''ஆ இந்த மண்ணா. சுசீலா தந்தாள்''

வெறும் பயனற்ற மண் என்பது போல குமரேசன் அர்த்தம்படச் சொன்னான். அந்த மண் கவரை அவன் முற்றாக மறந்திருந்தான். இன்ஸ்பெக்டர் முன்புறமாக வைத்த போதே திடுக்கிட்டான்.

''உனக்கு வெடிங் பிரசென்டாக கமலா கொடுத்தனுப்பினாள், உன் காதலிமூலம்...''

''இருக்கலாம்...''

''ஏன்டா பொய் சொல்லுகிறாய். கமலாவிற்கு நன்றி கூற வேண்டும் என நீ டெலிபோனில் உன் காதலியிடம் சொல்லவில்லையா?''

''நினைவில்லை''

''பொய். நீ டெலிபோனில் பேசியதை ரேப்பில் போட்டுக் காட்டட்டா...''

''நான் பேசியிருக்கலாம்''

''பொய் பேசிவிட்டு மறைக்கப் பார்க்கிறாய். இது வெறும் மண்ணாடா...''

''ம்ம்...'' குரலில் பொய்மை தொனித்தது.

''இது எங்கேயிருந்து வந்த மண்?''

''தெரியாது...''

''மீண்டும் பொய். இது வடக்கே இருந்து வந்த மண்; மண் எடுத்த இடத்தைக் கூட சுசீலாவும் சொல்லிவிட்டாள்''

www.padippakam.com



''இருக்கலாம்...'' சோர்வான குரல்.

''தமிழ் ஈழ மண்ணை மறக்க வேண்டாம் என்பது மட்டுமல்ல அதை விடுவிக்க உதவவேண்டும் என்றும்தான் கமலா இந்தச் சின்னம் மூலம் செய்தி அனுப்பினாள். என்ன சொல்லுகிறாய்?...''

''இருக்கலாம்.''

''இதே போன்று கமலாவின் பெட்டியிலிருந்தும் நியூஸ் பேப்பரில் சுற்றிய மண் பக்கட் இருந்தது தெரியுமா?''

''தெரியாது....''

''இதோ பாரடா. இரண்டும் ஒரே மண், ஒரே தமிழ் நியூஸ் பேப்பரில் சுற்றப்பட்டிருக்கிறது.''

''ஆச்சரியம்தான்...''

குமரேசன் தன் வியப்பைத் தெரிவித்த வேளை பொலிஸ் இன்ஸ்பெக்டரின் விவேகத்தையும் ஒப்புக் கொள்வதாயிற்று.

''இதன்மூலம் நீ ஒரு விடுதலைப்புலிகளின் ஆதரவாளன். ஆனால் கோழைத்தனமாகப் பேசுகிறாய். அல்லது நடிக்கிறாயா?''

குமரேசன் எதுவும் பேசமுடியாமல் எதிர்ச் சுவரைப் பார்த்தான். இன்ஸ்பெக்டர் குறிப்பு எழுதுபவனைத் தடுத்து விட்டுச் சொன்னான் :

''உன் மௌனத்தின் மூலம் நீ ஒரு கோழை என்பதை ஒப்புக் கொள்ளுகிறாய். கமலா துணிச்சலோடு சொன்னாள். 'இது என் தேசத்து மண். இதற்காக உயிரையும் தருவேன். கையில் சைனயிட் கிடைக்காதபோதும் என்னிடமிருந்து எந்த உண்மையும் பெறமுடியாது. முடிந்தால் வதைத்துக் கொல்லுங்கள்' என்றாள். தெரியுமா?''

குமரேசன் உடலே புல்லரித்தது.

''இப்போதுதான் அறிகிறேன்.''

www.padippakam.com



''ம்ம் கவேட் லையர்.''

இன்ஸ்பெக்டர் எழுந்து சென்றான்.

ஒரே நாவரட்சி, விசாரணையை ரைப் செய்தவனிடம் தண்ணீர் கேட்டான். அவன் எதிரே நின்ற ஒருவனை அழைத்துத் தண்ணீர் எடுத்து வரும்படி சொன்னான்.

வரண்ட நாவை நனைத்தான். இனி என்ன நேருமோ என்ற ஏக்கம். விசாரணையில் மாட்டப்பட்டதை நினைந்த அச்சம். வெட்கம். கழுத்தும் முகமும் வியர்த்து விட்டது. கைக் குட்டையால் துடைத்தான். நானே இத்தனை கஷ்டப்படும் போது சுசீலா எப்படி விசாரணையைத் தாங்கிக் கொண்டாளோ என மனம் பேதலித்தது. கமலா எத்தனை துணிச்சல்காரி.

விசாரணையில் அச்சுறுத்தி சுசீலாவைக் கமலா போன்ற விடுதலைப் புலி ஆக்கியிருப்பார்கள் என உறுதியாக எண்ணிக் கொண்டான். அதனால்தான் அவளை இத்தனை நாளாக விட்டுவிடாமல் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

கமலா போல உறுதியாகச் சுசீலா பேசியிருப்பாளா? இருக்காது. அவளும் முன்னர் புலிப்படையில் இருந்திருப் பாளோ என்ற சந்தேகமும் ஏற்பட்டது, அல்லது அவள் மட்டும் கொழும்புக்கு வர எப்படி அனுமதித்தார்கள். அப்பாவை விட்டு கமலாவுக்குத் துணை, சந்தேகம் ஏற்படாத நடுத்தர வர்க்கம், இரவு தங்க வசதி ஆகியவற்றிற்காகத் தான் பாஸ் தந்தார்களோ.

குமரேசன் மனம் பலவாறு எண்ணியது. உள்ளே நடை பெறும் வதைகள்போல சுசீலாவையும் நிர்வாணமாக்கி...! அவனால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. இரத்தம் கொதித்தது. இதற்கெல்லாம் எப்படிப் பழிவாங்குவதுஎனவும் எண்ணிக் கொண்டான்.

திருமணம் செய்யப் போகும் எனக்கே கையைப்பிடிக்கவே உரிமை இல்லாதபோது இவர்களுக்கு இதற்கெல்லாம் சட்ட அனுமதி உண்டா?

www.padippakam.com



பாரிஸ்டர் அன்று கூறிய வார்த்தைகள் அவன் நினைவில் வந்தன :

''குற்றம் செய்தவர்களை விடுவிப்பதைவிட எதிர்பாராமல் மாட்டுப்படும் அப்பாவிகளை சட்டப் பிடியிலிருந்து விடுவிப்பதுவே கஷ்டமானதும் செலவானதும் ஆகும்.''

இன்ஸ்பெக்டர் மீண்டும் வந்தான்.

ரைப் செய்த அவனது வாக்குமூலப் பிரதியில் கையெழுத்துப்போட்டு தேதியும் போடும்படி சொன்னான். படித்துப் பார்க்காமலே ஊமையனாகக் கையெழுத்திட்டான்.

பாஸ்போட், டிக்கெட், பிற கடிதங்கள், மண்பாக்கெட் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டதாக ஒரு கடிதத்தில் சார்ஜன் கையெழுத்திட்டுக் கொடுத்தான். மறு பிரதியில் குமரேசன் கையெழுத்தை வாங்கினான்.

''மிஸ்டர் குமரேசன், கொழும்பு தவிர வேறு எங்கும் எங்கள் அனுமதியில்லாமல் போகக் கூடாது. நாங்கள் கேட்கும்போதெல்லாம் இங்கே வரவேண்டும். இப்போது போகலாம்... உங்கள் பொருட்கள் இங்கே பாதுகாப்பாக இருக்கும்''

இன்ஸ்பெக்டர் சொன்னான்.

குமரேசன் ஏதோ உடனடி விடுதலை பெற்ற உணர்வுடன் 'லிப்ட்'டுக்குக் காத்திருக்கும் பொறுமையுமின்றி படிக்கட்டு வழியே யந்திரம்போல இறங்கினான். வெளியே வந்து தெருவில் இறங்கியதும் வீசிய கடற்காற்று உடலைத் தழுவி வியர்வையை நீக்கி புதிய உணர்வு தந்தது.

அடுத்து என்ன என்ற சிந்தனையோடு தெருவழியே நடந்து கடற்காற்றின் தழுவலுடன் காலிமுகத் திடர் வழியே வந்தான். காலிமுக ஒட்டல் அருகே வந்ததும் ஒரு ஒட்டோவில் ஏறி வீட்டை நோக்கிச் சென்றான்.

www.padippakam.com



## 28

வீடு சேர்ந்ததும் ஆறாவது மாடியில் நடந்த விஷயங்கள் பற்றி அக்கா ஆவலோடு குமரேசனிடம் விசாரித்தாள். அவன் விரிவுபடுத்தாமல் சுருக்கமாக, சாதாரண விசாரணை நடந்தது போலக் காட்டிக் கொண்டான்.

''ஏதோ நீ வந்து சேர்ந்ததே நிம்மதி. அந்தப் பெண் போல தடுத்து வைத்து விடுவார்களோ என்று பயந்து கொண்டிருந்தேன்''

''என்னைத் தெரியாதா அக்கா. நான் ஏதாவது தவறு செய்தாலல்லவா பிரச்சனை...''

''உன் அத்தான் புலிகிலி என்றெல்லாம் சத்தம் போட் டார்...''

''எனக்கு எல்லாம் தெரியுமக்கா. அவர் தொழில் செய் பவர். அரசாங்கத்தின் சார்பாக நிற்கவேண்டியவர். ஆகவே நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டேன்.''

''என்னடா சொல்லுகிறாய். அவர் சொல்வதுபோல கனடாவுக்குப் போகிறாயா''

''இல்லையக்கா. நான் இந்த வீட்டைவிட்டு வேறு இடம் பார்க்கப் போகிறேன்.''

''அதற்கு என்ன அவசரம்?''

''இல்லையக்கா. என்னைத் தடுக்க வேண்டாம். உங்க ளைப் பொறுத்தவரை அதுவே நல்லது. இத்தனை நாள் தங்கமுடிந்ததே சந்தோஷம் தான்''

''அதைப் பிறகு யோசிப்போம் இப்போது அண்ணனுக்கு போன் பண்ணி நீ வந்த செய்தியைச் சொல்லு''

குமரேசன் உடனே அண்ணனுக்குப் போன் செய்தான். நடந்தவை பற்றி சுருக்கமாகச் சொன்னான். அவனே

www.padippakam.com



'வீட்டுக்குவா' என்று கேட்கவில்லை. மற்றவர்களிடமிருந்து, உறவினரிடமிருந்தும் தான் அந்நியப்படுவதாக உணர்ந் தான். தீண்டாதவனாகவா? தியாகியாகவா? அந்த சிங்கள இன்ஸ்பெக்டரே கமலாமேல் எத்தனை மதிப்பு வைத்துள் ளான். சுசீலா?

அக்காவைத் திருப்திப் படுத்த அங்கு சாப்பிட்டுவிட்டு சுசீலாவின் சித்தப்பா வீட்டுக்குச் சென்றான். அவ்வீட்டுக்கு மட்டுமே தான் நெருங்கி வருவதாக எண்ணிக் கொண்டான். சுசீலாவும் தானும், இருவருமே ஒரே விஷயத்தில் பாதிக்கப் பட்டவர்கள்; ஒன்றுபடுவதுபோல் உணர்ந்தான்.

சித்தப்பா அன்று அவனுக்கு நடந்தவை பற்றி அறிந் திருக்க வில்லை. அவனாகவே நடந்த விஷயங்களை சின்னம்மாவுக்கும் சுருக்கமாகக் கூறினான். ஒரு விஷயத்தை மட்டும் அவரிடம் அழுத்தமாகக் கூறினான்.

''நடைபெற்ற விசாரணை முறையைப் பார்க்கும்போது அப்பாவியான சுசீலாவைப் புலிப்படை சார்ந்த பெண் என்று ஒப்புக்கொள்ளச் செய்திருப்பார்கள். பயங்கரவாத தடுப்புக் காவல் சட்டவிதிகளில் போட்டிருப்பார்கள்''

''ஏனப்படிச் சொல்லுறீங்க?''

''அங்கு விசாரணையில் சுதந்திரமே இல்லை. பொலி ஸாரின் கபடங்கள், தந்திரங்கள், பயமுறுத்தல்களை எதிர்ப் பது சுசீலா போன்ற பெண்ணால் முடியாத காரியம்...''

''கமலா...''

''அவளை விட்டுவிடுங்கள். அவள் சாகத் துணிந்த புலி. அவளை அவர்களால் எதுவும் செய்துவிட முடியாது.''

விசாரணை எல்லாம் முடிந்துவிட்டால் வேறு இடத்திற்கு அழைத்துவந்து பார்க்க விடுவார்கள், பாரிஸ்டர் மூலமும் இன்ஸ்பெக்டரிடம் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும். எப்படியும் மற்றுமொரு வாரத்தில் அவளைப் பார்த்து விட

படிப்பகம்

www.padippakam.com



லாம் என எல்லாம் அறிந்தவன் போல குமரேசன் நம்பிக்கையூட்டினாள்.

சுசீலாவின் அப்பாவுக்குப் பதட்டம் ஏற்படாதபடி செய்தி அனுப்பும்படி சித்தப்பாவிடம் குமரேசன் சொன்னான், நாமே எல்லாம் சுசீலா பற்றிக் கவனிப்போம், இப்பக்கம் வரவேண்டாம் எனத் தெரிவிக்கும்படியும் குமரேசன் ஆலோசனை கூறினான். இங்கு வந்தால் அவரையும் சில வேளை விசாரணைக்கு அழைத்துவிடலாம், ஏன் வீண் தொல்லை என்று கூறினான்.

சின்னம்மா தந்த டீயைக் குடித்துவிட்டுப் புறப்பட்டாள்.

நண்பர்கள் வேலாயுதத்தையும் பார்த்திபனையும் பார்த்து நடைபெற்ற சம்பவங்கள் எல்லாவற்றையும் கூறி மனம் ஆறலாம் என்ற நினைவுடன் பாமன்கடைப்பகுதியில் இருந்த அவர்களது அறையை நோக்கிச் சென்றான்.

இன்னொரு அவசர தேவையும் இருந்தது. தங்குவதற்கு தனிய அறை ஒன்று தேடவேண்டும், அதற்கும் வேலாயுதமே உதவக் கூடியவன் என எண்ணிக் கொண்டான். வாடகைத் தொகை அவனுக்கு முக்கியமில்லை.

அக்கா வீட்டுக்கு போன் செய்ய வேண்டாம். நான் வேறு இடம் மாறி விலாசம் தருவதாக சித்தப்பாவிடம் தெரிவித்தபோது தங்களுடன் தங்கலாம் என சின்னம்மா சொன்னார். தற்போது அங்கு தங்குவதை அண்ணனும் விரும்பமாட்டார்; கலியாணத்தின் பின்னர் அங்கு தங்க நேரிட்டாலும் ஒருவரும் குறை கூற முடியாது எனவும் நினைத்தான்.

வேலாயுதத்திடம் சென்றபோது மாலை ஆறுமணியாகிவிட்டது. அப்போது தான் நண்பர் இருவரும் அங்கு வந்து சேர்ந்திருந்தனர்.

சுசீலாவுக்கு நேர்ந்ததை முன்னர் வந்து சொல்ல மனம் எழவில்லை. சில நாளில் அவள் வெளியே வந்துவிடலாம், நடைபெற்றது சாதாரண விஷயமாகிவிடும் என எண்ணி

படிப்பகம்

www.padippakam.com



யிருந்தான். தற்போது நிலமைகள் முற்றாக மாறிவிட்டன. திருமணத் தேதி பற்றியே தீர்மானிக்க முடியாத நிலை. அவனுக்கும் தங்குவதற்குப் புதிய இடம் வேறு தேவைப் பட்டது. அதற்கும் வேலாயுதத்தின் உதவி வேண்டும்.

குமரேசனைக் கண்டதும் திருமண நாளைத் தெரிவித்து அழைப்பதற்காக வந்துள்ளான் என்றே வேலாயுதம் எண்ணி னான். அவன் கேட்பதற்கு முன்னரே குமரேசன் பேச்சை ஆரம்பித்தான் :

''வேலா, எதிர்பாராத சம்பவங்கள் நடந்துவிட்டன. உங்களுக்கே அதிர்ச்சியாயிருக்கும். பத்திரிகைகளில் பார்த் தீர்களோ தெரியவில்லை''

''ஏன், சுசீலாவோடு ஏதாவது பிரச்சனையா? பத்திரி கையில் எதுவும் பார்க்கவில்லையே.''

வியப்போடு வேலாயுதம் கேட்டான்.

சுசீலாவிற்கும் தனக்கும் தொடர்ந்து எதிர்பாராமல் நடந்த சம்பவங்களைச் சொன்னான். வியப்பூட்டிய அவனது சோகமான கதை ஒருபுறம் கவலையும் மறுபுறம் அச்சமும் அவர்கட்குத் தந்தது. சட்டம் ஒருபுறம், அரசின் பாஸிஸப் போக்கு மறுபுறம். அவற்றை வெளியே காட்டாதபடி வேலா யுதம் ஆறுதல் கூறினான்.

''சுசீலாவில் குற்றம் ஒன்றும் இருக்காது. ஆனால் பொலிஸார் அவளையும் புலியாக்கியிருப்பார்கள்''

''உண்மைதான். சிங்களப் பொலிஸார் கண்களில் தமிழர்கள்எல்லோருமே புலிகள்தான். தேசியப் பேரினவாதம் ஏற்படுத்தும் வெறி. ஒரு எல்லையைக் கடந்ததும் அது தேசிய பாஸிஸ வடிவம் எடுத்து விடுகிறது...''

பார்த்திபன் சொன்னான்.

''ஜெர்மனியில் நடந்ததுபோல என்று சொல்லுகிறீர் களா?''

www.padippakam.com



''ஆமாம். யூதர்கள் எல்லோருமே தமது எதிரிகள் என்றாகிவிடுகிறது. அப்படித்தானே...''

வேலாயுதம் இடைமிட்டுச் சொன்னான்.

''இதே நிலை தமிழர்க்கும் ஏற்பட்டு வரும்போது அதுவும் தேசிய பாஸிஸமே... சிங்களவர், முஸ்லிம்களுக்கும் வடக்கே இடமில்லை என்றவாறு விரட்டப்பட்டு விட்டார்களல்லவா? இது ஜனநாயக விரோதமான செயலல்லவா?''

பார்த்திபன் நடுநிலைக் கோட்பாட்டுடன் சொன்னான்.

''தேசியம் உணர்ச்சிவசமான அழிவுக்கும் இட்டுச் செல்லக்கூடியது என்று நீங்கள் முன்னர் சொன்னீங்க''

பார்த்திபனைப் பார்த்து வேலாயுதம் கூறினான்.

''ஆமாம். அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் வரை முற்போக்கானது. இன்றைய தமிழரை ஒடுக்கும் போக்கு பிற்போக்கானதே. கூட்டான மக்கள் ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்த சோஷலிசப் பாதையை விட்டு முதலாளித்துவ கெடுபிடிக்கு வழி வகுக்கிறது. ஏகாதிபத்தியமும் முதலாளித்துவத்தை ஆதரிக்குமே தவிர சோஷலிசத்தை இல்லை. தற்போது உலக வங்கிக் கடன்கள் தாராளமாக வழங்கப்படுகின்றன.''

பார்த்திபன் விளக்கத்தை இருவரும் ஆர்வமோடு கேட்டனர்.

''மக்கள் தேசியப் பற்றில் இப்போக்கிற்கு ஆதரவு வழங்குகிறார்களே.''

குமரேசன் சொன்னான்.

''யுத்தச் செலவெல்லாம் மக்களது உழைப்பே. ரொட்டி போதும் பட்டர் வேண்டாம் என்ற நிலையில் போருக்கு உதவுகின்றனர். பின்னர் போரை எதிர்ப்பவர்களையும் பாஸிஸம் சுட்டுப் பொசுக்கி விடுகிறது. ஜே.வி.பி இளைஞர்

www.padippakam.com



கள் பல்லாயிரக்கணக்கில் சுடப்பட்டும் டயர் போட்டு எரிக்கப் படவில்லையா?''

''முதலாளித்துவ நலனுக்கு தேசீயம் வேண்டும். பாட்டாளியின் நலனுக்கு உதவக் கூடியது சோஷலிசத்திற்கு இட்டுச் செல்லும் மக்கள் ஜனநாயகப் புரட்சி என்று சொல்லு றீங்க.''

''ஆமாம். இன்றைய போக்கில் அப்படிப்பட்ட போராட் டம் ஒடுக்கப்பட்டுவிட்டது. பாட்டாளி, தொழிலாளரே இன ரீதியில் பிரிந்து விட்டனர். இறுதித் தீர்மானத்தை ஏகாதி பத்தியமே முடிவு செய்யும்.''

பார்த்திபன் சொன்னான். வேலாயுதம் மூன்று கப்பில் தேநீர் தயாரித்து வந்தான்.

குமரேசனுக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது என்பதே வேலாயுதத்திற்குப் பிரச்சனையாயிருந்தது.

இந்தப் போராட்டங்களில் நீங்க மட்டுமென்ன பல்லா யிரக்கணக்கானவர் அகப்பட்டுத் துன்பப்படுகின்றனர். எதிர் பாராமல் நீயும் மாட்டுப்பட்டுவிட்டாய். இப்போது எப்படி உனக்கு உதவலாம் என்றே தெரியவில்லை. யுத்தகாலமாகி ஜனநாயக சட்டங்களெல்லாம் செத்துவிட்டன... எவருக்கும் எதுவும் எவ்வேளையும் நடைபெறலாம்.''

வேலாயுதம் தன் அனுதாபத்தைப் பொதுமைப்படுத்தித் தெரிவித்தான்.

''வேலா, எனக்குத் தற்போது ஒரு உதவிதான் வேண்டும்...''

''முடிந்தால் நிட்சயம் செய்வேன்''

''தங்குவதற்குத் தனியான இடம் வேண்டும். வாடகை பற்றிக் கவலை வேண்டாம்''

www.padippakam.com



குமரேசன் கூறிவிட்டு தன்னையும் ஒரு புலியாக்கி மைத்துனர் வெளியேற்ற விரும்புவது பற்றி விரிவாகக் கூறினான்.

''அது பிரச்சனையில்லை. இந்தப் பகுதியிலேயே றூம் பார்த்துத் தருகிறேனே. நீயும் ஞாயிற்றுக்கிழமை பத்திரிகைகளில் வாடகைக்கு என்று போடப்படும் விளம்பரங்களைப் பார்த்துக்கொள். எங்களைப்போல சிங்கள வீடுகளில் றூம் தேடுவதே நல்லது. அவர்கள் பலருக்கு இந்தப் பிரச்சனை பற்றித் தெரியவராது. அவர்கள் வாடகைப் பணத்தில்தான் கண்ணாயிருப்பார்கள்.''

''நானும் தற்போது ஒரு தீண்டாச் சாதிபோல ஆகி வருகிறேன்''

குமரேசனின் சோகமான குரல்.

''சுசீலாவிற்காக நீயும் காத்திருப்பதென்றால் நீயும் ஒரு வேலை தேடிக் கொள்வதே நல்லது''

''ஆமாம். யோசித்துப் பார்க்கிறேன். சிங்களப் பொலிஸாரே நம்மையும் இயக்கத்தில் சேர்த்துவிடுவார்கள் போலிருக்கிறது...'' வரட்டுச் சிரிப்போடு குமரேசன் சொன்னான்.

''பாதிப்புகள்தான் பல வேளைகளில் மக்களைப் போராடத் தூண்டுகிறது, போராளியாக்கி விடுகிறது''

## 29

நாலு வாரங்கள் கழிந்த பின்னரே சுசீலாவைப் பார்த்துப்பேச சித்தப்பாவுக்கு அனுமதி கிடைத்தது. சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு பொரளைப் பக்கமாக இருந்த தமது கிளை அலுவலகத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தனர்.

சித்தப்பா சில உடைகளும் சின்னம்மா ஸ்பெஷலாகத் தயாரித்த உணவையும் எடுத்துச் சென்றார்.

www.padippakam.com



பொலிஸார் முன்னிலையிலேயே பார்த்துப் பேச அனுமதித்தனர்.

'சித்தப்பா' என்று சிரித்து நடித்தபடி வந்த சுசீலா திடீரென விரிட்டு அழத் தொடங்கினாள். அழுகை ஆறும் வரை பேசுவது அறியாமல் சித்தப்பா நின்றார்.

''மிஸ்டர் குமரேசன் போய் விடவில்லை. உனக்காகக் காத்திருக்கிறார்...''

சித்தப்பாவின் வார்த்தைகளைக் கேட்டதும் குமரேசனுக்காகவும் ஒரு விம்மலும் அழுகையும்.

''பயப்படாதே. நீ ஒரு குற்றமும் செய்யவில்லைத் தானே. விரைவில் வெளியே வர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்''

அழுகை ஒய்ந்ததும் சின்னம்மாவின் சுகம் விசாரித்தாள். வீட்டுக்குத் தெரிவித்த விபரங்களையும் கேட்டறிந்தாள்,

''எல்லோருக்கும் வீண் சிரமமும் கவலையும் தந்து விட்டேன்' எனக் கூறியும் கலங்கினாள்.

''எப்படி உள்ளே பிரச்சனையில்லாமல் இருக்க முடிகிறதா?''

'ம்ம்' என்று கூறியபடி கண்களால் காவல் புரிந்த பொலிஸ்காரனைக் காட்டினாள்.

முகத்திலே தவிர்க்க முடியாத வாட்டம். உடையளவில் எல்லாம் முன் போலவே இருந்தது. 'பொலிஸாரே நன்கு உடுத்துச் செல்லும்படி ஏற்பாடு செய்வார்கள்' என சித்தப்பாவும் அறிந்திருந்தார்.

''சிறிது மெலிந்து போய் விட்டாய்...''

''நல்லதுதானே, அவர்கூட நான் சிறிது பருத்து விட்டேன் என்று சொன்னார்.''

ஒரு வரட்டுச் சிரிப்பு.

www.padippakam.com



''என்னென்ன பொருட்கள் வேண்டும்? நீ சொன்னால் அங்கு வாங்கிக் கொண்டு வந்து தருவேன். அல்லது அடுத்த சனிக்கிழமை இங்கு பார்க்க வரும்போது எடுத்து வருவேன்.'

''நாலுசோப், டூத்பேஸ்ட், பிரஸ்ஸும் நாலுப்படி வாங்கி வாருங்க. அங்குள்ள சிலபேருக்கு எதுவுமே கிடையாது. வந்து பார்க்கவோ, உதவவோ கூட யாரும் கிடையாது''

காவலாளியின் செவிக்கு எட்டாத விதமாக மெல்லிய குரலில் சொன்னாள்.

''சரி அப்படியே எடுத்து வருகிறேன். கமலாவை அங்கு காணவில்லையா?''

''அங்கு இல்லையே. இயக்கம் சார்ந்தவர் என உறுதி யாக அறிந்தவர்களை எவருமே பார்க்காதபடி வேறு இடத் தில் வைத்திருப்பார்களாம்.''

தான் அறிந்தவற்றைச் சுசீலா சொன்னாள். காவலாளி மறுபக்கம் திரும்பி எவரோடோ பேசும்போது அடித் தொண்டையால் சொன்னாள்.

சித்தப்பா அத்தகைய விபரங்களை அறியும் ஆவலில், தான் அவ்விடத்தில் கேட்டதே தவறு, சுசீலாவுக்கு அதனால் வீண் தொல்லை ஏற்படலாம் என மேலும் தொடர்வதை விட்டு விட்டார்.

''இனிமேல் மிஸ்டர் குமரேசன் உன்னைப் பார்க்கவர அனுமதி பெற முயல்வார். எப்படியும் பெற்று விடுவார்.''

''இந்த நிலையில் அவரைப் பார்ப்பதுதான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அவர் கனடா போய் விட்டாலும் நான் கவலைப்படமாட்டேன். நீங்களும் சொல்லலாம்''

சுசீலா கூறும்போது கண்கள் கலங்கி நா தளதளத்தது.

''அவர் என்ன சொன்னாலும் போகமாட்டார். முன்னரிலும் பார்க்க இப்போது உறுதியாக உள்ளார்...''

ஒ. ம—11

www.padippakam.com



பார்வை நேரம் முடிந்து விட்டதாக காவலாளியான பொலிஸ்காரன் நினைவூட்டினான். சித்தப்பா கொண்டு வந்த உடைகள், உணவு ஆகியவற்றை அவனிடம் கொடுக்கும்போது நூறு ரூபா நோட்டு ஒன்றையும் சேர்த்துக் கொடுத்தார். அவன் பெற்றுக் கொண்டான். அவன் எதிர் பாராது, 'லஞ்சமா?' என சத்தமிட்டால் சுசீலாவுக்கு உடை, உணவோடு செலவுக்குப்பணம் தருவதாகச் சொல்லி விடலாம் என ஏற்கெனவே திட்டமிட்டிருந்தார். அவர் முயற்சி வெற்றியே, சுசீலாவைப் பார்த்து வெற்றிப்புன்னகை புரிந்தார். பணம் அவனுக்குத் தந்ததை அவளும் வரவேற்றாள்.

''போய் வாறன் சுசீ''

''சின்னம்மாவிற்கு சுகம்...''

அதன் மேல் சுசீலாவின் குரல் எழவில்லை.

## 30

யாழ்ப்பாணக் கோட்டையை விடுதலைப்புலிகள் உடைத்து, கைப்பற்றி விட்ட செய்தி சிங்கள இராணுவத்தினரின் கோபத்தைத் தூண்டியது. பாதுகாப்பு அமைச்சரா யிருந்த ரஞ்சன் விஜெரத்தினவின் மேல் சிங்கள அரசியலார் சீறினர். அவர் பாராளுமன்றத்திலும் வெளியேயும் விடுதலைப்புலிகளை மூன்று மாதத்தில் அடக்கி ஒடுக்குவேன் எனப் பேசி சிங்கள மக்களின் ஆதரவைப் பெற முயன்றார். விடுதலைப்புலித் தலைவரின் தலையைக் கொழும்புக்குக் கொண்டு வருவேன் என்ற விதமாக சிங்களப் பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் செய்திகள் வெளியிட்டன. இராணுவ நடவடிக்கைகளும் உக்கிரமடைந்து வந்தன.

வேலாயுதம் வசிக்கும் வீட்டுப் பகுதியிலேயே குமரேசன் வாடகை அறை ஒன்று எடுத்துக்கொண்டான். தங்குவது மட்டுமே. சாப்பாடு எல்லாம் வெளியே. வேலாயுதமும் பார்த்திபனும் மட்டுமே அவனுக்கு ஆதரவும் துணையுமா

www.padippakam.com



யிருந்தனர். அண்ணாவிடமும் அக்காவிடமும் இடையிடையே சென்று வந்தான். சித்தப்பாவிடம் சனிக்கிழமை தோறும் சென்று சுசீலா பற்றிய செய்தியை அறிவான்.

பாரிஸ்டர் மூலம் இன்ஸ்பெக்டர் சில்வாவுடன் சுசீலாவைக் கண்டு பேசுவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்தான். 'கவனிக்கிறேன்' என்று பாரிஸ்டர் முன்னர் சில்வாவிடம் கூறியது அவனது பணத்தையும் பதம் பார்த்து வந்தது. அதைப் பற்றிக் குமரேசன் அதிகம் கவலைப்படவில்லை.

சுசீலாவிற்கு உள்ளே அதிக பிரச்சனையில்லாமல் இருக்கவேண்டும் என்பதே அவன் குறியாயிருந்தது.

பல முயற்சி, செலவின் பின்னர் சுசீலாவைச் சென்று பார்க்க குமரேசனுக்கும் அனுமதி கிடைத்தது. அன்று சனிக்கிழமை காலையில் சித்தப்பாவுடன் பொரளை அலுவலகத்திற்குக் குமரேசனும் சென்றான்.

அன்று எதிர்பாராமல் குமரேசனைக் கண்டதும் சுசீலா தான் நலமாக இருப்பதைக் காட்ட சிரிப்பை உதிர்க்க முயன்றாள். அதே வேளை அவளை அறியாமல் கண்களும் கலங்கிவிட்டன, நேரில் சிலமாதங்கள் கழித்து எதிர்பாராமல் கண்ட அதிர்ச்சியும் மகிழ்ச்சியுமாக அவளது கண்ணீர் பேசியது. பிரித்தறிய முடியவில்லை.

குமரேசனால் உடன் எதுவும் பேச முடியவில்லை. ஒரே மௌனம். அதன் மூலம் தமது உணர்வுகளைக் காட்டிக் கொண்டனர்!

''எப்படி சுகமா??''

சுசீலாவே மௌனத்தை முறிக்க முதலில் குரல் எழுப்ப முயன்றாள்.

''நானெல்லவா கேட்க வேண்டும்''.

''எனக்காக வந்து நீங்களும் மாட்டிக்கொண்டு கஷ்டப் படுவதுதான் கவலையாயிருக்கிறது...'',

www.padippakam.com



தடுமாறிய வார்த்தைகளில் தன் அடிமன உணர்வுகளைத் தெரிவிக்க முயன்றாள்.

''நானும் இதேபோல உங்களைச் சொல்லலாம் தானே...''

சித்தப்பா அவர்களைப் பேசவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

''பட்ட துன்பம் அத்தனையும் போதும். நீங்க கனடாவிற்குப் போய் விடுவதையே விரும்புவேன்...''

''ஏன் சுசீ அப்படிச் சொல்லுறீங்க?''

''அநீதியான சட்டங்கள். இந்தப் பிரச்சனைகளிலிருந்து எப்பொழுது விடுபடமுடியுமோ தெரியவில்லை. உங்க பணக்கார உறவினரெல்லாம் பயப்படுவார்கள்...''

''இது அவர்களது பிரச்சனையில்லை. என் பிரச்சனை. கலியாணம் என்பது பதிவு செய்து தாலி கட்டினால் மட்டுந் தானா. என் நெஞ்சைப் பொறுத்தவரை நீ என் காதலி; மனைவி.''

''நல்ல சாதுரியமாகப் பேசிறீங்க''

''நாம் சந்தித்து நாலு நாட்கள் பொறுத்தும் இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் தானே காதல் என்பது இன்பமா, துன்பமா என்று உங்க டீச்சர் சந்தேகப்பட்டுக் கேட்டது பற்றிச் சொன்னீங்க. இரண்டும் இணைந்தது தான் காதல் என டீச்சரைக் காணும்போது பதில் கூறவேண்டும்....''

சுசீலா அவனது தர்க்க நியாயத்தைக் கேட்டுச் சிரித்தாள்.

''நீங்க எனக்காக வீணே எத்தனை காலம் காதல் என்ற கற்பனையோடு காத்திருக்கப் போகிறீங்க''.

''சுசீ, நீங்க மனதைத் தளரவிட வேண்டாம். நாங்க விரைவில் வெளியே நீங்க வர முயற்சிகள் செய்துகொண்டே இருக்கிறோம்.''

www.padippakam.com



குமரேசன் வார்த்தைகளில் உறுதியான நம்பிக்கை.

''ஏதோ எனக்கு வரவர நம்பிக்கை குறைந்து வருகிறது. சித்தப்பாவும் நீங்களும் கவலையும் கஷ்டமும் படுவதுதான் தாங்கமுடியாமலிருக்கிறது.''

வார்த்தைகள் மேலே எழாது விம்மத் தொடங்கினாள். அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த கவலை எல்லாம் வெடித்து பீறிட்டது.

குமரேசனும் சித்தப்பாவும் பேசுவது அறியாமல் அவளது உணர்ச்சிகள் அடங்கும் வரை மௌனமாயிருந்தனர். சில நிமிடங்கள் கழித்து முந்தானைச் சேலையால் மூக்கையும் கண்களையும் துடைத்துவிட்டு சுசீலா சிரிக்க முயன்றாள்.

''சுசீ எப்படியும் நம்பிக்கையைக் கைவிடாதே. சட்டங்களுக்கும் ஒரு எல்லை உண்டு. விசாரணை எல்லாம் முடிந்து விட்டதால் இனிமேல் ஒரு பிரச்சனையும் ஏற்படாது. எங்க முயற்சி நிச்சயம் வெற்றி பெறும்.''

சுசீலா உடல் சிறிது மெலிந்திருந்தது. அதை அவன் நினைவூட்டவில்லை. சித்தப்பாவே முன்பு கூறியிருந்தார். அது தவிர வேறு மாற்றம் எதுவுமில்லை. உள்ளே அவளது கைச் செலவிற்கும் அறிந்தும் அறியாமலும் சித்தப்பாவே பணம் கொடுத்திருந்தார். வருபவர்களைப் பார்க்கும் வேளை உள்ளே போலீஸார் துன்புறுத்தாமல் மரியாதையாக நடத்துகின்றனர் என்பதைக் காட்ட வேண்டும் என்பதில் போலீசார் கவனமாயிருந்தனர்; கடிதம் எதுவும் எழுதமுடியாது. நேரில் குறை கூறவிடாமல் பொலீஸ் காவல் வேறு இருந்தது. மனிதர் பேச்சு, எழுத்து உரிமையை அவர்கள் காப்பாற்றும் வழிகள்!

நேரமாகிவிட்டதை காவல் காத்தவன் நினைவூட்டினான். அவனைப் பொறுத்தவரை இவை நாளாந்த துன்பியல் நாடகமாகவே இருந்தது போல் தெரிந்தது.

www.padippakam.com



கொண்டுவந்த உணவு, பொருட்களைக் காவல் பொலிஸ் காரன் நூறு ரூபா நோட்டுடன் சரிபார்த்து, சுசீலாவிடம் தந்தான்.

''அடுத்த சனி... வேறு என்ன பொருள் வேண்டும்...?''

''நீங்க வந்தால் போதும். அதை எதிர்பார்த்து இவ் வாரத்தைக் கழிப்பேன்?''

மீண்டும் வரட்டுச் சிரிப்பு. கண்கள் வேறு கலங்கின. தன் கண்கள் கலங்குவதைச் சுசீலாவுக்குக் காட்டாத விதமாக புறமுதுகு காட்டிவிட்டு கைக்குட்டையால் குமரேசன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

சட்டங்கள் மனித உணர்வுகளை அறியாதவை. குற்ற வாளிகளைவிட நிரபராதிகளை ஈவிரக்கமின்றி அதிகமாகப் பாதித்துவிடுகிறது. மனதில் தோன்றிய புதிய கருத்துடன் குமரேசன் தன்னையும் சாந்தப்படுத்த முயன்றான்.

## 31

சனிக்கிழமை தோறும் சுசீலாவைச் சந்தித்துப் பேசுவது தொடர்ந்து நடைபெற்று வந்தது அதேவேளை அவளை வெளியே கொண்டுவரும் முயற்சியையும் அட்வகேட் மூலம் தொடர்ந்து முயல்வதைக் குமரேசன் விட்டுவிடவில்லை. அதற்குரிய செலவு, லஞ்சம் ஆகியவற்றையும் தாராளமாக அவரிடம் கொடுத்து வந்தான்.

மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பயங்கரவாதத் தடுப்புச் சட்டக் கைதிகள் பற்றிய அறிக்கைகளைப் பாதுகாப்பு அமைச்சகத்தின் உதவிச் செயலாளர் ஒருவர் பரிசீலிப்பதான சட்டவிதி எழுத்து வடிவிலேயே இருந்தது. அதன் நடை முறை என். ஐ. பி. சுப்பிரின்டெனின் முடிவிலேயே தங்கி யிருந்தது.

''இங்கு ஜனநாயகமா, பாஸிசம்'' என நண்பர் கூறி வந்தனர் பொலிஸ் ஆட்சி. முதல் முயற்சி தோல்வி, அடுத்த

www.padippakam.com



முயற்சிக்கு மேலும் மூன்றுமாதம் காத்திருக்க வேண்டும். இப்படியே பதினெட்டு மாதகாலமும் ஆகலாம் என வேறு சட்டத்துறை சார்ந்த நண்பர்கள் கூறிவந்தனர்.

அவர்களது பாரிஸ்டர் நண்பர் அடுத்ததடவை விடுதலை வாங்கித் தருவதாகக் குமரேசனுக்கும் சித்தப்பாவிற்கும் ஆறுதல் கூறிவந்தார். குமரேசனே பொறுப்பு எல்லாவற்றையும் முன்வந்து ஏற்பது சித்தப்பாவிற்கு ஆறுதலாயிருந்தது. சில சனிக்கிழமைகளில் சித்தப்பா சுசீலாவிடம் போகமுடியாத போதும் குமரேசன் உணவு மாற்று உடைகளுடன் சென்று அவளுக்கு ஆறுதல் சொல்லி வந்தான்.

வாரம்தோறும் காண்பது, பேசுவது அவனுக்கும் ஆறுதலாயிருந்தது. துன்பமும் மகிழ்வும்; இதுதானா காதல்!

இடையில் மீண்டும் ஒருதடவை விசாரணைக்கு இன்ஸ்பெக்டர் குமரேசனையும் அழைத்திருந்தான். முன்போலன்றி துணிச்சலோடு அவன் போய் வந்தான். இன்ஸ்பெக்டர் சில்வாவும் முன்போலல்லாமல் ஓரளவு மரியாதை காட்டினான். அதன் காரணத்தைக் குமரேசன் அறியாமலில்லை.

பொலிசாரின் வலையிலிருந்து சுசீலாவையும் விடுவித்துத் தப்பும் வழிகளைப் பற்றியே குமரேசன் மனம் இரவு பகலாக ஆராய்ந்து வந்தது. பொலிஸ், என்ஐபி சட்ட விதிகள் அவற்றின் பலம், பலவீனம் பற்றியெல்லாம் தற்போது அவன் ஓரளவு தெரிந்தும் கொண்டான்.

கொழும்பிலே வேலை தேடுவதாக வெளியே காட்டிக் கொண்டபோதும் குமரேசன் அத்தனை ஆர்வம் காட்டவில்லை வேலை கிடைத்தாலும் தற்போது பொலிசாரிடம் மாட்டுப்பட்டிருக்கும் நிலைமையை அறிய நேரிட்டதும் வேலையிலிருந்து வேளியேற்றி விடுவார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும்.

www.padippakam.com



வேலாயுதம், பார்த்திபன், சித்தப்பா மூவருமே அவனது நண்பர்களாகத் தொடர்ந்தனர். அண்ணனிடமும் அக்காவிடமும் இடையிடையே சென்று வந்தான். அவர்கள் இருவரைப் பொறுத்தமட்டில் விடுபடமுடியாத சிக்கலில் இவன், தானே மாட்டிக்கொண்டு வீணாக அவதிப்படுகிறான் என்பதே.

பார்த்திபனும் வேலாயுதமும் அடிக்கடி குமரேசனின் அறைக்குச் சென்று அரசியல், பொருளாதாரம், பிற விஷயங்கள் பற்றியெல்லாம் கலந்து பேசி வந்தனர். குமரேசனும் தன் பயனான பொழுதுபோக்கிற்கு அவர்களிடம் போய் வருவான்.

அன்று பார்த்திபன் அறைக்கு வந்திருந்தபோது குமரேசன் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். உலகச் செய்தியில் ஈராக், குவெயித் யுத்தச் செய்திகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சி.என்.என். செய்தியில் ஈராக் மேலான அமெரிக்க ஏவுகணைத் தாக்கங்கள் விண்வெளி வாண வேடிக்கை போலக் காட்டப்பட்டன. ஈராக்கில் உடைந்த கட்டிடங்கள், மரணமடைந்தோர், மருத்துவமனையில் காயமடைந்தவர் சிகிச்சை எல்லாவற்றையும் காட்டினர். செய்தி அறிக்கை முடிந்ததும் டி.வி.யில் ஒலியைக் குறைத்துவிட்டு குமரேசன் பார்த்திபனைப் பார்த்துச் சொன்னான் :

'உலக யுத்தத்தையே வீட்டிலிருந்து பார்க்கக் கூடிய மாதிரி தொழில் நுட்ப வளர்ச்சி வந்துள்ளது, பார்த்தீங்களா?''

''ஆமாம் கோரமான யுத்தத்தைக் கூட பொழுதுபோக்கு காட்சியாக மாற்றி வருகின்றனர்.''

பார்த்திபனின் கூற்று குமரேசனை ஒருகணம் உலுப்பி விட்டது.

''நீங்க டி. வி.க்கு எதிராளி போலிருக்கிறது...''

''ம்...ம்... சந்தேகமில்லை. அதற்குக் காரணங்கள் வேறு. இது ஒரு வாணிபப்பெட்டி. நவீன கண்டுபிடிப்பான எலெக்ரோனிக் தொழில் நுட்பத்தின் வாணிப மீடியா. நுகர்

www.padippakam.com



பண்டசந்தையை ஏகாதிபத்தியம் இக்கருவி மூலம் விரிவு படுத்தி ஏகபோகமாக்கி வருகிறது...''

''டி. வி. யால் பயனெதுவும் இல்லை என்றும் சொல்லு வீர்கள் போலிருக்கிறது...''

''ஏனில்லை. தனிமையைப் போக்கவும் பொழுது போக்கவும் வாய்ப்பான கருவியே. இதை விற்பதன் மூலமும் லாபம் திரட்டுகிறார்கள். இந்த உற்பத்தியில் மட்டும் எத் தனை சர்வதேசக் கம்பனிகளிடையே போட்டா போட்டி• டி. வி. மூலம் விளம்பரம், அரசியல் பிரச்சாரம் மட்டுமல்ல ஏகாதிபத்தியப் பண்பாடு, கலாச்சாரங்களையும் எம் நாடு களிடை புகுத்திக் கொண்டிருக்கிறது.''

''அதனால்தான் நமது கலை, இலக்கியம், பண்பாடு களை நாம் வளர்த்தெடுக்க வேண்டும் என முன்பொரு தடவை நீங்கள் கூறியது இப்போது நினைவுக்கு வரு கிறது.''

பார்த்திபனை முதலில் கண்டுபேசிய காலத்தில் அவன் கூறிய கருத்தை நினைவூட்டி குமரேசன் சொன்னாள்.

''டி.வி. நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனித்தால் தனிநபர் வன்முறையை அவர்கள் பிரச்சாரம் செய்வதைக் காணலாம். ஏகாதிபத்தியம் தன் பண்பாட்டில் நடத்தும் கொலைகள், சுரண்டல் பற்றி எதுவும் காட்டுவதில்லை. பொதுப் பிரச் சனைகளுக்குத் தனியார் மூலம் தீர்வுகளைப் பிரச்சாரம் செய்வார்கள். வாழ்க்கையின் வெற்றி தனிப்பட்டவர் முயற்சி யால் எனப்பிரச்சாரம் செய்வார்கள். மறைமுகமாக,பாதிக்கப் பட்டவர் வறுமைக்கும் அதுவே காரணம் என்று தவறான பிரச்சாரம் செய்கின்றனர்.''

''நீங்க எத்தனை எதிர்ப்புக் கூறினாலும் டி. வி. யின் வளர்ச்சியை நிறுத்திவிட முடியாது...''

''பிற்போக்கான பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தும் இக் கருவியை முற்போக்காக, சமூக ஆரோக்கிய வளர்ச்சிக்காக எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதே நமது நோக்கம்.

www.padippakam.com



இன்று காட்டப்படும் காட்சிகள் சிறுவர்களைப் பொய்மையை நம்பச் செய்கிறது. தீவிரச் செயல்களில் ஈடுபடச் செய்கிறது. உண்மைக்கும் அதீதக் கற்பனைக் காட்சிகளுக்கும் வேறு பாட்டை அறியச் செய்வதில்லை. கற்பனையான வீரச் செயலில் ஈடுபட்டு 'அடி, உதை, கொலை' என்று குரலெழுப்பி குற்றச் செயல்களில் ஈடுபடச் செய்கிறது. இதுபோன்ற வளர்ச்சியையா விரும்புகிறீர்கள்?''

பார்த்திபன் பகர்ந்தான்.

''நீங்க கூறுவதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. அமெரிக்கா, கனடாவிலெல்லாம் குழந்தைகளுக்காகத் தனி நேரம் ஒதுக்கி விடுகின்றனர். அவர்கள் தூங்கிய பின்னரே இரவில் செக்ஸ், வன்முறைக் காட்சிகளைக் காட்டுகின்றனர்.''

தன் நேரடி அனுபவத்தை குமரேசன் சொன்னான்.

''ஆனால் நடைமுறையில் குழந்தைகள் இரவில் இக் காட்சிகளுக்காகத் தூங்காமல் விழித்துப் பார்ப்பார்கள். தடுக்க முடியுமா'' பார்த்திபன் சிரித்தபடி சொன்னான்.

''அதுவும் உண்மைதான்''

குமரேசனும் சிரித்தபடி ஒப்புக் கொண்டான்.

குமரேசன் மேலும் தொடர்ந்தான்.

''நமது டி.வி. நிகழ்ச்சிகளில் நாம் நம் தேசியத்தைப் பேண முடியாது என்று சொல்லுகிறீர்களா?''

''முன்னரே சொன்னேன் என்று நினைக்கிறேன். தேசியம் என்பது சந்தைக்கான முதலாளித்துவத்தின் கோட்பாடு. இன்று அது ஏகாதிபத்தியத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. நுகர் பண்டங்களில் மட்டுமல்ல. செய்திகள், பொழுதுபோக்கிலும் ஊடுருவுகிறது விளம்பரத்திற்காக நடத்தப்படும் 'சோப் ஒப்பரா' தொடர் நாடகங்களிலேயே நாள்தோறும் பார்க்கிறோமே...'!

www.padippakam.com



''எப்படியானாலும் பொழுதுபோக்கு அம்சத்தில் அவை சிறப்பாகத்தான் உள்ளன...''

குமரேசன் தன் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி னான்.

''அதை நான் மறுக்கவில்லை. பண்டங்களைக் கவர்ச்சி யாக்குவதுபோல தமது தொழில் நுட்பந் திறமையுடன் உளவியல் ரீதியாக மக்களைக் கவரக்கூடியதாகவும் கதை, காட்சிகளைத் தயாரித்து விடுகிறார்கள். அத்தோடு தமது பண்பாடு கலாச்சாரத்தையும் திணித்து விடுகிறார்கள் என்பதையே கூறுகிறேன்.''

''அவற்றில் கலைத்தன்மை இல்லை என்று கூறுகிறீர் களா?''

''கலைத்தன்மை இருப்பதால்தானே பெரும்பாலோரைக் கவர முடிகிறது. கலைத்தன்மையின் மட்டம்தான் குறைவாக உள்ளது. சமுதாய உணர்வு குன்றியவையாக அவை இருப் பதைக் காணலாம்.''

பார்த்திபன் கூறிக் கொண்டிருக்கும்போது வேலாயுதம் உள்ளே வந்தான். டி.வி. பற்றிய பேச்சு அத்தோடு நின்றது.

வேலாயுதத்தை குமரேசன் வரவேற்று தன் கட்டிலில் உட்காரச் செய்தான்.

சுசீலாவைக் கடைசியாகக் கண்டுபேசியது பற்றியும் வெளியே விடுவிக்கும் முயற்சிகளின் நிலைமை பற்றியும் வேலாயுதம் விசாரித்தான்.

விரைவில் எல்லாம் வெற்றி பெறும் எனக் குமரேசன் தன் நம்பிக்கையைத் தெரிவித்தான்.

''அடுத்து கலியாணம்தானே.''

''அதென்ன கலியாணம் நான் முன்னரே சொன்னேனே அவள் என் மனைவியாகிவிட்டாள். அதனாலேதான் இத்தனை கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறேன்.''

www.padippakam.com



''எங்களுக்கு கலியாணச் சாப்பாடே கிடையாதா?''

''முதலில் வெளியே வரட்டும்; அவளையும் அழைத்து ஒரு ஓட்டலில் உங்களுக்குச் சாப்பாடு வாங்கித் தருகிறேன்.'

குமரேசன் எழுந்து தன்னிடமிருந்த பிஸ்கெட் பாக்கெட்டை அவர்கள் முன்னே வைத்தான். 'ஒரேஞ் பார்லி' புட்டியை உடைத்து இரண்டு கிளாஸில் ஊற்றிக் கொடுத்தான்.

''அப்படி உன் விருந்து வேண்டாம். ஓட்டலில் நாங்கள் விருந்து தருகிறோம். நீங்க இருவரும் குடும்பமானதும் வீட்டிலே விருந்து தந்தால் போதும், கனடாவிற்குப் போகு முன்...''

வேலாயுதம் சிரித்தபடி சொன்னான்.

''என் திட்டங்களையெல்லாம் சுசீலா வெளிவந்த பின்னரே நடைமுறைப்படுத்துவேன். அப்போது பொறுத்துப் பாருங்கள். விருந்து தர வாய்ப்பில்லாது போனாலும் போய் விடலாம்.''

''என்டா இப்ப இப்படிச் சொல்லுகிறாய்...''

''எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்தது. எங்களையே பொலிசார் புலிகளாக்கிவிட்டனர். அவள் வெளியே வந்த பின்னர் எங்களுடன் பழகுவதே ஆபத்தாகலாம். அக்கா, அண்ணாகூட தயங்குகிறார்கள்...''

குமரேசனின் சோர்வான பேச்சுக்கு வேலாயுதம் கூறினான் :

''பயப்படாதே, நாங்கள் அப்படியெல்லாம் தயங்கப் போவதில்லை.... கடைசிவரை உங்களோடு சேர்ந்து நிற்போம்.''

படிப்பகம்

www.padippakam.com



# 32

அன்று சனிக்கிழமை சுசீலாவைப் பார்ப்பதற்குச் சித்தப்பாவும் குமரேசனோடு வந்திருந்தார். இருவருமே மிகுந்த உற்சாகத்துடன் சென்றனர். அடுத்த வாரத்துள் சுசீலா விடுதலை அடைவாள் என பாரிஸ்டர் மூலம் செய்தி எட்டியது.

விடுதலை அடைந்ததும் அடுத்து செயலாற்ற வேண்டியவை பற்றி இருவரும் பல்வேறு விதமாகப் பேசிக் கொண்டனர். திருமணப்பதிவு, கோவில் திருமணம்; எது முதலில் நடைபெற வேண்டும் என்பதில் இருவரிடையேயும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

எது நடந்தாலும் நடக்காவிட்டாலும் எல்லாம் ஒன்று தான்; சுசீலா எப்படியும் என் மனைவியே என்ற உறுதியான நினைவில், சித்தப்பாவும் சுசீலாவும் விரும்பியபடி தீர்மானிக்கட்டும் எனக் குமரேசன் எண்ணிக் கொண்டான்.

விடுதலை பற்றிய நல்ல செய்தியை அன்று சுசீலாவிடம் தெரிவிப்பதா விட்டுவிடுவதா என்பதிலும் இருவரிடையேயும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

''நீங்க விரும்பியபடி செய்யலாம்...''

சித்தப்பா குமரேசனின் முடிவுக்கு விட்டு விட்டார்.

இருவருடனும் பேச ஆரம்பித்ததும் உதட்டில் புன்னகையுடன் சுசீலாவே சொன்னாள்:

''உங்கள் இருவரது முகத்தைப் பார்த்தாலே ஏதோ நல்ல செய்தி கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது.''

சித்தப்பாவும் குமரேசனுமே சிரிக்க நேரிட்டது. எத்தனை ஊகம்; எத்தனை துன்பத்திடையேயும் சில வியப்பான கூற்றுகள், சம்பவங்கள் மனிதருக்கு அவரை அறியாமலே சிரிப்பூட்டி விடுகிறது என எண்ணிக் கொண்டான்.

www.padippakam.com



''கெட்டிக்காரி எப்படிக் கண்டு பிடித்தாய்?''

''உங்க முகங்களைப் பார்த்தாலே தெரிகிறதே''

''நீ எங்கே சைக்கோலோஜி படித்தாய்.''

''உங்க பேச்சிலிருந்துதான். சரி செய்தியைச் சொல்லுங்கோ.''

''நீயே சொல்லு''

சிரித்தபடியே குமரேசன் சொன்னான்.

''உங்க பாஸ்போட், டிக்கெட் கிடைத்து விட்டது...''

''இல்லையே...''

''உங்களுக்கு வேலை கிடைத்து விட்டது...''

''இல்லை.

''அப்பா வந்துவிட்டார்...''

''சீ... என்ன கற்பனை...?''

''அப்ப நீங்களே சொல்லுங்களேன். விளையாட்டு வேண்டாம். சீக்கிரம் சொல்லுங்களேன். நேரமாகப் போகிறது...''

சிணுங்கியபடியே சொன்னாள்.

''அடுத்த சனிக்கிழமை பார்க்க வரமாட்டோம்...''

''அப்படி என்ன முக்கிய சம்பவம்?''

''அதற்குமுன் விடுதலை...''

அவர்கள் எதிர்பார்த்ததுபோல சுசீலாவின் முகத்தில் மகிழ்ச்சிக் குறி எதுவும் ஏற்படவில்லை. இருவரும் ஏமாற்றமடைந்தனர்.

''போயும் போயும் இதுவா செய்தி. எனக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை.''

www.padippakam.com



''சுசீ, நம்பு. உண்மையாகத்தான் சொல்லுகிறேன்.''

குமரேசன் அழுத்தமாகக் கூறி நம்ப வைக்க முயன்றான்.

''நீங்க வீணாக இலவுகாத்த கிளியாக காத்திருப்பது தான் கவலையாயிருக்கிறது...''

''ஏன் சுசீ இப்படியெல்லாம் மனச்சோர்வுடன் பேசுகிறாய்...''

''அங்கே உள்ளே என்னைப் போன்று எத்தனைபேர் இருக்கிறார்கள். சிங்களப் பெட்டைகள் கூட உங்களுக்குத் தெரியுமா, நான் சிங்களம் கூட இப்போது பேசுவதற்கு கற்றுக் கொண்டிருக்கிறேன்.....'

வலிந்து சிரித்தபடியே கூறி சுசீலா பேச்சின் போக்கை மாற்ற முயன்றாள். ஜே. வி. பி. சார்ந்த சில பெண்கள் கூட அங்கே தடுத்து வைத்திருப்பது பற்றியும் அவர்களும் தன்னுடனும் மற்றைய தமிழ் பெண்களுடனும் அன்போடு பழகுவது பற்றியும் சுசீலா சொன்னாள்.

சித்தப்பாவைவிட குமரேசனுக்கு அவளது பேச்சு ஒரே ஏமாற்றமாக இருந்தது. 'சரி விட்டுவிடுவோம்' சில நாளில் அதிர்ச்சியுடன் நடைமுறையில் பார்த்து தமது கூற்றை ஏற்கட்டும் எனப் பேசாமல் விட்டு விட்டான்.

''கமலா பற்றிய செய்தி ஏதாவது கிடைச்சுதா?;'

மெல்லிய குரலில் கேட்டான்.

''இங்கே இல்லை. வேறு இடத்தில். பதினெட்டு மாதத்திற்குமேல் தடுத்து வைத்திருக்கமுடியாது. அல்லது வழக்குப் பதியவேண்டும்...'?

சுசீலாவும் அதே குரலில் பதிலளித்தாள்.

## 33

அன்று காலை குமரேசன் தன் அறையை விட்டு பஸ் ஏறுவதற்காக ஹவ்லக் ரோட்டை நோக்கிப் புறப்பட்டான்.

www.padippakam.com



புறக்கோட்டைப் பகுதியில் சுசீலாவுக்காகச் சில பொருட்கள் வாங்க வேண்டியிருந்தது. அத்தோடு நண்பகல் உணவிற்குச் சின்னம்மா அழைப்பதாகச் சித்தப்பா சொல்லியிருந்தார். ஓட்டல் சாப்பாடு சலிப்புத் தரும் வேளை இடையிடையே வீட்டுச் சாப்பாடு கிடைப்பது மகிழ்ச்சியாகவே இருந்தது. இத்தகைய அழைப்புகளை அவன் விட்டுவிடுவதில்லை. சின்னம்மாவும் அவனது உணவுப் பிரச்சனையை நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

புறக்கோட்டை செல்லும் நெருக்கடி பஸ்ஸில் ஏறி டிக்கெட் எடுத்துவிட்டான். ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை பஸ் ஓடியிருக்கலாம். நிலமதிரும் வெடிச்சத்தம். செவிகளை அதிரச் செய்தது. பஸ்ஸே குலுங்கி பிரயாணிகள் ஒருவருக்கு மேல் ஒருவராக விழநேரிட்டது. பஸ் மேல் கற்கள் வீசப் பட்டது போன்ற ஓசை. கண்ணாடிகள் உடைந்த ஒலி. ஸ்ரெயறிங் பிடிதவறி அதன்மேல் விழுந்த டிரைவர் பிரேக் கைப் போட்டு ஓரமாகப் பஸ்ஸை நிறுத்தினான்.

அதிர்ச்சியிலிருந்து எழுந்த பலருக்குச்சிறுசிறு காயங்கள். மரணபயம் நீங்கி சிறு காயங்களிலிருந்து வடிந்த ரத்தத்தை நிறுத்தும்வேலையில் ஈடுபட்டனர்.

சிறிது தூரத்தில் பல வண்டிகள் சிதறிக் கிடந்தன. அல்லோல கல்லோலமாக ஆங்காங்கே பலர் ஓடிக் கொண் டிருந்தனர். ‘பொம்ஸ் பொம்ஸ்’ என்ற குரல் சிலரிடமிருந்து ஒலித்தது. கட்டிடங்கள் பல உடைந்து கிடந்தன. ஒரே புகை மயம்.

இடது தோள்புற சேட்டை ஊடறுத்து வெட்டிய காயத்தை இரத்தம் பெருகாமல் அழுத்தியபடி குமரேசன் பஸ்ஸை விட்டு கீழே இறங்கி தெருவோரமாக உட்கார்ந்து விட்டான்.

அந்த பஸ்ஸின் பின்புறமாக வேறு பஸ்கள், கார்கள் தடைப்பட்டு நின்றன. எல்லோரும் வெளியேறி நடைபெற்ற சம்பவத்தைப்பற்றிய விபரத்தை அறிய முயன்றனர். அங்கும் காயமடைந்தோர் சிலர்.

படிப்பகம்

www.padippakam.com



அரைமணி நேரத்தில் அம்புலன்ஸ்களின் ஓசையுடன் பொலிஸ், ராணுவ ஜீப்புகள், டிரக்குகள் வந்து சேர்ந்தன.

பழுதடையாத பஸ், கார்கள் வெவ்வேறு பாதைகளில் திருப்பிவிடப்பட்டன. தெருவைத் தடை செய்த சிதறுண்ட கார்கள், பஸ்கள், கட்டிடத் துண்டுகள் எல்லாம் இராணுவத் தினரால் அகற்றப்பட்டன. இறந்தவர் உடல்கள் துணிகளால் மூடப்பட்டன. காயமடைந்தவர் எல்லோரும் அம்புலன்ஸ், பஸ்கள், ஜீப்புகளில் ஏற்றப்பட்டனர்.

காயமடைந்த சிலரோடு குமரேசனும் ஒரு பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

அரசாங்க பெரியாஸ்பத்திரியில் ஒரே கூட்டம். டாக்டர் களும் நர்ஸ்களும் ஆங்காங்கே ஓடிக் கொண்டிருந்தனர். படுகாயமடைந்தோர் ஆபரேசன் அறைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிறுகாயமடைந்தோர் தனியே கவனிக்கப்பட்டனர். பெயர், முகவரி விபரம் பதிவு செய்து, சிகிச்சைக்குரிய பத்திரம் பெறும் பகுதியிலேயே அந்த வியப்பான செய்தி அவனது காதிலும் விழுந்தது.

''பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜரத்தினா வும் குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்து வேறு பலருடன் அங்கு கொண்டு வரப்பட்டார்!''

உயிர் தப்பியது அதிர்ஷ்டமே. சில நிமிடங்கள் முன்ன தாக பஸ் ஏறியிருந்தால் அவனுக்கும் அதே நிலை ஏற்பட் பட்டிருக்கலாம். விபத்துப்பற்றி சுசீலா அறிந்ததும் எவ்வாறு பாதிப்படைவாள் என்ற கற்பனையில் அவ்வேளை ஈடுபட் டிருந்தபோது சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்த நர்ஸ் அழைத்தாள்.

இரத்தம் படிந்த சர்ட்டை கழட்டச் செய்து காயத்தை 'அன்ரிசெப்டிக்'டில் நனைந்த 'கட்ட'னால் துடைத்தாள்.



படிப்பகம்

www.padippakam.com



ஓரே எரிச்சல் உணர்வு. மருந்துபோட்டு காயத்தைக் கட்டி விட்டாள். அங்கும் சிலர் பேச்சில் மற்றோர் அதிர்ச்சி யான செய்தி.

''எல் டி டியே வெடி குண்டு வைத்திருப்பார்கள். கார் ஒன்றிலே வெடிகுண்டுடன் தற்கொலைப்படை சார்ந்தவன் வெடிக்கச் செய்தான். ஹியூமன் பொம்ப்''

என்ன வேடிக்கை. பயங்கரம். குமரேசன் நெஞ்சு ஒரு கணம் அதிர்ந்தது.

ஆஸ்பத்திரி டிக்கெட் நம்பரை நர்ஸ் அவன் கையில் கொடுத்து வீட்டுக்குப் போகலாம் என சிங்கள மொழியில் கூறினாள்.

வெளியே வந்து ஒரு ஆட்டோவில் ஏறினான். குண்டு வெடித்த தெரு வழியே வந்து கொண்டிருந்தான். போக்கு வரத்துக்கு தெரு திறந்துவிடப்பட்டுவிட்டது. தெருவோர வீடுகளில் பல இடிந்து போயிருந்தன. தார் ரோட்டில் ஆங்காங்கே இரத்தக்கறை. இடத்தை வேடிக்கை பார்க்க பலர் வந்து போய் கொண்டிருந்தனர். அவ்விடத்தில் வண்டிகள் மெதுவாகவே ஓடின. பொலிசார் மக்களையும் வாகனங்களையும் தேங்காதபடி, அசைந்து செல்லும்படி பணித்துக் கொண்டிருந்தனர்.

ஆட்டோ ஓட்டி வந்தவன் குமரேசனிடம் சொன்னான்: ''மந்திரி ரஞ்சன் விஜெயரத்ன இறந்து விட்டான். மேலும் பதினாறு பேர் கொல்லப்பட்டனர்.''

அறைக்குள் சென்றதும் உடைகளைமாற்றி லூங்கியைக் கட்டிக்கொண்டு ரேடியோவைத் திருப்பினான். மணி நண் பகல் 12மணியாகிக் கொண்டிருந்தது. ஆல் இந்தியா ரேடியோ மீட்டரை வைத்துவிட்டு கட்டிலில் படுத்துக் கொண்டான்.

நண்பகல் செய்தியில் முதல் அறிவிப்பாக ரஞ்சன் விஜெரட்னாவுடன் மேலும் பலர் கொல்லப்பட்டது அறிவிக்கப் பட்டது.

www.padippakam.com



தமிழருக்கு எதிரான வகுப்புக் கலவரம் ஏதாவது மீண்டும் கொழும்பிலே வெடித்து விடுமோ என்ற அச்சம் மனதில் ஏற்பட்டது. அறையிலேயே தங்கிவிடுவதாகத் தீர் மானித்தான். கீழ் வீட்டாரின் போனில் சின்னம்மாவிடம் மறுநாள் சாப்பிட வருவதாகத் தெரிவித்து விட்டு வந்து மீண்டும் படுத்துக் கொண்டான்.

மேலும் இறத்தவர், காயமடைந்தவர் எண்ணிக்கைகள் மற்றைய ரேடியோ செய்திகள் மூலம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். பசி எடுத்தபோதும் வெளியே ஓட்ட லுக்குச் செல்ல மனம் எழவில்லை. சிந்தனையும் கற்பனை களும் பல்வேறு திசைகளில் மனதை அரித்துக் கொண்டி ருந்தன.

பசியை அடக்க காலையில் சாப்பிட்டு எஞ்சியிருந்த ரொட்டித் துண்டிற்கு பட்டர், ஜாம்பூசி வாழைப்பழத்துடன் சாப்பிட்டு ஆரஞ்சு பார்லியைக் குடித்துவிட்டு மீண்டும் படுத்தான்.

இடது புறம் புரண்டு படுக்கமுடியவில்லை. காயக்கட்டு. எப்படியும் வேலாயுதமும் பார்த்திபனும் வேலை முடிந்து அறைக்குவர ஆறுமணியாகிவிடும்; அதுவரை அங்கேயே தூங்க முயன்றான்.

இரண்டு மணி வானொலிச் செய்தி அறிக்கை கேட்ட பின்னர் அப்படியே தூங்கிவிட்டான். பயங்கர கனவுகள், சுசீலா இரத்தம் படிந்த உடையுடன், 'என்னைக் காப்பாற்ற வேண்டாம். நீங்கள் ஓடிவிடுங்கள்' என்ற கூக்குரல்.

வியர்வை படிந்த கழுத்தோடு எழுந்தபோது மணி ஐந்தாகிவிட்டது. குளித்தால் காயக்கட்டு நனைந்து விடலாம் என்ற எண்ணத்தில் டவலை நீரில் நனைத்து உடல் வியர்வையைத் துடைத்தான்.

ஐந்தரை மணி பி. பி. சி செய்தியைக் கேட்டு மேலும் உறுதியான செய்தி விபரங்களை அறிந்துவிட்டு வேலாயுதத்

www.padippakam.com



திடம் செல்லப் புறப்பட்டான். காலையில் அணிந்த அதே நீலப் பான்டுடன் கோடிட்ட சேட்டைப் போட்டுக் கொண்டான். நண்பர்களது அறையில் மேலும் செய்திகள் அறியலாம், மனம் ஆறலாம் என்ற நப்பாசை.

எதிர்பாராமல் கதவு தட்டும் ஓசை. 'இவ்வேளை யாராயிருக்கும்' வேலாயுதமா' என்ற சந்தேகத்துடன் கதவைத் திறந்தான்.

இரண்டு பொலீசார்!

## 34

உள்ளே நுழைந்த பொலிஸார் அறை பூராவும் தேடி நோட்டம் போட்டனர். சில கடிதங்களையும் இரத்தக் கறை படிந்த சேர்ட்டையும் எடுத்துக்கொண்டனர். கதவைப்பூட்டச் செய்து கீழே நின்ற ஜீப்பை நோக்கி அழைத்துச் சென்றனர்.

கீழ்வீட்டார் எல்லோரும் வெளியே வந்து அவனை அழைத்துச் செல்வதை வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றனர்.

ஆறாவது மாடியில் அவன் மட்டுமல்ல ஐம்பது அறுபது பேர் வரையில்; மூன்று அறைகளில் நெருங்கி நின்றனர். உட்கார இடமில்லை; அத்தனை நெருக்கம். பெண்கள் தனியாக ஒரு பகுதி அறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அதற்குள் சுசீலாவும் இருப்பாளா எனக் கூர்ந்து பார்த்தான். அவள் இருப்பதாகத் தெரியவில்லை. மனதில் ஓரளவு நிம்மதி.

அத்தனை பேரும் அறையில் உட்காருவதற்கு நாற்காலியோ, பெஞ்சோ எதுவும் இல்லை. கால் வலித்தவர்கள் நிலத்திலேயே உட்கார்ந்தனர்.

நாலைந்து பகுதிகளில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது, ஒவ்வொருவராக, சிவில் உடை தரித்த பொலிஸ்காரன் அழைத்துச் சென்றான். விசாரணை முடிந்தவர் வேறு அறையில்.

www.padippakam.com



ஒவ்வொருவரும் தாம் தாம் பொலீஸ் வலையில் மாட்டுப் பட்ட கதையை மற்றவருடன் பகிர்ந்து ஆற முயன்றனர். ரஞ்சன் விஜெரட்னாவின் வெடிகுண்டு மரணமே விசார ணைக்குக் காரணம் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

''கொழும்பிலேகூட தமிழர்கள் வாழுவது ஆபத்தாகி விட்டது. வெடிகுண்டோ, பிறசம்பவங்களை ஒட்டியோ என்னையும் இங்கே கொண்டு வந்துவிடுகிறார்கள்.''

ஒருவர் தன் மனக் கவலையையும் முன்னைய அனுபவத் தையும் கூறி நடைபெறப்போகும் விசாரணை பற்றியும் குமரேசனுக்கு விரித்துக் கூறினார்.

''விசாரணை எப்போது முடியும்?''

''சரியாகச் சொல்ல முடியாது. இரண்டு மூன்று நாளும் ஆகலாம். நான்கூட நாளைக்கு வேலைக்குப் போகவேண் டும். இங்கே அடைபட்டுக் கிடக்கிறேன்.''

''அதுவரையும் இங்கேயா...?''

''ஆமாம் அதுவே பாஸிஸ சட்டம் பிடி.டி.எ. அதோ றூமுக்கு ஒரு ரொய்லெட், வாஷ்பேஸினோடு பைப் இருக் கிறது. தண்ணீர் வரும்.''

''சாப்பாடு...''

''பாக்கெட்டில் தருவார்கள்,''

அவன் கூறியவேளை ஒருவன் ஆளுக்கு ஒரு பாக்கெட் கொண்டுவந்து வழங்கினான்,

குமரேசனுக்கும் ஒரே பசி. சோற்றுப் பார்சலை மற்ற வர்போலச் சாப்பிட்டு விட்டு பைப்பில் நீரைக் குடித்து வயிற்றை நிரப்பினான்.

அந்த அறையிலிருந்து மேலும் மூவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நள்ளிரவாகிவிட்டது. உட் கார்ந்தபடியே பலர் தூங்கி வழிந்தனர். சிலர் அரட்டை யடித்துக் கொண்டிருந்தனர்.

www.padippakam.com



தூக்கத்தை மறந்து குமரேசனும் அந்தப் புதிய நண்பனோடு பேசிக் கொண்டிருந்தான். அவன் மூலம் பல செய்திகளை அறிந்து கொண்டான்.

நண்பனின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தபோது அவனையறியாமல் கண்கள் அடிக்கடி இடுக்கின. பின் அப்படியே சரிந்து விட்டான்.

காலையில் எழுந்தபோது கழிவறை செல்வதே பெரிய பிரச்சனையாகப் போய்விட்டது. மாற்று உடையே இல்லை. பற்பசையோ, சோப்போ கிடையாது, ஒவ்வொருவராக காலைக் கடனை முடித்து வெளியே வந்தனர்,

காலை உணவாகத் தேநீரும் ரொட்டியும் தரப்பட்டது. தமக்குள்ளே அரசியல் பேசினாரே தவிர போலீசாரை எதிர்த்துக் குரல் தர எவரும் முன்வரவில்லை.

மேலும் சிலர் காலையில் அங்கு சேர்க்கப்பட்டனர். பல்வேறு அரசியல் கருத்துக்களும் அங்கு பேச்சில் அடிபட்டன. இத்தொல்லைகளுக்கு மாற்று வழி என்ன என்பதும் ஆராயப்பட்டது.

பாரிஸ்டரிடம் கூட தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்டதன் நிலைமையைத் தெரிவிக்க முடியாது அழைத்து வந்தது தன் துர்ப்பாக்கியம் என எண்ணிக் கொண்டான். சிங்கள வீட்டில் தனி அறையில் இருப்பதிலுள்ள ஆபத்துப் பற்றி நினைத்தான். எவராவது அவனைத் தேடி வந்தாலே அவர்கள் அவன் பற்றிய செய்தியை அறியலாம்.

மாலை நேரமே அவன் அழைக்கப்பட்டான். ஆரம்ப விசாரணை நடத்திய சப்இன்ஸ்பெக்டர் இரத்தக்கறை படிந்த சேர்ட்டையும் அவனது காயத்தையும் சுட்டிக்காட்டி குண்டு வெடிக்க வைப்பதில் அதே இடத்தில் நின்று அவனும் துணை புரிந்ததாகச் சத்தமிட்டான். அவனோடு சேர்ந்த மற்றவரைக் காட்டிக் கொடுக்கும்படி பயமுறுத்தினான். அவனது மேசையில் ரிவோல்வர் ஒன்று இருந்தது. ஆங்காங்கே இரத்தக் கறையும் இருந்ததோடு இரத்த வாடையும் வீசியது.

www.padippakam.com



மேசையில் அவனது எதிரே முன்னைய விசாரணை சார்ந்த அவனது ஃபைல் இருந்தது. இத்தகைய புதிய பொலிஸாரின் தர்க்கீக பார்வை இருக்கும் என அவன் எண்ணியிருக்கவில்லை. பொலிசாரின் கற்பனை அவனைப் பயமுறுத்தியது. 'நிரபராதிகளை விடுவிப்பதுதான் கஷ்ட மானது. செலவானது' பாரிஸ்டரின் கூற்று நினைவில் வந்தது.

''இதோ உன் சேர்ட். இரத்தக் காயம் வெடி குண்டு வெடித்தபோது ஏற்பட்டதுதானே.''

''ம்ம்''

''நீ அந்த இடத்தில் குண்டுவைப்பவருக்கு உதவு தற்கு நின்றிருந்தாய்...''

''நான் பஸ்ஸில் இருந்தேன்...''

''பொய்...அப்போது எப்படிக் காயம் ஏற்பட்டிருக்க முடியும்''

''கட்டிடச் சிதறல்கள் பஸ்ஸில் இருந்த வேறும் சிலரைக்காயப்படுத்தின.''

''பொய் சொல்லுகிறாய். உண்மை சொல்லாவிட்டால் என்ன நடைபெறும் என்று தெரியுமா?''

ரிவோல்வரை எடுத்து அவனது செவியின் அருகேபதித்த படி மீண்டும் சத்தமிட்டான்.

''பொய் பேசாதே. உண்மையைச் சொல்லு. உன் கூட்டாளிகள் யார்?''

குமரேசனது இரத்தம் ஒரு கணம் உறைந்தது.

''நான் கோட்டைக்குச் செல்ல பாமன்கடையில் பஸ் ஏறினேன். குண்டு வெடித்தபோது பஸ்ஸில் இருந்தேன்...''

''அதற்குச் சாட்சி என்ன?''

திடீரென அவனது நினைவில் பளிச்சென ஒரு ஆதாரம்.

''ம்ம் காட்டுகிறேனே...''

எழுந்து நின்று பான்ட் பாக்கெட்டில் இருந்தவற்றை வெளியே எடுத்து மேசையில் வைத்தான். அவனது அதிர்ஷ்

www.padippakam.com



டம் ஆஸ்பத்திரியில் தரப்பட்ட துண்டோடு பஸ் டிக்கெட்டும் இருதந்து- இரண்டையும் சப் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் வைத்தான்.

'இவற்றைக் காட்டி நீ தப்பி விட முடியாது.' என்று கூறிவிட்டு பஸ் ஏறிய இடம், குண்டு வெடித்த நேரம், கண்டக்டர், டிரைவர் மற்றும் காயமடைந்தவர் பற்றியும் விசாரித்தான். பின்னர் ரிவால்வருடன் ஃபைல் எலலாவற்றையும் எடுத்துச் சென்றான்.

கொலையாளி ஒருவன் நீதிபதியின் தீர்ப்பை எதிர்பார்ப்பதுபோல அவனது மனம் அடித்துக் கொண்டது. அதே வேளை இதேபோல சுசீலாவிற்கும் நடைபெறலாம் என எண்ணிக் கொண்டான். பாவம் மீண்டும் அவள் விசாரணைக் கூண்டில்.

அரைமணிநேரம் கழித்து ஃபைலுடன் சப் இன்ஸ்பெக்டர் வந்தான். அவன் பின்னே இன்ஸ்பெக்டர் சில்லா. எதிர்பாராத சந்திப்பு?

''நரோ எஸ்கேப். யுகான் கோ'' என்று கூறி 'எங்கும் செல்லக்கூடாது. தேவைப்படும்போது இங்கே வரவேண்டும்' என்றும் நினைவூட்டினான்.

## 35

அப்பாடா. மீண்டும் உயிர் பெற்ற உணர்வு, லிப்டிலே கீழே வந்து ஒரு ஆட்டோவில் ஏறி அறைக்கு வந்தான்.

கைக்காயத்துடன் குளித்து உடைமாற்றுவதே சிரமமாயிருந்தது. பொலிதீனிலால் பன்டேஜைச் சுற்றிக் கட்டிவிட்டு குளித்தான். வியர்வை நாற்றமடைந்த உடைகளைச் சலவைப் பவுடரில் ஊறப்போட்டுவிட்டு புதிப உடைகளை அணிந்து கொண்டான். அண்மையிலிருந்த ஒட்டல் ஒன்றில் சாப்பிட்டுவிட்டு சித்தப்பாவிற்குப் போன் செய்தான். அன்றும் வர முடியாததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு

www.padippakam.com



மறுநாள் நண்பகல் தவறாமல் வருவதாகத் தெரிவித்தான். தனக்கு நடந்த புதிய அனுபவம் பற்றி எதுவும் கூறவில்லை. அவற்றைக் கூறி அவர்களுக்கு வீண் அச்சம், மனத் துன்பத்தை ஏன் ஏற்படுத்த வேண்டும் என விட்டுவிட்டான்.

வேலாயுதத்தின் அறைக்குச் சென்றபோது இரவு எட்டு மணியாகி விட்டது. அவனைக் குண்டு வெடித்த நிகழ்ச்சிக் கவலையுடன் தேடிக் கொண்டிருந்ததாக நண்பர் இருவரும் கூறினர்.

முதலில் தனக்கு நடந்த சம்பவங்களை விபரமாகக் கூறினான்.

சிறுகாயத்துடன் உயிர் தப்பியது மட்டுமல்ல மீண்டும் பொலிசார் வலையிலிருந்து தப்பியதற்கும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

''இங்கு இது ஒரு தொடர்கதையாகப் போகிறது. பொலிசார் என்ன சம்பவம் நடந்தாலும் வலை வீசிக் கொண்டே இருப்பார்கள், இதிலிருந்து விடுபடும் வழியைத் தேடிக் கொள்ள வேண்டும்.''

பார்த்திபன் சிரத்தையுடனேயே சொன்னான்.

குமரேசன், தான் சாப்பிட்டு வந்த விபரத்தைக்கூறினான். தேநீர் தயாரித்து வழங்கினர்.

ரஞ்சன் விஜெரத்னாவின் மரணம் குறித்த பிரதிபலிப்புகளைப் பற்றிய ஆராய்ச்சியும் நடை பெற்றது. குண்டு வைத்தவரின் தொழில் நுட்ப அறிவு, ஆற்றல், நோக்கம், துணிச்சல், காலகட்டம் பற்றிய விபரமும் ஆராயப்பட்டது. பொலிசார் விடுதலைப்புலிகளை சந்தேகித்தபோதும் வேறு சிலர் பற்றியும் கதை அடிபடுவதுபற்றி வேலாயுதம் விவரித்து இத்தகைய திறமை இராணுவத்திடமும் இருக்கிறது என்றான்.

நண்பர்களிடமிருந்து விடைபெற்றுச் செல்லும்போதும் 'இது ஒரு தொடர் கதையாகப் போகிறது' எனப்

www.padippakam.com



பார்த்திபன் கூறியது அவனது நெஞ்சில் நிழலாடிக் கொண் டிருந்தது. அறையில் சென்று படுத்தபோதும் தூக்கம் உடலைத்தழுவும் வரை நினைவு அந்த வார்த்தைகளை ஒட்டியே வட்டமிட்டது.

மறுநாள் காலையில் புறக்கோட்டைப் பகுதிக்குச்சென்று சுசீலாவிற்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொண்டு நண்பகல் உணவிற்குச் சித்தப்பா வீட்டிற்குச் சென்றான்.

குண்டு வெடிப்பு தொடர்ந்து தனக்கு நடை பெற்ற சம்பவங்கள் பற்றி அவன் மறைக்க விரும்பவில்லை. பதட்ட மேற்படாதபடி சுருக்கமாகக் கூறினான். வியப்போடு எல்லாவற்றையும் கேட்ட இருவரும் தமது அனுதாபத்தையும் தெரிவித்தனர்.

'ஏதோ சுசீலாவின் அதிர்ஷ்டம் தம்பி' - சின்னம்மா சொன்னார்.

சுசீலாவின் விடுதலை குண்டு வெடிப்பால் தடை செய் யப்பட்டதைச் சித்தப்பா வேதனையோடு தெரிவித்தார். பாரிஸ்டரே செய்தியை விளக்கத்தோடு கூறிய விபரத்தையும் சொன்னார். குமரேசனும் அவ்வாறே எதிர் பார்த்திருந் தான். மறுதடவை சுசீலாவை தலை குனிவோடு சந்திப்பது பற்றியே கவலையும் வெட்கமும் ஏற்பட்டது. எத்தனை நம்பிக்கை. ஏமாற்றமாகி விட்டது. 'இது தொடர்கதை ஆகலாம்' என்ற நினைவும் நெஞ்சில் முள்போல் குத்திக் கொண்டிருந்தது.

சின்னம்மாவின் சாப்பாட்டைச் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை. மனமாற மூவரும் கலந்து பேசினர். வேறு என்ன, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் எண்ணிப்பார்த்தனர். இன்ஸ்பெக்டர் சில்வாவைப் பாரிஸ்டர் மூலம் நன்கு கவனிப்பதும் ஒரு வழி என குமரேசன் எண் ணிக்கொண்டான். அன்று அவனது விடுதலைக்கும் அவனே உதவினான் என்பதையும் அவன்மனம்சொல்லிக்கொண்டது.

www.padippakam.com



மாலையில் வீடு திரும்பும்போது, ஒரு மருந்துக் கடையில் காயத்துக்குக் கட்டுப்போடவேண்டிய மருந்துகளை வாங்கிச் சென்றான். ஆஸ்பத்திரிக்குச் சிறுகாயத்திற்காக அவன் அலைய விரும்பவில்லை.

## 36

சனிக்கிழமை வழக்கம் போலவே சுசீலாவைப் பார்க்கச் சென்று சித்தப்பாவும் குமரேசனும் ஏமாற்றத்தோடு திரும்பினர். குண்டுவெடிப்பின் எதிரொலியாக தடுப்புக் காவல் கைதிகளைப் பார்ப்பது தற்காலிகமாகத் தடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினர்.

குண்டு வெடிப்பை ஒட்டி சுசீலாவும் விசாரிக்கப்பட்டு ஏதாவது அசம்பாவிதம் நேரிட்டிருக்குமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. கமலாவும் இதற்குத் திட்டமிடத்தான் அனுப்பப் பட்டாளோ எனவும் மனம் சந்தேகப்பட்டது.

வழக்கமாகக்கண்டு பேசும் அந்த இடத்திற்கு அவர்கள் போலவே மேலும் சிலர் வந்து ஏமாந்து சென்றது ஆறுதல் தந்தது. குண்டு வெடிப்புச் சம்பந்தமான விசாரணை முடியவில்லை. போலீசார் எல்லோரும் அத்தோடு ஈடுபட்டுள்ளனர்; உறவினர் பார்வைக்கு அழைத்து வந்து காட்டவும் பாதுகாப்பிற்கும் போதிய காவலர் இல்லை எனக் காரணம் கூறப்பட்டது.

இவ்வாறு மேலும் இரண்டு சனிக்கிழமைகள் ஏமாற்றத்துடன் கழிந்தன.

நாலாவது சனிக்கிழமை சுசீலாவைப் பார்ப்பது பெரு மகிழ்ச்சியாக இருந்தது. முன்னைய உற்சாகமுமில்லை. சோர்ந்த முகம்; உடலிலே வாட்டம். உடைகூட அழுக்கடைந்ததாயிருந்தது.

வரட்டுச் சிரிப்பை உதிர்த்தாள். சின்னம்மா பற்றி விசாரித்தாள். சின்னம்மாவைப் பார்க்க விரும்புவதாகவும் சொன்னாள். காவலுக்குப் புதியவன் ஒருவன் வந்திருந்

www.padippakam.com



தான். குண்டுவெடிப்பு, விசாரணை பற்றி எதுவும் அவளுடன் பேச முடியாமல் இருந்தது.

''நீங்கள் சுகம்தானே'' என்று குமரேசனைப் பார்த்து அவள் கேட்டதுக்கு அவனால் வாய்திறந்து பதில் கூறமுடியவில்லை. 'ஓ யெஸ்' என்று கூறியபடியே தலையை அசைத்தான். கைக்காயம் முன்னரே ஆறிவிட்டதனால் கட்டுப்போடும் பிரச்சனை இருக்கவில்லை. இல்லையென்றால் அதற்கு விளக்கம் கூறவேண்டிய அவசியம் இருந்திருக்கும்.

''வேறு என்ன பொருட்கள் வேண்டும்.''

அவள் கூறிய எல்லாவற்றையும் எடுத்து வந்திருந்தனர். முடிக்குத் தடவும் நல்லெண்ணையை மட்டும் மறந்துவிட்டனர். அடுத்த சனிக்கிழமை கொண்டு வருவதாகக் கூறினர்.

அவளது பொருட்களைக் காத்திருந்த காவலாளி மூலம் தரும்போது நூறுரூபா நோட்டுடன் குமரேசன் கொடுத்தான். சிவில் உடையிலிருந்த அந்தக் காவலாளி வாங்கிக் கொண்டான்.

சுசீலாவிடம் விடைபெறும்போது அவளது நெஞ்சின் பாரத்தை முகம் சுட்டிக் காட்டியது. இதற்கு முன் சந்தித்த போது விடுதலை பற்றிச் கூறியதும் நினைவில் வந்தது. அவளது அவ நம்பிக்கை அன்று அவனது மனதை நோகச் செய்தது. இத்தடவை அது பற்றி அவன் எதுவும் பேசவில்லை. மௌனத்தின்மூலம் மறைமுகமாகத் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

சுசீலா விடுதலை பற்றிய முயற்சிகளில் மீண்டும் குமரேசன் அதிக சிரத்தையுடன் ஈடுபட்டான். பாரிஸ்டரை அடிக்கடி போய்ப் பார்த்தான்.

இத்தகைய குண்டு வெடிப்புப் போன்ற பெரிய அசம்பாவித சம்பவங்கள் தொடர்ந்து நிகழாமல் இருக்கவேண்டும். சில வாரங்களில் நிச்சயம் விடுதலை கிடைக்கும்என

www.padippakam.com



பாரிஸ்டர் கூறினார். இன்ஸ்பெக்டர் சில்வாவுடன் தான் அடிக்கடி தொடர்பு கொண்டிருப்பது பற்றியும் அவர் சொன்னார். ஏதோ நம்பிக்கை வார்த்தைகளையே நாம் வழக்கறிஞர், டாக்டரிடமிருந்து பணம் கொடுத்துப் பெறுகிறோம் என எண்ணிக் கொண்டான்.

குமரேசனும் வேலாயுதமும் பார்த்திபனும் சித்தப்பாவுமே ஆறுதலும் ஆதரவும் காட்டி வந்தனர். சின்னம்மாவின் அன்பு தனியாயிருந்தது. அக்காவிடமும் அண்ணாவிடமும் இடையிடையே சென்று வந்தான். தனக்கு நடைபெற்ற விபத்துப் பற்றி அவர்களிடம் அவன் எதுவும் கூறவில்லை. பிறருக்குத் தேவையற்ற தமது துன்ப நிகழ்வுகளை மற்றவருக்கும் சொல்லி கவலைதர அவன் விரும்புவதில்லை.

## 37

அன்று மேதினம். காலையில் சுசீலாவைவந்து அழைத்துச் செல்லும்படி என் ஐ பியிலிருந்து சித்தப்பாவிற்குச்செய்தி வந்தது. பாரிஸ்டரும் போன் செய்து சொன்னார்,

சித்தப்பா ஆட்டோவில் குமரேசனின் அறைக்குச் சென்றபோது அதிர்ஷ்டவசமாக அவன் அங்கே இருந்தான், நல்ல செய்தியைக் கேட்ட குதூகலத்தோடு உடனே புறப்பட்டு இருவரும் என் ஐ பிக்குச் சென்றனர்.

ஆறாவது மாடியில் சென்று அறிவித்ததும் சுசீலாவை அழைத்து வந்தனர். அவளைக் கட்டி அணைக்க மனம் உந்தியது. சூழல் அறிந்து தடுத்துக் கொண்டான்,

திங்கட்கிழமைதோறும் அங்கு வந்து கையெழுத்துப் போட வேண்டும் என்ற அச்சுறுத்தலுடன் விடுதலை செய்வதாக இன்ஸ்பெக்டர் சில்வா கூறினான். சித்தப்பா ஐ. பி.யில் அழைத்துச் செல்வதாகக் கையெழுத்திட்டார்.

ஆட்டோவில் கலகலப்பூட்டுவது போன்று குமரேசன் பேச முயன்றான். சுசீலா மௌனம் சாதித்தாள். வீடு சென்றதும் சின்னம்மாவைக் கட்டி அணைத்த போதே தன்

www.padippakam.com



மகிழ்ச்சியையும் அத்தனை நாள் அடைந்த அடக்க முடியாத துன்பத்தையும் காட்டுவதாக விம்மி விம்மி அழுதாள். சித்தப்பா, குமரேசனுக்கும் தன் உணர்வுகளைக் காட்டுவதாக அச்செயல் இருந்தது.

வேறு எதுவுமே பேச முடியாமல் வாயடைத்தபடி கலங்கிய கண்களுடன் குமரேசனையும் பார்த்து விரல்களால் சேலைத்தலைப்பை உருட்டிக் கொண்டிருந்த சுசீலாவைக் குளித்து உடைகளை மாற்றி வரும்படி சின்னம்மா வேண்டினார்.

சித்தப்பாவும் குமரேசனும் அரசியல் உட்பட பல்வேறு விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டனர். சின்னம்மா தேநீர் கொண்டு வந்தார்.

சுசீலாவின் அப்பாவிற்கும் நல்ல செய்தியை விரைவில் தெரிவிக்கும் வழிகளைப் பற்றியும் பேசிக் கொண்டனர்.

பொலிசார் தன் வீட்டுக்கு ரஞ்சன் விஜெரட்னா கொலை தொடர்பாக வந்ததை ஒட்டி தன்னையும் ஒரு விடுதலைப் புலியாக வீட்டுச் சொந்தக்காரர் சந்தேகக் கண்ணோடு பார்ப்பது பற்றியும் மாதக் கடைசியில் அறையைக் காலி செய்யும்படி அறிவித்ததாகவும் குமரேசன் சொன்னான். தங்கள் வீட்டுக்கே வந்து விடும்படி சித்தப்பா வேண்டினார்.

''மாதம் முடியும்போது பார்க்கலாம்''

குமரேசன் எதையும் உறுதியாகக் கூறவில்லை.

''இன்று விடுமுறை. எங்கும் நல்ல சாப்பாடு கூடக் கிடைக்காது. இங்கேயே தங்கி சாப்பிட்டு விட்டுப் போகலாம்.''

சின்னம்மா வந்து நினைவூட்டினார். அந்த அழைப்பை அவனே எதிர்பார்த்தாள். சுசீலாவும் அதுபோல கேட்டுக் கொள்வாள் என்பதை அறிந்தபோதும் அறையிலிருந்து

www.padippakam.com



அவளது வேண்டுதலே சின்னம்மா மூலம் வந்தது எனவும் சந்தேகப்பட்டான்.

ஷாம்பு போட்டு கழுவிய நீண்ட முடியில் இரட்டைப் பின்னல் போட்டபடி குமரேசன் முன்னர் அன்பளிப்பாகக் கொடுத்த சேலையைக் கட்டி மெல்லிய சிரிப்பை வரவழைத்துக் கொண்டே அடிமேலடி வைத்தே ஓரளவு வெட்கம் மேலிட சுசீலா நடந்து வந்தாள். அத்தோற்றத்தில் அவளைக் கண்டதும் அவனை அறியாமல் மனதில் ஒருவித கிளுகிளுப்பு ஏற்படவே செய்தது.

அவர்களிருவரையும் பேசவிட்டு விட்டு சித்தப்பா எழுந்தார். மார்க்கெட் பக்கம்போய் வருவதாகக் கூறிக்கொண்டு புறப்பட்டார்.

சிறிது நேர மௌனப் பார்வை, சிரிப்பு, குமரேசனின் பாராட்டு, கேலிகளின் பின்னர் சிறை அனுபவங்கள் பற்றி சுசீலா கூறத் தொடங்கினாள். அங்கேஉள்ளகட்டுப்பாடுகள், உணவுகள், புதிய தோழியர், சிங்களம் கற்றுக் கொண்டது எல்லாவற்றையும் குமரேசனின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதாகக் கூறினாள். சனிக்கிழமைதோறும் பார்த்துப் பேசிய போது கூற முடியாதிருந்தவற்றையெல்லாம் இப்போது கூறினாள். கமலா பற்றி எந்தச் செய்தியும் விசாரணையின் பின் அறிய முடியவில்லை என்றும் தெரிவித்தாள்.

''இவற்றையெல்லாம் பகல் கனவாக மறந்து விட வேண்டும்''

குமரேசன் சொன்னான்.

''அதுதான் பிரச்சனை. அத்தனை சீக்கிரமாக மறந்து விட முடியாது.

''ஏதோ என்னை மறக்காமலிருந்தாயே. அது ஒன்றே போதும்...''

www.padippakam.com



''இத்தனை நடந்த பின்னரும் நீங்க எனக்காக அனைத்தையும் விட்டு விட்டு காத்து நிற்பதுதான் என்னால் தாங்க முடியாதிருக்கிறது.''

சுசீலாவின் வார்த்தைகள் தடுமாறி நெஞ்சு அடைத்து விம்மி அழத் தொடங்கினாள். அவன் அவளது முதுகை வருடி விட்டான். முந்தானைச் சேலையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

சிறிது நேர மௌனம்.

''நடந்தவை கனவாகப் போகட்டும். இனிமேல் நடப்பதைப் பற்றி யோசிப்போம்.''

குமரேசன் மௌனத்தைக் கலைப்பதாகச் சொன்னான்.

மீண்டும் மௌனம். சிந்தனை.

துன்பமான நிகழ்ச்சிகள் கூட பின்னர் கதை போலச் சொல்லும்போது முன்னர் அடைந்த துன்பத்தை மறந்துவிடுகிறோம் என குமரேசன் எண்ணிக் கொண்டான். கதை என்ற கலைவடிவத்தின் கவர்ச்சியா என்ற புதிய எண்ணமும் அவ்வேளை மனதில் எழுந்தது. சிந்தனை முடிந்து, ஒருமணி நேரம்வரை மனம் திறந்து இருவரும் பேசிய பின்னர் சமையலில் சின்னம்மாவிற்கு உதவுவதற்காகச் சமையற்கட்டுப் பக்கமாகச் சுசீலா சென்றாள். சின்னம்மா தானே எல்லாவற்றையும் அன்று கவனிப்பதாகக் கூறி, சுசீலாவை விரட்டினாள். சுசீலா தேநீர் தயாரிப்பதற்கு மட்டும் அனுமதித்தாள். இரண்டு கப் தேநீருடன் வெளியே வந்தாள்.

''மே தினம். மார்க்கெட்டே இல்லை. மீன் மட்டும் வாங்க முடிந்தது.'' வெளியே சென்ற சித்தப்பா கையில் சுற்றிய மீனுடன் வந்தார். அவர்கள் இருவரது பேச்சிலும் தலையிடாமல் சமையற்கட்டுப் பக்கம் சென்றவர் பின் தன் அறைக்கே போய்விட்டார்,

www.padippakam.com



சின்னம்மா சாப்பாட்டுக்கு அழைத்த போது இரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. மூவரையும் உட்காரச் செய்து சின்னம்மாவே பரிமாறினார்.

இடையிடையே சின்னம்மா அளித்தஉணவிலேயே, தான் சமாளித்து வாழ முடிந்தது என குமரேசன் பாராட்டிச் சொன்னான்.

சுசீலாவை ஓய்வெடுக்கும்படி கூறிவிட்டு குமரேசன் மறுநாள் காலையில் வருவதாகக் கூறி விடைபெற்றான்.

## 38

மே தினம்; தெருவெல்லாம் செங் கொடிகள்; தொழிலாளர் ஊர்வலங்கள், சுலோக ஒலிகள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நடந்தன. ஏதோ ஒருவகைக் குதூகலம். அவற்றையெல்லாம் பார்த்தபடி குமரேசன் தன் அறைக்குச் சென்றான்.

குளித்து உடையை மாற்றிக் கொண்டு வேலாயுதத்திடம் நல்ல செய்தியைத் தெரிவிக்கச் சென்றபோது இரவு ஏழரை மணியாகிவிட்டது.

சுசீலா விடுதலை அடைந்த செய்தியைச் சொன்ன போது நண்பர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

''எங்களுக்கு ஒருநாள் விருந்து தர வேண்டும்.''

''ஆமாம் சுசீலாவையும் அழைத்து வருகிறேன்...''

''எல்லாம் சரியே. மேலும் தொடர் கதை ஏற்படாமல் வழி தேடிக் கொள்ளுங்கள்.''

பார்த்திபன் சொன்னான். குமரேசனுக்கு அவன் வார்த்தைகள் புரிந்து கொண்டது. ஏற்கெனவே அவன் மனதைக் கிண்டிக் கொண்டிருந்த வார்த்தை அது.



படிப்பகம்

www.padippakam.com



''இன்று தெருக்களைப் பார்த்தால் இங்கு சோஷலிசப் புரட்சி வந்து விட்டதுபோலத் தெரிகிறது.''

''பாஸிஸ ஆட்சியில், ஆண்டில் இன்று ஒரே ஒருநாளே கூட்டம் ஊர்வலம் மட்டுமல்ல வாய்திறந்து கத்துவதற்கும் சுதந்திரம் கிடைக்கிறது. நாளைக்காலையில் எல்லாம் போய் விடும்.''

பார்த்திபன் குமரேசனுக்குப் பதிலடியாகக் கூறினான்.

நாள்தோறும் சுசீலாவிடம் சென்று பேசிவிட்டு வந்தான்; முன்னர் இருந்ததைவிட துணிச்சல் அதிகரித்திருந்ததை குமரேசனால் காணமுடிந்தது.

சிலநாட்கள் கழித்து குமரேசனோடு அவன் அழைக்கும் இடமெல்லாம் செல்வதற்குத் தயாரானாள். சித்தப்பா, சின்னம்மா எவ்வித தடையும் கூறவில்லை.

கடைத்தெரு, காலிமுகத்திடல், ஓட்டல், சினிமா என சுற்றித் திரிந்தனர். எப்படியும் மாலையில் ஏழு மணிக்குப் பிந்தாமல் சுசீலாவை வீட்டுக்கு அழைத்து வந்து விடுவான்.

அக்காவிடம் போன் செய்து ஒருநாள் நண்பகல் விருந் திற்கு அழைத்துச் சென்றான். சிவலிங்கம் அப்போது இருக்க வில்லை. அக்கா நன்கு வரவேற்றுப் பேசி, விருந்தளித்து, ஒரு பட்டுச் சேலை பரிசளித்தாள்.

வாரந்தோறும் பொலிசாரிடம் கையெழுத்திடும் பிரச் சனை முடிந்த பின்னரே கலியாண நாள் பற்றி தீர்மானிக்கப் போவதாக குமரேசன் எல்லோரிடமும் சொல்லி வந்தான்.

வத்தளைக்கு அண்ணாவிடமும் ஒருநாள் மாலை அழைத்துச் சென்றான். அண்ணா, அண்ணி பிள்ளைகள் வரவேற்று சுசீலாவோடு நன்குபேசிப் பழகினர்.

''சுசீலா, அதிர்ஷ்டக்காரி. உன்னைக் கட்டுவதர் காகத் தன்னுடைய தொழில், பயணம், பணம் எல்லாவற்றை யும் துறந்து நிற்கிறாரே பார்த்தாயா!''

www.padippakam.com



சுசீலாவைப் பார்த்து குமரேசன் காதிலும் விழுகிற மாதிரி அண்ணி கூறினாள்.

ஞாயிற்றுக்கிழமை நண்பகல் விருந்தாக கிரீன்லண்ட் ஒட்டலுக்கு வேலாயுதத்தையும், பார்த்திபனையும் அழைத்து சுசீலாவை அறிமுகப்படுத்தினான். அவளுடன் நெருங்கிப் பழகியவர்போல இருவரும் பேசினர். அவள்மேல் அவர்கள் தனிமதிப்புக் காட்டுவதாகவும் சுசீலா உணர்ந்தாள்.

''புலிகளாக எவரும் பிறப்பதில்லை. சூழலால் ஆக்கப் படுகிறார்கள்.''

பார்த்திபன் தன் சித்தாந்தத்தைக் கூறினான். அவற்றில் உள்ள உண்மையை சுசீலாவால் உணரமுடிந்தது.

விடைபெற்று வீடு திரும்பும்போது சுசீலா சொன்னாள் :

''உங்கள் நண்பர் இருவரையும் எனக்கு நன்கு பிடித்து இருந்தது. அவர்கள் ஏன் எனக்கு இத்தனை மதிப்புக் காட்ட வேண்டும்?''

''நீ சிறைப்பட்டதனால்...''

திங்கட்கிழமை என். ஐ. பி. யில் கையெழுத்துப் போட, சுசீலாவைக் குமரேசனே அழைத்துச் சென்று வந்தான். அங்கு செல்வதையும் அந்த இடத்தையும் சுசீலாவே வெறுத்து வந்தாள். குமரேசன் தன் வெறுப்பை வெளியே காட்டிக் கொள்வதில்லை.

''இந்தக் குரூரக் கட்டிடத்தைப் பார்க்கும்போது எங்காவது ஓடி விடலாம் போலத் தோன்றுகிறது''

முதல் தடவை கையெழுத்திட வந்தபோது சுசீலா கூறியது அவளது ஆழ்மன வெறுப்பைப் பிரதிபலித்தது.

''இது ஒரு வதை முகாம். பாஸிஸத்தின் பயங்கர நிழலை இங்கே காணலாம்''

www.padippakam.com



ஒருதடவை லிப்டால் இறங்கி வந்தபோது ஒருவன் கூறிய வார்த்தைகள் அங்கே வரும்போதெல்லாம் குமரேச னின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

அந்த வீட்டு அறையை எப்படியும் தான் காலிசெய்ய வேண்டும் என்பதைத் தெரிவிப்பதுபோல குமரேசன் தன் டிவி, ரேடியோ, காமரா போன்ற முக்கிய பொருட்களை வேலாயுதத்தின் அறைக்குக் கொண்டுவந்து சேர்த்தான்.

வீட்டுக்காரரிடமும் தான் அறையை விரைவில் காலி செய்வதாக வாடகைக் கணக்கு எல்லாவற்றையும் முடித்துக் கொண்டான்.

ஒரு திங்கட்கிழமை மாலையில் குமரேசன் தன் பெரிய சூட்கேசையும் எடுத்துவந்து வேலாயுதம் அறையில் வைத்து விட்டான்.

அன்றிரவு நண்பர்கள் இருவருடனும் பல விஷயங்கள் பற்றியும் விவாதித்து, பேசி மகிழ்ந்து விடைபெறும்போது மறுநாட் காலையில் சுசீலாவுடன் கதிர்காமம் முருகன் கோவி லுக்கு யாத்திரை செல்வதாகக் குமரேசன் கூறினான்.

''கஷ்டம், துன்பம் வரும்போது பெரும்பாலோர் மதம் என்ற அபினியை நாவில் தடவிக் கொள்ளுகிறார்கள், வேறு சிலர் நாட்டுப்பற்று என்ற அபினியைத் தடவி மற்றவரைக் கொலை செய்யவும், தாமே கொலையுண்டு இறக்கவும் தயாராகிறார்கள்''

''இந்த அபினிக்கதை சொந்தக் கதையல்ல, மார்க்சிட மிருந்து கடன் வாங்கியது''

பார்த்திபனுக்கு வேலாயுதம் பதிலளித்தான். தேசப் பற்றுமா என்பதை அவனால் ஏற்க முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



## 39

கொழும்புக் கோட்டை நிலையத்திலிருந்து செவ்வாய் கிழமை அதிகாலையில் புறப்பட்ட வண்டி தெற்கை நோக்கி கதிர்காமத்திற்கல்ல வடக்கே வவனியாவை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. கடுங்கோடை முடிந்ததைக் காட்டுவதாக இதமான காற்று சன்னல் வழியே வீசிக்கொண்டிருந்தது. குமரேசனும் சுசீலாவும் ஓடும் மரங்களைப் பார்த்தபடி இரண்டாவது வகுப்புப் பெட்டியில் ஒரு மூலையில் அருகருகே உட்கார்ந்திருந்தனர்.

சுசீலாவின் உடையில் அத்தனை ஆடம்பரமுமில்லை. சாதாரண நைலெக்ஸ் சேலையே கட்டியிருந்தாள். ஜாக்கெட் கையிலும் உடலிலும் சிறிது தொய்ந்து போயிருந்தது. அவ ளது உடல் மெலிவைக் காட்டியது. சட்டையைப் போடும் போதே தோழி சகுந்தலாவின் நினைவு அவளது நெஞ்சை உருக்கியது. அவளிடம் மன்னிப்புக் கேட்டு பேச எத்தனை விஷயம் இருக்கிறது. நெஞ்சு சொன்னது.

குமரேசனும் சாதாரண செக் சேட்டும் கறுத்தநிற பான் டும் அணிந்திருந்தான். காலிலே லெதர் சிலிப்பர். ஆளுக்கு ஒரு பை மட்டும் எடுத்து வந்தனர். சில உடைகள், டவல், சோப், பவுடர் அவளது பையில். அவனும் அவ்வாறே சில உடைகளுடன் இரண்டு சாரம்.

மெல்லிய குரலில் இருவரும் பேசிக்கொண்டனர். மற்ற வருடன் பேசிப் பழகுவதைக் கூடியவரை தவிர்த்துக் கொண்டனர்.

இத்தனை தூரம் பழகி, உதவிய சித்தப்பா, சின்னம்மா விடம் கதிர்காமம் சென்று வருவதாகப் பொய் கூறி யாழ்ப் பாணம் நோக்கிப் புறப்பட்டதே இருவருக்கும் கவலை யளித்தது.

www.padippakam.com



தமது நன்மைக்காகப் பொய் சொல்ல நேர்ந்ததில் தவறில்லை. எப்படியும் வவனியா இராணுவ கடவையைக் கடக்கும் வரை ஆபத்து இருப்பதை இருவரும் அறிவார்கள். அதை எண்ணியபோது இருவரது மனமும் தனித்தனியே அடித்துக் கொண்டது. இருந்தாலும் ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளவில்லை. கடவைகள் கழிந்த பின்னர் விபரமாக மன்னிப்புக்கேட்டு சித்தப்பாவிற்கு எழுதிவிடலாம், நண்பர்களுக்கும் தெரிவிக்கலாம் என்ற முடிவு.

சந்தர்ப்பம், சூழ்நிலையே சிலருக்குத் துணிச்சலை ஏற்படுத்துகிறது, விபத்துகளை எதிர்நோக்கவும் நெஞ்சுரம் தருகிறது எனக் குமரேசன் மனம் அடிக்கடி சொல்லிக் கொண்டது. சுசீலாவின் துணிச்சலுக்கும் அதுவே காரணம் என்பது அவனுக்குத் தெரியும். அவனது துணை வேறு துணிச்சல் தந்தது.

என் ஐ பி கட்டிடத்திற்கு திங்கட்கிழமை காலை அழைத்துச் சென்றபோது, ‘இங்கே வருவதை விட எங்காவது ஒடி விடலாமோ என்று மனம் சொல்லுகிறது’ என்ற சுசீலாவின் வார்த்தையே இத்தகைய துணிச்சலான பயணத்திற்கும அவனைத் தூண்டியது.

‘இது தொடர் கதை ஆகலாம்’ என பார்த்திபன் பொலிசாரின் நடைமுறைகளை நன்கு அறிந்தவன் போலக் கூறியிருந்தான்.

மற்றொரு சம்பவம் ஏற்பட்டதும் சுசீலாவை மீண்டும் உள்ளே தள்ளிவிடலாம் என்ற அச்சமும் மனதை அரித்துக் கொண்டே இருந்தது.

இவற்றிலிருந்து தப்பும் வழிகள் பலவற்றைக் குமரேசன் ஆராய்ந்தான். வெளிநாட்டுப் பயணத்திலுள்ள ஆபத்துகள் மிக அதிகம் என்பது அவனுக்குத் தெரியும்.

பொலிஸாரே நமக்கு இந்த வழியையேகாட்டுகின்றனர். எமக்கு மட்டுமல்ல. பாதிப்படைந்தவர்களுக்கும் வழி காட்டு

www.padippakam.com



கின்றனர். நம்முடைய அனுபவம் மற்றவருக்கும் ஒரே வழியே காட்டிக் கொண்டிருக்கிறது. அதுவே இயக்கம். இயலாவிட்டால் அதற்கு ஆதரவு.

''என்ன ஒரே யோசனை. பசியெடுக்கவில்லையா''

சுசீலா கூறியபடியே சிறிய கூடையில் கொண்டு வந்த பட்டர் பூசிய ரொட்டி வாழைப்பழம், தண்ணீர் பாட்டிலை வெளியே எடுத்தாள்.

சுசிலா நியூஸ் பேப்பர்மேல் தன் மடியில் விரித்து, வைத் திருந்த ஆயில் பேப்பரில் இருந்த ரொட்டித் துண்டுகளை எடுத்து குமரேசன் வாழைப்பழத்துடன் சாப்பிட்டான். அவளும் எடுத்துக் கொண்டாள். சிறையில் சாப்பிட்ட வெறும் ரொட்டியும் தேநீரும் அவள் நினைவில் வந்தது.

''குங்குமப் பொட்டுடன் முதல் தடவை பார்க்கிறேன். தனி அழகுதான்.''

''போங்க, இந்த வேளையும் வர்ணனையா''

தன் சிறு கோபத்தை முகத்தில்கொண்டுவர முயன்றாள். முடியவில்லை. கன்னத்திலே ஒரு சுழி மட்டும் ஏற்பட்டது. தலையைத் திருப்பிக் கொண்டாள்.

முதல் நாள் அவளது பயண உடைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது குமரேசனே கறுத்தப் பொட்டை விட்டு விட்டு குங்குமப் பொட்டு வைத்து வரும்படி சொல்லியிருந் தான்.

''சின்னம்மா ஏதாவது சொல்லுவா....''

''எதுவும் சொல்லமாட்டா. வவனியா வரையும் நமது உடை, நடை பேச்செல்லாம் ஒரு நாடகந்தானே.''

''அதற்கப்புறம்...''

சுசீலா தலையைக் குனிந்தபடியே சொன்னாள்.

www.padippakam.com



''நாடகத்தை நிஜ வாழ்க்கையாக்கி விடுவோம்.''

''நன்கு சாதுரியமாகப் பேச மட்டும் எங்கே கற்றுக் கொண்டீர்களோ தெரியவில்லை...''

''என்னைப் பார்க்காமலே என் பேச்சில்தான் மயங்கி கலியாணத்திற்கு சம்மதம் தெரிவித்தது போலிருக்கிறது...''

''நிச்சயமாக. டெலிபோன் பேச்சிலேயே என்னைமயக்கி விட்டீர்களே...''

''அவ்வளவுதானா...''

''உங்கள் நடவடிக்கைகளில், செயல்களில் ஊென்னை வென்று அடிமையாக்கி விட்டீர்கள்...''

சுசீலாவின் கண்கள் பனித்தன.

''அப்படியெல்லாம் சொல்லவேண்டாம். நான் எவரை யும் அடிமையாக்க மாட்டேன். பால்பேதம், மொழி, இனம், மதம், நிறம், வறுமையை வைத்து எவரை அடிமைப்படுத்து வதையும் நான் எதிர்ப்பவன்''

தண்ணீர் பாட்டிலை வாங்கிக் குடித்தான். கழிவறைக்கே கைகழுவச் செல்லாமல் பாட்டில் நீரில் கழுவிவிட்டு கைக் குட்டையால் துடைத்துக் கொண்டான். வண்டியில் ஒரே கூட்டம். நடைபாதையும் நிறைந்திருந்தது. பலர் நின்ற படியே பயணம் செய்தனர்.

குருநாகல் ஸ்டேஷன். ஆயுதம் தாங்கிய இரண்டு இராணு வத்தினர் வந்து பெட்டிகளைச் சரிபார்த்தனர். தமது தயக்கத் தைக் காட்டாதவிதமாக இருவரது பைகளையும் குமரேசன் எடுத்து வைத்தான். அவர்கள் இருவரதும் நெருக்கத்தைப் பார்த்து குடும்பத்தவராக அவர்களைக் கணித்தனர். தாலி யைப் பற்றி எவரும் கவனிப்பதில்லை. அணிந்து வருவதில் உள்ள ஆபத்து அனைவருக்கும் தெரியும்.

www.padippakam.com



அவர்களது பகுதியில் வேறும் குடும்பத்தவர் சிலர் இருந்தனர். வெளிநாட்டிலிருந்து வந்த பயணி ஒருவர் தன் வயதான தாயாரைப் பார்க்கச் செல்வதாகக் கூறி மற்றவர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார், ஜெர்மனியில் தான்படும் கஷ்டங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''இது அவருடைய அனுபவம் மட்டுமல்ல. எல்லாரது அனுபவத்தினுடைய கூட்டு மொத்தம். நான் கூட விதிவிலக்கல்ல.''

குமரேசனின் கூற்றைச் சுசீலா பிடித்துக் கொண்டாள்.

''எனக்காக இல்லை. முழுமனதோடுதானே இப்போது புறப்பட்டு வருகிறீர்கள்.''

''ஆமாம். அதற்கு சுசீ ஒரு வழிகாட்டி. மற்றது சந்தர்ப்ப சூழ்நிலைகள். இதற்காக நான் சிறிதும் வருத்தப்படவில்லை.''

''ரொம்ப நல்லது. எப்போதும் பெண்கள் திருமணமாகி ஆண்கள் அழைக்குமிடத்திற்கே போய்விடுகிறார்கள்.''

''அது உண்மைதான். நான் அப்படியில்லையே!''

குமரேசன் சுசீலாவின் தோளைக் கிள்ளியபடியே சொன்னான்.

அனுராதபுரத்திலும் இராணுவத்தினர் சிலர் ஏறிக் கொண்டனர். பெட்டியின் ஒர நடைபாதையில் நோட்டம் போட்டபடி சென்றனர்.

வவனியாவுக்கு வண்டி நேரத்திற்கு வந்தது அதிர்ஷ்டமே. வண்டியால் இறங்கி பைகளுடன் பஸ்களை நோக்கிச் சென்றனர். இரண்டாவதாகப் புறப்பட்ட பஸ்ஸிலே ஏறிவிட முடிந்தது. விரைவில் நடந்துசென்று ஏறுவதற்கு பாரமற்ற பைகள் உதவியாயிருந்தன.

www.padippakam.com



''போட்டலோ'' விற்றவனிடம் இரண்டு புட்டி வாங்கிக் குடித்து நாவரட்சியைப் போக்கினர்.

பஸ் இலங்கை இராணுவ தடை முகாமில் இறக்கி விட்டது.

கியூவரிசையில் ஒவ்வொருவராக முன்னேறிக் கொண்டிருந்தனர். ஒரு கையில்பையுடனும் மறுகையில் சுசீலாவைப் பிடித்தபடி குமரேசனும் முன்னே அசைந்து கொண்டிருந்தான். பாக்கெட்டில் ஆயிரருபா பச்சை நோட்டுகளை இடையிடையே சுசீலாவின் கையை விட்டுவிட்டு சரிபார்த்துக் கொண்டான்.

இராணுவத் தடைமுகாமில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் பச்சைநோட்டில் இரண்டை எடுத்துக் கொடுத்து விட்டால் போதும் என்று ஒருதடவை வேலாயுதம் சொன்னது அவனது நினைவில் வந்தது.

வேறு சிலர் நோட்டம் போடலாம். அவர்களைப் பார்க்காமல் பைகளைப் பிரித்துக் காட்டிக்கொண்டே போய்விட வேண்டும் என சுசீலா எச்சரித்திருந்தாள்.

மனச்சலனம் சிறிதும் காட்டாமல் இருவரும் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

இருவரது தராதரத்தையும் பார்த்த இராணுவக் காவலர் குமரேசன் பையை விட்டு சுசீலாவின் பையை கிண்டிப் பார்த்துவிட்டு முன்னேற விட்டனர்.

குமரேசன் சுசீலாவின் வலது கரத்தைத் தன் இடது கையால் பிடித்தான். வியர்த்துப் போயிருந்தது. அப்பாடீ! பெரு மூச்சு விட்டான்.

எதுவுமே பேசாமல் சிறிது தூரம் நடந்தனர். கூட்டத்தோடு கூட்டமாக சைக்கிள்கள் மட்டும் பெட்டிகளை ஏற்றிய படியும் முதியவர்களைச் சுமந்த படியும் ஓடிக் கொண்டிருந்தன.

இருவரும் பைகளுடன் சாவதானமாக நடந்து கொண்டிருந்தனர்.

புதிய உணர்வு. சட்டப்பிடிகளிலிருந்து விடுபட்ட மன நிறைவு. வானத்தில் பறவைகளாகப் பறப்பது போன்ற உணர்வு; மகிழ்ச்சி.

www.padippakam.com



நடையை மேலும் தளர்த்திக் கொண்டனர். தூரமே தெரியவில்லை. அந்தச் சுதந்திர உணர்வுடன் எத்தனை தூரத்தையும் நடந்து விடலாம் என்ற குதூகலம். முன்னர் வாழ்நாளில் என்றும் உணர்ந்தறியாத ஒருவித புத்துணர்ச்சி. விடுதலை உணர்வு.

அடுத்த கடவையை நெருங்கி விட்டனர். அங்கேயும் ஒரு கியூ அசைந்து கொண்டிருந்தது.

என்ன பிரச்சனை குமரேசனுக்கு எதிர்பாராமல் ஏற்பட்டாலும் விமலாவின் பெயர் சுசீலாவிற்கு ஆதாரமாக இருந்தது. ஏற்கனவே குமரேசனிடம் உறுதி கூறியிருந்தாள். சுசீலாவைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சனையும் இல்லை.

கமலாவுடன் காரில் வந்த வேளை விமலா. கூறிய வார்த்தை அவள் நினைவில் பசுமையாக இருந்தது; ''இங்கே என்ன பிரச்சனை ஏற்பட்டாலும் என் பெயரைச் சொல்லலாம்.''

கமலாவுடன் பஸ்ஸில் புறப்பட்டபோதும் அதே வார்த்தைகளைச் சொல்லியிருந்தாள்.

சுசீலா எதிர்பாராத நிகழ்வு!

சுசீலா முன்னர் யாழ்நகரிலிருந்து வந்தபோது வழியில் கமலாவுக்கும் அவளுக்கும் தேநீர் வாங்கித் தந்தவன், பைகளை எடுத்துச் செல்ல உதவியவன் அவளை அடையாளம் கண்டு கொண்டான்.

நேரடியாக அவளிடம் வந்தான்:

'நீங்க கமலாவின் தோழி தானே' என அழைத்தான்.

''ஆமாம். உங்களுக்கு நல்ல ஞாபக சக்தி. இவர் என் கணவர் மிஸ்டர் குமரேசன்''

சுசீலா அறிமுகப்படுத்தினாள்.

இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர். அவனை சுசீலா அறிமுகப்படுத்தினாள் :

''இவர் கமலாவின் தோழர்...''

''எங்க திருமணத்திற்கு அன்பளிப்புத் தந்த கமலா தானே. ஒரு பிடி மண்''

உணர்ச்சியோடு கூறிய குமரேசனுக்குச் சுசீலா பதிலளித்தாள் :

''ம்ம்... அந்த மண் நம்ம தேசத்து மண். அதில் தற்போது காலூன்றி விட்டீர்கள்''

www.padippakam.com

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாவல்கள்

மரணத்தின் நிழலில்
ஒரு குடும்பத்தின் கதை
இரண்டாவது சாதி
உலகச் சந்தையில் ஒரு பெண்
ஒரு பெண்ணின் கதை
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை!
பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
புதிய சந்தையில்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்

## சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்

## கட்டுரைகள்

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மான்விழிக்குக் கடிதங்கள்

**பாரி நிலையம்**
181, பிராட்வே, சென்னை-108.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மண்ணின் கதை

குமரேசன் கனடாவிலிருந்து கொழும்புக்குத் தன் காதலி சுசீலாவைத் திருமணம் முடித்து அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளான். கிராமத்திலிருந்து சுசீலா வருவது எதிர்பாராது தடைப் படுகிறது.

கொழும்பில் நண்பர்களுடன் தேசியம் உட்பட மேல்நாட்டு கீழைத்தேச கலாசார வேறுபாடுகள் பற்றி விவாதித்து குமரேசன் பொழுதைக் கழிக்கிறான்.

பல சிரமங்களிடை இரண்டு மாதம் கழித்தே கமலா என்ற பெண்ணின் துணையுடன் சுசீலா கொழும்புக்குவந்து சேருகிறாள். கமலாவுக்கு ஏற்படும் பிரச்சனை, திருமண ஏற்பாட்டின் முன்னரே, அப்பாவியான சுசீலாவையும் சிக்கலில் மாட்டி விடுகிறது. தன் கனடா பயணத்தை விட்டுவிட்டு சுசீலாவை விடுவிக்கும் முயற்சியில் குமரேசன் துணிச்சலுடன் ஈடுபடுகிறார்...

Wrapper printed at AR prints
375-8 Arcot Road Madras-600 024 INDIA

படிப்பகம்